உ

கலியுகத்தின் கண்கண்ட தெய்வம்

15ம் நூற்றாண்டின் கிராம தேவதை

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டம்

சுயம்பு **அருள்மிகு ஜெனகை மாரியம்மன் – சோழவந்தான்**

# தல வரலாறு

(தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்கு உட்பட்ட திருத்தலம்)

## சோழவந்தானின் மையப்பகுதியில் ஆலயத்தின் அமைப்பு

உ

கலியுகத்தின் கண்கண்ட தெய்வம்

15ம் நூற்றாண்டின் கிராம தேவதை

## மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டம்

# சுயம்பு அருள்மிகு ஜெனகை மாரியம்மன், சோழவந்தான்

(தமிழ்நாடு அரசு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறைக்கு உட்பட்ட திருத்தலம்)

அருள்மிகு ஜெனகை மாரியம்மன் உற்சவமூர்த்தி

# தல வரலாறு

# நூல் விபரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **சுயம்பு அருள்மிகு ஜெனகை மாரியம்மன் தல வரலாறு** |
| ஆசிரியர் | : | ஜெனகராஜ். ரா |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு, ஜூலை 2022 |
| விலை | : | அம்மனுக்கு காணிக்கையாக்கப்பட்டது |
| நூல் அளவு | : | B5 |
| பக்கங்கள் | : | xii + 150 |
| பதிப்பகம் | : | சான்லாக்ஸ் பதிப்பகம்<br>61,T.P.K மெயின் ரோடு,<br>வசந்த நகர், மதுரை – 3. |

## ஸ்ரீ வித்தக விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தினிளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே”

**- திருமந்திரம்.**

## ஸ்ரீ சுப்பிரமணியர் காப்பு

அப்பிரமனை ச்சிறையாக்கி அமராவதியாள்

விப்பிரர் விண்ணவர் வினை நீக்கி அப்பாலும்

ஒப்பரும் சோலை மாநகர் உறை மயிலேறிய

சுப்பிரமணியர் தாள் போற்றுவோம்.

## ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் காப்பு

உலக முழுவதுமுதவி யுஞ் சிறிதும் தளராத
தயாபரி இலகு அழகொழுகும் மதி முக மாதரசி
திலக நுதல் அறம் வளர் ஜெனகை மாரி
அலகிலா வரமருள் மலரடி பணிவோம் .

## அம்மன் அருள் வேண்டல்

மாதமும் மாரி மழை பொழிந்து நாடெலாம்
மல்குபயன் நிறைந்தோங்கவும்
நீதியும் கருணையும் தேவநல் நெறிகளில்
சாதனை பெருகிவரவும்
ஓதிடும் புகழுடன் சோழவந்தானூரில்
உயர்கொடி கொண்ட தாயே!
ஆதியும் இறைவியே! அன்னையெம் மாரியே!
அருளினை வழங்கி அருள்வாய்!

## பிழை பொறுத்தருள் பதிகம்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நிலையாப்பிழையும் நின்னஞ்செழுத்தை
சொல்லாப் பிழையும் துதியாப்பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே.

# முகவுரை

பொதுவாக ஆலய வரலாறு என்பது உணர்ச்சிகளின் தொகுப்பு அல்ல. உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு. கடந்த கால நிகழ்வுகளுக்கும் வாழும் காலத்து நிகழ்வுகளுக்கும் சான்றாய் நிற்கும் நினைவுச் சின்னம். ஆலய வரலாறு என்பது பழமை மிக்கது. நெடியது. பழம்பெருமை மிக்கது. ஆலயங்கள் தெய்வீக உணர்வை உண்டாக்கும் ஊற்றிடங்களாக விளங்குகின்றன. ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது ஆன்றோர் மொழி. தென்னாட்டில் காணும் இடங்களிலெல்லாம் கண்கவர் ஆலயங்கள் பல உள்ளன. அவைகளுள் பாண்டிய நாட்டின் தலைநகரும் மருத நிலப்பகுதியுமாகிய மதுரை அருகே அமைந்துள்ள சோழவந்தான் ஸ்ரீ ஜெனகை மாரியம்மனின் இத்தலம் பல வகைகளிலும் சிறப்புடையது. அம்பாளின் அருட்காலங்களின் தொன்மையை வரையறையிட்டு கூறுவது எவருக்கும் எளிதல்ல. இன்று இத்திருக்கோயில் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆளுகைக்குட்பட்டு பழமை சிறப்பும் பண்பாட்டு நன்நலமும் வாய்க்கப் பெற்றதாக விளங்குகிறது. பெரும் புகழ் கொண்ட புண்ணிய வைகை நதிக்கரையோரம், கி.பி பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே, இத்திருக்கோயிலில் சாந்தமே உருவாய் ஒரு ஆல் விதையில் மலர்ந்த இரு விருட்சங்களாக சன்மார்க்கத் திலகமாய் பொங்கிடும் அருளுடன் அருள்மிகு ஸ்ரீ சந்தன மாரியம்மன் மற்றும் ஸ்ரீஜெனகை மாரியம்மன் என இரு மஹா சக்திகள் எழுந்தருளிக் குடிகொண்டு தம்மை நாடிவரும் பக்தர்களுக்கு வேண்டியன வேண்டிய படி தந்து அருள்பாலிக்கிறார்கள். இத்தகைய அரியதொரு தலத்தின் பெருமைகளைப் பற்றி அடியவர்கள் அனைவரும் அறிந்து கொள்வது மிகவும் அவசியமென்பதைக் கருத்தில் கொண்டு, ஸ்ரீ ஜெனகை மாரியம்மனின் ஆலய வரலாற்றை பற்றி பல ஆண்டுகளாக தேடி திரட்டிய அரிய தகவல்களை இத்தல வரலாற்றுப்பதிவு நூலில் சுருக்கமான உரையில் யாவருக்கும் எளிதில் புரியும் வண்ணம் வழங்கியுள்ளேன்.

மேலும் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் திருமலை நாயக்கர் மன்னரின் ஆட்சி காலத்தில் இத்திருத்தலத்தின் வைகாசி தேரோட்ட ‘செடில்’ திருவிழாவில் ஏற்பட்ட கலவரத்தை திருமலை நாயக்க மன்னர் அவர்கள் பாளையப்பட்டு தலைவர் தூங்காதேவர் தலைமை கொண்டு அகற்றி பாதுகாப்பு வழங்கப்பட்ட சரித்திர வரலாற்று தகவல்கள் நிறைந்த ஆலயமாகும். இப்பெரும் சிறப்பு பெற்ற மஹா சக்திகளின் தல வரலாற்றினை படித்து அம்பாளின் பேரருளை பெற்று அனைவரும் நிறைவோடு வாழ ஸ்ரீசந்தன மாரியம்மன் மற்றும் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்.

அன்புடன்...

**நூல் ஆசிரியர்**

**ஜெனகராஜ் ரா**

## நன்றியுரை

இந்நூல் சிறப்புடன் நிறைவடைவதற்கு, தலத்தில் வீற்றிருந்து அருள் செய்யும் ஆனைமுகன் அருள்மிகு வித்தக விநாயகருக்கு என் சிரம் தாழ்ந்த நமஸ்காரங்கள். மருதநிலத்து பட்டத்தரசி ஸ்ரீ ஜெனகை மாரியின் தல வரலாற்றுச்செய்திகளை, வனத்தில் பூத்த மலர்களைப்போல ஒன்றாக கோர்த்து அழகிய மாலையாக்கி அவள் திருவடிகளிலேயே சமர்ப்பிக்க எனக்கு அருள் செய்த, **அகிலத்தைக் காக்கும் ஆயிரம் கண்ணுடையாள் ஸ்ரீ ஜெனகை மாரியம்மனுக்கும், பின்நின்று காத்தருளும் ஸ்ரீ சந்தன மாரியம்மனுக்கும்** என் சிரம் தாழ்ந்த நன்றிகளையும் வந்தனங்களையும் தெரிவித்து பணிகிறேன்.

இவ் வரலாற்றுத் தொகுப்பினை செவ்வனே செய்து முடித்து புத்தகமாக வெளியிடுவதற்கு அனைத்து விதங்களிலும் உதவியதோடு மகிழ்ந்து வாழ்த்திய என் பெற்றோர் **ரா.சீதாலட்சுமி – லெ.ராஜகோபால்** அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மன்னர் திருமலை நாயக்கரை பற்றிய வரலாற்றுச் செய்திகளையும் சான்று ஆதாரங்களையும் எனக்கு தெரிவித்து விளக்கி உதவியதோடு மட்டுமல்லாமல் இந்நூல் முழுமையடைய எனக்கு பெரிதும் உதவிய **உயர்திரு. K.சக்திவேல்,** தமிழக அரசின் தொல்லியல் துறை காப்பாட்சியர் திருமலை நாயக்கர் அரண்மனை, மதுரை அவர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

சோழவந்தானை பற்றிய வரலாற்று பதிவுகளையும் ஆயிரம் ஆண்டுகள் கடந்த சரித்திர செய்திகளையும் ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் ஆலயத்தின் தொன்மையையும் பெருமைகளையும் எளிமையான முறையில் எனக்கு எடுத்துரைத்து வழிக்காட்டி உதவிய தமிழக அரசின் தொல்லியல் துறை ஆய்வாளர் **முனைவர் வெ.வேதாசலம்** அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் கோவிலின் பாரம்பரிய வழக்கங்களையும் விழாக்களின் செயல்பாடுகளையும், பக்தர்களால் கடைப்பிடிக்கப்பட்ட நெறிமுறைகளையும் எனக்கு கூறி வழிகாட்டிய மதிப்பிற்குரிய சொல்வேந்தர் **முனைவர் கு.ஞானசம்பந்தன்** அவர்களுக்கும் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பண்பாட்டு மரபுச்செல்வங்கள் நடுவம், இயக்குநர் (பொ), திருக்குறள் இருக்கை, இயக்குநர் (பொ), மற்றும் தமிழியல் துறை தலைவரும், தமிழ்ச்செம்மலுமாகிய, **முனைவர் போ.சத்தியமூர்த்தி** அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தினையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலய வரலாற்றுத்தேடலின் முக்கிய சான்று ஆதாரமாக இருந்த பதினாறாம் நூற்றாண்டுக்குரிய முதன்மை ஆவணமான மன்னர் திருமலை நாயக்கர் வழங்கிய சாசன செம்பு பட்டயத்தை எனக்கு கொடுத்து உதவிய திருமலை நாயக்கர் பாளையப்பட்டு தலைவர் திடியன் தூங்காதேவர் வம்சத்தின் தந்தை வழி வாரிசான **திருமதி. M.செல்வரசி** M.A. M.Ed அவர்களுக்கும் அவருடைய கணவர்

**முனைவர். M.சின்னன்** M.A., M.Phil., Ph.D மேனாள் முதல்வர் - பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி, அவர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நூற்றாண்டுகள் கடந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ ஜெனகை மாரியம்மனின் வரலாற்று ஆதாரங்களை வெளிக் கொணரும் என்னுடைய தேடலில் எனக்கு உதவியதோடு பக்கபலமாய் நின்ற எனது அன்பு நண்பர்கள் மதிப்பிற்குரிய **S.L.பார்த்தசாரதி CBCID** சார்பு ஆய்வாளர், சென்னை மற்றும் மதிப்பிற்குரிய **ப.முருக ராஜா,** காவல்துறை சார்பு ஆய்வாளர்- சிந்துபட்டி அவர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தல வரலாற்று நூல் விரைவில் நிறைவுடன் அமைவதற்கு மனம் மகிழ்ந்து வாழ்த்திய ஆலயத்தின் செயல் அலுவலர் **திருமதி. செ.இளமதி** MBA அவர்கள் மற்றும் ஆலய நிர்வாக பணியாளர்கள் **திரு. சி.பூபதி திருமதி. ப.கவிதா, திரு.வை.வசந்த், திருமதி. வெ.பிரியா, திருமதி. M.சுபாஷினி, V.பெருமாள்விஜயகிருஷ்ணன், அர்ச்சகர் திரு.வீ.சண்முகவேல்** மற்றும் சுகாதார பணியாளர் **திருமதி. இ.பார்வதி** ஆகியோருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**அருள்மிகு ஜெனகை மாரியம்மனுக்கென தனித்துவமான திருவுருவப்படம் -2016ல்**

இத் தலவரலாறு நூலின் முன் அட்டை பக்கத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ ஜெனகைமாரியம்மன் மற்றும் ஸ்ரீ சந்தன மாரியம்மனின் திருஉருவமானது என்னுடைய ஆண்டுகால விருப்பத்திற்கும், தேடலுக்கும் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகவே கருதுகிறேன்.

தமிழ்நாட்டில் சமயபுரம் மாரியம்மன், மதுரை மீனாட்சி அம்மன் போன்ற தெய்வங்களுக்கென தனித்துவமான திருஉருவப்படங்கள் உள்ளதுபோல நம் ஜெனகைமாரியம்மனுக்கும் ஓவிய திருவுருவத்தினை உருவாக்கிட வேண்டுமென்ற என்னுடைய நீண்ட நாள் விருப்பத்தினை 2016ம் வருடம் அழகிய ஓவியமாக நிறைவாக செய்து முடிக்க அருளிய ஸ்ரீஜெனகைமாரியம்மனுக்கு நன்றிகள்.

அம்பாளின் இத்தகைய எழில்மிகு ஓவியத்தை மிகுந்த அழகுடன் நிறைவு செய்து கொடுத்த ஓவிய வல்லுநர்களான **திரு. ராஜா. அ** மற்றும் **திரு. வேல்முருகன். ஜெ** ஆகியோருக்கு நன்றி கூறி மகிழ்கிறேன்.

அனைத்து பக்தர்களுக்கும் அம்மனின் புகைப்படத்தை பிரசாதமாக வழங்கிட வேண்டுமென்றெண்ணிய எனது பெற்றோரின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் விதமாக 2016 ம் வருடம் முதல் இன்று 2022 வரை ஸ்ரீஜெனகை மாரியம்மனின் புகைப்படத்தை இரண்டு லட்சத்து அறுபத்தி ஏழாயிரம் பிரதிகளை கடந்து சிறந்த முறையில் அச்சிட்டு எனக்கு

வழங்கி வரும் **சிவகாசி மாடர்ன் ஆப்செட் அச்சக உரிமையாளர்களுக்கு** என் மனப்பூர்வ நன்றிகளை தெரிவிக்கிறேன்.

**அருள்மிகு ஜெனகை மாரியம்மனின் வரலாற்றுத் தேடல் இனிதே நிறைவுற எனக்கு பக்கத்துணை நின்ற அம்பாளின் அடியவர்கள்:-**

1. **திரு. ஹரிமுருகன் A M அவர்கள்** – தமிழ்த்துறை, காமராசர் பல்கலைக்கழகம்
2. **திரு. சதீஷ் பாபு அ அவர்கள்** – உதவி பேராசிரியர் விவேகானந்தா கல்லூரி-திருவேடகம்
3. **திரு. சுந்தரம் V மற்றும் தர்மராஜ் A அவர்கள்** - ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் ஆலய முன்னாள் நிர்வாக பணியாளர்கள்
4. **திரு. முத்துப்பிரகாஷ் P அவர்கள்** – திருச்சி.
5. **திரு. P S மணிகண்டன் அவர்கள்** - சோழவந்தான்.
6. **திரு. சாரதிகாந்த் S அவர்கள்** – சோழவந்தான்.
7. **திரு. விடியல் பவுன்ராஜ் பா அவர்கள்** – சோழவந்தான்
8. **திரு. குமரேசன் G அவர்கள்** - சோழவந்தான்.

அன்புடன்...

**நூல் ஆசிரியர்**

**ஜெனகராஜ் ரா DME, BCA, MBA**

# பொருளடக்கம்


| வரிசை எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | தல அறிமுகம் | 1 |
| 2. | சோழவந்தான் - பெயர்களும் காரணங்களும் | 4 |
| 3. | தலத்தின் சிறப்புகளும் பெருமைகளும் | 12 |
| 4. | இரு மூலவர்களும் பெயர்க்காரணமும் | 25 |
| 5. | ஸ்ரீ ஜெனக மாரியம்மனுக்குரிய பூஜைகளும் உபசாரங்களும் | 37 |
| 6. | வைகாசி பெருந்திருவிழா - கொடியேற்றமும் விழாக்களும் | 42 |
| 7. | அன்றைய செடில் திருவிழாவும் இன்றைய தேரோட்டமும் | 57 |
| 8. | ஆலயத்தின் நிர்வாக அமைப்பும் வளர்ச்சிகளும் | 73 |
| 9. | திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நிகழ்வுகள் | 78 |
| 10. | ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் - பிரார்த்தனையும் சரணாகதியும் | 87 |
| 11. | வைகாசி பெருந்திருவிழாவும் வேண்டுதல்களும் | 95 |
| 12. | அம்மையின் விதங்களும் கடைபிடிக்கவேண்டிய கட்டுப்பாடுகளும் | 115 |
| 13. | ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் ஆலய வழிபாடும் கடைபிடிக்க வேண்டிய சாஸ்திர விதிகளும் | 119 |
| 14. | ஸ்ரீ ஜெனகை மாரியம்மனுக்குரிய அபிஷேகங்களும் உன்னதப் பலன்களும் | 122 |
| 15. | ஸ்ரீ ஜெனகை மாரியின் குழந்தைகளுக்கு ஏற்ற திருப்பெயர்கள் | 125 |
| 16. | ஸ்ரீ ஜெனகைமாரியம்மனின் 108 போற்றி அகவல் | 135 |
| 17. | ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் அருட் கவசம் | 138 |
| 18. | ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் பாமாலை | 143 |
| 19. | துணை புரிந்த சான்றுகள் | 150 |

100 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயத்தின் தோற்றம்

**ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் - மக்களின் காவல் தெய்வம்**

# தல அறிமுகம்

## கோவில்

தமிழ்நாடு திருக்கோவில்கள் நிறைந்த நாடு. வானளாவிய கோபுரங்கள் நாட்டிற்க்கே ஒரு ஆன்மீக அடையாளம். கோவில்கள் தமிழ் நாகரிகத்தின் சின்னங்கள். வற்றாத கலை ஊற்றுக்களாக விளங்குபவை. கோவில்கள் கலையுலகிற்கு தமிழர் அளித்த கலைக் கொடைகள் என்றால் அது மிகையாகாது. கோ+இல்= கோவில். கோ-இறை, இல்-தங்கும் இடம், ஆக கோவில் என்பது இறை தங்கும் இடமாகும்.

### ஆலயம்

ஆலயம் என்பதற்கு ஆலயம் (ஆ- ஆன்மாக்கள், லயம்- லயிக்கும்) எனப்பிரித்து ஆன்மாக்கள் லயிக்கும் இடம் எனப் பொருள் கூறுவர். கோயிலுக்குச் சென்று வந்தால் நமது மனதில் ஒரு விதமான நிம்மதி பரவுவதை நம்மால் உணர முடியும். அதற்குக் காரணம் நம் ஆன்மாக்கள் அங்கே லயிப்பதேயாம். கோயிலுக்குச் சென்று வருவதால் உடலும், மனமும் ஒருங்கே ஆரோக்கியம் பெறும் என்பது விஞ்ஞான பூர்வமான உண்மை. இதற்கு கோயில் அமைக்கப்பட்டுள்ள விதம் ஒரு முக்கியமான காரணமாகும்.

### மாரியம்மன்

மாரியம்மன் வரலாறு பற்றிய ஆராய்ச்சியில் மாரி என்பது மழை எனப்படுகிறது. மழை தரும் தெய்வம் மாரியம்மன் ஆவார். மாரி என்றால் ‘மழை’ என்றும் ‘அம்’ என்றால் நீர் என்றும் ‘அன்’ என்றால் இம்மை என்றும் பொருளாகும்.

“மழை’’ என்பது குளிர்ச்சி பொருந்தியது. “அம்மை’’ என்றால் “அம்மா’’ அல்லது “அம்மை நோய்’’ என்பது பொருள். அம்மை நோய் வெம்மைத் தன்மையால் ஏற்படுவது. எனவே மாரியம்மை குளிர்ச்சியும், வெம்மையும் நிறைந்த தெய்வம் எனலாம். வெம்மைக்குப் பின் குளிர்ச்சியைத் தருகின்ற தெய்வம். அதாவது வெப்பத்தால் ஏற்படும் வறட்சிக்குப்பின் மழையைத் தந்து செழிக்கச் செய்பவள் என மக்கள் நம்புகின்றனர். ஆனால் மக்களில் ஒரு சாரார் இத்தலத்தில் வீற்றிருக்கும் அம்பாளை புராண காலமான திரேதாயுகத்தில் வாழ்ந்த ஜமதக்கினி முனிவர் - ரேணுகாதேவியுடன் ஒப்பிட்டு தமது கருத்தாக்கங்களை தெரிவிக்கின்றனர். இதற்கு ஏற்றாற்போல இத்தலம் நதியின் அருகாமையில் அமைந்திருப்பதால் அவர்களுக்கு அப்படி தோன்றியிருப்பதில் வியப்பேதும் இல்லை. ஜமதக்கினி- ரேணுகாதேவி புராணக்கதையே ஸ்ரீ ஜெனகை மாரியம்மனின் வரலாறாக இருக்குமென்று மக்கள் நம்பியும் விடுகிறார்கள். இக்கூற்று ஸ்ரீ ஜெனகை மாரியம்மனின் வரலாற்று தேடல் ஆய்வின்படி ஏற்புடையதல்ல. ஒவ்வொரு மாரியம்மன் ஆலயங்களுக்கும் ஒவ்வொரு வரலாறுகள் உண்டு. அவ்வகையில் புராண கால ரேணுகாதேவிக்கும் இத்தலத்தில் வீற்றிருக்கும் சந்தனமாரியம்மன் மற்றும் ஜெனகை மாரியம்மனுக்கும் தொடர்பில்லை என்பதே உண்மை.

அதன்படி தமிழ்நாட்டில், மதுரை மாவட்டம் சோழவந்தான் ஊரின் மையப்பகுதியில் கடந்த கி.பி 15ம் நூற்றாண்டு முதலே மக்களின் குல தெய்வமாகவும், இஷ்ட தெய்வமாகவும், காவல் தெய்வமாகவும் விளங்கி அருள்பாலித்து வரும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக போற்றப்படும் அருள்மிகு ஸ்ரீ ஜெனகை மாரியம்மனின் ஆலயம் தோன்றிய வரலாற்றினையும், அம்பாளின் அடியவர்கள் மேற்கொள்ளும் நேர்த்திக்கடனையும், பின்பற்ற வேண்டிய விரத முறைகளையும் அடுத்தடுத்து வரும் பக்கங்களில் எளிமையான தமிழ் நடையில் காணலாம்.

## பொதுவாக புராணங்கள் என்பது

வட இந்தியாவை குப்தர்கள் ஆண்ட காலத்தே வடமொழியில் புராணங்கள் பல இயற்றப்பட்டன. இந்து மதம் மறுமலர்ச்சியடைந்த அக்காலத்தில் பாமர மக்களைப் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தப் புராணக் கதைகள் எழுதப்பட்டன. திருக்கோயில்கள் பல எழுந்தன. கட்டடக் கலையும், சிற்பக் கலையும் வளர்ந்தன. இவ்வாறான போற்றுதலுக்குரிய குப்தர்களின் ஆட்சிக் காலத்தைப் பொற்காலம் என்றே வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

## புராணம் விளக்கம்

இந்தியாவின் மிகப் பழைய இலக்கியங்களை வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்று மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். வேத காலத்திற்கு முன்பே புராணங்கள் கதை வடிவத்தில் வழங்கி வந்திருக்கின்றன, புராணம் என்ற சொல்லுக்கு, யுகங்கள் கடந்த மிக மிகப் பழமையான வரலாறு என்பது பொருள். எது மிகப் பழைய காலத்திலிருந்து இன்று வரைக்கும் மக்களிடத்தில் பரவி வாழ்ந்து வருகிறதோ அதைப் ‘புராணம்’ என்று கூறலாம். யுகம் என்பது இந்துக்களின் கால கணிப்பு முறையில் காலத்தை அளக்கும் அலகுகளில் ஒன்று. யுகங்கள் மொத்தம் நான்காக சொல்லப்படுகிறது. அவை கிருதயுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்று நான்கு பிரிவாக உள்ளன. இவற்றில் திரேதாயுக தோன்றல்களான ஜமதக்கினி - ரேணுகா தேவி, ராமபிரான் - ஜனக மகாராஜா ஆகியோர் திரேதாயுக காலத்தில் வாழ்ந்தவர்களாக புராண செய்திகள் தெரிவிக்கிறது. திரேதாயுகம் எனப்படுவதை 12 லட்சத்து 96 ஆயிரம் மனித வருடங்களாகவும், 3,600 தேவ வருடங்களாகவும் கணக்கில் கொள்ளப்படுகிறது. ஆகையால் ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயம் இக்கலியுகத்தின் தோன்றலாக இருப்பதால் புராண காலத் தொடர்பற்றதாகவும், அதே நேரத்தில் சரித்திர வரலாறு நிறைந்த சக்தியாகவே விளங்குவதை அறியமுடிகிறது.

## தல அமைவிடம்

இத்தலம் இந்தியத் திருநாட்டின் தென்தமிழ்நாட்டில், வைகை நதிபாயும் பாண்டிய நாட்டில், மதுரை மாவட்டம், வாடிப்பட்டி கூற்றத்தில் சோழவந்தான் பேரூராட்சி நிர்வாக அமைப்பிலும், ஊரின் நடுவேயும் மதுரை மாநகரில் இருந்து 20 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது.

**பேருந்து போக்குவரத்து**

தமிழகத்தின் எந்தவொரு பகுதியிலும் இருந்து இத்தலத்தினை அடைவதற்கு வசதியாகவும் ஆலய தரிசனம் முடிந்து சொந்த ஊர்களுக்கு செல்வதற்கு வசதியாகவும் பேருந்து வசதி அடிக்கடி உள்ளது.

**இரயில் போக்குவரத்து**

இத்தலத்தில் இருந்து 0.5 கி மீ அருகாமையில், தென்னிந்திய ரயில்வேயின் வழித்தடம் அமையப்பெற்றுள்ளது.

**விமான போக்குவரத்து**

தலத்தில் இருந்து பெரியார் பேருந்து நிலையம் மார்க்கமாக அருப்புக்கோட்டை செல்லும் சாலையில் உள்ள ரிங் ரோடு பகுதியில் விமான போக்குவரத்தும் அமைந்துள்ளது.

சுயம்பை வணங்கி
சுயம்பாய் வளர்வோம்!

# சோழவந்தான் – பெயர்களும் காரணங்களும்

கடந்த கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்கும் முன்பிருந்தே இப்பகுதி மண்ணையும் மக்களையும் ஆண்ட பெருவேந்தர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில், அவரவர் பெயரும், பெருமைகளும் அவர்களின் ஆட்சி எல்கைக்குட்பட்ட ஊர் பெயர்களின் மூலமாக விளங்க வேண்டும் என்ற பெரும் விருப்பத்துடன், தன் இயற்பெயராலும், தான் பெற்ற விருதுப் பெயர்களாலும் சோழவந்தானை கீழ்கண்டவாறு மக்களால் அழைக்கச்செய்து வந்துள்ளதை சோழவந்தான் சிவன் கோவில், தென்கரை மூலநாதசுவாமி கோவில் மற்றும் இதர கல்வெட்டுக்குறிப்புகள் மூலம் அறியமுடிகிறது.

**இன்றைய சோழவந்தான் முற்காலம் தொட்டே,**

பாகனூர், பாடகம் - சதுர்மறைக் காடு, பாகனூர்க்கூற்றம் - பாகனூர்க் கூற்றத்து சதுர்வேதிமங்கலம், வேள்விக்குடி - தேவதான பிரமதேயம், சதுர்வேதிமங்கலம், ஸ்ரீ வீரகேரளவிண்ணகரம் & ஸ்ரீ வல்லப விண்ணகரம், சனகபுரி, பராக்கிரம பாண்டியபுரம், சோழாந்தக சதுர்வேதிமங்கலம் (சோழகுலாந்தக சதுர்வேதிமங்கலம்), ஜனநாத சதுர்வேதிமங்கலம், (சனநாத விண்ணகரம்) என்றெல்லாம் அழைக்கப்பட்டு தற்போது சோழவந்தான் என்று நிலைத்து அழைக்கப்பட்டுவருகிறது.

**பாகனூர்**

சோழவந்தான் ஊர் முற்காலத்தில் பாகனூர் என பெயர்பெற்று விளங்கியமைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றுத் தடயங்களை கொண்ட ஆதாரமாக விளங்குவது திருமங்கலத்திற்கு அருகில் உள்ள கொங்கர் புளிங்குளம். இது வரலாற்றுச் சிறப்பு மிக்க பழங்கால தமிழ் கூடம் மற்றும் சமணர் படுகை உள்ள இடம் ஆகும். இச்சமணர் மலை மிகச்சரியாக தமிழ்நாட்டின் மதுரை மாவட்டம், உசிலம்பட்டி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு மேற்கே 2 கிமீ தொலைவிலும், மதுரையிலிருந்து 15 கிமீ தொலைவிலும் உள்ளது.

கொங்கர் புளியங்குளத்தில் காணப்படும் தமிழ் பிராமி கல்வெட்டுக்கள் கிமு இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை ஆகும். இந்த படுகைகளை செய்வித்தவர் யார், செய்தவர் யார் என்பது குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன.

**முதல் கல்வெட்டில்...**

''குற கொடு பிதவன் உபச அன் உபறுவ'' என்பது ''உபசஅன் உபறுவன்'' என்பவர் இதை செய்து கொடுத்திருப்பதை குறிக்கிறது! (உபசஅன் என்பது சமய ஆசிரியரைக் குறிக்கும்.)

**இரண்டாம் கல்வெட்டில்...**

‘‘குறு கொடல்கு ஈத்தவன் செற் அதன் ஒன்’’ என்பது குகையை குடைவதற்கு பொன் கொடுத்தவன் ‘‘சேரஅதன்’’ என்பவன் என்பதை குறிக்கிறது! சேர ஆதன் என்பவன் செய்வித்த குகை எனலாம். அந்நாளில் சேர அரசர்களில் பெயர்கள் பெரும்பாலும் ‘‘ஆதன்’’ என வருவதைக் காணலாம்.

**மூன்றாம் கல்வெட்டில்...**

‘‘பாகன் ஊர் பேராதன் பிடன் ஈத்தவே பொன்’’ என்பது பாகனூரைச் சேர்ந்த ‘‘பேராதன் பிடன்’’ என்பவரால் இக்கொடை தரப்பட்டதாக சொல்கிறது.

**பாடகம் - சதுர்மறைக் காடு**

முற்காலப் பாண்டியர் காலத்திலிருந்து பதினொன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை சோழவந்தானும், தென்கரையும், முள்ளிப்பள்ளமும் சதுர்வேதி மங்கலமாக விளங்கியுள்ளது. இவ்வூர்களில் இருந்த காடுகள் திருத்தப்பட்டு சதுரம் சதுரமாக பிரிக்கப்பட்டு பாடகம் என்ற பெயரில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

காடுகள் சதுரம் சதுரமாக பிரிக்கப்பட்டதால் சோழவந்தானுக்கு முற்க்காலத்தில் சதுர்மறைக் காடு என்றும் பெயர்பெற்று விளங்கியுள்ளது.

ஒன்றாம்பாடகம், இரண்டாம் பாடகம் என்று எண்ணிடப்பெற்று அந்தணர்களுக்கு உரிமை உடையனவாய் விளங்கிய காரணத்தினால் பாடகம் என்றானது.

**பாகனூர்க் கூற்றத்து சதுர்வேதிமங்கலம்**

‘கூற்றம்’ என்பதற்கு தற்போதுள்ள நடைமுறையில் வட்டம் (தாலுகா) என்று பெயராகும்.

சோழவந்தானும் அதனை அடுத்துள்ள தென்கரை முள்ளிப்பள்ளம் முதலிய ஊர்கள் இராசராசன் காலத்தில் பாகனூர்க் கூற்றத்து ஜனநாதச் சதுர்வேதிமங்கலத்து ஊர்களாக விளங்கியுள்ளன.

இயற்கை வளம் படைத்த சோழவந்தான் பகுதியை சூழ்ந்த பாகனூர் கூற்றத்தை வேள்விக்குடிச் செப்பேடு ‘‘நாக மரங்கள் பூத்து விளங்கும் மலர்ச் சோலைகளும் நீர்வளமிக்க மருத நிலங்களும் நிறைந்து நிற்கும் நீர்நாடு’’ என்று சிறப்பித்துப் பேசுகிறது.

‘‘நாகமா மலர்ச்சோலை நளிர்சினைமிசை வண்டலம்பும்

பாகனூர் கூற்றம் என்னும் பழனக்கிடக்கை நீர்நாட்டு’’

எனும் உவமைக்கு ஒப்பாக, நாக மரங்கள் நிறைந்த சோலைகள் கொண்ட மலையும், வைகை ஆறு பாயும் வயலும் வயல் சார்ந்த மருத நிலமாகவும் -பாகனூர் கூற்றமாகவும் விளங்கிற்று.

**வேள்விக்குடி - தேவதான பிரமதேயம்**

**தேவதானம்:** அரசன் கோவிலுக்கு என்று கொடையாகத் தரும் நிலம் தேவதானம் எனப்படும். இதன் வருவாய் கோயில் பணிகளுக்குச் செலவிடப்பட்டது.

**பிரமதேயம்:** தமிழகத்தின் ஆன்மீக செழுமைக்கு பாடுபட்டு வந்த, நான்மறைகளையும் கற்றுணர்ந்து மற்றவர்களுக்கும் பயிற்றுவிப்பவர்களும் திருக்கோயில்களில் வழிபாடுகளை முறையாக செயல்படுத்தி வருபவருமான அந்தணர்களுக்கு தமிழ் மன்னர்கள் வழங்கிய நிலக்கொடை பிரம தேயம் ஆகும். (பிரம்மம் - பிராமணர், தேயம் - நாடு (அ) ஊர்) அவர்கள் அரசுக்கு எவ்வித வரியும் செலுத்தத் தேவையில்லை.

வேள்விக்குடி என்பது நான்கு வித வேதங்களையும் கற்றுணர்ந்த பிராமண வேதியர்கள் வாழும் குடியிருப்பு பகுதிகள் என்று என்பதாகும்.

வேள்விக்குடிச் செப்பேட்டை வெளியிட்ட பராந்தக சோழன், சோழவந்தானையும் அதனைச் சூழ்ந்த தென்கரை, முள்ளிப்பள்ளம் முதலிய சுற்றூர்களையும் நான்கு வேதம் வல்ல பிராமணர்களுக்கு தேவதான பிரமதேயம் "ஸ்ரீபராந்தக சதுர்வேதிமங்கலம்" என தன்னுடைய பெயரில் தானமாக வழங்கியிருக்க வேண்டும். இதனை தென்கரையில் கண்டறிந்த முதலாம் இராசராசன் கல்வெட்டால் உய்த்துணர முடிகின்றது.

பராந்தக வீரநாராயணன் என்ற பாண்டிய மன்னன் ஒருவனும் பராந்தகன் என்ற பெயரை இயர் பெயராகவும், பட்டப்பெயராகவும் கொண்ட முதலாம் பராந்தக சோழனும் இப்பகுதியை ஆண்டுள்ளனர். இவர்களில் ஒருவர் பெயர் இவ்வூர் அந்தணர்களுக்குச் சதுர்வேதிமங்கலமாக அளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுவதைவிட வேள்விக் குடியைத் தானமாக அளித்த, பராந்தகனால் அவனது பெயரிலேயே இது சதுர்வேதிமங்கலம் மாற்றப் பெற்றிருக்க வேண்டும் என்று கருதுவது பொருத்தமாக படுகிறது. இதனை மேலும் உறுதிப்படுத்தும் வேறு சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை.

**சதுர்வேதிமங்கலம்**

சதுர்வேதிமங்கலம் என்பது சோழவந்தானுக்கு மட்டும் வழங்கப்பட்ட பெயரல்ல. நான்கு வேதங்களான ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் ஆகிய நான்கையும் முழுமையாக கற்றுணர்ந்த வேதியர்க்கு தானமாக வழங்கப்பட்ட ஊர்களுக்கு சதுர்வேதி மங்கலம் என்று பெயர். தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்களும் அவரது தேவியரும் உண்டாக்கிய சதுர்வேதி மங்கலங்கள் பலவாகும். அங்ஙனம் சோழவந்தானைப் போல, தமிழகத்திலுள்ள சதுர்வேதி மங்கலங்களுள் சில...

1. பாண்டிமண்டலத்தில் செம்பி நாட்டில் வீர நாராயண சதுர்வேதிமங்கலம் என்றும் வட ஆற்காட்டுப்போளூர் வட்டத்தில் மகா தேவ மங்கலம் என்று ஒன்று உள்ளது. அதன் பழம் பெயர் மகா தேவி மங்கலம் என்பதாகும்.
2. செங்கற்பட்டில் உள்ள மணிமங்கலம் என்ற ஊர் ராசராசனின் தேவியாகிய உலகமாதேவியின் பெயரால் அமைந்த சதுர்வேதிமங்கலமாகும்.
3. தஞ்சை வட்டத்தில் மன்னார் சமுத்திரம் என்னும் மறுபெயருடைய செந்தலை எனும் ஊர் உள்ளது. சந்திரலேகை சதுர்வேதிமங்கலம் என முற்காலத்தில் வழங்கிய பெயரே தற்போது செந்தலை என மருவியது.
4. மதுராந்தகன், சோழாந்தகன் முதலிய விருதுப் பெயர்கள் இணைந்த சதுர்வேதி மங்கலம் சோழ நாட்டிலும், பாண்டி நாட்டிலும் உள்ளன. செங்கற்பட்டைச் சேர்ந்த மதுராந்தகம் என்னும் ஊர் மதுராந்தகன் நிறுவிய சதுர்வேதி மங்கலமாகும்.

## ஸ்ரீ வீரகேரளவிண்ணகரம் & ஸ்ரீவல்லப விண்ணகரம்

வீரகேரளன் என்பது ராஜசிம்மனின் மகனான சோழன் தலை கொண்டவீர பாண்டியனின் விருதுப்பெயராகும்.

தமிழ் நாட்டில் ஈசனது கோவில் ஈச்சரம் என்று பெயர் பெற்றாற்போன்று விஷ்ணுவின் கோவில் விஷ்ணுக்கிரகம் என வழங்கிற்று. அப்பெயரானது காலப்போக்கில் மக்களின் வாய்மொழி அழைப்பினால் விண்ணகரம் என்று மருவிற்று. முதலாம் இராசராசனின் பதினேழாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று பாகனூர் கூற்றத்து சனநாதச் சதுர்வேதிமங்கலத்தின் நடுவில் ஸ்ரீ கோவில் ஸ்ரீவீரகேரளவிண்ணகரம் என்று இக்கோவில் அமைந்திருந்த இடத்தைப் பற்றித் தெரிவிக்கின்றது.

கி.பி.985 முதல் 1014 முதல் சனநாத சோழன் எனும் ராச ராச சோழன் ஆட்சி செய்த காலத்தில் சோழவந்தானை, சனநாதச் சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் விளங்கி பின்னர் சனநாத விண்ணகரம் என்று மாற்றி அழைக்கச் செய்தான்.

சனநாதச் சதுர்வேதி மங்கலத்தில் இருந்த பெருமாள் கோவில் சனநாதன் என்ற இராசராசன் பட்டப்பெயரால் சனநாதவிண்ணகர ஆழ்வார் கோவில் அழைக்கப்பட்டது. இன்று இந்தப் பெருமாள் கோவில் ‘ஜனக நாராயணப் பெருமாள் கோவில்’ என்ற பெயரில் விளங்குகிறது. இக்கோயிலில் முதலாம் இராசராசன் காலத்து எழுத்தமைதியைக் கொண்ட துண்டுக் கல்வெட்டுக்கள் கருவறைச் சுவரில் இன்றும் காணப்படுகின்றன.

வீர கேரள விண்ணகரம் என்ற பெயரை கொண்டகோவில் அழிந்துவிட்ட நிலையில் ஸ்ரீ வல்லப விண்ணகரம் என்ற கோவில் மட்டும் இப்போது உள்ளது.

## சனகபுரி

சனகபுரீஸ்வரர் எனும் பெயர் தென்கரை மூலநாத சுவாமியின் திருப்பெயர்களுள் ஒன்றாகும்.

சனகர், சனாநந்தர், சனத்குமாரர் மற்றும் சனத்சுஜாதியர் எனப் பெயர் கொண்ட சனகாதி முனிவர்கள் நால்வரும், இத்தலத்தில் (தென்கரை) வாசம் செய்து இறைவனை ஸ்தோத்திரம் செய்து வந்ததால் இத்தலத்திற்கு சனகபுரி என்ற பெயர் விளங்கியுள்ளது. சனகாதி முனிவர்கள் அல்லது பிரம்ம குமாரர்கள் என்பவர்கள் புவியில் மக்கள் தொகை பெருக்கத்திற்காக, பிரம்மாவின் மனதால் படைக்கப்பட்ட நான்கு ஆண் குழந்தைகள் ஆவர். ஆனால் தங்களை படைத்த பிரம்மாவின் விருப்பத்தை மீறி, இக்குமாரர்கள், இல்லற வாழ்வில் புகாது, பிரம்மச்சர்ய ஆசிரம வாழ்வை மேற்கொண்டு அண்டம் முழுவதும் சுற்றி ஆன்மீகத்தை பரப்பி வந்தனர் என இந்து சமய புராணங்கள் மற்றும் இதிகாசங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

தென்கரையை மையமாக கொண்டு செயல்பட்ட அண்டை ஊர்களுக்கும் பிரதானமாய் அருள்பாலித்த மூலநாதஸ்வாமிக்கு பல திருநாமங்கள் வைத்து மன்னர்களாலும், மக்களாலும் அழைக்கப்பட்டுள்ளார்.

இக்கோயிலின் கல்வெட்டுக்களில் இறைவன் பெயர் ‘மூலஸ்தானமுடையார்’ என்று குறிப்பிடப்படுகின்றது. “மூலநாத சுவாமி என்ற பெயர் இந்த இறைவனுக்கு நாயக்கர் ஆட்சி காலத்திற்குப் பிறகே வந்திருக்க வேண்டும். ஆனால் பாண்டியர் காலத்துக் கல்வெட்டுக்களில் இவர்…

உடையார் ஸ்ரீ மூலஸ்தானமுடையார் என்றும்

ஸ்ரீ மூலஸ்தானமுடைய மஹாதேவர் என்றும்

ஸ்ரீ மூலதலதானமுடைய பரமசுவாமிகள் என்றும்

சி மூலத்தான முடையார் என்றும்

சனகபுரீஸ்வரர் என்றும்,

வில்வாரண்யீஸ்வரர் என்றும்,

ஆதிசிதம்பரேஸ்வரர் என்றும், பலவாறாக குறிக்கப்படுகிறார்.

## பராக்கிரம பாண்டிய புரம்

அன்றைய பாண்டிய மன்னர்களின் கோநகராக விளங்கிய மாநகர் மதுரைக்கு மேற்கே இருபத்தைந்து கிலோ மீட்டர் தொலைவில் இப்போதும் தென்கரைக் கிராமம் உள்ளது. இதுவே பாண்டியர் கல்வெட்டுக்களில் பராக்கிரம பாண்டியபுரம் என்று குறிப்பிடப்படுகிறது.

கி.பி 11 மற்றும் கி.பி 12 ஆம் நூற்றாண்டில் பராக்கிரம பாண்டியன், ஸ்ரீவல்லப பாண்டியன், குலசேகரபாண்டியன் என மூவரும் இப்பகுதியை ஆட்சி செய்ததால் பராக்கிரம பாண்டிய புரம் என்ற பெயரை கொண்டதாக மூலநாத சுவாமி கல்வெட்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மூவரும் இப்பகுதியை சிறப்புடன் ஆட்சிசெய்து வளர்ச்சியடைய செய்துள்ளனர். தென்கரையும் சோழவந்தானும் பராக்கிரம பாண்டியனின் கண்காணிப்பில் இருந்த போது பராக்கிரம பாண்டியபுரம் என்ற பெயரில் தென்கரையில் உள்ள சிவன் கோவில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் ஸ்ரீவல்லப பாண்டியன் குருவித்துறை பகுதியில் பெருமாள் கோவில் ஒன்றை திருப்பணி செய்து அப் பகுதியினை ஸ்ரீவல்லபபுரம் என்று அழைத்து வரச் செய்தான். மேலும் முள்ளிப்பள்ளத்தில் ஸ்ரீவல்லபன் ஒரு பெருமாள் கோவிலினை தன் பெயரில் ஸ்ரீவல்லபவிண்ணகரம் என்று பெயரிட்டுத் திருப்பணி செய்துள்ளார்.

குலசேகர பாண்டியன் அருகிலுள்ள ஈஸ்வரமேட்டை குலசேகரமங்கலம் என்ற பெயரில் திருத்தி அமைத்து சிறப்பித்துள்ளான்.

## பராந்தக சதுர்வேதி மங்கலம்

பராந்தகநெடுஞ்சடையன் வேள்விக்குடியை நற்கொற்றனுக்கு அளித்ததோடு மட்டுமல்லாமல் மற்றொரு தானத்தையும் இப்பகுதியில் செய்துள்ளான் என்பதை அண்மையில் கண்டறியப்பட்ட தென்கரைக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டு இராசராசனின் பன்னிரண்டாவது ஆட்சியாண்டில் கி.பி.997-இல் பொறிக்கப்பெற்றது.

சோழவந்தானும் அதனைச் சார்ந்த தென்கரை, முள்ளிப்பள்ளம், முதலிய ஊர்கள் "பராந்தகச் சதுர்வேதிமங்கலம்" சோழாந்தகச் சதுர்வேதிமங்கலம், சனநாதச் சதுர்வேதிமங்கலம் என்ற பெயர்களில் விளங்கியமையையும் அதன் ஆட்சிப் பொறுப்பை அந்தணர் மகாசபை கவனித்து வந்தது என்பதற்கும் தென்கரை சிவன் கோவில் முன் மண்டபம் தூண் கல்வெட்டுக்கள் சான்றாக விளங்குகின்றன.

இராசராசன் காலத்திற்கு முன்பு சோழவந்தான் அதன் சுற்றூர்களும் பராந்தக நெடுஞ்சடையனின் பெயரில் பராந்தகச் சதுர்வேதிமங்கலம் என்று விளங்கியது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

**சோழாந்தக சதுர்வேதிமங்கலம் - சோழகுலாந்தக சதுர்வேதிமங்கலம்**

சோழாந்தக சதுர்வேதிமங்கலம் என்பது பிற்கால பாண்டிய மன்னன் வீரபாண்டியனால் அழைக்கச் செய்த பெயராகும்.

வீரபாண்டியன், வேந்தன் இராசசிம்ம பாண்டியனின் மகன் ஆவான். பராந்தக சோழனின் இறுதிக் காலத்தில் அவனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி மீண்டும் பாண்டிய நாட்டில் பாண்டியராட்சியை ஏற்படுத்தியவன். கி.பி.946 முதல் கி.பி 966 வரை பாண்டிய நாட்டை வீரபாண்டியன் ஆட்சி புரிந்தான். இவனது ஆட்சியின் ஒன்பது மற்றும் பத்தாம் ஆண்டு கல்வெட்டுக்கள் கீழமாத்தூர் கோவிலில் காணப்படுகிறது.

சோழ மன்னனை போரில் வென்று வெற்றிவாகை சூடியதால் வீரபாண்டியனுக்கு “சோழாந்தகன்”, மதுரை மீட்ட வீரபாண்டியன், சோழன் தலைகொண்ட கோவீரபாண்டியன் என்ற விருதுப்பெயர்கள் உண்டு. பராந்தக சோழனுடைய பல கல்வெட்டுக்கள் அவனுக்கு உத்தமசீலி என்றொரு மகன் இருந்ததை தெரிவிக்கிறது. அவனை கிபி. 945ம் ஆண்டு வீழ்த்தியதாலே வீரபாண்டியனுக்கு சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் எனும் பெயர் ஏற்பட்டதாக அறிய முடிகிறது. ஆனால் இக்காரணம் இன்றுவரை தெளிவுபெறவில்லை.

சோழாந்தகன் என்பதற்கு சோழர்களுக்கு அந்தகன் என்று பொருளாகும். அந்தகன் என்றால் எமன் என்பதாகும். சோழர் குலத்துக்கு அந்தகன் என்பதாலேயே சோழ குலாந்தக சதுர்வேதிமங்கலம் எனவும் அழைப்பில் இருந்துள்ளது. எனவே இங்கு வீரபாண்டியனை சோழர்களுக்கு காலன் போன்றவன் என குறிப்பிடப்படுகிறது.

சோழாந்தகனின் அதிகாரிகள் தங்களைச் சோழாந்தகப் பிரம்மராயர். சோழாந்தகப் பல்லவராயர் என்று அழைத்துக் கொண்டனர்.

சோழாந்தகன் என்ற தனது சிறப்பு பெயரில் பாகனூர் கூற்றத்தில் தென்கரை, சோழவந்தான் முதலிய பல ஊர்களை இணைத்துச் “சோழாந்தகச் சதுர்வேதிமங்கலம்” என்ற பெயரில் வீரபாண்டியன் அந்தணர்களுக்கு தானம் அளித்ததைத் தென்கரைப் பகுதியில் உள்ள கல்வெட்டுக்கள் உய்த்துணர வைக்கின்றன.

சோழாந்தகனின் ஆட்சி காலத்தில் சோழாந்தகன் நாழி, என்று ஒரு அளவை வழக்கில் இருந்தது. சோழாந்தகன் நந்தவனம் என்ற பெயரில் ஒரு நந்தவனம் ஏற்படுத்தப் பெற்றிருந்ததை கல்வெட்டு குறிப்பால் அறிகிறோம்.

அங்ஙனம் பாகனூர் கூற்றத்துச் சோழாந்தக சதுர்வேதிமங்கலம், சோழாந்தகனின் ஆட்சியில் அழைக்கப்பட்டு வந்த இத்தலம் தற்போது, சோழவந்தான் என்று மருவி மக்களால் அழைத்துவரப்பெற்று நிலைத்து விளங்கியுள்ளது.

**ஜனநாத சதுர்வேதி மங்கலம்**

ஜனநாதச் சதுர்வேதி மங்கலம் என்பது சோழவந்தானுக்கு ராச ராச சோழன் காலத்தில் வழங்கப்பட்ட பெயராகும். ராஜராஜனின் ஆட்சிக்காலம் கி.பி 985 முதல் கி.பி 1014 வரையாகும். அதற்கு முன்பு கி.பி.946 முதல் கி.பி 966 வீரபாண்டியன் மதுரையை அரசாட்சி செய்த காலத்தில் “சோழாந்தகச் சதுர்வேதி மங்கலம்” என்றும் பெயர் பெற்று விளங்கியது. இராசராசனின் பதினேழாவது ஆட்சியாண்டிலிருந்து சோழாந்தகச்

சதுர்வேதிமங்கலம் என்பதிலிருந்து மாற்றப்பெற்று இராசராசனின் விருதுப்பெயரால் ஜனநாத சதுர்வேதி மங்கலமாக அமைந்திருந்தது.

இவ்விபரங்கள் ராஜராஜனின் 17வது ஆட்சி காலத்தில் பொறிக்கப்பெற்ற வடமொழி கல்வெட்டும், தமிழ் கல்வெட்டும் தென்கரை மூலநாத சுவாமி கோவிலில் உள்ளது.

அதில் சனநாத சதுர்வேதி மங்கலத்தில் அமைந்திருந்த திருமால் ஆலயத்தின் திருச்சென்னடைக்காக நிலம் தானமாகத் தரப்பட்டதையும் இராசராசனின் ஆட்சியாண்டு கல்வெட்டு தெரிவிக்கிறது. சோழவந்தானிலிருந்து வைகையின் வடகரை வழியாக மதுரை செல்லும் வழியில் அமைந்த தேனூரைச் சார்ந்த ஜனநாதப் பல்லவரையன் கோதண்டன் சோலை என்பவன் தனது ஊரில் இருந்த நிலத்தை இக்கோயிலுக்குத் தானமாக நீர்வார்த்துக் கொடுத்தான்.

இந்நிலங்களை இவன் உடன்பிறந்தான் கோதண்டன் குடியோம்பி. கோதண்டன் பூவணவன், பூவணவன் கோதண்டன் வீரகேரளன் ஆகியோரிடமிருந்தும் தனது ஊரினைக் சார்ந்த தேனூர் மூவேந்த வேளான் மற்றும் கிழவன் சோலையிடமிருந்தும் முறையே முக்காலே முக்காணி அரைக்காணி பத்து மா நிலம் விலைகொண்டு பெற்றுத் தானமாக நீர்வார்த்துக் கொடுத்தான். இச்செய்தி இக்கொடையைப் பாதுகாக்கும்படி வடமொழியில் அமைந்த சுலோகமாகவும் மற்றொரு கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் ஜனநாத மங்கலம்

இலங்கையில் சோழர் ஆட்சி (993–1077) பத்தாம் நூற்றாண்டின் நாலாம் காற்பகுதி தொடக்கம் சுமார் 70 ஆண்டு காலம் இலங்கையில் சோழர் ஆட்சி நிலவியது. இலங்கை அரசன் ஐந்தாம் மகிந்தன் என்பவன், சோழர்களுக்கும் அவர்களின் பகைவர்களான பாண்டியர், சேரர் ஆகியோருக்கும் இடையிலான போட்டியில் சோழரின் பகைவர்களுக்கு ஆதரவு கொடுத்ததாகத் தெரிகிறது. இதனால் சோழ மன்னனான முதலாம் இராஜராஜன் கி.பி. 993இல் இலங்கையின் மீது படையெடுத்து தலை நகரமான அனுராதபுரத்துடன் சேர்த்து நாட்டின் வட பகுதியைக் கைப்பற்றிக் கொண்டான். அனுராதபுரத்தைக் கைவிட்டுப் பொலன்னறுவை என்னும் இடத்தைத் தலைநகரம் ஆக்கினான். சோழர் ஆட்சிக்குட்பட்ட இலங்கையின் பகுதி மும்முடிச் சோழ மண்டலம் எனப் பெயரிடப்பட்டு, தலைநகரான பொலன்னறுவையும் ஜனநாதமங்கலம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இராஜராஜனின் கல்வெட்டுகள் பல, இலங்கையில் உள்ளன. ஈழத்தைச் சோழர் கைப்பற்றியதைக் கொண்டாடும் வகையில் பொலன்னறுவையில் இராஜராஜன் சிவனுக்கு ஒரு கற்றளி எடுப்பித்தான். பொலன்னறுவை நகரின் சுவர்களுக்குள் அமைந்துள்ள இந்த அழகிய சிவாலயம் இலங்கை நாட்டில் காணப்படும் புராதனச் சின்னங்களில் இன்றளவும் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளது.

இறுதியாக பிற்கால பாண்டிய மன்னன் வீரபாண்டியனின் பட்டபெயரான சோழாந்தகனின் பெயரால் இத்தலத்திற்கு சோழவந்தான் என்ற பெயரும், ராஜராஜ சோழனின் பட்டபெயரான ஜனநாதனின் பெயரால் இத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளுக்கு ஜனகநாராயணப்பெருமாள் என்ற பெயரும் அதன் பின்பு சிறிது காலங்கள் கழித்து வந்தருளிய மாரியம்மனுக்கு ஜனக மாரியம்மன் என்ற பெயரும் தற்போது நிலைத்து விளங்கியுள்ளது வரலாற்று ஆய்வுக்குறிப்புகளாகும்.

## திருமலை நாயக்கர் வழங்கிய செம்பு சாசனப் பட்டயத்தில் "சொளவந்தான்"

ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் கோவில் 1651வது வருட வைகாசி தேரோட்ட செடில் திருவிழாவில் இருபிரிவினர்களுக்கிடையே ஏற்பட்ட கலவரத்தை அடக்கிய தூங்கா தேவருக்கு மன்னர் திருமலை நாயக்கர் வழங்கிய செம்பு சாசன பட்டயத்தில் சோழவந்தான் ஊரை ''சொளவந்தான்'' என்று பட்டயத்தின் முன் பக்கம் பதிமூன்றாவது வரியிலும் பட்டயத்தின் பின்பக்கம் இரண்டாவது வரியிலும் குறிப்பிட்டுள்ளார். அப்படியெனில் திருமலை நாயக்கரின் ஆட்சிக்காலமான பதினாறாம் நூற்றாண்டிலேயே இத்தலம் ''சொளவந்தான்'' என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டு வந்துள்ளதை அறியமுடிகிறது.

## புலவர் அரசஞ்சண்முகனாரின் கவியில் சோழவந்தான்

சோழவந்தானில் வாழ்ந்த அரசஞ்சண்முகனார் தமது குறிப்பில் சோழவந்தானின் பெயர் காரணத்தை அழகுடன் கவியாக விளக்கியுள்ளார்.

''சோழன் தலைக்கொய்த சொல்வீர பாண்டியனைச்
சோழாந் தகனென்று சொன்னாரே – தோழியே
சோழாஞ் தகனென்ற சொல்மருவித் தீந்தமிழில்
சோழவந்தான் ஆனதெனச் சொல்'' என்று மேற்க்கோள் காட்டியுள்ளார்.

**சுயம்பை வணங்கி
சுயம்பாய் வளர்வோம்!**

# தலத்தின் சிறப்புகளும் பெருமைகளும்

**தலத்தின் சிறப்புக்கள்**

சோழவந்தான், தென்கரை மற்றும் முள்ளிப்பள்ளம் ஆகிய பகுதிகளுடன் இணைந்த வயலும் வயல் சார்ந்த மருத நிலப் பகுதியாகும். இயற்கை எழில் மிகுந்த ஊர்களாக இருந்தமையால் இவ்வூர்களில் பெரும் பகுதி 11,12,13 நூற்றாண்டுகளில் வணிகர்கள் நிறைந்து வாழ்ந்த நகரமாகவும் பெரிய வணிகத் தலங்களாகவும் விளங்கியுள்ளன. தமிழக தொல்லியல் துறை ஆய்வுகளின்படி சோழவந்தான் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த ஊர் என தெரிய வருகிறது.

**தற்போதைய ஆலயத்தின் மகா மண்டபம்**



ஆலய முன்பக்கத் தோற்றம்

ஆலய சுற்றுப்பிரகாரம்

சோழ, பாண்டியர்களின் ஆட்சிக்காலம் முதலே மூலநாதசுவாமி கோவிலை மையமாக கொண்டு தென்கரையே பெரும் நகரமாக பிரதான சிறப்புடன் திகழ்ந்துள்ளதை தென்கரை பிரளயநாத சுவாமி கோவில் மற்றும் மூல நாத சுவாமி கோவில் கல்வெட்டுக்குறிப்புகளின் மூலமாக அறியமுடிகிறது.

இப்பகுதிகளின் வரலாற்றினையும், ஆண்ட மன்னர்களின் சிறப்புகளையும் பற்றி சிறப்பித்துக்கூறும் விதமாக பிரளய நாதர் சிவன் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களின் எண்ணிக்கைகள் மட்டும் 85.

## ஆலயத்தின் தற்போதைய அமைப்பு

ஸ்ரீ ஜெனகைமாரியம்மனின் திருத்தலம் ஊரின் மையப்பகுதியில் எழிலுறும் வயல்வெளிகளும் ஓங்கி வளர்ந்த மரங்களும் சில்லென்ற தென்னந்தோப்புகளும் நிறைந்துள்ள மருதநிலப்பகுதியில், வைகை ஆற்றின் மிக அருகாமையில் அமைந்துள்ளது. ஆலயத்தைச்சுற்றி அம்மன் திரு வீதியுலா வரும் நான்கு ரத வீதிகளும் அழகுற அமைந்துள்ளது. கோவிலுக்கு வெளியே ஐந்தடியில் பழமையான பலிபீடம் ஒன்று அமைந்துள்ளது. இந்த பலிபீட சங்கிலி கருப்பனிடம் நமது ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை பலியிட்டு பணிந்து வணங்கிய அடியவர்களை கம்பீரமாய் உயர்ந்த ராஜகோபுரம் பரிவுடன் அனுமதிக்கிறது. ராஜ கோபுரத்தைக் கடந்து மகாமண்டபம் நுழைந்தவுடன் மூலஸ்தானத்தின் நேர் எதிரே நிற்கும் கொடிமரமும் ரிஷபமும் முதலில் நம்மை ஆசீர்வதிக்கிறது .பின் அவ்விடத்தில் இருந்து மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் அன்னை ஜெனகை மாரியை தரிசிக்க எண்ணி நாம் திரும்பி பார்ப்பதற்குள் அம்பாள் நம்மை பார்த்து சிரிக்கும் காட்சி அழகிலும் அழகு. அதே நேரத்தில் ஜெனகையின் பின் நிற்கும் சந்தனமாரியானவள் ஜெனகைக்கு முன் தோன்றிய மூத்தவள் கம்பீர மிடுக்குடன் ஆளுயரத்தில் நின்ற கோலமுடன் வீற்றிருந்து அருள்கிறார். கருவறையின் வாசலினை துவாரபாலகிகள் இருபுறமும் விரிந்த கண்கொண்டு நம்மை காண்காணித்த வண்ணம் காத்து நிற்கின்றனர். மகாமண்டபத்தினுள்ளே மூலவரின் வலதுபுறம் பராசக்தியின் மூத்தமகன் தன் துதிக்கையில் பூர்ண கும்பம் தாங்கி, தன்னுடைய தந்தக் கொம்பை கையில் எடுத்து, கற்போருக்கு வித்தைகளை வழங்கி அருளும் வித்தக விநாயகராக காட்சியளிக்கிறார். மூலவரின் இடதுபுறம் மயில் மேலேறிய சுப்பிரமணியர் புன்னகையோடு ஒய்யாரமாய் அமர்ந்திருக்கிறார். அம்பிகையை வணங்கி வலம் வரும் சுற்றுப்பிரகாரத்தில் தீர்த்தக்கிணறு அமைந்துள்ளது. மூலஸ்தானத்தின் இடது பின்புற திறந்த வெளி அமைப்பில் அரசமரத்து நிழலில் நாகதேவிகள் வரிசையாய் அமர்ந்து பக்தர்களின் தோஷங்கள் நீக்கியும், தம்பதிகள் மழலை வரம் வேண்டிக் கட்டும் குழந்தை தொட்டிலை மனமிரங்கியும் பெற்றுக்கொள்கின்றனர். நாகதேவியின் அருகே ஒரு அடி உயரத்தில் முந்தைய ஆலயத்தின் நூற்றாண்டு பழமையுடைய கணபதி அமர்ந்திருக்கிறார். மூலஸ்தான விமானத்தின் ஒவ்வொரு பகுதிகளிலும் ஸ்ரீஜெனகை மாரியம்மன் தன்னுடைய அம்ச ரூபங்கள் கொண்டு காட்சியளிக்கின்றாள். கிழக்கு திசை நோக்கி இரு தேவியர்களும் பரம்பொருளான பராசக்திகளாகவும், தெற்கு திசை நோக்கி சரஸ்வதி தேவியாகவும், மேற்கு திசை நோக்கி லக்ஷ்மி தேவியாகவும், வடக்கு திசை நோக்கி துர்க்கையாகவும் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார்கள். இருபெரும் தேவியர்கள் வீற்றிருக்கும் திருக்கோவிலின் பேரமைப்பு இவ்வாறான அமைப்பிலேயே அமைந்துள்ளது.

# தலப்பெருமைகள்:-

## சரித்திர வரலாறு கொண்ட ஸ்ரீஜெனகைமாரியம்மன் ஆலயம்

பண்டைய புராண காலத்து தொடர்புடைய வரலாறுக்கதை ஏதும் இத்தலத்திற்கு இல்லையெனினும் பெருமை மிகு சரித்திர வரலாற்றுச் செய்திகள் உள்ளது. அவற்றை அடுத்தடுத்துக்காண்போம்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஊரிலும் காணப்படும் நாட்டுப்புறத் தெய்வங்களின் வழிபாடே தொன்மைமிக்க வழிபாடாகும். இயற்கைக்கு அஞ்சிய அன்றைய நாட்டுப்புற மக்கள் தம்மைக் காத்துக் கொள்ளவும், தம்மை காக்குமாறு வேண்டிக் கொள்ளவும், அன்றாட வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்திசெய்ய உதவவும், பல்வேறு வடிவங்களிலும் பெயர்களிலும் தெய்வங்களைப் உருப்பெறச்செய்து வழிபட்டு வந்துள்ளனர்.

அதன் அடிப்படையில் சோழவந்தானில் வாழ்ந்த முன்னோர்களால் மண் சுதை அமைப்பில் மாரியம்மனின் ரூபம் நின்ற கோலத்தில் வடிவமைக்கப்பட்டு கி.பி பதினைந்தாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே வணங்கி வந்துள்ளனர். அதன் பின் கி.பி பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியிலோ அல்லது பதினாறாம் நூற்றாண்டின் துவக்கத்திலோ சுமார் ஒன்றரை அடி உயர அமைப்பில் ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் ஆலயத்தில் தற்போதைய வழிபாட்டில் இருக்கும் கற்சிலை திருமேனியானது ஆலயம் இப்போது இருக்கும் அதே இடத்தில் பூமியிலிருந்து கிடைக்கப்பெற்று வழிபடப்பட்டு வந்துள்ளதாக தெரியவருகிறது. ஆயினும் கிடைக்கப் பெற்ற காலத்தை அறிய முடியவில்லை. எளிமையான முறையில் கொண்டாடப்பட்ட அன்னையின் ஆலயம் கால நகர்விலும், மஹாசக்தியின் அருளாலும் பக்தர்களின் வேண்டுதல்கள் நிறைவேறியதின் அடிப்படையிலும் பன்னாடும் கொண்டாடும் மஹா சக்தி வாய்ந்த தலமாக தற்போதுள்ள ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் ஆலயம் விளங்கி வருகிறது.

## தலத்தின் பழமையை உறுதிசெய்யும் வரலாற்றுக் குறிப்புகள்

அனைவருக்கும் அன்னையாம், அருட்கடலாம் அருள்மிகு ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் கி.பி பதினைந்தாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே மக்களின் காவல் தெய்வமாக விளங்கி வருகிறார் என்பது கீழ்கண்ட கூற்றுகளால் புலப்படுகிறது.

இங்கு பழமையை சுட்டிக்காட்டும் போது, இப்போதுள்ள ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் கோவிலை அதனுடைய கட்டுமான அமைப்பை வைத்து நூற்றாண்டு பழமை உடையது என்று குறிப்பிட இயலாது. ஏனெனில் சிறிய அமைப்பில் போதிய வசதிகளற்ற நிலையில் சில நூற்றாண்டுகளாக இருந்த ஆலயம் கடந்த 2003-2005ம் ஆண்டு முழுவதுமாக நீக்கி புதிதாக மாற்றியமைக்கப்பட்டது. எனவே இங்கு தொன்மையுடையதாக இரு மஹா சக்திகளின் திருமேனிகளை மட்டுமே குறிப்பிட முடிகிறது.

18ஆம் நூற்றாண்டுக்கு முன்பில் இருந்து 2003–ம் ஆண்டு வரை இருந்த ஜெனகை மாரியம்மன் ஆலயத்தின் தோற்றம்

ஆலயத்தின் அமைப்பு – மேலிருந்து

ஆலயத்தின் நுழைவு வாயில்

நுழைவு வாயில் முன்மண்டபம்

அருள்மிகு வித்தக விநாயகர்

அருள்மிகு மயிலேறிய சுப்ரமணியர்

**கொடிமரமும் ரிஷப வாகனமும்**

**மகா மண்டபத்தின் அமைப்பு**

**மூலஸ்தானத்தின் பின்புறம் – லெட்சுமி தேவியாக** **மூலஸ்தானத்தின் தென்புறம் – பத்ரகாளியாக**

**மகா மண்டபம் – பக்தர்கள் தரிசனம் செய்த இடம்**

**மகா மண்டபத்தின் உட்புறத் தோற்றம்**

**தரிசனம் முடித்து பக்தர்கள் வெளியேறும் சுற்றுப்பாதை**

**மூலஸ்தானத்தின் பின் நின்று வணங்கச் செல்லும் சுற்றுப்பாதை**

**மூலஸ்தானத்தை சுற்றி வணங்கி விட்டு மீண்டும் அம்மனை தரிசிக்கச் செல்லும் பாதை**

**இராஜ கோபுரத்தின் கீழ் அமைந்திருந்த மண்டபம்**

- ❖ பல நூற்றாண்டுகளுக்கு முன் இத்தலத்தைச் வாழ்ந்த மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப மக்களின் வாழ்வும் வாழ்க்கைத்தரமும் உயர்ந்துள்ளது. 18ம் நூற்றாண்டில் இருந்து கடந்த 2003ம் வரை இருந்த முந்தைய ஸ்ரீஜெனகை மாரியம்மன் கோவில் எந்த ஒரு மன்னராலும் கட்டப்பட்ட கோவில் இல்லை என்பதும் அன்னையின் அளவற்ற கருணையினால் பலன்பெற்ற கிராம மக்கள் பலராலேயே இக்கோவில் அமைப்பு சிறிது சிறிதாகவே வளர்ந்து வந்துள்ளது என்பதையும், அன்றைய ஆலயத்திற்க்கு கொடை வழங்கியவர்களின் பழைய கல்வெட்டு வருடக்குறிப்புகளை பார்க்கும்போதே உணரமுடிகிறது.
- ❖ கி.பி 1651 ம் வருடம் திருமலை நாயக்கர் ஆட்சிக்காலத்தின் போது சோழவந்தான் ஸ்ரீஜெனகை மாரியம்மன் கோவில் தேரோட்ட செடில் திருவிழாவில் வலங்கை, இடங்கை எனும் இரு பிரிவினை சார்ந்தவர்களுக்கிடையே, ஆலய வழிபாடு மற்றும் செயல்பாட்டு உரிமைகள் தமக்கே சொந்தம் என்ற ஆதிக்க போட்டியில் ஏற்பட்ட பெரும் கலவரத்தை, மன்னர் திருமலை நாயக்கர் தன் படை வீரர்களை அனுப்பி கட்டுப்படுத்தி திருவிழாவை தடையின்றி நடைபெற செய்தமைக்கு திருமலை மன்னரின் பாளையப்பட்டு தலைவராகிய திடியன் தூங்கா தேவனுக்கு வழங்கிய செம்பு சாசனப்பட்டயம்.



- ❖ கி.பி 1882ம் வருட இடங்கை வலங்கை பிரச்சினை தொடர்புடைய சாசனப்பட்டயம்.
- ❖ கடந்த 2003ம் ஆண்டுவரை, முன்னிருந்த ஆலயத்தின் உள் கொடி மரம் வீற்றிருந்த கற்தூண் மண்டபம் 18.03.1854 ஆம் ஆண்டு விசாலாட்சி என்ற பக்தர் ஒருவரால் உபயமாக வழங்கப்பட்ட தாக தெரிவிக்கப்பட்டிருந்த கல்வெட்டுக்குறிப்பு. (தற்போது இல்லை)
- ❖ 2003ம் ஆண்டு வரை முன்னிருந்த ஆலயத்தின் மூலஸ்தான வாசல் கதவுகளில் மணிகள் பொருத்தப்பட்டு இருந்தது. அம்பாளுக்கு அறிவிப்பு ஓசை கொடுத்துவிட்டு உள்ளே நுழைவதற்காக பக்தர் ஒருவரால் கி.பி 1893 வருடம் வழங்கப்பட்ட திரு மணிக்கதவுகளாகும். பழமைமிகு அம்மணிகதவுகளில் இருந்த திருமணிகள் அனைத்தையும் இப்போதுள்ள புதிய ஆலய அர்த்தமண்டபத்தின் இரு கதவுகளிலும் 2018ம் ஆண்டு பொருத்தப்பட்டது. இப்போதும் அம்மனின் மூலஸ்தானத்திற்குள் செல்லும்முன் அர்ச்சகர்கள் இம்மணிகளை தட்டி அதே பழைய கணீரென்ற ஓசையெழுப்பி அம்பாளுக்கு மரியாதை நிமித்த அறிவிப்பு கொடுத்த பின்னரே மூலஸ்தானம் நுழைகிறார்கள்.

- ❖ தற்போது ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயத்திற்கு முன்பாக அமைந்துள்ள சங்கிலி கருப்பண்ண சுவாமி பலி பீடம் 15.08.1881 அன்று பிரதிஷ்டை செய்ததற்குரிய கல்வெட்டுகள் பீடத்தின் தெற்கு பகுதியின் கீழ்புறம் காணலாம்.
- ❖ முன்னிருந்த ஆலய உள்கொடி மரம் வீற்றிருந்த மண்டபத்திற்கு அடுத்தபடியாக அமைந்திருந்த நவராத்திரி கொலுமண்டபம் பக்தர்களால் கட்டிய நாள் 15.08.1881 இந்த நவராத்திரி கொலுமண்டபத்தினை தாங்கி நின்ற கற்தூண்களின் கல்வெட்டுக்குறிப்பாக பொறிக்கப்பட்டுள்ளதை இன்றும் ஸ்ரீஜெனகை நாராயண பெருமாள் கோவில் வளாகத்தில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டு இருப்பதை இன்றும் காணலாம்.
- ❖ இச்சான்றுகளின் அடிப்படைகளில் பார்க்கும் போது நமது ஸ்ரீஜெனகை மாரியம்மன் கி.பி பதினைந்தாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே மக்களின் கண்கண்ட தெய்வமாக விளங்கியது குறிப்பிடத்தக்கது.

**சுயம்பை வணங்கி**
**சுயம்பாய் வளர்வோம்!**

# இரு மூலவர்களும் பெயர்க்காரணமும்

தமிழ்நாட்டில் பெரும்பாலான அம்மன் கோவில்களின் கருவறையில் ஒரு மூலவரே இருந்து அருள்பாலிப்பதை நாம் கண்டிருப்போம். ஆனால் நம் சோழவந்தான் ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் கோவில் கருவறையில் இரு தேவியர்கள் வீற்றிருந்து தம் மக்களை இரு கண்களாக பாவித்து காத்து வருகின்றனர். ஒரு சக்தி நின்ற நிலையில் ஸ்ரீசந்தனமாரியம்மன் எனும் பெயர்கொண்டு சுதைவிக்கிரமாக காட்சியளிக்கிறார். இன்னொரு சக்தி ஸ்ரீஜெனகை மாரியம்மன் எனும் பெயர் கொண்டு கல் திருமேனியில் அமர்ந்த நிலை கொண்ட வீர ஆசனத்தில் காட்சியளிக்கிறார். இவ்வாறான ஒரு சேர்ந்த அமைப்பு பெரும்பாலான சக்தி பீடங்களில் காணுதற்க்கரிய சிறப்பு இங்கு மட்டுமே அமையப்பெற்றுள்ளது தனிச்சிறப்பாகும்.

### இருமூலவர்கள் வீற்றிருக்க காரணம்

ஸ்ரீசந்தனமாரியம்மன் முற்காலம் தொட்டே மூலிகை கலவையினால் ஆன மண்ணினால் உருவாக்கி வணங்கப்பட்டு வரும் சுதை விக்கிரகமாகும். பல நூற்றாண்டுகளாக ஸ்ரீசந்தனமாரியம்மன் மட்டுமே மூலவராக அருள்பாலித்துள்ளார். கால நகர்வுகளுக்கு பின் பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முற்பகுதியில் தற்போதுள்ள ஆலய மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீஜெனகை மாரியம்மன் கற்த்திருமேனியானது இப்போது ஆலயம் இருக்கும் அதே இடத்தில் பூமியில் இருந்து புதைந்த நிலையில் கிடைத்ததாக தெரிய வருகிறது. பொக்கிஷமாக கிடைத்த ஸ்ரீஜெனகை மாரியம்மனின் கற்த்திருமேனி விக்கிரகத்தை, நின்ற திருக்கோலத்தில் இருந்த ஸ்ரீசந்தன மாரியம்மனின் சுதை விக்கிரகத்திற்கு முன்பாக பிரதிஷ்டை செய்ததோடு ஸ்ரீஜெனகை மாரியம்மன் எனும் திருப்பெயர் வழங்கி அபிஷேகங்கள் பூஜை புனஸ்காரங்கள் செய்வித்து வழிபாடு செய்துள்ளனர் என அறியமுடிகிறது.

## ஸ்ரீசந்தனமாரியம்மன் பெயர் காரணம்

ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு முன்பே தோன்றிய முன்னோடி ஸ்ரீசந்தனமாரியம்மன் ஆவார்.

ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை அதாவது கோவில் அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட கி.பி பதினாறாம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தற்போது கருவறையில் நின்ற நிலையில் உள்ள சந்தனமாரியின் திருமேனி அமைப்பே, பெருங்கோவில் அமைப்பில் இல்லாமல் சாதாரண மண் சுவற்றினால் உருவாக்கப்பட்ட கோவில் அமைப்பிலேயே சந்தன மாரியம்மனின் சுதை விக்கிரகம் பிரதிஷ்டை செய்து மாரியம்மன் எனும் பெயரால் முன்னோர்களால் வணங்கி வரப்பட்டுள்ளது. அன்றையகால மக்களின் சுதை வடிவமைப்பின்படி, நாம் தற்போது வணங்கிவரும் சந்தனமாரி, கோப உக்கிரத்தை வெளிப்படுத்தக்கூடிய அகண்டு பிதுங்கிய கண்களோடும், முன் பற்களை கடித்தபடி கோரைப் பற்களோடும், பத்ரகாளியின் கலைந்து விரிந்த கேசத்தோடும், அநீதியை

விசாரிக்கும் போது வரும் கோபத்தை கொப்பளிக்கும் சுருங்கிய நெற்றியோடும் பூமியைப் பார்த்தவாறு, கோபம் என்பதையே குணமாகக் கொண்ட சுதை விக்கிரமாக கிராமத்தின் காவல் தெய்வமாக, காளியின் அம்சமாக சூலப்பிடாரி என்ற பெயர் கொண்டு அருள்பாலித்துள்ளார்.

பின்னாளில் அம்பாள் சூலப்பிடாரி கடுமையான உக்கிரமூர்த்தியாக இருந்தமையால் பெரும் உயிர் சேதங்களும் பொருட் சேதங்களும் அதிகம் ஏற்பட்டதை கண்டு உணர்ந்து அஞ்சிய மக்கள் அடுத்தடுத்து நடைபெற்ற கோவில் புணரமைப்பின் போது சுதை விக்கிரகத்தில் சிறு சிறு மாற்றங்களை செய்ததோடு, அம்பாள் கோபம் நீக்கி குளிர்ச்சியின் வடிவாக காத்து அருள வேண்டி சூலப்பிடாரி என்ற பெயரில் இருந்து சந்தனமாரியம்மன் என்று பெயர் மாற்றி அழைத்து வணங்கி உள்ளனர்.

ஸ்ரீஜெனகை மாரியம்மனுடன் வைத்துப்பார்க்கும் போது, ஸ்ரீசந்தன மாரியம்மன் மிகுந்த உக்கிரம் கொண்டவள் என்பதும் துடியான தெய்வம் என்பதும் இன்றும் இப்பகுதியில் வாழும் அனைத்து மூத்தகுடி மக்களால் நன்கு உணரப்பட்ட ஒன்றாகவே உள்ளது. எளியோரை ஓடிவந்து காக்கும் இவளே, தவறு செய்த வலியோர்களை நிற்க வைத்துநீதி விசாரிக்கும் கண்டிப்பான அதிகாரியாகவும் விளங்குகிறாள்.

> திக்கற்றவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு
> காவல் நிலையமும் இவள்தான். நீதிமன்றமும் இவள்தான்.

**சந்தன மாரிக்கு தைலக்காப்பு**

பல நூற்றாண்டுகள் முதலே ஆலயத்தின் மூலஸ்தானத்தில் சுவரோடு ஒட்டி நிற்பது போன்ற அமைப்பிலேயே தான் சந்தனமாரியின் மண் சுதை திருமேனி உருவாக்கப்பட்டுள்ளது. மண் சுதையாக இருப்பதால் அபிஷேகங்கள் ஏதும் செய்யப்படுவதில்லை,வருடத்திற்கு ஒரு முறை தைலக்காப்பு மட்டுமே இப்போதும் சாத்தப்படுகிறது.

**ஸ்ரீசந்தன மாரியம்மன் மூலவர் சுதை திருமேனி அமைப்பு**

தடாகத்தில் பூக்க வேண்டிய தாமரை மலரிதழ்கள், அம்பாளின் கன்னத்தில் பூத்தது போன்று அமைந்துள்ள அழகிய கன்னங்களைக் காண கண் கோடி வேண்டும். கீழ்நோக்கிய கூரான பார்வையும், குற்றத்தை விசாரிக்கும் நீதிபதியின் கோப நெற்றிச்சுருக்கமும், கடித்த பற்களோடும், இக்கணமே நீதியை வழங்க செல்ல முன்னெடுக்கும் வலக்கால் அமைப்பு அருமையிலும் அருமை. கூரான நாசியும், பரந்த கேசமும் ஆகாய சூரியனை தலைச்சுடராய் அணிகலனாக பெற்று கம்பீரமாக நிற்கிறாள். அரைமார்பு கச்சை அணிந்தவளாய் அணிகலன்களையே முழு மேலாடையாக பெற்று ராஜ மிடுக்கில் அம்சமாக நிற்கிறார்.

தன் கொடியிடையில் இருந்து கணுக்கால் வரை சிவந்த நிற மடிப்பு கலையாத ஆடையும் அழகுக்கே அழகூட்டுகிறது. இடைக்கச்சையின் (சேலை) எஞ்சியப்பகுதி அழகு குஞ்சங்களாக அம்பாளின் பின்புற மேகலையின் இருபுறமும் பரவி விரிந்து தொங்கிய படி காணப்படுகிறது காதுகளில் பத்திரகுண்டலமும் கழுத்தில் ஒற்றை ஆரமும் அன்னை பராசக்தியை அலங்கரிக்கிறது. மேல் வயிற்றை தொடும் அகண்டதொரு ஆரம் அன்னையின் ஆடையாக அமைந்துள்ளது.

அருள்மிகு சந்தன மாரியம்மன் சுதை விக்ரகம் – 18ஆம் நூற்றாண்டுக்கு முன்பு

அம்பிகையின் தோல் வளையும், முன்னிருகைகளில் அடுக்கடுக்கான பரியகங்கள் அம்பிகைக்கு அடிபணிந்து சத்தமெழுப்பாமல் அமைதியாய் நிற்கிறது. தோல் வளைக்கு கீழே அணிந்திருக்கும் வங்கி அணிகலன்கள் அம்பாளின் கம்பீரத்தை கூட்டுகிறது. தேவியின் சிற்றிடையை பற்றி நிற்கும் அகண்டதொரு ஒட்டியாணம் அழகான இடையணியாக அமைந்துள்ளது.

நின்ற கோலத்தில் எழுந்தருளியுள்ள சந்தனமாரியின் வலது மேல் கையில் அரவம் சுற்றிய உடுக்கையும், வலது கீழ்க்கையில் வாள் ஒன்றை இறுக்கிப்பிடித்தும், இடது மேற்கையில் முத்தலை திரி சூலமும், இடது கீழ்கையில் குற்றம் கடிந்து மன்னித்து அருளும் மங்கல நாயகியாக குங்குமத்தை ஏந்தி நிற்கிறாள் எங்கள் குல தேவதை.

மேற்சொன்னபடி ஸ்ரீசந்தன மாரியம்மனின் அழகுத்திருஉருவமே தற்போது ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயத்தின் உற்சவ மூர்த்தியாக, ஐம்பொன் விக்கிரகத்தில் அருள்நிறைந்து புன்னைகையுடன் கூடிய மலர்முகம் கொண்டு காட்சியளிக்கிறாள்.

மேலும் கருவறையில் அருளோடு வீற்றிருக்கும் இருவருமே இருவேறல்ல ஒருவரே என்பதை அனைவருக்கும் உணர்த்தும் விதமாகவே ஐம்பொன்னாலான உற்சவமூர்த்தி ஸ்ரீசந்தனமாரியம்மன், ஸ்ரீஜெனகைமாரியாக திருவீதியுலா பவனி வந்து அருள்பாலிக்கிறார். இந்த உற்சவ மூர்த்தி ஐம்பொன் விக்கிரகமானது, செடில் தேர் திருவிழா நடைபெற்ற கி.பி பதினாறாம் நூற்றாண்டு முதலே மக்கள் வழிபாட்டில் இருந்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த உற்சவரின் விக்கிரகம் தமிழக அரசின் தொல் பொருள் துறையில் எம்.டி.யு / டி.என்.264ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேடி வந்து நீதி கேட்டால், ஓடி வந்து தீர்ப்பளிப்பாள்
எங்கள் ஆயிரம்கண் மாரியம்மா.

## ஸ்ரீஜெனகை மாரியம்மன்

இப்போது ஆலயம் இருக்கும் இடம் அன்றைய காலத்தில் முள் செடிகள் நிரம்பிய புதராக இருந்துள்ளது. நம் அனைவராலும் இப்போது வணங்கப்பட்டு வரும் ஸ்ரீஜெனகை மாரியம்மன் சிறு பீடத்தில் அமர்ந்த நிலையில் உள்ள மூலவர் திருமேனி, இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் பார்வைக்கு பூமியில் இருந்து கிடைத்ததாக தெரியவருகிறது. மூலவர் விக்கிரக அமைப்பு, இரண்டடி உயரமும், ஒன்றரை அடி அகலமும் கூடிய அளவில் பலகைக்கல் போன்றதொரு அமைப்பில் புடைப்புச்சிற்பமாக செதுக்கப்பட்ட விக்ரகமாகும். ஸ்ரீஜெனகை மாரியம்மனின் விக்ரகத் திருமேனி சோழர் காலத்து சிற்பக்கலையை ஒத்து இருப்பதாக சிற்பக்கலை வல்லுனர்கள் கருத்தாக்கம் தெரிவிக்கின்றனர். மேலும் இத்திருமேனி சுயம்பு என்பர். சுயம்பு என்றால் ‘‘உளிபடாத உரு’’ அல்லது ‘‘தான் தோன்றி’’ என்று பொருளாகும். உருவாக்கியது யார்? பிரதிஷ்டை செய்தது யார்? பிரதிஷ்டை செய்யப்பட்ட வருடம் எது? என்ற விபரங்களை கணிக்க முடியாததால் ‘‘தான் தோன்றிய தாயாகவே’’ இன்றும் அருளாட்சி புரிந்து வருகிறாள்.

மேலும், மேல் குறிப்பிட்ட கல்வெட்டு உபய வருடக்குறிப்பு மற்றும் திருமலை நாயக்கமன்னர், திடியன் தூங்கா தேவருக்கு வழங்கிய செப்பு சாசனப்பட்டயத்தில் இன்றும் நாம் வணங்கி வரும் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் வரலாற்றுச்செய்திகள் பொறிக்கப்பட்டு உள்ளதை பார்க்கும் போது ஸ்ரீஜெனகை மாரியம்மனின் கற்த்திருமேனியானது கி.பி.

பதினைந்தாம் நூற்றாண்டில் இருந்தே மக்களால் வணங்கப்பட்டு வந்திருப்பது உறுதியாகிறது.

### ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயத்தில் சிம்ம விளக்கு

பல்லவர்களான முதலாம் மகேந்திரவர்மன் மற்றும் அவரது மகன் மாமல்ல முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோரின் தோற்றத்துடன் ஏழாம் நூற்றாண்டு முதல் பல்லவர்களின் ஆட்சியை தமிழ்நாடு கண்டது. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பு பல்லவர்கள் ஆட்சி அடையாளம் காணப்படவில்லை. மாமல்லபுரத்தில் பாறையைக் குடைந்து கட்டப்பட்டுள்ள கோயில் மற்றும் காஞ்சிபுரத்தில் இருக்கும் கம்பீரமான கைலாசநாதர் கோவில் மேலும் வைகுண்ட பெருமாள் கோவில் ஆகியவை பல்லவரின் கலைக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. அதன் வழியே சோழப்பேரரசின் சக்கரவர்த்தியாக விளங்கிய ராஜராஜசோழன் சிற்பக்கலையை மேலும் மெருக்கூட்டும் படியானதொரு அமைப்பில் தஞ்சை பெரிய கோவிலை கட்டியுள்ளார். தென்தமிழகமான மதுரையை பாண்டியர், சோழர் போன்று பல்வேறு மன்னர்கள் தங்களின் ஆட்சி வரம்பை பல்வேறு விதங்களில் தடங்களாக பதித்து சென்றுள்ளனர். இருப்பினும் பாண்டிய நாட்டில் பல்லவர்களின் சிற்பக்கலையை பெரும்பாலும் காண முடிவதில்லை. ஆனால் ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயத்தின் மூலஸ்தானத்தை ஒட்டிய வெளிசுற்றுப்பிரகாரத்தில் பல்லவர்கள் காலத்து சிம்ம விளக்கு நிறுவப்பட்டுள்ளது. இதில் பக்தர்கள் விளக்கேற்றி ஸ்ரீஜெனகை மாரியம்மனின் பின்புறம் அமர்ந்து தங்களது கோரிக்கைகளை தெரிவித்து மனநிம்மதியுடன் செல்கின்றனர். இதேபோன்ற சிம்மம் மாமல்லபுரத்து தூண்களிலும், காஞ்சி கைலாசநாதர் கோவிலிலும், காஞ்சி வரதராஜ பெருமாள் கோவிலிலும் காண முடிகிறது. ஸ்ரீஜெனகைமாரியம்மனின் ஆலயத்தை சுற்றியுள்ள பழமை மிகுந்த ஆலயங்களில் பல்லவர்களின் சிம்ம விளக்கு அமைப்பை காண முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆயிரம் ஆண்டுகளாக பல்லவர்களின் முழு அதிகாரம் மிக்க ஆட்சி நடைபெறாத பாண்டிய நாட்டில், பல்லவர்களின் சிம்ம விளக்கு ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயத்தில் அமையப் பெற்றிருப்பது ஆலயத்தின் தொன்மையை மேலும் முன்னோக்கி கொண்டு செல்கிறது.

## சுயம்பு என்றால் என்ன?

பொதுவாக திருக்கோயில்களில் மூலவராக பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்திகளை நான்கு வகையாகப் பிரித்து சொல்வதுண்டு. அவை

1. தைவிகம், 2. ஆசுரம், 3. மானுடம், 4. ஆரிடம்

என்பதாகும். இதனை விரிவாக விளக்கம் கூறும்போது...

**தைவிகம்**

தெய்வங்களும், தேவர்களும் பிரதிஷ்டை பண்ணிய தெய்வ மூர்த்திகள் தைவிகம் எனப்படும். இதற்குச் சான்று காஞ்சியில் ஏகம்பரநாதர் கோயிலில் உள்ள லிங்கம், அம்பாள் பிரதிஷ்டை செய்தது என்பர். திருவீழிமிழலையில் உள்ள இலிங்கம் மகாவிஷ்ணுவால் பிரதிஷ்டை செய்தது என்பர்.

**ஆசுரம்**

அசுரர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது ஆசுரம் எனப்படும். இதற்குச்சான்று திருச்சிராப்பள்ளி - திரிசிரன் என்ற அசுரனால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. காஞ்சிபுரத்தில் உள்ள ஓணகாந்தன் தளியில் உள்ள மூர்த்தம் ஓணகாந்தன் என்ற அசுரனால் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பர்.

**மானுடம்**

மனிதர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்தி மானுடம் எனப்படும். இதற்குச் சான்று தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள இலிங்கம் கருவூர்ச் சித்தரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பர்.

**ஆரிடம்**

ரிஷிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டது ஆரிடம் எனப்படும். இதற்குச்சான்று ஜம்புகேஸ்வரர் (திருவானைக்கோவில்) மூர்த்தி ஜம்பு மகரிஷியால் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பர்.

### தான் தோன்றி தாய்

மேற்கண்ட நான்கு வகையிலும் சேராமல் தெய்வம் தானாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்ற இடங்கள் உண்டு. அந்த இடங்களில் உள்ள தெய்வ மூர்த்தமே சுயம்பு என்று சொல்லப்படும். ‘‘சுயம்பு’’ என்ற சொல்லுக்கு ‘‘உளிபடாத உரு’’ அல்லது தானாகவே உண்டான ‘‘தான் தோன்றி’’ என்று கலைக் களஞ்சியம் விளக்கம் தருகிறது. இவ்வகையில் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் திருமேனியானது அங்க அமைப்புடன் இருப்பதாலும், உருவாக்கிய காலத்தை கணிக்கமுடியாததாலும், அம்மனை ‘‘தான் தோன்றிய தாயாகவே’’ கருத இயலும்.

## ஸ்ரீஜெனகை மாரியம்மன் பெயர் காரணம்

### ராஜ ராஜ சோழன் எனும் ஜனநாதன்

இவர் கி.பி 957 முதல் கி.பி 973 வரை சோழ நாட்டை ஆண்ட சுந்தர சோழனுடைய இரண்டாவது மகனாவார். சுந்தர சோழனுக்கும் சேர நாட்டு வானவன் மாதேவிக்கும் பிறந்தவர் இராசகேசரி முதலாம் ராஜ ராஜன். இவர் கி.பி 985 ஜூன் திங்கள் 25ம் நாள் அரியணை ஏறியவர்.

சதய நன்னாளில் பிறந்த இவரது இயற்பெயர் ‘‘அருள்மொழிவர்மன்’’. இராஜகேசரி அருள்மொழிவர்மன் என்ற பெயராலேயே தன் ஆட்சியின் தொடக்க காலத்தில்

இம்மன்னன் அழைக்கப்பட்டார். இவன் ஆட்சியின் 3ம் ஆண்டு முதலே ராஜ ராஜ சோழன் எனப்பட்டார்.

இராசராசன் அரசியலில் பண்பட்ட அறிவுடையவர். சிறந்த போர் தொழிலில் வல்லவன் சிறந்த சமயப்பற்று உடையவன் பேரரசை உருவாகும் தகுதி முற்றும் பொருந்தப்பெற்றவர்.

### ராஜராஜனின் விருதுப் பெயர்கள்

அருள்மொழிவர்மன் எனும் ராஜராஜனுக்கு விருதுப்பெயர்கள் பல உண்டு. அவை 1.அபயகுலசேகரன், 2. அரிதுர்க்கலங்கன், 3. தைலகுலகாலன், 4. அழகிய சோழன், 5.இரணமுகபீமன், 6. இரவிகுலமாணிக்கன், 7. இரவிவம்சசிகாமணி, 8. இராஜகண்டியன், 9.இராஜசர்வக்ஞன், 10.இராஜராஜன், 11.இராஜராஜகேசரிவர்மன், 12.இராஜாச்ரயன், 13.சோழேந்திரசிம்மன், 14.இராஜமார்த்தாண்டன், 15.இராஜேந்திரசிம்மன், 16.இராஜவிநோதன், 17.உத்தமசோழன், 18.உத்துங்கதுங்கன், 19.உய்யகொண்டான், 20.உலகளந்தான், 21.கேரளாந்தகன், 22.சண்ட பராக்கிரமன், 23.சத்ருபுஜங்கன், 24.சிங்களாந்தகன், 25.சிவபாதசேகரன், 26.சோழகுலசுந்தரன், 27.சோழ மார்த்தாண்டன், 28.திருமுறை கண்ட சோழன், 29.தெலிங்ககுலகாலன், 30.நிகரிலிசோழன், 31.நித்யவிநோதன், 32.பண்டித சோழன், 33.பாண்டியகுலாசனி, 34.பெரியபெருமாள், 35.மும்முடிச்சோழன், 36.மூர்த்தி விக்கிரமாபரணன், **37.ஜனநாதன்,** 38.ஜெயங்கொண்டசோழன், 39.சத்திரியசிகாமணி, 40.கீர்த்தி பராக்கிரமன், 41.சோழநாராயணன் முதலியன அழைப்பு வழக்கில் இருந்தன.

### ராஜராஜசோழனுக்கு ஜனநாதன் பெயர் வரக் காரணம்

ஜனநாதன் என்ற பெயருக்கு ‘‘ஜனங்களின் நாயகன்’’ என்று பொருளாகும். ஜனநாதன் எனும் பெயர் மக்களின் அன்பின் மிகுதியால் ராஜ ராஜ சோழன் பெற்றிருந்த பெயர் ஆகும்.

இராஜராஜனுக்கு அமைந்த விருதுப் பெயர்களில் ஒன்றாகிய ஜனநாதன் என்பது அவனது அரசியற் கொள்கையைக் காட்டுகின்றது.

‘‘குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு’’

என்னும் திருவள்ளுவர் குறளின்படி ஜனநாயகத்தின் உரிமையையும் பெருமையையும் இராஜராஜன் நன்றாக உணர்ந்திருந்தான் என்பது இவ்விருதுப் பெயரால் நமக்கு விளங்குகிறது.

ராஜ ராஜ சோழனை மக்கள் வெகுவாக போற்றியதற்குரிய காரணம் என்னவெனில், தான் உருவாக்கும் புதியதொரு கோவிலை கட்டுவதற்கு யார் யார் பணியாற்றினார்களோ, கட்டடக்கலை நிபுணர்கள் முதல் அவர்களின் துணிகளை சலவை செய்தவர்கள், முடி திருத்தியவர்கள் என கோயில் பணி செய்ய உதவியவர்களின் பெயர் கூட அதே கோவிலின் கல்வெட்டில் பெருந்தன்மையோடு பதிவு செய்திருப்பது மக்கள் மீது அவர் வைத்திருந்த அன்பும், ராஜ ராஜ சோழன் மீது மக்கள் கொண்டிருந்த அன்பும் புலப்படுகிறது. எனவே ராஜ ராஜ சோழனை, ஜனநாதன் என்று மக்கள் போற்றியதில் வியப்பேதும் இல்லை.

செவ்வூர் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் பிற்கால பாண்டியனான சோழாந்தகன் எனும் சோழன் தலை கொண்ட கோவீர பாண்டியனை வெற்றி கொண்ட முதலாம் ராஜ ராஜ சோழன் அதுவரை சோழாந்தக சதுர்வேதிமங்கலமாக இருந்த இப்போதைய சோழவந்தானை தன் விருதுப்பெயரான ஜனநாதன் என்ற பெயருடன் சேர்த்து ஜனநாத சதுர்வேதிமங்கலம் என்று மாற்றி அழைக்கச் செய்தான்.

## ஜனநாத விண்ணகரம்

கி.பி.985 முதல் 1014 முதல் ராச ராச சோழன் எனும் ஜனநாத சோழன் இப்பகுதிகளை ஆட்சி செய்த காலத்தில் சோழவந்தானை தன் விருதுப்பெயரான, ஜனநாதச் சதுர்வேதி மங்கலம் என்றும் பின்னர் ஜனநாத விண்ணகரம் என்றும் பெயர் விளங்கச்செய்துள்ளான். விண்ணகரம் என்றால் விஷ்ணுக்கிரகம் என்று பொருள் அதாவது விஷ்ணுவின் உறைவிடம் என்று பொருளாகும்.

## ஜனநாதன் பெயர் கொண்ட ஜனக நாராயண பெருமாள்

இன்றைய ஸ்ரீஜெனக நாராயண பெருமாள் கோவில் அன்றைய காலத்தில் மதுரையை ஆட்சி செய்த சுந்தரபாண்டியனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழமை மிக்க ஆலயமாகும். இத்தலம் "பாகனூர் கூற்றத்து சோழாந்தக சதுர்வேதி மங்கலம்'' என அழைக்கப்பட்டதாகக் கோவில் கல்வெட்டு கூறுகிறது. கோயிலுக்கான பூஜைக்குரிய செலவை இப்பகுதியில் வெற்றிலை பயிரிடும் விவசாய குடிமக்கள் செலுத்த வேண்டும் என்றும், அதைப் போல மூன்று மடங்கு தொகை பாண்டிய மன்னரால் வழங்கப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஜனநாதச் சதுர்வேதி மங்கலத்தில் இருந்த பெருமாள் கோவில் சனநாதன் என்ற இராசராசன் விருதுப்பெயரால் ''சனநாதவிண்ணகரத்து ஆழ்வார்கோவில்'' அழைக்கப்பட்டது. முற்காலத்தில் இது ராமர் கோவிலாகவே மக்களால் வழிபடப்பட்டு வந்துள்ளது. இன்றும் ராமர் கோவில் என்பதை நினைவூட்டும் வகையில், இக்கோயிலின் வரவேற்பு தோரண நுழைவுவாயிலின் மேற்புறம் ராமர் தன் மனைவி சீதையுடன் லக்ஷ்மணன் அனுமன் மற்றும் கருடன் பணிந்து வணங்கி நிற்கும் சுதை திருமேனி அமைப்பு உள்ளதை காணலாம். இதே போன்று ராமர் சுதை விக்கிரகம் சென்னை மாவட்டம் செங்கல்பட்டு அருகே மதுராந்தகத்தில் ஏரி காத்த ராமர் கோவிலிலும் உள்ளது. இவ்விரண்டு கோவில்களிலும் ராமரின் உருவ அமைப்பு ஒரேமாதிரியாகவே உள்ளது. அதுமட்டுமின்றி இவ்விரண்டு ஆலயங்களிலும் உள்ள தாயாரின் பெயரும் ஜனகவல்லி தாயார் என்றே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தகைய பெரும் சிறப்புகள் உடைய இன்றைய இப்பெருமாள் கோவில் ''ஜனக நாராயணப் பெருமாள் கோவில்'' என்ற பெயரில் இன்று புகழ் பெற்று விளங்குகிறது.

## தலைவனின் பெயர் ஏற்ற ஜனக மாரி

பலநூற்றாண்டுகளுக்கு முன் மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஜனக நாராயணப் பெருமாள் கோவிலின் அருகே, சில நூற்றாண்டுகளுக்கு முன் மக்களால் மிகச்சாதாரண முறையில் தோற்றுவிக்கப்பட்டு வழிபட்டு வரப்பெற்ற மாரியம்மன் தெய்வம், காலப்போக்கில் மிகவும் சக்திவாய்ந்த பிரசித்தி அம்மனாக அனைவராலும் போற்றப்பட்டுள்ளார்.

ராஜராஜசோழன் என்ற ஜனநாதனின் பெயரைக்கொண்டு ஜனக நாராயண பெருமாள் என அழைத்து வரப்பெற்றதாலும், கோவிலின் மிக அருகாமையில் மாரியம்மன் ஆலயம் தோற்றுவிக்கப்பட்டதாலும், ஏற்கனவே மாரியம்மனின் தமையனாகிய பெருமாளுக்கு ஜனநாதனின் பெயர் ஏற்கனவே நிலைத்திருந்ததாலும், மாரியம்மன் என்ற பொதுவான பெயரில் மட்டும் அழைக்கப்பட்டு வந்த மக்களின் கண்கண்ட தெய்வத்தை மக்கள் தங்களின் வாய்மொழி வழக்கில் ஜனக மாரி அழைக்க தொடங்கியமையால், அழைப்பு வழக்கில் இன்று ஸ்ரீஜெனகை மாரியம்மன் என பெயர் மருவி நிலைத்துள்ளது.

## ஸ்ரீஜெனகை மாரியம்மனின் மூலவர் திருமேனி அமைப்பு

இப்போது வழிபாட்டிலிருக்கும் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் திருமேனி வடிவமைப்பு சோழர்காலத்து சிற்பக்கலையினை ஒத்திருப்பதாக சிற்பக்கலை வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் ஒன்றரை அடி உயரத்தில் கிழக்கு திசையை நோக்கிய படி தன்னுடைய வலது காலை ஊன்றி இடது காலை மடக்கி வீர ஆசனத்தில் வீற்றிருந்து அருள்புரிகிறார்.

ஸ்ரீஜெனகை மாரியின் மூலவர் கற் விக்கிரகத்தில், சூரியனை ஜூவாலா மகுடமாகவும், சந்திரனை தன் சிரச்சக்கரமாகவும் தலைக்கு அலங்காரமாய் சூடிஇருப்பதை காணுவதற்கு நமக்கு இரு கண்கள் போதாது. சூரிய பிரபை, சந்திரப் பிரபையை சூடியிருக்கும் ஸ்ரீஜெனகை மாரியம்மன் தன் அருளோடு, சூரிய சந்திரர்களையும் தம் மக்களுக்கு அருள் பாலிக்கும்படி செய்கிறார். சூரியன் உலகத்திற்கு வெப்பம், மழை ஆகியவற்றை அளித்து, நவதானியங்களை விருத்தி செய்கிறார். சந்திரன் தன் குளிர்ச்சியான ஒளிக்கதிர்கள் மூலம் உலகிற்கு இன்பம் அளிப்பவர். சூரிய வெப்பத்தால் உலகோர்க்கு வளத்தையும், சந்திரனின் தன்னொளியால் அமைதியையும் அளித்துக் காக்கும் அம்பாளின் கருணையையே இது விளக்குகிறது.

படை கொண்ட அரசரும் இறுதியில் பிடிசாம்பல் தான் என்பதையும், அறவழியில் தர்ம சிந்தனையோடு தூய்மையான வாழ்வு வாழ வேண்டுமென்பதை மக்களுக்கு உணர்த்திட தன் தாமரை இதழ் போன்ற நெற்றியில் திருநீறு தரித்து, மங்கல வாழ்வளிக்கும் உறுதிக்கு குங்குமத்திலகமும் அணிந்திருக்கிறார் மகமாயி. வாள் போன்ற கூர்மையான நாசியும், சற்று நீண்டு ஒடுங்கிய மல்லிகை மலர் போன்ற கன்னங்களோடும், அன்னை தன் நாற்கரங்களிலும் வைர வளையணிந்து, தங்கத்தோள்களில் பொன் வளை பூட்டி, காதுகள் இரண்டிலும் தோடணிகள் மின்னிட, தேவியின் பொன் கழுத்தில் இரட்டை வட ஆரமும் அணிந்து பொற்ச்சிலை போல வீற்றிருக்கிறார். தேவி தன் திருமார்பில் கச்சையணிந்து, கொடியிடையில் இருந்து கணுக்கால் வரை அணிந்திருக்கும் ஆடையும், ஆடையின் மீதப்பகுதி தேவியினுடைய வயிற்றின் முன் விசிறி போன்ற மடிப்பில் பரவிக்கிடக்கின்றது. கால் தண்டைகள் இரண்டும் அம்பாளின் திருப்பாதத்தை பற்றியபடி பணிந்து கிடக்கின்றன.

ஸ்ரீஜெனகை மாரியம்மனின் மேல் இரு கரங்களில் வலது மேல் கையில் முத்தலை திரி சூலமும்,வலது கீழ்க்கையில் வாள் ஒன்றை பற்றிக்கொண்டும், இடது மேற்கையில் அரவம் சுற்றிய உடுக்கையும், இடது கீழ்கையில் குற்றம் கடிந்து மன்னித்து அருளும் மங்கல நாயகியாக குங்குமத்தை ஏந்திக்கொண்டு வேண்டுவோரின் துயர் தீர்த்து, நோய் தீர்க்கும் காவல் தெய்வமாக, நீதி வழங்கும் நீதி தேவதையாக, எல்லாவற்றுக்கும் தீர்வு சொல்லும் பேரரசியாக, சாந்த சொரூபிணியாக, அருட்கடலின் திருவுருவமாக அமர்ந்திருக்கிறார் அனைவருக்கும் அன்னையாம் அருள்மிகு ஸ்ரீஜெனகைமாரி.

**அருள்மிகு ஸ்ரீஜெனகை மாரியம்மன் மூலவர்**

## தேவியின் திருமேனியை தாங்கும் சர்ப்பங்கள்

தமிழகத்தில் அம்மன் திருத்தலங்களில் எங்குமே காணமுடியாத சிறப்பம்சம் நம் ஜெனகை மாரியம்மன் விக்கிரகத்தில் உள்ளது. கண் துயிலா கயல்விழி கொண்டவளாக, அங்கயற்கண்ணியாக மக்களின் கோரிக்கையை தொடர்ந்து நிறைவேற்றி, நீதியை உடனுக்குடன் வழங்கி அருள் செய்யும் ஸ்ரீஜெனகை மாரியம்மன் தன் வலது காலில் இரு சர்ப்பங்களை மிதித்தபடி அமர்ந்துள்ளார். அம்பாளின் திருமேனி நோகுமோ என்றெண்ணிய சர்ப்பங்கள் அவரை முப்புறமும் தம் சிரம் ஏற்று தாங்கி நிற்கின்றன. மங்கலகுங்குமத்தை ஏந்தி நிற்கும் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் இடது கரத்தினை ஒரு சர்ப்பம் தன் தலையில் தாங்கியபடி அன்னையின் இடது மடியில் தவழ்கிறது. இன்னொரு சர்ப்பம் சொல்லின் சுந்தரியான அம்பிகை மடித்து அமர்ந்துள்ள இடது காலினை பக்தியோடு தன் தலையில் சுமக்கிறது. மற்றொரு சர்ப்பம் அம்பிகையின் வலது காலை தன் சிரமேற்றுப்பணிந்து தாங்கி நிற்கிறது. சர்ப்பங்கள் சூழ்ந்த சத்திய சொரூபிணி ஸ்ரீஜெனகை மாரியை போன்றதொரு திருவுருவ அமைப்பு வேறு எந்த திருத்தலங்களிலும் காணமுடியாத ஒன்று என்பதில் சற்றும் ஐயமில்லை.

## பரிகாரஸ்தலம்

ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் தன் திருமேனியில் சர்ப்பங்களுடன் காணப்படும் மஹா சக்தியாக அருள்பாலிப்பதால் இத்தலம் நாக தோஷம் நீங்கும் பரிகார சிறப்பு ஸ்தலமாகவும், குழந்தைபேறு கிட்டும் அற்புத திருத்தலமாகவும் அமைந்துள்ளது. ஸ்ரீஜெனகை மாரியம்மன் உற்சவர் சிலையில் வேறு எங்குமே காண முடியாதபடி, அம்மனின் இரு தோள்களில் இருந்தும் நாகங்கள் தலைகீழாக தொங்கியபடி அம்மனுக்கு நாக ஆபரணமாக அமைந்துள்ளது. அதே போல உற்சவமூர்த்தியாக உள்ள ஜெனகை மாரியம்மன் தன் தோள்பட்டைக்கு கீழே இரு கரங்களிலும் நாகங்களை வங்கியாக அணிந்துள்ளார். அதேபோல அம்மை நீக்கி அம்மையின் மருந்தாக விளங்குகிறார் மக்களைக் காக்கும் மஹாசக்தி. ‘‘சொல்லின் சுந்தரியாம் சோழவந்தான் ஜெனகைமாரி தன் மக்களுக்கு சொல்லி வரம் கொடுப்பாள்’’ என்பது அம்பாளின் மீது அனைத்து மக்களும் வைத்துள்ள பரிபூரண நம்பிக்கையாகும் .

## நாக பூஜை

இத்திருக்கோயிலின் ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் சன்னிதிக்கு பின்புறம் வாயிலை ஒட்டி அரசமரத்தின் கீழ் நாகர்கள் ஸ்தாபிதம் செய்யப்பட்டுள்ளது. அரசமரத்தின் நாகரை சுற்றி வந்து வழிபாடு செய்வதன் மூலம் கால சர்ப்ப தோஷம் நீங்கி புத்திர பாக்கியம் பெறுதல், திருமணம் விரைவில் கைகூடுதல், நரம்பு தளர்ச்சி முதலிய வியாதிகள் நீங்கப் பெறுதல் முதலிய பலன்கள் அமையப் பெறுவதால் இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் ஏராளமான பக்தர்கள் ஸ்ரீஅனந்தன் முதலான நாகர்களுக்கு பாலபிஷேகம் செய்து பலன்களை பெறுகிறார்கள்.

கணவன் மனைவி ஒற்றுமை ஓங்கும். சொந்த பந்தங்கள் ஒன்று சேரும். விட்டுப்போன உறவுகள் ஒன்று கூடும். பந்துக்கள் பலம், உதவி, ஒத்துழைப்பு கிட்டும், சத்ருக்கள் உபாதை நீக்கும், சினேக சத்ருக்கள், அபிமான சத்ருக்கள், தொழில் சத்ருக்கள் சரணடைவர். நாகதோஷங்கள் நீங்கி விவாகப் பிராப்தி, சந்தானம் பிராப்தி கிட்டும், மாங்கல்ய பலம், பயமில்லாத மங்களகரமான வாழ்க்கை வசதி அமையும், வெளி வட்டார பழக்க வழக்கங்கள், தொலை தூரப் பயணங்கள், வழக்கு விவகாரங்கள்,

கொடுக்கல் வாங்கல், வியாபாரத் தொடர்புகள், மனை, வீடு, காடு, தோட்டம் அணிமணிகள், சொத்து பத்துகள் பாதுகாப்பாக நிலைத்து இருக்கும் பொருட்சேதம் ஏற்படாதென்பது பக்தர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கை.

மகிமை பல புரிந்து, மகோன்னதமாக பல நன்மைகளை அள்ளி வழங்கும் அருமருந்து நாயகி அருள்மிகு ஸ்ரீஜெனகைமாரியம்மனின் திருவுளப் பாங்கின் வண்ணம் ஆலயத்தில் அழகுற அமைந்தள்ள அரசமரத்து நாக பீடம் நாளுக்கு நாள் வழிபாடு பிரார்த்தனையும் பெருகும் திருவருட்கடாட்சம் அதிகரிக்கிறது என்பதே உண்மை.

### திருமணம் கைகூடி வரும் சிறப்புஸ்தலம்

ஸ்ரீஜெனகை மாரியம்மன் கோயிலில் ஏராளமான பெண் பக்தர்களின் வாழ்வில் அற்புதங்கள் நடைபெற்றுள்ளது. மணமாகாத பெண்கள் பலர் இத்திருத்தலம் வந்து அம்மனை தரிசனம் செய்து தமது வாழ்க்கைக்கேற்ற துணையை அம்பாளின் வரமாக பெற்றுக் கொண்ட அற்புதங்கள் தொடர்ச்சியாக நடந்துகொண்டே இருப்பதை காணமுடிகிறது.

பல இடங்களில் வரன் தேடி அலைந்து கிடைக்காது வருந்திய நேரத்தில் அம்மனை முறையாக தொடர்ந்து வழிபட்ட நேரத்தில் அம்மன், திருமண நல் வாழ்க்கையை அமைத்துக் கொடுத்து அருளியதற்கு சான்றுகள் நூறாயிரம். செவ்வாய்க்கிழமை, வெள்ளிக் கிழமைகளில் திருமணமாகாத பெண்கள் வழிபாடு செய்வது நலம்.

திருமணம் நல்ல முறையில் விரைவில் நடக்க வேண்டி பக்தகோடி பெருமக்கள் அம்மனை தரிசித்து பிரார்த்தித்து பலன்பெற்ற வண்ணம் உள்ளனர்.

பக்தர்கள் பலர் தங்களது புதிய தொழில்களை துவங்கும் நேரத்தில் அம்மனை வழிபட்டு (வேண்டுதல்) பணிகளை செய்தால் நிச்சயம் எல்லா தொழிலும் வெற்றிகரமாக அமைந்து விடுகிறது என்பதற்கு சான்றாக அம்மனின் கொடையை பெற்ற வணிக பெருமக்களும் எண்ணிலடங்காதோர்.

### குடிகொண்டுள்ளவர் சனகமாரியா! கனக மாரியா !

முதலில் கனகதாரா என்பதைப்பற்றி அறிவோம். ஸ்ரீஆதிசங்கரர் இயற்றி அருளிய மக்களின் வறுமை போக்கும் அற்புத பாமாலைக்கு பெயர் கனக தாரா ஸ்தோத்திரம் ஆகும். கனக தாரா என்றால் பொன்மழை என்று பொருள்படும். வறுமை நிலையில் இருப்பவர்கள் தினசரியோ அல்லது வெள்ளிக்கிழமைகளிலோ படிப்பதனால் கிடைக்கும். லக்ஷ்மி கடாட்ஷத்தினை ...

அருட்கடலாக, அகிலத்தின் ராஜராஜேஸ்வரியாக வீற்றிருக்கும் ஸ்ரீஜெனகை மாரியம்மனை மனமுருகி தரிசனம் செய்த மாத்திரத்திலேயே பக்தர்களுக்கு கிட்டி விடுவதை காணும்போது உண்மையிலேயே கருவறையில் வீற்றிருப்பவர் ஜனக மாரியா? இல்லை கனக மாரியா? என்றும் வியந்து போற்றும் அளவிற்கு உள்ளது அன்னையின் அளப்பரிய சக்தி. பெருங்கருணையோடும், பேரருளுளோடும், கேட்ட வரங்களை அள்ளிக்கொடுப்பதில் ஜெனகைமாரிக்கு நிகர் ஜெனகை மாரிதான். அகிலாண்ட நாயகி, ஆயிரம் கண்ணுடையாள் ஸ்ரீஜெனகை மாரியின் அருட்சிறப்பை வர்ணிக்க வார்த்தைகள் போதாது. அன்னையின் பொன் மனம் கனிந்து நல்வாழ்வு பெற்ற பக்தர்கள், ஆண்டுதோறும் திருவிழாவின் போது சிரம் பணிந்து செலுத்தும் நேர்த்திக்கடன்களும் காணிக்கைகளுமே போதுமான சாட்சிகளாகும்.

# ஸ்ரீஜெனக மாரியம்மனுக்குரிய பூஜைகளும் உபசாரங்களும்

நம்மை இவ்வுலகிற்கு அளித்து, வளர்த்து ஆளாக்கி அறிமுகப்படுத்திய பெற்றோருக்கும் அவர்களது முன்னோர்களுக்கும் எல்லையற்ற காலவரையற்ற கல்வியைக் கற்பித்து அறிவூட்டுவதையே நோக்கமாகக் கொண்ட குருவாகிய ஆசிரியப் பெருமக்களுக்கும் நம்மிடம் எதுவும் எதிர்பாராமல் காற்று மழை, வெய்யில், இருள், ஒளி, குளிர் என்றவாறு உதவுகிற இயற்கை சக்திகளுக்கும் தேவையுறும் போது தோன்றாத் துணையாக நின்று உறுதுணை புரிகின்ற தேவதைகள் யாவருக்கும் பலவிதமாக பலவழிகளில் நலம் பெறுகிற வாழ்க்கை வசதியை அளிக்கிற மாண்பிற்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் கொண்டாடப்படுவதே பூஜைகளும் திருவிழாக்களும் ஆகும்.

### விசேஷ பூஜைகள்

கீழ்க்கண்ட உற்சவ காலங்களில் ஸ்ரீஜெனகை மாரியம்மன் திருக்கோயிலில் விசேஷ பூஜைகள், சிறப்பு வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகிறது.

சித்திரை 1 சிறப்பு வழிபாடு, வைகாசி விசாகம், ஆடி மாத செவ்வாய், வெள்ளி, ஆடிப்பூரம், நாக சதுர்த்தி தீபாவளி, கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, தைப்பொங்கல், தைப்பூசம், பங்குனி உத்திரம், மாதாந்திரப் பௌர்ணமி.

வழிபடும் முக்கிய நாட்கள்:

சஷ்டி திதி, விசாகம், கிருத்திகை நட்சத்திரங்கள், செவ்வாய் கிழமை, வெள்ளிக்கிழமை ஆகியவை. வெள்ளிக்கிழமை விரதம் ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு உகந்தது. இவ்விரதத்தால் நினைத்த பயன் கைகூடும்.

### பௌர்ணமி பூஜை வழிபாடுகள்

பௌர்ணமி பூஜை பக்தர்களுக்கு நன்மைகளை அள்ளி வழங்கக்கூடிய பூஜையாகும். குறிப்பாக பெண்களுக்கு மாங்கல்ய பாக்கியம் நிலைக்கவும் திருமணமாகாத பெண்களுக்கு மாங்கல்ய பாக்கியம் விரைவில் கிட்டவும் பௌர்ணமி பூஜை மிகவும் அவசியம். பௌர்ணமி தினம் ஸ்ரீ ஜெனகை மாரியம்மனுக்கு மிகவும் உகந்த நாள். அன்றைய தினத்தில் அம்பாளை வழிபட்டு வந்தால் அம்பாள் மகிழ்ந்து மனம் கனிந்து எல்லா வகையிலும் நன்மை செய்வார். பௌர்ணமி பூஜை சிவசக்திக்கு உகந்தது ஆகும்.

### பௌர்ணமி பூஜையின் பலன்கள்

பௌர்ணமி தினத்தில் சிவாம்ச ரூபிணியான ஸ்ரீஜெனகைமாரியம்மனை வழிபடுவதன் மூலம் நம் குடும்பத்தில் இருள் நீங்கி அருள் உண்டாகும். பெண்களுக்கு மாங்கல்ய பலம் பெறுதல், மகப்பேறு பெறுதல் வேலை அமைதல், படிப்பில் முன்னேற்றம் அடைதல், புதிய வியாபாரம் தொடங்கி நன்மை பெறுதல், செய்யும் தொழிலில் வியாபாரத்தில் நல்ல லாபம் அடைதல், துன்பம், கஷ்டம், பாவம், தோஷம் விலகி நன்மை பெறுதல், எடுக்கும்

காரியம் எல்லாம் வெற்றி அடைதல், நோய் தீருதல் போன்றவைகள் நன்மையான முறையில் நடக்கும். பௌர்ணமி பூஜை செய்யும் நபர்கள் அன்றைய தினத்தில் உபவாசம் இருந்து அம்மனை வழிபட்டால் சகல சௌபாக்கியத்துடன் வாழலாம். பிரதி மாதம் பௌர்ணமி நாளன்று சந்திரன் பூரண ஒளியுடன் பிரகாசிக்கும் நல்வேளையில் மக்கள் நலன் கருதி மிக அபூர்வமான அற்புதமான வழிபாடுகள் முறையாகவும் திருத்தமாகவும் அந்தந்த மாதங்களுக்குரிய பூஜைகள் பொலிவோடு நடைபெற்று வருகிறது.

### ஆடி வெள்ளி, தை வெள்ளியின் சிறப்புகள்

தட்சிணாயனம், உத்தராயனம் என்ற இவ்விரு அயனங்களுமே புண்ணிய காலங்கள், தட்சிணாயனத்தின் ஆரம்பம் ஆடி மாதம். உத்தராயனத்தின் ஆரம்பம் தை மாதம். அயன ஆரம்ப காலமாகவுள்ள இவ்விரு மாதங்களும் சிறப்புடையவை. பொதுவாக வெள்ளிக்கிழமை அம்பாளுக்குரிய சிறந்த நாள். இதோடு அயன ஆரம்பம் என்னும் சிறப்பும் சேருகின்றதால் இவ்விரு மாதங்களிலும் வரும் வெள்ளிக்கிழமைகள் அம்பாளுக்கு மிகவும் விசேஷமாகக் கருதப்படுகின்றன. இம்முறை பற்றியே இவ்விரு மாதங்களிலும் வரும் அமாவாசை கிருத்திகை நாட்கள் மிகவும் விசேஷமுடையனவாகக் கொள்ளப்படுகின்றன. (தை அமாவாசை, தைக் கிருத்திகை, ஆடி அமாவாசை, ஆடிக்கிருத்திகை) அம்பாளுக்குரிய விரத நாட்கள் வெள்ளிக்கிழமை விரதம், நவராத்திரி விரதம் ஆகிய ஒவ்வொரு ஆடி மாத வெள்ளிக்கிழமை அன்று விசேஷ அபிஷேகம், புஷ்ப அலங்காரம், சந்தனக்காப்பு, வெள்ளிக்கவசம் சாத்துதல், கூழ் ஊற்றுதல் விழா போன்ற வைபவங்கள் இத்தலத்தில் அதிவிமரிசையாக நடைபெறுகிறது.

## அம்பிகையின் வருடாந்திர விஷேச மாதங்கள்

**வருடத்தின் 12 மாதங்களும் அம்பாள் வழிபாட்டிற்கு சிறந்தவையேதான். இருப்பினும் குறிப்பாக...**

- ❖ வைகாசியில் ஸ்ரீஜெனகை மாரியின் திருவிழா கொண்டாட்டம் நடைபெறும் சிறப்பான மாதமாகும்.
- ❖ ஆடி மாதத்தில் அனைத்து வெள்ளி மற்றும் செய்வாய்க்கிழமைகளிலும் அம்பாள் தனது அனுக்கிரகத்தை அளவின்றி அள்ளிக்கொடுக்க கோவில் வாசலின் வழிமேல் விழிகொண்டு ஆடிமாத சூறாவளியின் வேகத்தில் தன் பக்தர்களின் துயர் தீர்க்க அமர்ந்திருக்கும் மாதம் ஆடி மாதமாகும் .
- ❖ புரட்டாசி நவராத்திரி மாதத்தில், சக்தி ஒன்றே எனினும் தன்னுள் நிறைந்த அனைத்து சக்திகளையும் மக்கள் அனைவருக்கும் உணர்த்தும் விதமாக நவராத்திரி அலங்கார நாயகியாக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ரூபத்தில் தன் திரு அவதார திருக்காட்சியினை தன் பக்தகோடி பெருமக்களின் கண்களுக்கு விருந்தாக இருக்கும்படியான வாய்ப்பை தந்து மகிழ்கிறார்.
- ❖ தை பிறந்தால் வழிபிறக்கும் என்று நம்பிக்கையோடு தன்னை நாடி வரும் தமது விவசாய குடிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும், மக்களையும் மண்ணையும் கண்ணை இமை காப்பதுபோல் காத்து வரமளிக்க காத்திருப்பாள் தை மாத மாரித்தாய்.

## ஸ்ரீஜெனகைமாரியம்மனுக்கு சோடச தீபாராதனை உபசாரம்

ஷோடச உபசாரம் என்பது ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கும் ஸ்ரீசந்தன மாரியம்மனுக்கும் நைவேத்யத்தினை தொடர்ந்து செய்யப்படும் பதினாறு வகையான உபசாரங்களாகும். இதனை ஷோடச உபசார பூஜை, ஷோடச தீபாராதனை, ஷோடச தீபாராதனை உபசாரம் எனவும் அழைப்பர். தஞ்சை நால்வரில் ஒருவரான சிவானந்தம் என்பவர் இப்பூஜைக்கு நிருத்ய நியதிகளையும் முறைகளையும் உருவாக்கியவராக அறியப்பெறுகிறார்.

## ஷோடச தீபாராதனை உபசாரத்தின் நோக்கம்

'ஷோடச' என்றால் 'பதினாறு'. பூஜையில் பதினாறு வகை என்பது பல இடங்களில் செய்யப்படுவதாகும். அபிஷேகம் செய்யப்படும் திரவியங்கள், பூஜை துவங்குவது முதல் ஆவாஹனம் (நிறைவு) வரை செய்யப்படுகிற உபசாரங்கள், தீபாராதனைகள் ஆகிய மூன்று விஷயங்களிலும் பதினாறு வகைகள் முக்கியமானதாகச் சொல்லப்பட்டுள்ளது. அலங்கரிக்கப்பட்ட அம்பாளுக்கு நிறைய தீபாராதனைகள் செய்து கண் குளிரக் கண்டால் கண்நோய்கள் நீங்குமென சாஸ்திரங்கள் கூறுகின்றன. ராஜஉபசாரம் என்றும் இதனைச் சொல்வார்கள். சாமரம், விசிறி, ஆலவட்டம், கொடி, கண்ணாடி போன்றவை அரச மரியாதைச் சின்னங்கள். இவையும் தீபாராதனையில் அடங்கும். அம்பாளுக்கு ராஜ உபசாரங்களைச் செய்தால், பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழலாம்.

## தீபாராதனை தத்துவ விளக்கம்

ஸ்ரீஜெனகைமாரியம்மனை பூஜிக்கும் முறைகளில் தீபாராதனை சிறப்பான இடத்தைப் பெறுகிறது. மாரியம்மனே ஒளி வடிவில் விளங்குகிறார்.

இறைவன் முருகனை அருணகிரிநாதர், "தீப மங்கள ஜோதி நமோ நம" என்று போற்றுகிறார். மாணிக்கவாசகப் பெருமானும் இறைவனை "ஒளி வளர் விளக்கே" என்றும் "சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே" என்றும் பலவாறு போற்றியுள்ளார். ஒளி வடிவமான அம்பாளை தீபங்களால் ஆராதனை செய்வதே தீபாராதனை என வழங்கப்படுகிறது.

கோவில்களில் செய்யப்படும் தீபாராதனைகளைப் பற்றியும், அவற்றைச் செய்ய வேண்டிய முறைகளைப் பற்றியும் ஆகம நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. தீபாராதனை என்பது வெறும் சடங்காக மட்டுமின்றி, உலகின் தோற்றத்தையும் ஒடுக்கத்தையும் காட்டும் தத்துவ விளக்கமாகவும் அமைந்துள்ளது.

## தீபாராதனையின் வரிசையையும் அதன் தத்துவமும்

கோவில்களில் அலங்கரிக்கப்பட்ட மூர்த்தங்களுக்கு முன்பு திரையிடப்பட்டிருக்கிறது. திரைக்கு உள்ளே இருந்து பூஜை ஆரம்பிக்கப்படுகிறது. முதலில் மணியோசை கேட்கிறது. எல்லையில்லா வெற்றிடத்தில் முதலில் ஒலியே பிறக்கிறது. ஒலியில் இருந்து ஒளி பிறப்பது ஒரு தீபத்தின் மூலம் காட்டப்படுகிறது. ஒளியில் இருந்து ஸ்ரீ ஜெனகை மாரியம்மனின் அருளால் பல நிலைகளில் உள்ள ஜீவன் பிறப்பதை அடுக்கு ஆரத்தி உணர்த்துகிறது. இப்போது திரை நீக்கப்பட்டு அடுக்கு ஆரத்தியைப் பார்க்கிறோம். அண்டவெளியில் புலப்படாதிருந்த உலகம் திரையை விலக்கிக்கொண்டு நமக்குத் தெரிகிறது. அம்பாள் உயிரில் கலந்து உருவமாகப் புலப்படுவதும் திரை விலகிய பிறகு இறை வடிவத்தைக் காண்பதும், அதன் முன்னே இருக்கும் அடுக்கு ஆரத்தியும்

குறிப்பிடுகின்றன. அடுக்கு ஆரத்தியில் தீபங்கள் பல தட்டுகளில் இருந்தாலும், அவை உருவமற்ற ஒரே பரம்பொருளின் வடிவத்தைக் குறிப்பிடுகின்றன.

பிறகு ஐந்து தட்டுகள் காட்டப்படுகின்றன. இவை அம்பாளின் ‘‘ஓம்சக்தி’’ எனும் ஐந்தெழுத்து பஞ்சாட்சரத்தையும், அதிலிருந்து பஞ்சபூதங்கள் படைக்கப்படுவதையும் உணர்த்துகின்றன. பிறகு ஐந்து பூதங்களும் சேர்ந்து பிரபஞ்ச வடிவமாக விளங்கும் கும்பாரத்தி காட்டப்படுகிறது. கும்பம் அண்டத்தையும், அதன் மீதுள்ள தீபம் அதை இயக்கும் அம்பிகையையும் குறிப்பிடுகிறது.

அதையடுத்து நாகதீபம், மயூரதீபம், குக்குட தீபம், ரிஷப தீபம், கஜதீபம், புருஷாமிருக தீபம், புருஷ தீபம், அஸ்திர தீபம் ஆகியவை அம்மனுக்கு காண்பிக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் முதலில் ஊர்வன, அடுத்து பறப்பன, அடுத்து மனிதனும் விலங்குமாகிய புருஷாமிருகம், அடுத்து மனிதன், இந்த வளர்ச்சிக்குப் பிறகு வாழ்வதற்கான ஆயுதம் ஆகியனவும் விஞ்ஞான முறையில் காட்டப்பட்டு வருகின்றன. இவை உருவத்தால் வேறுபட்டிருப்பினும் பஞ்சபூதங்களுக்கு உட்பட்டு இயங்குவன என்னும் பொருள்பட அவற்றின்மீது பிரபையும் அதில் ஐந்து தீபங்களும் அமைந்துள்ளன.

இவ்வாறு ஒரே பரம்பொருளிலிருந்து தோன்றிய ஜீவன் பல நிலைகளைக் கடந்து அறிவால் அம்பாளை அறிந்து கொள்கிறது. இந்த ஆன்மா ஒரே ஆரத்தியாக ஸ்ரீ ஜெனகை மாரியம்மனுக்கு காட்டப்பட்டு அதன் பக்குவ நிலையை உணர்த்தும் பொருட்டு அதன்மீது விபூதி தெளிக்கப்படுகிறது.

அடுத்து ஏழு கிளைகளையுடைய கற்பூர ஆரத்தி அம்மனுக்கு காட்டப்படுகிறது. விபூதிகள் கைவரப் பெற்று உயிர் பத்துவித குணங்களைக் கொள்கிறது. குணங்கள் கூடிக்கொண்டு வருவதை இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று என்று வரிசையாக தீபங்களாக அம்மனுக்கு காட்டப்படுகின்றன. பக்குவம் அடைந்த ஜீவன் அம்பிகையின் சாரூப நிலையைப் பெறுவதால் இறை வடிவமாகப் போற்றப்படுகிறது. எனவே எட்டு திசைகளிலும் உள்ளவர்கள் போற்றுவதைக் குறிக்கும் வகையில் அஷ்டமங்கலம் காட்டப்படுகிறது. கிழக்குத் திசையான இந்திரன் திசையிலிருந்து குடையும் (துவஜ தீபம்), தென்கிழக்கான அக்னி திக்கில் இருந்து அடுக்கு தீபமும், தெற்கு திசையாகிய யம திக்கில் இருந்து சுவஸ்திகமும், தென்மேற்கு திசையாகிய நிருதி திக்கில் இருந்து சாமரமும், மேற்கு திசையான வருண திக்கில் இருந்து பூரண கும்பமும், வடமேற்கு திசையான வாயு திக்கில் இருந்து விசிறியும், வடக்கு திசையான குபேர திக்கில் இருந்து ஆலவட்டமும், வடகிழக்கு ஈசான்ய திக்கில் இருந்து கொடியும் கொண்டு வரப்பட்டதாகக் கருதி அவை ஸ்ரீ ஜெனகை மாரியம்மனுக்கு காட்டப்படுகின்றன.

கோவில்களுக்குச் செல்பவர்கள் ஏதோ அம்மனுக்கு தீபாராதனைகள் விதவிதமாகக் காட்டப்படுகிறது என்று நினைத்து விடாமல் இதன் மூலம் ஆன்மா எல்லையற்ற பரந்த வெளியில் நிறைந்திருக்கும் இறைவனிடமிருந்து முதலில் ஒலியாகவும், பின்னர் ஒளியாகவும், அதிலிருந்து படிப்படியாக உலகமாகவும், அதில் நிறைந்த உயிர்களாகவும் தோன்றுவதை நமக்கு உணர்த்துவதற்காகவே தான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இப்படி மூலப்பொருளான இறைவனிடம் தோன்றிய ஆன்மா, உலகை அடைந்து இங்குள்ள உலக விவகாரங்களில் சிக்கிக் கொள்கிறது. அதில் சிக்கிக் கொள்ளாத ஆன்மா தன்னை உணர்ந்து கொள்வதைக் குறிக்கும் வகையில் வேதங்கள் முழங்கப்படுகின்றன. இறைவனின் வார்த்தைகளான வேதத்தின் வழி செல்லும் ஆன்மா தன்னை உணர்ந்து கொண்டு படிப்படியாக முன்னேறுகிறது. இதையே ஒன்று முதல் பத்து வரையில் உள்ள தீபங்கள் குறிப்பிடுகின்றன. நற்குணங்களால் நிறையப் பெற்ற ஜீவனை

எட்டு திசைகளில் உள்ளவர்களும் வாழ்த்துகிறார்கள் என்பதைக் குறிக்கும் வகையில் குடை, அடுக்கு தீபம், சாமரம், கண்ணாடி ஆகியவை அம்மனுக்கு காட்டப்படுகிறது. பின்னர் கற்பூர தீபம் காட்டப்படுகிறது. இதுவே பூரண நிலை எய்திய ஜீவனின் நிலையாகும். கற்பூரம் எரிந்து காற்றில் கலந்து விடுவதைப்போலவே, ஜீவனும் தன் பாசப் பிணைப்பை உதறிவிட்டு ஸ்ரீஜெனகைமாரியம்மனோடு ஐக்கியமாவதை இதன்மூலம் உணர்ந்துகொள்ள வேண்டும். பின்னர் விபூதி அளிக்கப்படுகிறது. இதுவரை நிகழ்ந்த உலகத்தின் தோற்றத்தையும் இறுதியில் அது ஒடுங்கி விட்டதையும் குறிக்கும் வகையில் நெருப்பின் மீதியான சாம்பல் பிரசாதமாக அளிக்கப்படுகிறது.

சுயம்பை வணங்கி
சுயம்பாய் வளர்வோம்!

# வைகாசி பெருந்திருவிழா – கொடியேற்றமும் விழாக்களும்

ஸ்ரீ ஜெனகை மாரியம்மனின் பெருவிழா நடந்தேறும் வளம் தரும் வைகாசி மாதத்தை ‘‘மாதவ மாதம்‘‘ என்றும் வைகாசம் என்று போற்றுவர். வைகாசி முதல் தேதியில் கங்கை நதியில் நீராடினால் ஏழேழு ஜென்மங்களில் செய்த பாவங்கள் நீங்கும் என்று சாஸ்திரம் கூறுகிறது. கங்கையில் நீராட வசதி இல்லாதவர்கள் தங்கள் ஊருக்கு அருகில் உள்ள புனித நீர் நிலைகளில் வடக்கு நோக்கி கங்கையை பிரார்த்தித்து நீராடினால் கங்கையில் நீராடிய பலன் கிடைக்கும் என்று வேத நூல்கள் கூறுகின்றன.

வைகாசி என்பதை விசாகம் என்றும் சொல்வர். விசாகம் என்றால் ‘‘மலர்ச்சி’’ என்று பொருள். வைகாசி என்பது தான் தான் சமஸ்கிருதத்தில் வைசாகம் ஆனது. அதன்படி புனித நதியான வைகையாற்றின் கரையருகே அமைந்த நமது சோழவந்தான் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் வைகாசி பெருந்திருவிழா தமிழகத்திலேயே தொடர்ந்து 17 நாட்கள் நடைபெறும் பெருமை உடையது.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீஜெனகை மாரியம்மன் கோவில் வைகாசி விழாவாக பால்குடம், அக்கினிச்சட்டி, தேரோட்டம் (செடில்) போன்றவையே நடைபெற்று வந்துள்ளது. அதன் பின் அம்மனின் அருளாசியினால் பெற்ற வரங்களுக்குரிய நன்றிக்கடனை, ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு நேர்த்திக்கடனாக திரும்ப செலுத்தும் நோக்கத்துடன் பூக்குழி மற்றும் தீர்த்தவாரி போன்ற விழாக்களை அரசாங்கத்தின் அனுமதியோடு ஏற்படுத்திக்கொண்டனர்.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ் மாத வரிசையில் வரும் வைகாசி மாதம் ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு கலைநிகழ்ச்சிகளோடும் திருவீதி உலாவோடும் 17 நாட்கள் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**ஸ்ரீஜெனகை மாரியம்மனின் கொடியேற்றமும் கொடிமரத்தத்துவமும்**

கொடி மரம் என்பது கோவிலில் குடிகொண்டு இருக்கும் ஸ்ரீ ஜெனகை மாரியம்மனின் அம்சமாகும். மூலஸ்தான சக்தியும் கொடிமரசக்தியும் வெவ்வேறு அல்ல, கொடிக் கயிறு - சக்தி, கொடித் துணி -ஆத்மா, கொடி ஏற்ற பயன்படுத்தும் தர்ப்பைக் கயிறு -பாசம் ஆகியவற்றை குறிக்கும். கோவிலில் கொடி ஏற்றும் போது அர்ச்சகர் வேதமந்திரங்கள் முழங்க, தர்ப்பைக் கயிற்றுடன் வெள்ளைத் துணியை வளைத்து, வளைத்து ஏற்றுவார்கள்.

இது உயிர்களையும், அறத்தையும் உயர்ந்த நிலைக்கு உயர்த்துவதை உணர்த்துகிறது. ஸ்ரீஜெனகை மாரியம்மனிடம் பாசக்கட்டு அறுமாறு நம்மனதை பலியிட வேண்டும் என்பதற்காக ஆன்மாவை பாசக்கயிறு சுற்றியுள்ளதை காட்டும் வகையில் கொடி மரத்தில் கயிறு சுற்றப்பட்டிருக்கும். லௌகீக வாழ்க்கையில் சிக்கித் தவிக்கும் நாம், எல்லோருமே பாசத்துக்கு கட்டுப்பட்டவர்கள். தர்ப்பைக் கயிறு எனும் பாசத்தால், கொடி துணி எனும் உயிர் கட்டப்பட்டுள்ளது. அந்த உயிர் அம்மனின் திருவடியை அடைதல் என்ற தத்துவத்தை கொடி ஏற்றம் நமக்கு சுட்டிக் காட்டுகிறது. கீழ் நிலையில்

உள்ள மனித ஆன்மாவை அம்பாள் உயர்நிலைக்கு உயர்த்துகிறாள் என்பதை இது காட்டுகிறது.

நமது உயிர் ஸ்ரீஜெனகை மாரியின் திருவடியை தஞ்சமடைய வேண்டுமானால் நம் மனமும் ஒரு முகமாக நிலை நிறுத்தப்பட வேண்டும். இதை உணர்த்த கொடி மரம் நேராக நிமிர்ந்து நிற்பதாக சாஸ்திரம் தெரிவிக்கிறது. இன்னொரு வகையில் சொல்வதென்றால் அசுர சக்திகளை அகற்ற, பூத கணங்களை கோவிலுக்குள் அழைக்க, ஆலயத்தையும் பக்தர்களையும் பாதுகாக்கவே கொடி ஏற்றம் நடத்தப்படுகிறது. அதனால் தான் கொடி மர உச்சியில், அந்தந்த ஆலய அம்மனின் வாகனம் ஒரு அடையாள சின்னமாக அமைக்கப்படுகிறது. அதுமட்டுமின்றி கொடிபட்டத்தில் அம்மனின் வாகனத்தினுடைய படத்தினை வரைய செய்து ஏற்றுகின்றனர். ஸ்ரீஜெனகை மாரியம்மன் கொடியேற்றத்தில் உள்ள சிறு வித்தியாசம் என்னவெனில், இங்கு அம்பாளின் வாகனம் நந்தியாகும். ஆனால் கொடியேற்றும் போது வெண் துணியில் சிங்க வாகனம் வரைந்து கொடியேற்றம் நடைபெறும்.

## விழாக்காலங்களின் போது ஸ்ரீஜெனகை மாரியம்மன் கோவிலில் கொடி ஏற்றுவது எதனால்?

பொதுவாக கொடி என்பது ஆட்சி அதிகாரத்தை குறிக்கும். பழங்காலத்தில் ஒரு மன்னன் பக்கத்து நாடு மீது படையெடுத்து சென்று அந்நாட்டை பிடித்தால், அந்நாடு தன் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதி என்பதை குறிக்கும் வகையில் தனது கொடியை பறக்க விடுவான். அதே போன்று தான், திருவிழா நடக்கும் நாட்களில் அந்த ஊர் பகுதிகள் முழுவதையும் அனைத்து தெய்வங்களுக்கும் முன்னோடியான காவல் தெய்வம் சங்கிலி கருப்பசுவாமியும், ஸ்ரீஜெனகை மாரியும் , தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை உணர்த்தவும், ஊர் மக்கள் அனைவரும் கட்டுப்பாட்டை கடைபிடிக்கவேண்டும் என்பதை உணர்த்தவும் கோவில்களில் கொடி ஏற்றம் நடத்தப்படுகிறது. இதை சில கிராமங்களில் ஊர் சாற்றுதல் என்றும் சொல்வார்கள்.

## மூன்று மாத கொடியேற்றம்

ஸ்ரீஜெனகைமாரியம்மனின் காவல் தெய்வமாக விளங்கும் சங்கிலி கருப்பண்ண ஸ்வாமிக்கு ஆண்டு தோறும் வைகாசி திருவிழா நடைபெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே, 17 நாள் திருவிழாவும் சங்கிலி கருப்பனின் கட்டுக்காவலுடன் சிறப்பாக நடைபெற வேண்டியும், அவருக்கு முதல் மரியாதையை செய்யும் விதமாகவும் ஆலயத்தின் வெளிப்புறம் அவர் குடிகொண்டிருக்கும் பலி பீடத்தில், ஒவ்வொரு ஆண்டும் தமிழ் வருடத்தின் இறுதி மாதமான பங்குனி மாதத்தில் வரக்கூடிய அமாவாசையை அடுத்து வரும் திங்கள் கிழமை வளர்பிறை அன்று இரவு எட்டுமணிக்கு மேல், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் ஆலய நிர்வாக அதிகாரிகள் முன்னிலையில் மூன்று மாத கொடியேற்றம் அதிவிமரிசையாக நடை பெறும். மூன்று மாத கொடியேற்றம் என்பது பங்குனி முதல் வைகாசி வரை உள்ள தமிழ் மாத காலங்களாகும். இக்கொடியேற்றம் முதலே வைகாசி திருவிழா முன்னேற்பாடுகள் ஆரம்பமாகும்.

கோவிலுக்குள் அம்பாளை தரிசனம் செய்ய நுழையும் முன் இப்பலிபீட கருப்பனை வணங்கி அனுமதி பெற்ற பின்பே ராஜகோபுர வாசலை கடக்க வேண்டும் என்பது நியதி . மேலும் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் திருவிழா சமயத்தின் போது, ஒரு சமூக மக்கள் இப் பலி பீடத்தின் முன்பாக சங்கிலி கருப்பண்ண சுவாமிக்கு எருமை கன்றை பலி கொடுத்த வரலாற்றுச்செய்திகளும் உண்டு.

காலப்போக்கில் அன்றைய அரசாங்கத்தின் நிர்வாக அமைப்பில் ஏற்பட்ட பலமாற்றங்களில், இவ்வகையான பலிகொடுக்கும் நிகழ்வும் நிறுத்தப்பட்டதோடு இன்று அருள்மிகு ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயம் உயிர்பலிகள் ஏதும் நிகழ்த்தப்படாத சைவ திருத்தலமாகவே விளங்குகிறது.

## வைகாசி முதலாம் நாள் திருவிழா கொடியேற்றம்

ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் வரக்கூடிய அமாவாசை தினத்தை அடுத்து வரும் திங்கள் கிழமை வளர்பிறை நாளில் அன்று 17 நாட்கள் நடைபெறும் திருவிழாவின் முதல்நாள் அன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் தங்கள் கைகளில் மஞ்சள் காப்பினை கட்டுவதற்காக பக்தியோடு வரிசையில் நிற்பர். அன்றைய தினம் இரவு 9மணி அளவில் ஸ்ரீஜெனகை மாரியம்மன் மூலஸ்தானம் எதிரே அமைந்துள்ள கம்பீரக்கொடிமரத்தில் தர்ப்பை புற்கள் புடை சூழ்ந்திருக்க, புது வெள்ளைத்துணியில் சிம்மத்தின் திருஉருவத்தினை ஓவியமாக வரைந்து, மங்கள வாத்தியங்கள் முழங்க, பம்பை கொட்டு சத்தம் அதிர இவையனைத்தையும் விஞ்சியபடி பக்தர்களின் கரகோஷ சப்தமும், பெண்பக்தர்களின் குலவை சப்தமும் விண்ணைப்பிளக்க, அன்னை மஹா சக்தி ஸ்ரீஜெனகைமாரியின் முதல் நாள் திருவிழாகொடியேற்றப்பட்டு கோலாகலமாக இனிதே ஆரம்பமாகும்.

## கொடித்தடை

வைகாசி பெருவிழாவின் துவக்கமான முதலாம் திருவிழா அன்று இரவு 9 மணிக்கு கொடியேற்றத்துடன் விழா ஆரம்பமாகும். அச்சமயம் உள்ளூர், வெளியூர் மக்கள் யாராக இருந்தாலும் கொடி ஏற்றும்போது கோவில் எல்லைக்குள் இருந்தால், 17 நாள் திருவிழா முடிந்து கொடி இறக்கும் வரை சோழவந்தான் எல்லைக்குள் தான் இருக்க வேண்டும் என்பது ஐதீகமாக கருதப்படுகிறது. தொழில் ரீதியாக, அவசர நிமித்தமாக வெளியூர் சென்றால் இரவு அங்கேயே தங்கி விடாமல் ஊர் திரும்பி விடவேண்டும் என்பது இன்றும் மரபாக கடைப்பிடிக்கப்படுகிறது.

வெளியூரில் இருந்து வந்தவர்கள் கொடியேற்றும் நாளில் ஊரில் இருந்தால் விழா முடியும் வரை ஊரில் இருக்க வேண்டும். இதற்கு கொடித்தடை என்று பெயர். திருவிழா முடியும் வரை சோழவந்தான் எல்லைக்குள் தங்கி இருக்கமுடியாத சூழ்நிலை இருப்பதாக தெரிந்தால், ஸ்ரீ ஜெனகை மாரியம்மனுக்கு கொடி ஏறும் முன் சோழவந்தான் அருகில் உள்ள தென்கரை, முள்ளிப்பள்ளம், திருவேடகம், வாடிப்பட்டி என பக்கத்து ஊர்களுக்குச் சென்று விட்டு பின்பு கொடி ஏறியவுடன் சோழவந்தான் வந்து விடுவர்.

இவ்வழக்கம் சோழவந்தான் மக்களால் காலங்காலமாக பின்பற்றப்படும் மரபும் அம்பாளின் மீது கொண்ட மரியாதையுமாகும்.

## ஸ்ரீஜெனகை மாரியம்மனின் பூச்சொரிதல் விழா வைபவம்

ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு முதன்முதலில் 1969 ம் ஆண்டு பூச்சொரிதல் விழா துவக்கப்பட்டுள்ளது. திருவிழாதோறும் அம்பாளை மலர்களால் குளிர்விக்கவே பூச்சொரிதல் விழா நடைபெறுகிறது. பூச்சொரிதல் விழா துவக்க காலத்தில் முதலாம் நாள் திருவிழாவாக நடைபெற்றுள்ளது. ஆனால் தற்போது வைகாசி திருவிழா நடைபெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன் வரக்கூடிய ஞாயிறு கிழமை அன்று நடைபெற்று வருகிறது.

இந்த விழாவுக்காக, முல்லை, மல்லிகை, ரோஜா, சம்பங்கி, சாமந்தி, செவ்வந்தி, தாமரை, மரிக்கொழுந்து என எல்லா மலர்களும் கூடைகூடையாக உபயதாரர்களாலும், மக்களாலும் கொண்டு வரப்படுகிறது. “வாழ்வை வளமாக்கும் எங்கள் ஸ்ரீஜெனகை மாரிக்கு வண்ண மலர்களால் அர்ச்சிக்க வரிசை வரிசையாக பெண்களும் சிறுமிகளும் கூட்டம் கூட்டமாக மலர்க் கூடைகளை போட்டிபோட்டுக் கொண்டு மகிழ்வுடன் சுமக்க தயாராவார்கள்.

எவ்வித பேதமுமில்லாமல் எல்லா மக்களும் பூக்களை வாங்கி அம்மனுக்குச் சமர்ப்பிப்பார்கள். இன்றும் ஸ்ரீரங்கநாதர் அனுப்பிவைக்கும் மலர்களே திருச்சி சமயபுர மாரியம்மனின் பூச்சொரிதல் விழாநாள் அன்று தேவியின் திருமேனியில் முதல் மலராக சொரியப்படுகிறது. என்ன இருந்தாலும் அண்ணன் வீட்டுச் சீதனம் என்றால் பெண்களுக்கு தனிப்பெருமையும் அளவில்லா மகிழ்ச்சியும் இருக்கும். பூச்சொரிதல் விழா அன்றைய தினம் அம்மகிழ்ச்சி கடலில் சமயபுரத்தாலும் திளைத்திருப்பார்.

அதேபோலத்தான் நம் ஸ்ரீஜெனகை மாரியின் பூச்சொரிதல் விழா அன்றும் அனைத்துவகையான பூக்களும் ஸ்ரீஜெனகைமாரியின் அண்ணனான ஸ்ரீஜெனகை நாராயண பெருமாளின் முன்னிலையில் அவருடைய சன்னிதான வளாகத்தில் நூற்றுக்கணக்கான மூங்கில் கூடைகளில் பூக்கள் அனைத்தும் நிரப்பப்பெற்று மங்கல ஓசை முழங்க தேரோடும் வீதிகள் நான்கின் வழியாகத் தேரடி வந்து, பின்னர் ராஜ கோபுரம் வழியாகப் பிரவேசித்து, பூத்தட்டுகள் கருவறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு

அம்மனுக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. பக்தர்கள் வழங்கிய லட்சக்கணக்கான மலர்களால் குளிர்ந்து போகும் ஸ்ரீஜெனகை மாரி, தம் மக்கள் கேட்ட வரங்களை அள்ளி வழங்கி மகிழ்கிறார்.

பூச்சொரிதல் விழாவில் பூத்தட்டுக்களை சுமந்து வரும் திருமணமாகாத பெண்களுக்கு அடுத்த திருவிழாவிற்குள் திருமண வைபவம் நடந்தேறும் என்பது அனைத்து பக்தர்களின் நம்பிக்கையாகும்.


ஓம் உ சிவமயம்
ஓம் பராசக்தியே துணை

சோழவந்தான் வைகாசி பெருந்திருவிழாவை முன்னிட்டு
ஸ்ரீ அருள்மிகு ஜெனகை மாரியம்மனுக்கு
26ம் ஆண்டு பூச்சொரிதல் விழா
அழைப்பிதழ்

அன்புடையீர்,

அன்புள்ளங் கொண்ட பெரியோர்களே! தாய்மார்களே! பக்தகோடி பெருமக்களே!

சோழவந்தான் நகர மையத்தில் கோவில் கொண்டு வீற்றிருக்கும் துர்க்காதேவி! ஜெனகை மாரியம்மனுக்கு வழக்கம் போல் நகரத்தார்களால் 26ம் ஆண்டு பூச்சொரிதல் விழா ஸ்ரீபவ வருஷம் வைகாசி மாதம் 22ம் தேதி 5—6—94 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு ஸ்ரீஜெனகை நாராயண பெருமாளுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து இரவு 8 மணிக்கு மேற்படி கோவிலிலிருந்து பூத்தட்டு, பால்குடம் கச்சேரி வாணவேடிக்கை, முழங்க நான்கு ரதவீதி சுற்றி வந்து இரவு சுமார் 10 மணிக்கு மாரியம்மனுக்கு அபிஷேகம் ஆராதனை செய்து பூச்சொரிதல் வெகுவிமரிசையாக நடைபெறும் என்பதை பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

இவண்,
**நகரத்தார்கள்,**
சோழவந்தான்.

சைக்கிள் சாமான்கள் விலைக்கு ஏற்ற
ரகத்தில் வாங்க கைராசியான நிறுவனம்
**விஜயா சைக்கிள் ஸ்டோர்ஸ்**
19, மார்க்கெட் ரோடு. சோழவந்தான்.
B.O. காளவாசல், மதுரை-16.
23385

## 17 நாள் திருவிழாக்களும் - திருவீதியுலா பவனி வரும் வாகனங்களும்

**கடந்த 1996 ம் ஆண்டுவரை 16 நாட்கள் மட்டுமே நடைபெற்ற ஸ்ரீஜெனகைமாரியம்மனின் வைகாசி பெருவிழாவானது 1997 ம் ஆண்டு முதல் 17நாள் திருவிழாவாக சிறப்புடன் நடைபெற்று வருகிறது.**

1. முதலாம் நாள் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பம்
2. இரண்டாம் விழா -நாள் காமதேனு வாகனத்தில் புறப்பாடு
3. மூன்றாம் நாள் விழா- யாளி வாகனத்தில் புறப்பாடு
4. நான்காம் நாள் விழா -கமலாசன வாகனத்தில் புறப்பாடு
5. ஐந்தாம் நாள் விழா- காமதேனு வாகனத்தில் புறப்பாடு
6. ஆறாம் நாள் விழா- ரிஷப வாகனத்தில் புறப்பாடு
7. ஏழாம் நாள் விழா - அன்ன வாகனத்தில் புறப்பாடு
8. எட்டாம் நாள் விழா- குதிரை வாகனத்தில் புறப்பாடு
9. ஒன்பதாம் நாள் விழா- பால்குடம் அக்கினிச்சட்டி பெருவிழா நிகழ்ச்சி
10. பத்தாம் நாள் விழா- பூக்குழி பெருவிழா நிகழ்ச்சி
11. பதினோராம் நாள் விழா- யானை வாகனத்தில் புறப்பாடு
12. பனிரெண்டாம் நாள் விழா- காமதேனு வாகனத்தில் புறப்பாடு
13. பதிமூன்றாம் நாள் விழா- ரிஷப வாகனத்தில் புறப்பாடு
14. பதினான்காம் நாள் விழா- அன்ன வாகனத்தில் புறப்பாடு
15. பதினைந்தாம் நாள் விழா- காமதேனு வாகனத்தில் புறப்பாடு
16. பதினாறாம் நாள் விழா- திருத்தேரோட்ட பெருவிழா நிகழ்ச்சி
17. பதினேழாம் நாள் விழா- கொடியிறக்கமும் தீர்த்தவாரியும் நடைபெறும்.

திருவிழாவின் அனைத்து நாளிலும் பக்தர்களுக்கு அருள் செய்ய மண்டகப்படி விஜயம் செய்யும் ஸ்ரீஜெனகை மாரியம்மனை ஒவ்வொரு மண்டகப்படித்தாரர்களும், மருத நாட்டின் பட்டத்தரசியை போல வாண வேடிக்கைகளோடும், மங்கள வாத்தியங்கள் முழங்கச்செய்தும் பணிவோடு வரவேற்ப்பார்கள்.



காமதேனு வாகனத்தில் அம்மன்

யாளி வாகனத்தில் அம்மன்

கமலாசனத்தில் அம்மன்

ரிஷப வாகனத்தில் அம்மன்

அன்ன வாகனத்தில் அம்மன்

குதிரை வாகனத்தில் அம்மன்

யானை வாகனத்தில் அம்மன்

தீர்த்தமெடுக்க புறப்படும் ஜெனகை மாரியம்மன்

**ஸ்ரீஜெனகை மாரியம்மன் தீர்த்தவாரியன்று வைகை ஆற்றில் கம்பீரத்தின் திருவுருவாய்**

**அம்மனின் முன்னலங்காரம்**

**அம்மனின் பின்னலங்காரம்**

## வைகாசி திருவிழாவில் கழுவேற்ற நிகழ்ச்சி

வைகாசி திருவிழாவின் 6-வது நாள் விழாவாக கழுவேற்றம் நிகழ்ச்சி நடந்து வருகிறது. இந்த விழா, மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர்களுள், கூன்பாண்டியன் என்பவன் தனது காலத்தில் சமண மதத்தின் மீது பற்றுக்கொண்டு, அதை தழுவியதோடு, மக்களையும் அந்த மதத்தில் சேர பணித்தான். ஆனால் அவனின் மனைவியான மங்கையர்கரசி என்பவர் சைவத்தில் தலையாய பக்திக் கொண்டு சிவனின் மீது பக்தி செலுத்தி வந்தார். இந்தநிலையில் சைவத்தினருக்கும், சமணர்களுக்கும் கடும் போட்டி ஏற்பட்டது. அதில் சைவத்தினர் சார்பாக திருஞானசம்பந்தர் 'திருநீற்றுபதிகம்' எழுதிய ஏட்டை வைகையாற்றில் விட்டார். அது எதிர்கொண்டு கிளம்பி சென்று சோழவந்தான் அருகே திருவேடகத்தில் கரை ஏறியது. ஆனால் சமணர்கள் எழுதிய 'அத்திநாத்தி' என்ற ஏடு ஆற்றோடு சென்று கடலில் சென்றடைந்தது.

இதை நினைவு கூறும் விதமாக இங்கு நடைபெறும் திருவிழாவின் 6-ம்நாள் விழாவில் ஸ்ரீஜெனகை மாரியம்மன் ரிஷப வாகனத்தில் கோவிலில் இருந்து புறப்பட்டு கிழக்கு ரத வீதியில் உள்ள கருப்ப சுவாமி கோவில் முன்பு எழுந்தருளுவார். கருப்பசுவாமி கோவிலின் மேற்புறம் சமணர் வேடமிட்ட ஒருவர் அமர்ந்திருப்பார்.

அப்போது அம்மன் அருகில் உள்ள குருக்கள், திருஞான சம்பந்தரின் கழுவேற்றப் பதிகங்களையும் கழுவேற்றம் நிகழ்வையும் கூறும் போது, சமணர் வேடமணிந்தவர் எழுந்து தப்பித்து ஓட முயற்சிப்பார். அவரை பக்தர்கள் அனைவரும் சூழ்ந்து கொண்டு தாக்குவது போல விழா நிகழ்ச்சி நடைபெறும். இக்கழுவேற்ற வைபவம் ஆண்டுதோறும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# முத்துப்பல்லக்கில் பவனி வந்த ஸ்ரீஜெனகைமாரியம்மன்

ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு கடந்த 1982 வது வருடத்திற்கு முன்பு வரை அன்றைய நாளின் பதினான்காம் நாள் திருவிழாவாக முத்துப்பல்லக்கு வைபவ நிகழ்ச்சியானது சோழவந்தான் கச்சிராயிருப்பு நாகத்தேவர் மகன் மொக்கை என்கிற பெரியகருப்பத்தேவர் என்ற உபயதாரர் மூலம் ரதவீதியுலா வெகு சிறப்பாக பெற்று வந்துள்ளது. இங்கு இணைக்கப்பட்டுள்ள ஸ்ரீஜெனகைமாரியம்மனின் முத்துப்பல்லக்கு புகைப்படம் 17.06.1973 அன்று எடுக்கப்பட்டதாகும்.

முத்துப்பலக்கு அமைப்பதில் புகழ்பெற்ற தஞ்சாவூர் கலைஞர்களை பல்லக்கு வீதியுலா நடைபெறும் மூன்று நாட்களுக்கு முன்பே வரவழைத்து கப்பல் போன்றதொரு பிரம்மாண்ட அமைப்பில் முத்துமணிச் சிவிகையில் அலங்காரம் செய்யப்பட்டு மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட முத்துப்பலக்கில் ஸ்ரீஜெனகை மாரியம்மன் கம்பீரத்தின் திருவுருவாய் அமர்ந்திருக்க, புகழ்பெற்ற நாதஸ்வர கலைஞர்கள், தவில் இசைக்கலைஞர்கள் மேள தாளங்கள் பல்லக்கின் முன் செல்ல, இசைக்கச்சேரிகள் இசைக்க, வாண வேடிக்கைகளுடன் இரவு முழுவதும் நான்கு ரத திருவீதிகளிலும் பக்தர்கள் புடை சூழ இச்சாம்ராஜ்ஜியத்தின் பட்டத்தரசியாக உலா வந்து ஸ்ரீஜெனகைமாரியம்மன் அருள்புரிந்துள்ளார்.

இன்றும் தஞ்சை புன்னை நல்லூர் மாரியம்மன், பட்டுகோட்டை நாடியம்மன் போன்ற அம்மன்களின் வருடாந்திர திருவிழாவின் போது முத்துப்பல்லக்கு வைபவம் நடைபெற்று வருவதை காணமுடிகிறது.

இவ்வாறாக ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு பிரம்மாண்டமாக நடைபெற்றுவந்த முத்துப்பல்லக்கு 1982 வது வருடத்திற்குப்பிறகு நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## முத்துச்சப்பரத்தில் பவனி வந்த ஸ்ரீஜெனகைமாரியம்மன்

ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு கடந்த 1970 வது வருடம் வரை அன்றைய நாளின் பத்தாம் நாள் திருவிழாவாக முத்துச்சப்பரம் வைபவ நிகழ்ச்சியானது சோழவந்தான் தெற்கு ரதவீதியில் வசித்துவந்த சா. ராமசாமி என்ற உபயதாரர் மூலம் முத்துச்சப்பர ரதவீதியுலா வெகு சிறப்பாக பெற்றுள்ளது.

ஐந்து வெள்ளைக்குதிரைகள் பூட்டிய தேரினில், மீசை முறுக்கிய பூதக்கணம் தேரினை முன்னோக்கி செலுத்த, அம்பாளின் இருபுறமும் சிங்கங்கள் காவலாய் நிற்க, பிரபஞ்ச நாயகி ஸ்ரீஜெனகை மாரியம்மன் ராஜ கம்பீர மிடுக்கில் சிம்ம வாகனத்தில் அமர்ந்து பவனிவரும்படி மிகுந்த அழகுடன் அமைந்துள்ளது.

இம்முத்துச்சப்பரமும் புகழ்பெற்ற தஞ்சாவூர் கலைஞர்களை கொண்டு வடிவமைக்கப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

## நந்தி வாகனம் கொண்ட ஸ்ரீஜெனகை மாரியம்மன்

பெரும்பாலான அம்மன் ஆலயங்களில் அம்பிகைக்கு சிம்மமே வாகனமாக அமைந்திருப்பதை நாள் கண்டிருப்போம். ஆனால் அதற்கு சற்று மாறாக இத்தலத்தில் ஸ்ரீஜெனகை மாரியும் ஸ்ரீசந்தன மாரியும் நந்தியை வாகனமாக கொண்டு காட்சியளிக்கிறார்கள்.

உண்மையில் நந்தி வாகனம் சிவபெருமானின் சிவச்சின்னமாகும். இதனை காளை வாகனம் எனவும் சொல்வர். சைவ புராணங்கள் படி இவர் நாத சைவத்தின் எட்டு சீடர்களின் தலைமைக் குருவாகக் கருதப்படுகிறார்.

சனகர், சனந்தர், சனாதனர், சனத்குமார், பதஞ்சலி, சிவயோக மாமுனி, வியாக்கிரமர், திருமூலர் ஆகிய 8 பேரும் நந்தி பெருமானின் மாணவர்களாவர். நாம் அனைவரும் சிவன் கோவிலில் பார்த்திருப்போம். நந்தியின் நான்கு கால்களும் நான்கு வகையான குணத்தை வெளிப்படுத்துவதாக ஐதீகம். அதாவது, சமம், விசாரம், சந்தோஷம், சாதுசங்கமம் ஆகியன.

சிவன் மீது தீவிர பற்று கொண்டதால், அவருக்கு நிகரான பலம் பெற்றவராகவே நந்திகேசுரரின் வரலாற்றை லிங்க புராணம் கூறுகிறது. பிறப்பில் எம்பெருமானாகிய சிவபெருமானே நந்திகேசுவரராகப் பிறந்து கணங்களின் தலைவரானார் என்பது புராண மரபு. முனிவர்களுக்கும் சித்தர்களுக்கும் யோகிகளுக்கும் நந்திதேவரே ஆதி குரு.பொதுவாக ஆலயங்களில் இக்காளையானது அமர்ந்த நிலையில் இருந்தால் நந்தி எனவும் நின்ற நிலையில் இருந்தால் ரிஷபம் எனவும் பொருள்படும்.

ஸ்ரீஜெனகை மாரியம்மன் நந்திவாகனம் ஏற்றதற்குரிய காரணம் என்னவெனில், சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இத்தலத்தின் பின்னே உள்ள வைகை நதியில் வெள்ளம் கரை புரண்டு ஓடியுள்ளது.அச்சமயம் ஆற்று வெள்ளத்தில் மரத்தாலான ரிஷபத்தின் தலைப்பகுதி மட்டும் மிதந்து வந்து கரை சேர்ந்துள்ளது.

அதனை கைப்பற்றிய சோழவந்தனை சேர்ந்த அடியவர்கள் ஆற்றில் கிடைத்த ரிஷபத்தின் தலை பகுதியை ஸ்ரீஜெனகை மாரியம்மன் அன்றைய நிர்வாகத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர். வைகை நதியில் கிடைத்த ரிஷபத்தை ,அம்மனின் விருப்பமாகவே கருதிய நிர்வாகமும் மக்களும் ரிஷபத்தின் தலைப்பகுதிக்கு ஏற்றார் போல உடலமைப்பையும் மரத்தாலேயே செய்து முழுமையான ரிஷப வாகனமாக உருவாக்கி அம்பாளை ரதவீதி வலம் சுற்றி வரச்செய்து மகிழ்ந்துள்ளனர்.

அன்று வைகையில் கிடைத்த ரிஷப தலையோடு உடல் பொருத்தி உருவாக்கப்பட்ட அதே ரிஷப வாகனத்தில் தான் இன்றும் ஸ்ரீஜெனகை மாரியம்மன் திருவீதியுலா வருகிறார்.

இதன் அடிப்படையிலேயே கி.பி பதினெட்டாம் நூற்றாண்டு காலத்தில் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் ஆலய திருப்பணி சமயத்தில், ரிஷப வாகனம் இயற்கையாகவே கிடைக்கப்பெற்றதை நினைவூட்டிக்குறிப்பிடும் விதமாக சிம்மவாகனத்திற்க்கு பதிலாக, ஸ்ரீஜெனகை மாரியே விரும்பி ஏற்ற நந்தி வாகனத்தையே நிரந்தர அம்ச வாகனமாக கொடிமரத்தின் முன்பு பிரதிஷ்டை செய்து வழிபட்டுள்ளனர்.

அதே போல 2003ம் ஆண்டு வரை இருந்த முந்தைய ஆலயத்தின் சுற்றுப்பிரகார சுவர்களின் மேல் நான்குபுறமும் அமர்ந்து காவல்புரியும் பூத கணங்களும் நந்தியையே வாகனமாக கொண்டிருந்தன. தற்போதைய புதிய கோவிலின் அமைப்பில் பூதகணங்கள் சிங்க வாகனத்தை பெற்றுள்ளனர்.

இன்றும் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் திருச்சன்னதியில் நந்தீஸ்வரர் விக்ரகமானது மகாமண்டபத்தின் மையப்பகுதியில் கொடிமரத்தின் முன்பு உள்ள பீடத்தில் அம்பாளின் திருமுகத்தை பார்த்த வண்ணம் அவரின் உத்தரவை எதிர்பார்த்து காத்திருந்தபடி அமர்ந்திருப்பார்.

மேலும் குறிப்பாக இந்த நந்தியின் அமைப்பை நன்றாக கவனித்து பார்த்தால் ஒரு வித்தியாசம் தெரியும். பொதுவாக பெரும்பான்மையான சிவாலயங்களில் ஈசனை பார்த்த படி இருக்கும் நந்தீஸ்வரர் தனது இடது காலை மடக்கி வலது காலை முன்வைத்து அமர்ந்து இருப்பார். அதே அமைப்பில் இங்கும் நந்தி வாகனம் அமையப் பெற்றமையால் இரு மஹா சக்திகளும் சிவாம்சம் கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

**சுயம்பை வணங்கி**
**சுயம்பாய் வளர்வோம்!**

# அன்றைய செடில் திருவிழாவும் இன்றைய தேரோட்டமும்

## செடில் குத்தி வருதல்

“நகரும் கோயில்” என்று சிறப்பிக்கப்படுவது தேர். கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களில் தேர்த் திருவிழா மிகவும் சிறப்பானது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரின் வடம் பிடித்து இழுக்க, ஸ்ரீஜெனகை மாரியம்மன் எழுந்தருளியிருக்கும் தேர் ஆடி அசைந்தபடி வரும் காட்சி, காண்பவரையெல்லாம் பரவசத்தில் ஆழ்த்தும். நூறு ஆண்டுகளுக்கு முன் இத்தேர்த் திருவிழாவின் ஒவ்வொரு வருட வைகாசி பெருந்திருவிழாவின்போதும் ஒரு பக்தரை அம்மனின் உத்தரவுடன் தேர்வு செய்து அவரின் முதுகு தோலை உரிக்காமல் உரித்து ,அச்சதைப்பகுதியில் கூர்மையான கொக்கிகளில் துளையிட்டு 70அடி உயரத்தில் தேரினுள்ளே இருக்கும் அம்மனுக்கு முன்னால் பறந்த படி வருவது செடில் விழாவாக இருந்துள்ளது . அன்றைய காலத்தில் இத்தலத்தை சுற்றியுள்ள ஊர் காவல் பொறுப்பில் இருந்தவர்கள் தங்கள் முதுகில் செடில் குத்திக்கொள்பவர்களாக இருந்துள்ளனர் . ஊர் காவல் பொறுப்பில் இருந்தவர்களின் பெயரை எழுதி சீட்டுக்குலுக்கல் முறையில் போட்டு அவர்களுள் ஒருவரே எடுத்தும், சீட்டில் யார் பெயர் வருகிறதோ அவரே அந்த வருட தேரின் முன் செடில் குத்தி பறந்தவாறு வந்துள்ளார்கள். கடைசியாக நடைபெற்ற செடில் தேர் திருவிழாவில் பெரிய சுப்பிரமணிய காவல்காரன் என்பவர் தன் முதுகு தோலில் செடில் குத்தி பறந்தபடி வந்ததாக அரசஞ்சண்முகனார் தமது செடிற்சந்த ஒயிர் கும்மி புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் செடில் குத்தி பறக்க தேர்வாகிறவர் ஸ்ரீஜெனகை மாரியம்மன் கோவிலில் தேரோட்டத்திற்கு முந்தைய முதல் மூன்று நாட்கள் தங்கி, இருநேரம் குளித்து, கோவில் வழங்கும் மடப்பள்ளி பிரசாத உணவையே உண்டு அன்னையை வணங்கி விரதத்தை கடைபிடித்துள்ளார்கள்.

தேரோட்ட நாளன்று காலை செடில் குத்துவதற்கு தேர்வானவர், ஸ்ரீஜெனகை மாரியம்மனை வணங்கியபடி மூலஸ்தானத்தின் முன்பாக குப்புறபடுத்துக் கொண்டுள்ளார். அவரை உடல் பலம் கொண்ட நான்கு பேர் சூழ்ந்து கொண்டு, படுத்துள்ள நபரின் முதுகை, முதுகு சதைக்கும் மேல் தோலுக்கும் சம்பந்தம் இல்லாத அளவிற்கும், தோலை இழுத்தால் வரும் அளவிற்கும் கைகளாலும் ,கனமாக இளநீராலும் மாறி மாறி அடித்துள்ளனர்.

பின் இரும்பு கொக்கிகளை முதுகுத்தோலில் துளையிட்டு பிணைத்து அவரது கைகளிலும், கால்களிலும் சலங்கைகள் கட்டி கோவிலில் அமர்ந்திருக்கும் ஸ்ரீஜெனகை மாரியம்மனை வணங்கி வலம் வந்தபின், அந்நபர் முதுகில் குத்தி பிணைக்கப்பட்ட சங்கிலியுடன் 70 அடி உயர தேர் இருக்கும் நிலைக்கு ஓடியுள்ளார்.

தேரின் முன் இருக்கும் 70 அடி மரத்தின் முன் அவரை படுக்கவைத்து மரத்தில் இணைத்துக்கட்டி, அம்மரத்தின் பின் பத்தடியில் ஊர்மக்கள் ஏறிநின்று அவரை எடை குறைந்த தராசு மேலே செல்வதுபோல அவரை அப்படியே மேலே தூக்கி பறக்கும் அமைப்பில் நிறுத்தியுள்ளார்கள். அக்காலங்களில் பெரிய உயரமான கட்டிடங்கள்

இல்லாததால் 60 அடி உயரத்தில்  கைகளை விரித்தபடி அவர் பறப்பது, பக்கத்துக்கு ஊரில் இருந்து பார்ப்பவர்களுக்கு செடில் குத்திக்கொண்டவர் பறவை மனிதனை போல தெரிந்துள்ளார். தேரின் முன்னே செடில் குத்திக்கொண்ட பக்தர் பறந்த நிலையில் செல்ல அவரோடு இணைக்கப்பட்ட தேர் பின்னே வந்துள்ளது. மேலே தொங்கியபடி வரும் அந்த பக்தர் தன் கைகளைத் தட்டிக்கொண்டு கும்மிப்பாடலை பாடியபடி வந்துள்ளார். அவர் பாடுவதை கீழே நடந்துவரும் பக்தர்களும் பாடியபடி வந்துள்ளார்கள். நான்குரதவீதி சுற்றிய பிறகு  கோவிலின் முன்பு தேர் நிலைக்கு வந்த பின் மேலே தொங்கியபடி வந்த நபரை கீழே இறக்கி கொக்கிகளை அகற்றி அவருக்கு கோவில் மரியாதையும், ஊர் மரியாதையும் வழங்கியுள்ளனர். **நன்றி: முனைவர் கு.ஞானசம்பந்தன் அவர்கள்.**

## திருமலை நாயக்க மன்னரும் செடில் தேர்  திருவிழாவும்

மதுரையை ஆண்ட நாயக்க மன்னருள் மக்கள் மனதில் இன்றும் நிலைத்து இருப்பவர் இருவர். அவர்களுள் ஒருவர் பெண்ணரசியாக விளங்கிய இராணி மங்கம்மாள் ஆவார். மற்றொருவர் பெரும் புகழ் கொண்ட திருமலை நாயக்கர் ஆவார். இவர் கி.பி.1584 பார்த்திப ஆண்டு தைத்திங்கள் பூச திருநாள் அன்று பிறந்தவர். இவரது ஆட்சியாண்டு கி.பி.1623 முதல் கி.பி.1659 முடிய . இவர் மதுரை நாயக்கர் குலத்தில் ஏழாவது மன்னராக முப்பத்தொன்பதாம் வயதில் ஆட்சியேறினார். முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சிப்பீடத்தில் இருந்தார். தமது எழுபத்தைந்தாம் வயது வரை கி.பி. ஆட்சிப்பீடத்திலிருந்து மண்ணுலகம் அகன்றவர்.

மதுரை நாயக்க மன்னருள் விசுவநாத நாயக்கரை அடுத்து அதிக ஆண்டுகள் ஆட்சி புரிந்தவர் திருமலை நாயக்கர். மற்ற மதுரை நாயக்க மன்னர்களை வானத்து விண்மீன்கள் என்றால் திருமலை நாயக் கரை வானத்தில் பவனிவரும் வான்மதி எனலாம். மதுரை நாயக்கர் வரலாற்றில் முதன் முதலில் முழுவுரிமை படைத்த மன்னர் போன்று ஆளத் தொடங்கி யவர் திருமலை நாயக்கரே. இவர் செய்த அறப் பணிகளும், கலைப்பணிகளும், சமயப்பணிகளும், பிற பணிகளும், பிற நாயக்க மன்னர்களைக் காட்டிலும் விஞ்சி நிற்பவையாய் விளங்குகின்றன.

## திருமலை நாயக்கரின் பண்பு நலன்கள்

திருமலை நாயக்க மன்னர் வீரவுணர்வு மிக்கவர்.  திருமலை மன்னர் சிறந்த சமயநெறியாளர். நாட்டில் நிலவிவந்த பண்புக்கும் மரபுக்கும் மதிப்பளித் தவர். இறைவனிடத்து இடைய றாத ஈடுபாடு காட்டிய பக்தியாளர். வைணவமும், சைவமும் தழைத்தோங்கப் பாடுபட்ட சமயவாதி. வெளி நாட்டுச் சமயமும் வளர இடங்கொடுத்த சமயப் பொறையாளர் மாநகர் மதுரையை விழா நகராக மாற்றிய மாமன்னர் அவர் தன்னாட்சியில் கட்டி முடித்த கட்டடங்களும் கொட்டித்தந்த தானங்களும் இதனை உறுதிப் படுத்துகின்றன.

திருமலை மன்னர் அறிவும் ஆற்ற லும் சுறுசுறுப்பும் கொண்டவர். தன் நாட்டின் நலனுக்காகக் களம் பல கண்டவர்.

திருமலை மன்னர் சிறந்த அறநெறியாளர் நாட்டில் அவ்வப்போது எழுந்த சிக்கல்களுக்கு உடனுக்குடன் தீர்வு கண்டவர். தான் கண்ட அம்முடிவுகள் சில வேளைகளில் சரியில்லை என அறிந்ததும் அதனைத் திருத்திக் கொண்டவர். இதற்கு அவரது வரலாற்றில் சான்றுகள் பல உண்டு அவர் வாழ்ந்த காலத்துச் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் நிறைந் திருந்தபோதிலும் அவ்வேறுபாட்டை ஒழிக்க முயலும் வகையில் தீர்ப்பு வழங்கிச் செப்பேடு செய்தருளியவர்.

## வைகாசி திருவிழா கலகமும் திருமலை நாயக்கரின் பாதுகாப்பு அரணும்

திருமலை மன்னர் சிறந்த அன்புள்ளம் கொண்டவர். தனது அதிகாரிகளிடம் ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டவர். அவர் தம் தீரச்செயலை உரிய வேளை யில் உரிய முறையில் பாராட்டிப் பரிசுகள் பல அளித்தவர். இவ்வாறான பெரும் சிறப்புகளை கொண்ட திருமலை நாயக்க மன்னரின் ஆட்சிக்காலத்தில் சோழவந்தான் ஜெனகைமாரியம்மன் ஆலயத்தின் வைகாசி பெருந்திருவிழாவின் போது இடங்கை வலங்கை எனும் இரு சமூக பிரிவினர்களிடையே ஏற்பட்ட பெரும் கலகத்தில் செடில் தேரோட்ட திருவிழா பாதி வழியில் நின்றது. இதனை கோவிலின் அன்றைய உப கர்த்தாக்கள் (கோவிலின் தலைமை பொறுப்பாளர்கள்) கலவரத்தை ஒடுக்கி திருவிழாவை நடத்திக் கொடுக்க வேணுமாய் தர்மகர்த்தாவாக இருந்த மன்னர் திருமலை நாயக்கரை வேண்ட, மன்னர் தன் பாளையப்பட்டு தலைவரான திடியன் தூங்கா தேவர் தலைமையில் ஓர் படைகளை அனுப்பி வைத்துள்ளார். சம்பவ நிகழ்விடத்திற்கு வந்த தூங்காதேவர், இரு பிரிவினர்களில் வலங்கையினர் பக்கம் இருந்த நியாயத்தை அறிந்து இடங்கையினரின் அநியாய செயலை ஒடுக்கும் விதமாக கலவரத்தை துரிதமாக கட்டுப்படுத்தி திருவிழாவை தொடர்ந்து நடத்திக்கொடுத்துள்ளார். இந்த கலவரத்தில் இடங்கை தரப்பில் பலரும், தூங்கா தேவர் தரப்பில் பதினாறு பேர்களும் தங்களின் இன்னுயிர்களை இழந்துள்ளனர் .

இக்கலவரத்தை திறம்பட கட்டுப்படுத்தி ஸ்ரீஜெனகை மாரியம்மனின் செடில் தேர் திருவிழாவை சிறப்புடன் நடக்கச் செய்தமைக்காக மன்னர் திருமலை நாயக்கரவர்கள், தூங்கா தேவருக்கு, வெகுமதிகள் பல அளித்ததோடு, திடியன் தூங்காதேவரை வலங்கைமான் சமூகத்தினரின் பாடிக்காப்பானாக (மெய்க்காப்பாளர்) நியமித்துள்ளார். அதற்கு ஆவணமாக சாலி வாகன சகாப்தம், கலியுக சகாப்தம், தமிழ் கர வருஷம், கி.பி 1651 ம் ஆண்டு வைகாசி மாதம் 27 ம் தேதியன்று மன்னர் திருமலை நாயக்கர் ஒரு செப்பு பட்டயம் தூங்கா தேவருக்கு வழங்கியுள்ளார். இச்சம்பவங்களின் அடிப்படையில் பார்க்கும் போது, ஸ்ரீஜெனகை மாரியம்மன் கண்கண்ட தெய்வம் என்பதையும் ஒப்பற்ற அருட்கடலாக விளங்கியிருப்பதையும், மன்னர் திருமலை நாயக்கர் அவர்கள் நன்குணர்ந்தவராக இருந்துள்ளார் என்பதனை அறியலாம்.

வரலாற்று ஆவணங்கள் நமக்கு உணர்த்துவது யாதெனில் மக்களின் கண்கண்ட தெய்வமான ஸ்ரீஜெனகை மாரியம்மனின் பெருவிழாக்கள் பதினைந்தாம் நூற்றாண்டின் மையப்பகுதியிலேயே வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளதை அறியலாம் .

**அருள்மிகு ஜெனகை மாரியம்மன் ஆலயத்தின் தர்மகர்த்தாவாக இருந்த மன்னர் திருமலை நாயக்கர், தூங்கதேவனுக்கு வழங்கிய செம்பு சாசன பட்டயத்தின் வரிகள் உரைநடைத்தமிழில்:**

**ஸ்ரீராமஜெயம்**

சாலிவாகன சகாப்தம் கலியுக சகாப்த்தம் தமிழ் கர வருஷம் 1651 வைகாசி மாதம் 27ம் தேதி மகாராஜஸ்ரீமகாகனம் பொருந்திய சமஸ்த்தான, சர்க்குண பரன பூசித அலங்கிர், தம் விஜய விஸ்தார, வினித, ரஞ்சிதம்: மதுரவாசிதம், உசிதம், மிருதம் நளின கோலாகலம், உத்தவேகம், விதஷனன், உத்தண்டதோர்க்கண்ட, மிரசண்ட, மண்டலலேலர்கண்ட, உத்தார நிச்சயம் சதிர்த உபாயம், சம்பிரதாயம் வெகு தேய சகாய, தியாக, சையோக, வையோகம் பொருந்திய மதுரை 64 திருவிளையாடலும் பொருத்தம் மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் பாதம் பூசை செய்பவராகிய சீமை சமஸ்தானங்களுக்கு அதிகாரக் கர்த்தாவாகியிருக்கிற நாளில்,

சொளவந்தான் மாரியம்மன் கோவில் திருவிழாவில் செகுல், தர்மக் கர்த்தா (திருமலை நாயக்கர்) வகையரா வலங்கையர்கள் வெள்ளாணையும், வெள்ளைக் குதிரையும், வெள்ளைச்சாமரையும், சேமந்தூர் வெண்டயமும், குதிரைகுடி காளாஞ்சியும், வெண்சாமரையும், சுருட்டியும் கொண்டு, வலது கால் கெச்சமும் கட்டி நடத்த வேண்டிய திருவிழாவில் பரிசலை இடங்கையர்களாகிய ஆசாரி வகையறா (அஞ்சு) பஞ்ச மடமுள்ளவர்களும் அதிக தோரணையாக, வெள்ளாணையும் வெள்ளைக் குதிரையும் வெள்ளை வெண் சாமரமும் சேமத்தூர் வெண்டயமும் முப்பகலும் தீவட்டியும், குதிரை குடை காளாஞ்சியும், சுருட்டியும் கொண்டு திருவிழா பரிசலை நடத்தினார்கள் என்று, இடங்கையார்களை, தர்மகர்த்தா வகையறா வலங்கையர்கள் தடுத்து அதனால், சராசல்லியமாகி, கொலைபலியாகி இருந்தபடியால் வஞ்சம் தீர்த்து அடைக்கலம் காத்த மேல் நாட்டிலிருக்கும் எட்டு நாடு இருபத்திநாலு உபக்கிராமங்களும் நாட்டுத் தலைவன், சேனைத் தலைவன். தூங்கதேவன் வந்து மேற்படி சண்டையில் சேர்ந்து தர்மக்கர்த்தா உத்திரவுப்படி சண்டை நடத்தி உத்திரவாதம் செய்து மேற்படி சண்டையில் பதினாறு ஆளும் செத்துக் கொடுத்து இடங்கையர்களை வலங்கையர்கள் சண்டையில் செயித்து தர்மகர்த்தா உத்திரவுப்படி வலங்கை யார்களுக்கு நூத்திக்கலநெல்லும் பதினேழு கிடாயும் பாக்கு வெத்திலை செலவு, பொன் நூற்றி ஐம்பதும், பாத காணிக்கையாக வைத்து வலங்கையர்களுக்கு பெற்ற பிள்ளையாக உத்திரவு செய்திருப்பதால், தர்மகர்த்தா முதல் பதினெட்டுப் பட்டரையார்களும் மேல்கண்ட தேசாதிபதிகளும் இந்த வகையரா. வெள்ளைக் குதிரை வெள்ளை வெண்சாமரையும் முப்பகலும் தீ வெட்டியும் சுருட்டியும் கொண்டு வெற்றியுடன் விருதுகள் பெற்று வருகிறபடியால் உபயமார்கள் பாதைகளும் பேட்டை ஸ்தலங்களும் சமுத்திரம் சூழ்ந்த 4 திசைகளிலும் இருந்து வருகிறோம். இதில் கண்டு கொடுக்கப்பட்ட வருமானமானது:- கட்டின வீடு ஒன்றுக்கு பணம் ஒன்று, பொதி மாட்டு சுமைக்கு அரை பணமும், மாராப்புச் சுமைக்கு கால் பணமும், ஆண்பிள்ளை கலியாணத்திற்கு 5 பணமும், அரிசி மரக்கால் முக்குறுணியும், பெண் பிள்ளை கல்யாணத்துக்கு மூன்று பணமும், அரிசி மரக் கால் மூன்றும் இந்தப்படி படிபாக்கு வெற்றிலையும், கொடுத்து அனுப்பி வைக்கிறது. மதுரை முதல் சோலைமலை, வெள்ளியங்குன்றம், திருப்பரங்குன்றம், விக்கிரமங்கலம், சொளவந்தான், மேல்மங்கலம், பூலந்தூர், தாண்டிக்குடி, ஆறு ஊர் வட்டகைமலை தொளாயிரமும்:- தஞ்சை கும்பகோணம், மஞ்சக்குப்பம், கூடலூர், பரங்கிமலை, சென்னைபட்டினம், சீரங்கப்பட்டினம், முத்தியால்பேட்டை, ஆர்க்காடு ராய வேலூர், வாணியம்பாடி, புதுச்சேரி, திருச்சிராப்பள்ளி, அரவக்குறிச்சி, வடமதுரை, மடூர், புள்ளைமுழுங்கி, எமக்கிழாபுரம், தாடிக்கொம்பு வேடசந்தூர், இடைய கோட்டை, தொட்டையங் கோட்டை, உத்தப்ப நாயக்கனூர், தொட்டப்ப நாயக்கனூர், எழுமலை, சாப்டூர், திரு மாணிக்கம், வத்திராயிருப்பு, சுந்தரபாண்டியம், ஸ்ரீவில்லி புத்தூர், கூமாப்பட்டி, கொடிக்குளம், அன்னஞ்சி, அல்லி நகரம், போடி, தேவாரம், கோம்பை, உத்தமபாளையம், தேனி, பெரியகுளம், (இதற்குத் தெற்கு) நெறிஞ்சிப்புத் தூர், நெற்கொண்டசேவல், மணியாச்சி, ஏளாயிரம் சேத்தூர், சிவகிரி, சொக்கன்பட்டி நெல்லிக்குறிச்சி, சாத்தூர், பாஞ்சாலங்குறிச்சி, மதவ நாயக்கனூர், அருப்புக் கோட்டை, பாளையம்பட்டி, விருதுப்பட்டி, திருமங்கலம், கண்டுகுளம், அரியனூர், துரையூர், பாபநாசம், திருவிடை மருதூர், வலங்கைமான், ஆலங்குடி, திருமயம், பொன் அமராவதி, அன்னவாசல், விராலிமலை இதில் கண்ட தேசாதிபதிகளும், தர்மகர்த்தா பட்டணம் செட்டியார் வகையராக்களும், மேற்கண்டபடி வரி கொடுத்து அனுப்பி வைக்கிறதென்று என்று எழுதிக் கொடுத்த செம்பு தாம்பிரகாசனப் பட்டயம்.

**இப்படிக்குத் திருமலை நாயக்கர் திருக்கரத்தால் கையொப்பம்.**



**மன்னர் திருமலை நாயக்கர் 1651ம் ஆண்டு வழங்கிய செம்புப் பட்டையத்தின் முன்பக்கம்**



மன்னர் திருமலை நாயக்கர் 1651ம் ஆண்டு வழங்கிய செம்புப் பட்டையத்தின் பின்பக்கம்

நாட்டு வழக்கம் எட்டு நாடும் இருபத்தி நான்கு உப கிராமங்களும் கூடி சாதி அளிவு பொதுக்கூட்டம் நடக்கும் காலத்தில் தூங்கதேவர் முதலில் தட்டு வெற்றிலை பாக்கு பகிர்ந்து கொடுக்கிறதென்றும் தூங்கதேவருடைய நாட்டு சேவுகன் மூலமாய் சாதி அமல் நடத்துகிறதென்றும் தீர்மானிக்கப்பட்டது . இந்தத்தாம்பிர சாசனம் மதுரை தெற்கு மல்லி தெருவிலிருக்கும் மீனாச்சி சுந்தரம் ஆசாரி கொமாரன் சதாசிவம் ஆசாரி ஊசியால் பதிக்கப்பட்டது.

மேல் நோக்கிய மரமும் கீழ்நோக்கிய தண்ணீரும் உள்ள மட்டும் சந்திர சூரியன்கள் உள்ளவரைக்கும் கல்லும் காவேரி புல்லும் பூமியும் உள்ளவரைக்கும் வரிவாங்கி ஆண்டு அனுபவித்துக் கொள்கிறதென்று எழுதிக்கொடுத்த செம்புத் தாம்பிர சாசனப் பட்டயம். இதில் கண்ட யாரொருவர் வரி கொடுக்கிறதில்லை என்று ஆறளிவு செய்தால் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் வாக்கும், கச்சி கம்ப காமாட்சி வாக்கும், திருமலை நாயக்கர் வாக்கும் கேட்கும். காராம் பசுவைக் கழுத்தறுத்த பாவத்தில் அடைவார்கள்.

இப்படி மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் துணை, கச்சி கம்ப காமாட்சி அம்மன் துணை.

வலங்கை மக்கள் தூங்கா தேவருக்கு அளிக்க வேண்டிய மரியாதை பொருட்களையும் மன்னர் திருமலை நாயக்கர் இதில் குறிப்பிட்டுள்ளார். தூங்காதேவரின் அதீத திறமையை கண்ட திருமலை நாயக்கர், அவரை மதுரை திருப்பரங்குன்றம் முருகன் கோவிலின் மெய்காப்பாளராக நியமித்துள்ளார். அக்கோயில் முழுவதும் இவரது பாதுகாப்பு கட்டுப்பாட்டில் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

## பட்டயத்தின் அமைப்பு

இச்செப்பேடு 31.7 செ.மீ. உயரமும் 19.4 செ.மீ. அகலமும் உடையது. பட்டயத்தின் வலது கீழ்புற விளிம்பு முன்னோக்கி லேசாக வளைந்த அமைப்பில் உள்ளது. பட்டயத்தின் தலைப்பகுதியின் மேல் வலது புறத்திலிருந்து மிகச்சரியாக 8வது செமீ'ல் தூரத்தில் ஒரு கீறல் 3 செமீ உயரத்தில் உள்ளது. பட்டயத்தின் முன் பக்கம் 49 வரிகளும் பின் பக்கம் 48 வரிகளும் பொறிக்கப்பட்டுள்ளன. தொடக்க வரிகளில் எழுத்துக்கள் பெரியனவாகவும் அடுத்து சிறியனவாகவும் பொறிக்கப்பட்டுள்ளன. இப்பட்டயத்தின் மொத்த எடை 0.490கிராம்.

## 1882 ஆண்டு சாசன பட்டயத்தின் பொறிக்கப்பட்டுள்ள உருவ அமைப்பிற்க்கான விளக்கம்

இச் சாசன பட்டயம் 1882ல் திருமலை நாயக்கரின் மறைவிற்கு பிறகு இடங்கை மற்றும் வலங்கை பிரச்சினை தொடர்பாக ஸ்ரீஜெனகை மாரியம்மனையும் ,ஸ்ரீஜெனகை நாராயண பெருமாள் மற்றும் பிரளய நாதரை சாட்சியாக வைத்து எழுதப்பட்ட செப்பு சாசன பட்டயமாகும். இச்சாசன பட்டயம் தேரோட்ட தடங்கலையும் அதனை சரிசெய்ய காஞ்சி காமாட்சி அம்மனுக்கு உற்சவம் செய்து தேரோடச்செய்த விதத்தினையும் மேலும் இச்சம்பவ நிகழ்விடத்திற்கு சாட்சியாக ஊரின் முக்கிய அடையாளங்களை குறிப்பிடும்படியாகவும் சோழவந்தான் ஸ்ரீஜெனகை நாராயணப்பெருமாளின் திருவுருவ அம்சத்தினை இச்சாசன பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (நம் பார்வைக்கு இடது புறம்). இப்பெருமாளின் வரைபட உருவமும் கோவிலின் மூலஸ்தான விக்கிரக உருவமும் ஒரே அமைப்பில் இருப்பதை காண முடிகிறது.

அதேபோல ஸ்ரீஜெனகை நாராயணப்பெருமாள் கோவிலுக்கு பின்புறம் வைகைக்கரையோரம் அமைந்துள்ள பிரளயநாதர் ஆலயம் அமைந்திருப்பதை குறிப்பிடும் வகையில் சிவலிங்க திருவுருவமேனியையும் இப்பட்டயத்தில் இடம்பெறச்செய்துள்ளனர்.

மேலும் இன்றைய ஆலயத்தின் மூலஸ்தானத்தில் அமர்ந்த நிலையில் ஸ்ரீ ஜெனகை மாரியம்மனின் கற்த்திருமேனி விக்கிரக அமைப்பை, பதினெட்டாம் நூற்றாண்டில் வழங்கப்பட்ட இச்சாசன பட்டயத்தின் நடுவே பிரதானமாக ஸ்ரீஜெனகை மாரியம்மன் தன் நெற்றியில் திருநீற்றுப்பட்டையணிந்து அதன் நடுவே குங்குமம் வைத்து, சிரித்தமுகத்துடன் அமர்ந்திருக்கிறார். இச்சாசனபட்டயத்தில் உள்ள அம்மனின் திருமேனி அமைப்பை இப்போதுள்ள ராஜகோபுரத்தின் உச்சியில் பிரதானமாக அமைந்துள்ளதை காண முடியும்.

அவ்வகையில் தற்போதுள்ள ஆலய மூலஸ்தானத்தில் உள்ள ஸ்ரீஜெனகை மாரியம்மனின் விக்கிரக கற்த் திருமேனியானது பதினாறாம் நூற்றாண்டிலேயே மன்னர் திருமலை நாயக்கரவர்களால் வணங்கப்பட்டு இருக்கவேண்டும் என தெரிகிறது. இச்சாசன பட்டயத்தில் உள்ள அம்மனின் சிரசின் இருபுறங்களிலும் சூரியனையும் சந்திரனையும் அமைத்துள்ளனர்.இவையிரண்டும் இப்போதுள்ள ஸ்ரீஜெனகை மாரியம்மனின் விக்கிரக திருமேனி மூலவரிடமும் காணப்படுகிறது. அடுத்ததாக இச்சாசன பட்டயத்தில் (நம் பார்வைக்கு வலதுபுறம்) ஸ்ரீஜெனகை மாரியம்மனின் செடில் தேர் திருவிழாவில் ஏற்பட்ட கலவரத்தை அடக்க வாளும், கேடயமும் ஏந்தி குதிரை மீது ஏறி ஆலயத்தினை நோக்கி வந்ததை நினைவுபடுத்தும்படியாக மன்னர் திருமலை நாயக்கரின் உருவத்தினை குறிப்பிடப்பட்டிருக்கிறதை காணலாம். மேலும் நாயக்கராட்சியின் முக்கோண அடையாளக்கொடியையும் பட்டயத்தில் அவரது தலைக்குமேலே இருக்குமாறும் குறிப்பிடச்செய்துள்ளனர். பொதுவாக மன்னர்களின் நகர்வலம் அல்லது சாதாரண பயணம் மேற்கொள்ளும் ஓவியங்களை பார்த்தோமானால் அவர்களது உடைவாளானது அவர்களின் இடையில் வைக்கப்பட்டு இருக்கும். அதே போல் போருக்கோ, அக்கிரமங்களை ஒழிக்கவோ செல்லும் மன்னர்களின் ஓவியங்கள், கேடயத்துடன் வாள் ஏந்திய அமைப்பிலேயேதான் இருக்கும்.

மன்னர் திருமலை நாயக்கர் எந்த ஒரு கோவிலை புதிதாக கட்டினாலும் புணரமைப்பு செய்தாலும் கொடை ஏதும் வழங்கினாலும் அவ்விடத்தில் தன் நினைவாக தன்னுடைய உருவத்தினை அக்கடவுளர்களை வணங்கியபடி நிறுவச் செய்யும் வழக்கத்தை உடையவர். இச்சாசன பட்டையத்தில் அதே வழக்கப்படிதான் சோழவந்தான் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் ஆலயத்திற்கு, இடையூறு களைந்து திருவிழாவை நடத்திக்கொடுத்ததை முன்னிட்டு அவரை நினைவூட்டும் விதமாக திருமலை நாயக்கரின் உருவத்தை பதித்துள்ளனர்.

இச்சாசனத்தில் குதிரை ஏறிவரும் திருமலை நாயக்கர் உருவத்தின் அருகே மதுரை மீனாட்சியின் திருஉருவத்தினை காணலாம். நாயக்கர் தன்னுடைய ஆட்சிக்காலத்தில் பட்டணம் காக்கும் பேரரசி, தாய் மீனாட்சி மட்டுமே என்றும், நான் அவளின் நேரடி பிரதிநியாகவே ஆட்சிப்பொறுப்பை கவனிப்பதாக அடிக்கடி சொல்வது மன்னர் திருமலைநாயக்கரின் வழக்கம். அந்த அளவிற்கு மதுரை மீனாட்சியின் மேல் அளவுகடந்தபக்தியையும் நம்பிக்கையையும் கொண்டவராக இருந்துள்ளார்.

அதேபோல மதுரை சித்திரை திருவிழாவின்போது பட்டணம் காக்கும் பட்டத்து அரசி மீனாட்சியிடம் இருந்து செங்கோல் பெற்று யானைமீது அமர்ந்து நகரவலம் சுற்றி தன் அரியணையில் அமர்ந்த பிறகு ,திரும்ப செங்கோலை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு

கொடுத்து அனுப்புவது மன்னர் திருமலை நாயக்கரின் வருடாந்திர வழக்கமாக இருந்துள்ளது.

**பட்டயத்தின் பின்பக்கம்**

நம் பார்வைக்கு இடப்புறம் வெண்சாமரமும் நடுப்புறம் வெற்றிக்கு அடையாளமான முத்துமாலை தொங்கும் வெண்கொற்றக்குடையும் அதனருகே (நம் பார்வைக்கு வலதுபுறம்) வெள்ளைக்கொடியின் அமைப்பும் பொறிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஜெனகைமாரியம்மனின் தேரோட்டத் திருவிழாவில் கலகம் உண்டாக்கிய இடங்கையர்களை வீழ்த்தியதன் அடையாளமாக தூங்காதேவர் தன் காலை கலகக்காரர்களின் தலைமேல் வைத்து அவர்களின் கொட்டத்தை அடக்கி, அவர்கள் ஏற்படுத்திய தடையை அகற்றி அவர்களின் தலை மீதே அனும கொடியோடு தேரோடச் செய்ததை நினைவூட்டும் விதமாக சாசனப்பட்டயத்தின் கீழ்புறம் காட்சிப்படுத்தியுள்ளனர்.

பல்வேறு தடைகளை அகற்றி தகுந்த பாதுகாப்பு அளித்து ஸ்ரீஜெனகை மாரியம்மனின் வைகாசி செடில் தேர் திருவிழாவை நடத்தி முடித்துவிட்ட செய்தியை அனைவருக்கும் இசை முழங்கி அறிவித்ததாக, காளாஞ்சி என்ற இசை வாத்தியத்தை தன் வலது முதுகில் தூங்காதேவன் வைத்துள்ளதை காணலாம். அதுமட்டுமில்லாது இவ்வெற்றியில் மகிழ்ந்த தூங்காதேவன் களிப்புடனும் வீரத்தோடும் பெருமையோடும் இடுப்பில் கத்தியை வைத்துக்கொண்டு தன் மீசையை முறுக்கியபடி கம்பீரமாக நிற்கிறார்.



1882ம் ஆண்டு வழங்கிய வலங்கை – இடங்கை சாசன பட்டயத்தின் முன்பக்கம்

**1882ம் ஆண்டு வழங்கிய வலங்கை – இடங்கை சாசன பட்டயத்தின் பின்பக்கம்**

**அரசஞ்சண்முகனாரும் செடில் தேர் திருவிழாவும்**

அரசஞ்சண்முகனார் சோழவந்தான் தெற்கு ரத வீதியில் வசித்த போற்றுதலுக்குரிய தமிழ்ப் பெரும் புலவர் ஆவார். அரசஞ்சண்முகனாரின் வாழ்க்கை காலம் (1868 - 1915). இவர் வாழ்ந்த காலத்தில் இச்செடில் தேர் விழா ஸ்ரீஜெனகை மாரியம்மன் வைகாசி திருவிழாவின் பத்தாம் நாள் விழாவாக நடைபெற்றுள்ளது.

செடில் தேரோட்டத்தன்று செடில் குத்தியவர் மேலே தும்பி (தட்டான் பூச்சி) போல பறக்க, செடிற்கும்மி பாடலை செடில் தேருக்கு முன்பாக நான்கு ரத வீதிகளிலும் மக்கள் அனைவரும் பாடிக்கொண்டே வருவது வழக்கமாக இருந்துள்ளது. காண்போரை கதிகலங்கச்செய்து அச்சம் ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு நடைபெற்று வந்த இச்செடில் தேரோட்ட விழாவை ஆங்கிலேய காவலர்கள் விரைந்து வந்து ரதவீதி சுற்றி வந்துகொண்டிருந்த செடில் தேரை தடுத்து நிறுத்தியுள்ளனர். இதனால் கலக்கமடைந்து பதறிய பக்தர்கள் திருவிழாவை தொடர்ந்து நடத்திட தமிழ் புலவர் அரசஞ்சண்முகனாரிடம் சென்று உதவுமாறு கேட்டுகொண்டமையால், அம்பிகையின் பேரருளை ஆங்கிலேயர்களுக்கு உணர்த்தும் விதமாக...

**ஆரணம் போற்று மபிராம வல்லி யவிர்சனகை**
**நாரணன் பின்வந்த காரணி மாரியுன் நற்செடிலை**
**வாரண மாதிப் படையார் தடுக்கினு மாறொன்றின்றிச்**
**சீரண வும்படி செய்தருள் சூலங்கொள் சேயிழையே**

என்ற கட்டளைக் கலித்துறைப்பாடலை அரசஞ்சண்முகனார் அவர்கள் ஸ்ரீஜெனகை மாரியம்மனை நினைத்து மனமுருகி பாடியுள்ளார். அக்கணமே, செடில் மரத்தில் பறந்தபடி இருந்த தன் பக்தனை ஸ்ரீஜெனகை மாரியம்மன் தன் இருகைகளால் தாங்கியபடி நிற்கும் ரூபத்தை ஆங்கிலேய காவல் அதிகாரிகளின் கண்களுக்கு புலப்படுத்தியுள்ளார்.

இதனை கண்டு மிரண்டுபோன ஆங்கிலேய காவல் அதிகாரிகள் அன்னை மஹா சக்தியின் பேரருளை உணர்ந்து வணங்கி செடில் தேரோட்டத்தை தடுக்காமல் திரும்பி சென்றுள்ளனர்.

அரசஞ்சண்முகனாரின் இத்தகைய பக்திச் சிறப்பை போற்றும் விதமாக அவர் அன்று பாடிய கட்டளை கலித்துறை காப்புப்பாடல், ஆண்டுதோறும் அச்சிடப்படும் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் வைகாசி பெருந்திருவிழா அழைப்பிதழில் இடம்பெற்று வருகிறது.

ஸ்ரீஜெனகை மாரியம்மனின் பெருமையை பறை சாற்றும் செடிற் சந்த ஒயிற்கும்மி பாடலை புத்தகமாக வெளியிட்டவர் சோழவந்தான் திரு .கவிக்குஞ்சர பாஷியம் ஆவார். இவர் கி.பி 1918ம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்ட இச்செடிற்கும்மி புத்தகத்தின் முதற் பதிப்புரையில், இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே செடில் தேர் திருவிழா நிறுத்தப்பட்டு விட்டதாக குறிப்பிட்டுள்ளார். அதுமட்டுமல்லாது கி.பி 1893 ம் வருட அன்றைய செடில் விழாவின் போது தேருக்குள் ரிஷப வாகனத்தை வைத்து அதன்மீது ஸ்ரீஜெனகை மாரியம்மனின் உற்சவர் திருமேனியை வைத்து நாக சின்னங்கள் அணிவித்து அம்மனை நான்கு ரதவீதிகளிலும் பவனி வரச்செய்துள்ளனர்.

திருமலைநாயக்கர் காலம் முதலே சிறப்புடன் நடந்தேறி வந்த ஸ்ரீஜெனகை மாரியம்மனின் வரலாற்றுச் சிறப்பு மிக்க செடில் தேர் திருவிழா கடந்த கி.பி 1893ம்

ஆண்டோடு ஆங்கிலேய சர்க்காரால் நிரந்தரமாக தடை செய்யப்பட்டு விட்டதாக வரலாற்றுச்செய்திகள் தெரிவிக்கின்றது.

செடிற்கும்மி பாடலின் கட்டளைக் கலித்துறையில் "நாரணன் பின்வந்த காரணி மாரியுன் நற்செடிலை" என்று வரும் வரிகள் ஸ்ரீஜெனகை நாராயண பெருமாளுக்கு பின்னரே ஸ்ரீஜெனகை மாரியம்மன் வந்ததையும் உறுதிப்படுத்துகிறது.

இச்செடிற் கும்மி பாடலானது 1918 ல் புத்தக வடிவம் பெறுவதற்கு பெரிதும் விரும்பியவர் என்று, மதுரை ஜில்லா வெள்ளிக்குறிச்சி ஜமீன்தார் ஸ்ரீமான் இராஜா விஜயகுமார வில்வநாத பங்காரு திருமலை சவுரி நாயக்கர் அவர்களின் பெயரை கவிகுஞ்சரபாஷியம் அவர்கள் குறிப்பிட்டு எழுதியுள்ளார். நாயக்கர் ஆட்சிக்காலத்தில், ஸ்ரீமான் இராஜா விஜயகுமார வில்வநாத பங்காரு திருமலை சவுரி நாயக்கர் சிறிதுகாலம் மதுரையின் மன்னராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீஜெனகை மாரியம்மனின் இன்றைய தேரோட்ட திருவிழா

தற்போதைய வைகாசி பெருந்திருவிழாவின் பதினாறாம் நாள் திருவிழாவாக தேரோட்ட நிகழ்ச்சி நடைபெற்றுவருகிறது. 2015 ஆம் ஆண்டு வரை இருந்த பழைய சட்டத்தேருக்கு பதிலாக புதிய தேரின் வெள்ளோட்டம் 02.06.2016 அன்று நடைபெற்றது. நாற்பதில் இருந்து ஐம்பது அடி உயரமிருக்கும் புதிய தேரினுள்ளே வைகாசி திருவிழா தேரோட்ட தினத்தன்று, அலங்காரம் செய்யப்பட்ட அம்மன் அழகுடன் அம்சமாக அமர்ந்திருப்பார். காலை எட்டு மணி முதலே பூஜைகள் செய்யப்பட்டு தேரோட்டம் ஆரம்பமாகும். ஊரின் முக்கியஸ்தர்கள், காவல் துறை அதிகாரிகள் மற்றும் இளைஞர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து தேரின் வடக்கயிறை பற்றி இழுப்பார்கள். கடந்த 1994 ம் ஆண்டு முதல் காவல் துறையினர் திருத்தேரோட்டத்தின் மண்டகப்படி உபயதாரராக பொறுப்பேற்று சிறப்புடன் நடத்தி வருகின்றனர்.

ஸ்ரீஜெனகை மாரி தேரேறி வரும் அவ்வேளையில் நான்கு ரதவீதியிலும் அம்மனை வரவேற்கும் விதமாக வழிநெடுகே பக்தர்கள் குடும்ப சகிதமாகவும், வியாபாரிகள் தங்கள் விற்பனையகம் முன்னே மலர்மாலையும், தேங்காய்பழ அபிஷேகமும் செய்து அம்பிகையை தரிசனம் செய்வர்.

தேரோட்ட திருவீதியுலா

தேருக்குள்ளே ஜெனகை மாரியம்மன்

திருவீதியில் தேரோட்டம்

திருவிழாவின் போது தேரிழுப்பதாக நேர்ந்துக்கொண்டு அதனை நிறைவேற்றும் பக்தர்களும் ஏராளம். தேரிழுக்கும் அன்பர்களின் தாகம் தணிக்கும் விதமாக தண்ணீர் மோர், பானகம், பழங்கள் போன்றவை நான்கு ரதவீதி மக்களால் தொடர்ந்து வழங்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.

இவற்றைத் தவிர பக்தர்கள் கடந்த ஆண்டு இதே தேரோட்டத்தன்று,தாங்கள் நேர்ந்து கொண்ட கோரிக்கை நிறைவேறியதன் காணிக்கையாக தங்கள் வீட்டின் மேல் நின்று, தேரிழுக்கும் பக்தர்களுக்கு வாழைப்பழம், மாம்பழம் மோர் பாக்கெட்டுகளை, சூறையிட்டு மகிழ்வார்கள். நான்கு ரதவீதிகளை கடந்த தேர் மதிய வேளையில் நிலைக்கு வந்து சேரும்.

**தேரின் உச்சியில் வைக்கப்பட்ட வெண் கொக்கின் பொம்மை**

**பழைய தேரின் உச்சியில் வெண்கொக்கின் பொம்மை உருவம்**

- சோழவந்தானின் பசுமை செழிப்பை உணர்த்தும் விதமாகவே வைகாசி திருவிழா திருத்தேரோட்ட வைபவத்தின்போது திருத்தேரின் உச்சியில் வெண்கொக்கின் பொம்மை உருவம் வைக்கப்பட்டு அம்பாள் ஜெனகை மாரி திருவீதியுலா வந்துள்ளார்.

- கொக்குகளின் இயல்பான குணம் என்னவெனில் பசுமைமிகுந்த வளமான இடத்தை அறிந்தால் அதுதன் இனத்தை அழைத்துக்கொண்டு நாடுவிட்டு நாடு கூட உணவை தேடி செல்லும் இயல்புடையது.
- அத்தகைய அளவற்ற பசுமையை கண்ட கொக்குகள் அனைத்தும் தன் இனத்தையே உணவருந்த அழைத்து வந்த இடமாக சோழவந்தான் விளங்கியுள்ளது.
- சோழவந்தானை சுற்றிய பகுதிகளை என்றுமே பசுமையாய் காத்தருள் தாயே என ஸ்ரீஜெனகை மாரியம்மனை பணிந்து கேட்டுக்கொள்ளும் விதமாக தேரின் உச்சியில் வெண் கொக்கின் பொம்மை உருவம் வைக்கப்பட்டிருந்தது.
- பழைய காலத்து 70 அடி தேரின் உச்சியில் இருந்த வெண் கொக்கின் பொம்மை உருவமானது சோழவந்தான் அருகில் உள்ள சிற்றூரான ஆலங்கொட்டாரத்திலிருந்து பார்த்தாலும் தெரியும் அளவிற்க்கு தேர் உயரமான அமைப்பாக இருந்துள்ளது.
- இத்தகைய பெரும் சிறப்பு காரணத்தோடு தேரின் உச்சியில்வைக்கப்பட்ட வெண் கொக்கின் பொம்மை உருவமானது, ஸ்ரீஜெனகைமாரியம்மன் உலா வந்த தேரினில் 2015 வருடம் வரை தேரின் உச்சியில் இடம்பெற்று இருந்தது குறிப்பிடத்தக்கது.

### அம்மன் தடம் பார்த்தல்

தேரோட்டம் நடந்த அன்றைய தினம் நள்ளிரவு தேர் கடந்து வந்த ரத வீதிகளை தடம் பார்க்க, அம்மன் அதே அலங்காரத்துடன் ஊர் நிசப்தமடைந்த பிறகு ஒரே ஒரு தீவட்டி வெளிச்சத்தில் அம்பாளை சீர்பாதம் தாங்கிகள் சுமக்க, எவ்வித மேளம் நாதஸ்வர சப்தம் எழுப்பாமல் ஒரு கேடயத்தில் அமர்ந்து ஊர்வலம் வருவார். அன்று காலை ஆறு மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட தேரோட்ட நிகழ்ச்சி இரவு தடம் பார்த்தலோடு நிறைவடையும்.

"தாயே நீ இருக்கக் குறையேது
உன் நிழலிருக்கத் தளர்வேது"

# ஆலயத்தின் நிர்வாக அமைப்பும் வளர்ச்சிகளும்

**பூசாரிகளின் பராமரிப்பில் கோவில்**

இத்திருக்கோயில் தற்போது தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை ஆளுகைக்கு உட்பட்டு சிறந்து விளங்குகிறது.

இக் கோயில் தோன்றிய நூற்றாண்டுகளுக்கு முந்தைய காலத்தில் அந்தணர் அல்லாத மக்களில் சிலரே அம்பாளுக்கு செய்ய வேண்டிய அன்றாட பூஜை முறைகளை செய்தும், கோவிலை நிர்வகித்தும் வந்துள்ளனர். பெரிதாக வருமானம் ஏதுமின்றி இருந்த காலமாதலால் பூசாரிகள் விபூதி தட்டுடன் பக்தர்களை நேரில் சென்று அணுகி காணிக்கை பெற்று கோவில் பூஜை மற்றும் பராமரிப்புக்களை செய்துவந்துள்ளனர். அதன் பின் ஊரின் முக்கியஸ்தர்கள் பக்தியுடன் பணிந்து வழங்கிய பொருளாதார உதவியுடன் ஆலயத்தின் பூஜையும், விழாக்களும் சிறப்புடன் நடந்துள்ளது.

**கிழக்கிந்திய கம்பெனி**

கிழக்கிந்திய கம்பெனி காலத்தில் இருந்தே தமிழக கோயில்கள் அரசின் ஆளுகையின் கீழ் இருந்து வருகிறது.

கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில் இருந்தே இவற்றை நிர்வாகம் செய்வதில் குறிப்பிட்ட சில சமூகச் சீர்கேடுகள் மிகுந்து காணப்படுவதாக புகார்கள் வந்துள்ளன. அப்போது ஆட்சி செய்த மன்னர்களிடமும், கிழக்கிந்திய கம்பெனி நிர்வாகத்திடமும் இது தொடர்பாக பொதுமக்கள் ஏராளமான புகார்களைக் கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் 1817-ல் முதல்முறையாக மதராஸ் நிலைக்கொடைகள் மற்றும் வாரிசு இன்மையால் அரசுப் பொருட்கள் ஒழுங்குறுத்தும் சட்டம் என்ற பெயரில் ஒரு சட்டம் உருவாக்கப்பட்டது. இந்த சட்டமானது திருக்கோயில்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி முதலான அறக்கொடைகள் முறையாக பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும், தனிப்பட்டவர் நலன்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும் கண்காணிக்க வழிவகை செய்தது. இந்த அதிகாரம் அப்போதிருந்த வருவாய் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதில் தொடங்கி ஆயிரக்கணக்கான திருக்கோயில்கள் அரசின் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன.

**இந்து சமய அறநிலைய வாரியம்**

1858-ல் இந்தியாவின் நிர்வாகம் கிழக்கிந்திய கம்பெனியிடம் இருந்து பிரிட்டிஷ் அரசுக்கு நேரடியாக சென்றது. 1920-ல் பனகல் அரசர் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, அப்போது மதராஸ் மாகாணத்தில் இருந்த அனைத்து திருக்கோயில்களையும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயற்சித்தார். இதற்காக 1922-ல் இந்து பரிபாலன சட்டத்தை முன்மொழிந்தார். 1925-ல் இந்து பரிபாலன சட்ட மசோதாவை அறிமுகப்படுத்தினார். அப்போதைய வைஸ்ராய் இர்வினிடம் எடுத்துச் சொல்லி இந்த

சட்டத்துக்கான ஒப்புதலைப் பெற்றார். இறுதியில் 1927-ல் “இந்து சமய அறநிலைய வாரியம்'' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன்படி திருக்கோயில்களின் நிர்வாகத்தை கட்டுப்படுத்தும் அதிகாரம் வாரியத்திடம் வழங்கப்பட்டது. அதைப்போலவே நிர்வாகம் சரிவர நடைபெறாத கோயில்களுக்கு அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரமும் வாரியத்துக்கு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்துசமய அறநிலைய வாரியத்தினை சீர்படுத்தும் பொருட்டு 1940-ஆம் ஆண்டில் ஒரு சிறப்பு அலுவலரை நியமனம் செய்தது.

இந்து சமயம் மற்றும் அறநிறுவனங்களை வாரியத்திற்கு பதிலாக அரசே நிருவகிக்கலாம் என்ற சிறப்பு அலுவலரின் பரிந்துரையில் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் வாரியத்தினை ஒரு அரசு நிர்வாகமாக மாற்றி அமைத்தால் பயனுள்ளதாகும் என ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் 1942-ஆம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்ட அலுவல் சாரா குழு பரிந்துரை செய்தது. இதனை ஏற்று இந்து சமய அறக்கொடைகள் சட்டம் 1951 இயற்றப்பட்டு பல்வேறு சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இந்த நிர்வாக அமைப்பினர்களோடு தர்மகர்த்தா குழுவும் இணைந்து செயலாற்றி கோவிலை வளர்ச்சிப்பாதைக்கு கொண்டு சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

அறம், பொருள், இன்பம், வீடு என்ற பேறு களுக்கு ஆன்மாவை அழைத்துச் செல்லும் பல்கலைக் கழகங்களாக விளங்குவன திருக்கோயில்கள். ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்நாட்டுத் திருக்கோயில்களை நிர்வகித்து நடத்தும் இந்து சமய அறநிறுவனங்களின் நிர்வாகத்தினை, தமிழ் நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை பொறுப்பேற்றுக் கொண்டது. அதன்படி, இந்து சமய திருக்கோயில்களை நிர்வகிப்பதற்காக உருவாக்கப்பட்ட “இந்து சமய அறநிலைய வாரியத்தின்'' கட்டுப்பாட்டில் ஸ்ரீஜெனகைமாரியம்மன் கோவில் 1938ம் ஆண்டு இணைக்கப்பட்டு தற்போது இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகத்தில் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. அதன்படி அன்றைய காலத்தில் ஸ்ரீஜெனகை மாரியம்மன் கோவிலின் அப்போதைய HR & CE ஆய்வாளர் சுந்தரராஜன் என்பவர், 23.11.1945 அன்று M.ஆனையப்பப்பிள்ளை என்பவருக்கு ஆலய தர்மகர்த்தா பொறுப்புகளை ஒப்படைத்துள்ளார். பின் சில காலங்கள் கடந்து M.ஆனையப்பபிள்ளை அவர்கள், தான் மேற்கொண்ட கோவில் பொறுப்புக்களை 22.02.1966ல், புதிய தர்மகர்த்தா குழு தலைவராக பொறுப்பேற்ற C.கன்னியப்ப முதலியார் அவர்களிடம் ஒப்படைத்துள்ளார். இந்த இருவர்களைத்தவிர கோவிலின் தர்மகர்த்தா குழுவின் தலைவர்களாக திரு.கோபால் நாயுடு, திரு.ராமகிருஷ்ண நாயுடு, திரு. கோமதி முதலியார், திரு. மு. சுப்பிரமணிய முதலியார், திரு. கூ.செல்லப்பாண்டியன், C.P.ராமு அம்பலம் மற்றும் இன்னும் சில ஆன்மீக பெரியோர்களும் பொறுப்பு வகித்துள்ளனர். மேற்கண்டவர்களுள் M.ஆனையப்ப பிள்ளை மற்றும் C.கன்னியப்ப முதலியார் ஆகிய இருவரும் பல ஆண்டுகள் ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயத்தின் தர்மகர்த்தா பொறுப்பில் இருந்து செயலாற்றியுள்ளனர்.

உ

பராசக்தி துணை.

நிலக்கோட்டைத் தாலுகா

சோழவந்தான்

# ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் கோவில்

# திருவிழாப் பத்திரிகை.

கட்டளைக் கலித்துறை.

ஆரணம் போற்றும் அபிராம வல்லி அவிர்சனகை
நாரணன் பின்வந்த காரணி மாரிநின் நல்விழாக்கு
வாரண மாதிப் படையாரும் காண மகிழ்ந்துவரும்
சீரண வும்படி செய்திட வந்தருள் சிற்பரையே.

ஐயன்மீர்!

நாளது மன்மத ஆண்டு வைகாசித் திங்கள் 9-ம் நாள் (23-5-55) திங்களன்று ஸ்ரீ ஜெனகை மாரியம்மனுக்கு கொடியேற்றுவிழா நடத்தி அன்று முதல் பதின்மூன்று நாட்கள் வரை நடைபெறும் மண்டகப்படி விழாக்களுக்கு பொதுமக்கள் யாவரும் வந்து கலந்து மகிழ்ந்து அம்பிகை அருள்பெற்று உய்யுமாறு கோருகிறேன்.

குறிப்பு:— அம்பிகையின் கோவிலில் சில மராமத்துக்கள் அவசியம் செய்யவேண்டியிருப்பதால் பக்தகோடிகள் தங்களாலியன்ற பொருளுதவியைத் தாராளமாகச் செய்யவேண்டுமோய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சோழவந்தான்,
25—4—55.

M. ஆனையப்ப பிள்ளை,
ஹானரெரி டிரஸ்டி.

ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், சோழவந்தான்.

(பின்பக்கம் பார்க்க)



உ. மாரியம்மன் துணை.

நிலக்கோட்டைத் தாலூகா,

## சோழவந்தான் ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் கோவில் தேவஸ்தானம்.

உற்சவ விபரம்.

| இங்கிலீஷ் தேதி | மன்மத(வருஷ) வைகாசி மீ | கிழமை | திருவிழா | வாகன விபரம் | மண்டகப்படிதார் பெயர் |
|---|---|---|---|---|---|
| 23—5—55 | 9 | திங்கள் | 1 | கொடியேற்றம் | தென்கரை அழகப்பன் அம்பலகாரர் மகன் ராமையா அம்பலகாரர் |
| 24—5—55 | 10 | செவ்வாய் | 2 | சிங்க வாஹனம் | கந்தசாமி செட்டியார் பாரி முத்தம்மாள் |
| 25—5—55 | 11 | புதன் | 3 | யாளி வாஹனம் | S. சுப்பையா முதலியார் |
| 26—5—55 | 12 | வியாழன் | 4 | அன்ன வாஹனம் | தெலுங்கு செட்டியார் வகையறுக்கள் |
| 27—[illegible]—55 | 13 | வெள்ளி | 5 | காமதேனு வாஹனம் | வெல்லீட்டம்மாள் |
| 28—5—55 | 14 | சனி | 6 | சேஷ வாஹனம், கழுவேற்றம் | தேவஸ்தான மண்டகப்படி |
| 29—5—55 | 15 | ஞாயிறு | 7 | அன்ன வாஹனம் | ஆச்சாரியார்கள் மண்டகப்படி |
| 30—5—55 | 16 | திங்கள் | 8 | குதிரை வாஹனம் | தேவஸ்தான மண்டகப்படி |
| 31—5—55 | 17 | செவ்வாய் | 9 | பூப்பல்லக்கு | தென்கரை பாட்டியான் அம்பலகாரர் மகன் வீரபத்திர அம்பலகாரர் |
| 1—6—55 | 18 | புதன் | 10 | தஞ்சாவூர் முத்துப்பல்லக்கு | மிராசுதார் சுப்பா பிள்ளை மகன் மாணிக்கம் பிள்ளை |
| 2—6—55 | 19 | வியாழன் | 11 | யானை வாஹனம் | வேளாளர்கள் மண்டகப்படி (தெற்குத் தெரு, மேலத்தெரு) |
| 3—6—55 | 20 | வெள்ளி | 12 | ரதோத்ஸவம் | கு. பிச்சை பிள்ளை என்ற நாகப்பிள்ளை தெற்கு ரதவீதி |
| 4—6—55 | 21 | சனி | 13 | தீர்த்தவாரி | சோ. பெரியகருப்பன் காவல் |

**முத்துப்பல்லக்கு, பூப்பல்லக்கு, தீர்த்த மண்டகப்படி, வைகையாற்றில் நடைபெறும்.**

மாவிளக்கு 0—2—0, ஆயிரங்கண்சட்டி 0—5—0, பொங்கல் 0—5—0, சிலை எடுப்பு 0—5—0, முத்துச் சொரிதல் 0—5—0, கண்மலர் 0—5—0, அஸ்தம் 0—5—0, பாதம் 0—5—0, பாத்திர வகையறு உபயம் 0—5—0, பட்டு பரிவட்டம் 0—5—0, பறவை 0—5—0, பால்குடம் 0—10—0, அக்கினிசட்டி 0—10—0, முடி எடுப்பு 0—10—0, கால்நடை 1—0—0.

*குறிப்பு:—மேற்படி டிக்கட்டுகளில் பூசாரிக்கு தொழிலாளை சேர்த்திருப்பதால் [illegible] எந்தவிதமான தெக்ஷிணையும் பூசாரிக்கு கொடுக்கக்கூடாது என்பதை தெரிவித்துக் கொள்வதுடன், காணிக்கைகளை உண்டியலில் செலுத்தவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

**M. ஆ[illegible]னயப்ப பிள்ளை,** ஹானரேரி டிரஸ்டி, சோழவந்தான்.

### ஆலயத்தின் வளர்ச்சி

சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் மூன்று நாட்கள் மட்டுமே நடைபெற்ற வைகாசி திருவிழா, அம்பாளின் அருளைப்பெற்றவர்களின் எண்ணிக்கை கூடியதாலும் ஸ்ரீஜெனகை மாரியம்மன் கோவில் திருவிழாவை வெகு விமரிசையாக நடத்த வேண்டும் என்ற ஊர்மக்களின் மகிழ்ச்சி கலந்த எண்ணங்களாலும் 10 நாட்கள் திருவிழாவாக வளர்ந்து தற்போது 17 நாட்கள் திருவிழாவாக உயர்ந்துள்ளதை பார்க்கும்போது ஸ்ரீஜெனகை மாரியம்மன், தன்னிடம் வரம் கேட்டவர்களுக்கு கேட்ட வரத்தை அள்ளிக் கொடுக்கும் ஜெகன்மாதாவாகவும் அருட்கடலாகவும் அருள் புரிந்திருக்கிறார் என்பதை தெள்ளத்தெளிவாக உணரலாம்.

### தேவஸ்தானத்தின் வருமானமும் சொத்துக்களும்

இத்திருக்கோயிலின் முதன்மையான வருமானம் உண்டியல் காணிக்கை, கட்டணச்சீட்டுக்கள் விற்பனை, பரிவட்டம் விற்பனை, முதலீடுகள் மூலம் கிடைக்கப்பெறும் தொகைகள் ஆகியவை.

### இத்திருக்கோயிலின் சொத்து பதிவேடு

துணை ஆணையர் நி.மு.எண் 2319/78 நாள் 18.02.78 ன் படி அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

### திட்டப்பதிவேடு

துணை ஆணையர் செ. மு நி.மு.எண் 10079/79 நாள் 16.05.1979 ன் படி அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

### மரப்பதிவேடு

துணை ஆணையர் செ. மு நி.மு.எண் 23473/87 ஆ4 நாள் 15.12.1987 ன் படியும் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

வருடம் முழுவதும் பக்தர்கள் தங்களது காணிக்கையை ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு பொன்னாகவும், பொருளாகவும், பணமாகவும், பல லட்சங்களுக்கும் மிகுதியாக உண்டியலில் பணிவோடு செலுத்தி நிரப்பிச் செல்வதைக் காணும் போது, மஹாசக்தியின் மகிமையை உணரலாம். குறிப்பாக திருவிழாக் காலங்களில் பக்தர்கள் செலுத்தும் காணிக்கைகள் பல லட்சங்களுக்கு அதிகமாகவும் செலுத்துகின்றனர். தவிர திருக்கோவிலின் பராமரிப்பில் மாதாந்திரம் தோறும் வருவாய் ஈட்டக்கூடிய வகையில் அசையா சொத்துக்களாக கோவிலுக்கு சொந்தமான வீடுகளும், கடைகளும் கணிசமான எண்ணிக்கையில் உள்ளன. அதே போல சில பக்தர்கள் அம்பாள் மீது கொண்ட பற்றின் பேரில் தங்களது விளை நிலங்களையும் ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு காணிக்கையாக வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**சுயம்பை வணங்கி**
**சுயம்பாய் வளர்வோம்!**

# திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நிகழ்வுகள்

வேண்டுவோர்க்கு வேண்டுவன எல்லாம் வழங்கும் அன்னை ஸ்ரீஜெனகை மாரியம்மனின் 2003ம் ஆண்டு வரை இருந்த ஆலயமானது கி.பி பதினெட்டாம் நூற்றாண்டு காலத்தில் (1854, 1857, 1881, 1882) ஒவ்வொரு பகுதியாக கட்டப்பட்டதாகும். அப்போதைய கோவிலின் படிப்படியான கட்டுமானங்களை காணும்போது ஸ்ரீஜெனகை மாரியம்மனின் ஆலயம் 18 ம் நூற்றாண்டில் பெரும் வளர்ச்சியை பெற்று இருந்ததை பழைய கல்வெட்டுக்களை வைத்து அறிய முடிகிறது.

கி.பி பதினெட்டாம் நூற்றாண்டு காலத்தில் நடைபெற்ற கும்பாபிஷேக தேதி விபரங்களை அறிய முடியவில்லை. ஆயினும் கிடைக்கப்பெற்ற விபரக்குறிப்புகளின் படி ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகமானது....

1. ஆங்கில ஆண்டு 04.02.1957, தமிழ் துர்முகி ஆண்டு, தை மாதம் 22ம் தேதி திங்கள்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரத்தில் நடைபெற்றது.
2. அதன் பின்பு 31 ஆண்டுகள் 4 மாதங்கள், 22 நாட்களுக்கு பிறகு திருப்பணிக்குழு தலைவர் திரு. A. சந்திரசேகரன், MLA திருப்பணிக்குழு உப தலைவர் திரு.C.கன்னியப்ப முதலியார் மற்றும் ஆலயத்தின் செயல் அலுவலர் திரு. R. நாராயணன் அவர்களின் தலைமையில் ஆங்கில ஆண்டு 24.06.1988, விபவ தமிழ் ஆண்டு ஆனித்திங்கள் 10 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை மணிக்கு 9.00 மேல் 10.00 மணிக்குள் சித்திரை நட்சத்திரம் கடக லக்னத்தில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடந்தேறியது.
3. 1988 ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்திற்கு பிறகு 16 ஆண்டுகள், 8 மாதங்கள், 23 நாட்களுக்கு பின், திருப்பணிக்குழு தலைவர் நல்லி சில்க்ஸ் திரு. A.M.சுப்ரமணியம் செட்டியார் மற்றும் ஆலயத்தின் அப்போதைய செயல் அலுவலர் திரு. ப.பாலகிருஷ்ணன் அவர்களின் தலைமையிலும் ஊர் பொதுமக்களின் நல் ஆதரவுடனும் கி.பி பதினெட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டு பக்தர்களின் வழிபாட்டில் இருந்த ஸ்ரீஜெனகை மாரியம்மனின் ஆலயமானது மேற்கொண்டு புதிய வசதிகளோடு சிறப்புறச் செய்யும் வகையில், ஆலயம் முழுவதும் 2003 -2004 க்குள் முழுவதுமாக நீக்கப்பட்டு, முன்பிருந்த அமைப்பை விட சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டு 16.03.2005ம் ஆங்கில ஆண்டு தாரண தமிழ் ஆண்டு பங்குனி மாதம் 3ம் தேதி புதன்கிழமை ரோகிணி நட்சத்திரத்தில் ரிஷப லக்னத்தில் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மகிழ்ந்து தரிசிக்க சிறப்பாக இனிதே நடைபெற்றது.

# அருள்மிகு ஜெனகை மாரியம்மன்
## திருக்கோயில், சோழவந்தான்.
### மதுரை மாவட்டம்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்

அருள்மிகு ஜெனகை மாரியம்மன்
சோழவந்தான்

## அஷ்டப்பந்தன மகா
## கும்பாபிஷேக அழைப்பிதழ்.

**கட்டளைக்கலித்துறை**

ஆரணம் போற்றும் அபிராம வள்ளி அவிர்சனகை
நாரணன் பின்வந்த காரணி மாரிநின நற்செடிலை
வாரண மாதிப் படையார் தடுக்கினும் மாறதின்றிச்
சீரண வும்படி செய்தருள் சூலங்கொள் சிற்பரையே

— திரு அரசஞ் சண்முகனார்

அன்புடையீர் !

நிகழும் விபவ ஆண்டு ஆனித் திங்கள் 10-ஆம் நாள் (24-6-88) வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு மேல் 10-00 மணிக்குள் கடக லக்னத்தில் அஷ்டப்பந்தன மகா கும்பாபிஷேகம்

**திரு. இராச. கல்யாணசுந்தரம் இ.ஆ.ப. அவர்கள்**
ஆணையாளர், இ.ச.அ. ஆட்சித்துறை, சென்னை,

**திரு. தேவிதாஸர் மந்திரமூர்த்தி K.R. இராமதாஸ் சுவாமிகள்**
கருப்பூர், தஞ்சாவூர்.

**திரு. டி. இராமச்சந்திரன் BA.,BL., அவர்கள்**
துணை ஆணையாளர் இ ச அ ஆட்சித்துறை, மதுரை - 2.

**திரு. S. இளங்கோ BA.,BL., அவர்கள்**
உதவி ஆணையாளர் இ ச.அ. ஆட்சித்துறை, மதுரை-1

ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

பக்தகோடிகள் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் திருவருள் பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**R. நாராயணன்**
நிர்வாக அதிகாரி,
சோழவந்தான்.

**S. இளங்கோ B.A., B.L.**
தக்கார் / உதவி ஆணையர்

**A. சந்திரசேகரன்**
B.A., B.L., Ex.M.L.A.
தலைவர், திருப்பணிக்குழு

**C. கன்னியப்ப முதலியார்,**
உப தலைவர் திருப்பணிக்குழு.

# கும்பாபிஷேக சிறப்பு நிகழ்ச்சிகள் விபரம்

| தேதி | கிழமை | | நிகழ்ச்சிகள் |
|---|---|---|---|
| 21-6-88 | செவ்வாய் | மாலை | காலை 6-00 மணிக்கு விக்னேஸ்வரர் பூசை<br>1 வது கால யாக பூசை<br>இரவு 10-00 மணிக்கு செல்வி T.R.M. சாவித்திரி இன்னிசை கச்சேரி நடைபெறும். |
| 22-6-88 | புதன் | காலை<br>மாலை | 2 வது கால யாக பூசை<br>3 வது கால யாக பூசை<br>இரவு 10-மணிக்கு பட்டிமன்றம். அருள் வழங்குவதில் முன்நிற்பவர் அம்மையா? அப்பனா? என்ற தலைப்பில் நடைபெறும். |
| 23-6-88 | வியாழன் | காலை<br>மாலை | 4 வது கால யாக பூசை<br>5 வது கால யாக பூசை<br>மாலை 6மணிக்கு கருப்பட்டி சகோதரர்கள்<br>G. ராஜேந்திரன் G. கணேசன் நாதஸ்வர கச்சேரி<br>ஒச்சார பாஸ்கரன் நர்த்தம்<br>C.வீராச்சாமி ஸ்பெஷல்தவுல்<br>இரவு 10-00 மணிக்கு சினிமா நடிகர் S.V இராமதாஸ் குழுவினரின் இரணியன் ராஜ்யம் என்னும் நாடகம் நடைபெறும். |
| 24-6-88 | வெள்ளி | காலை<br><br>இரவு | 9-00 To 10-00 மணிக்குள் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.<br>அம்மன் திருவீதி வுலா<br>இரவு 9-மணிக்கு மதுரை V. சுவாமிநாதன் திண்டுக்கல் M.V.M திரு. அங்கமுத்துபிள்ளை குழுவினரின் இன்னிசை கச்சேரி நடைபெறும். |

குறிப்பு :- ரூபாய் 501-00ம் அதற்கு மேலும் திருப்பணிக்கு நன்கொடை அளிப்பவர்கள் பெயர் கல்வெட்டில் பொறிக்கப்படும்.

மின் அலங்கார உபயம் - அங்கு விலாஸ் M.V. முத்தையாபிள்ளை பர்ம் திண்டுக்கல்.

4. அனுதினமும் அற்றார் பசி நீக்கி, பாவத்தை போக்கி, பக்தரைக் காத்திடும் காருண்யவதி மகாசக்தி ஸ்ரீஜெனகை மாரியம்மன் மாண்புடன் கொலுவிருக்கும் திருக்கோயில் மகாகும்பாபிஷேக விழா நிகழ்வுற்று பதினைந்து ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் அருள் அன்னை அருளாட்சி செய்யும் திருக்கோயில் பாலாலயம் 30-01-2020-ல் நடைபெற்று திருப்பணிகள் தொடங்கப்பட்டது. மூலவர் மற்றும் பரிவார மூர்த்தி விமானங்கள், பிரதான வாயில், வடக்கு வாயில், மகாமண்டபம் மற்றும் திருக்கோயில் வளாகம் அனைத்தும் வண்ணக் கலாபம் தீட்டப்பட்டு, வாகன மண்டபம், பொங்கல் கூடம் முதலியன புதியதாக அமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் திருப்பணி நிறைவு பெற்றது. மகாசக்தி, மகாமாரி அறம் வளர்த்த நாயகி அன்னை ஸ்ரீஜெனகை மாரியம்மனின் திருவுளப்பாங்கின்படி ஸ்ரீவித்தக விநாயகர், ஸ்ரீசுப்பிரமணியர் அருள் நிறைந்த ஆலய கும்பாபிஷேகம் ஆங்கில ஆண்டு 25-01-2021 திங்கள்கிழமை, நிகழும் சார்வரி தமிழ் ஆண்டு, தை மாதம் 12 ம் தேதி, மிருக சீரிஷம் நட்சத்திரமும், துவாதசி திதியும், அமிர்தயோகமும் ரிஷப லக்னமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.05 மணிக்கு மேல் 9.55 மணிக்குள் திருப்பணிக்குழு தலைவர் நல்லி சில்க்ஸ் திரு. A.M.சுப்ரமணியம் செட்டியார் அவர்கள் மற்றும் தற்போதைய ஆலய நிர்வாக அதிகாரி திருமதி. செ.இளமதி MBA அவர்களது தலைமையிலும் பக்தகோடிப் பெருமக்களின் பேராதரவுடனும் அவர்களின் தலைமையிலும் கோலாகலமாக நடைபெற்றது.

**கும்பாபிஷேக தொடக்கமாக வைகையில் தீர்த்தமெடுக்க திரண்ட குழந்தைகள்**

யாக சாலையில் அம்பாள் பூர்ணகும்பமாக

யாக சாலையின் அமைப்பு

**கும்பாபிஷேக தொடக்கமாக வைகையில் தீர்த்தமெடுக்க திரண்ட குழந்தைகள்**

**கும்பாபிஷேகத்தை காண வந்த பக்தர்களின் ஒரு பகுதி ராஜகோபுரத்திலிருந்து**

**கும்பாபிஷேகத்தினை காண வந்த பக்தர்களின் ஒரு பகுதி**

ஸ்ரீஜெனகை மாரியம்மன் மூலஸ்தான விமான கலசத்தில் புனிதநீர் ஊற்றிய தருணம்

**ஸ்ரீஜெனகை மாரியம்மன் மூலஸ்தானம் மற்றும் ராஜகோபுர விமான கலசங்களில் புனித நீர் ஊற்றிய தருணம்**

## ஸ்ரீஜெனகை மாரியம்மன் தெய்வ தரிசன நேரம்

ஒவ்வொரு நாளும் காலை 6.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரையிலும் பிற்பகல் 4.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் காலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் ஆலயம் திறக்கப்பட்டு இருக்கும்.

வைகாசி திருவிழாக்காலங்களில் இரவு 11.45 மணிவரை தரிசனம் உண்டு.

## தினசரி பூஜை நேர விபரம்

வாரத்தின் அனைத்து நாட்களிலும்

கால சந்தி - காலை 10.00 மணிக்கு

சாயரட்சை பூஜை - இரவு 7.00 மணிக்கு

(திருவிழா காலங்கள் மற்றும் விசேஷ நாட்களில் மட்டும் பூஜை நேரம் மாறுதலுக்கு உட்பட்டது)

அம்மனுக்கு அபிஷேகங்களானது தினசரி காலை 09.00 மணிக்கு ஆரம்பமாகும்.

## ஸ்தல விருட்ஷம்

பழங்காலத்தில் மக்கள் மரங்களின் அடியிலேயே அவரவர் தெய்வங்களை வைத்து வழிபட்டனர். பின்னர், களி மண், செங்கல், மரம் இவைகளால் கோயில் அமைத்தனர்.

அவை அழிந்து போகும் பொருட்களானபடியால் கற்பாறைகளைக் குடைந்து கோயில் அமைத்தனர்.

அந்த குடை கோயில்களையே குகைக்கோயில்கள் என்று வழங்கலாயினர். நாளடைவில் கற்பாறைகளை உடைத்து அவைகளைக் கொண்டு கருங்கற்கள் கொண்டு கோயில்களைக் கட்டினர். ஆதியில் மரங்களின் அடியில் கோயில்கள் ஏற்பட்டதால் அந்த மரங்களை புனிதமாகக்கருதி அவைகளைத் தலவிருட்சங்கள் எனப் பெயரிட்டழைத்தனர். அவ்வழக்கமுறையே ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயத்தின் தல விருட்சமாக வேம்பு அமைந்துள்ளது.

**வைகை தீர்த்த தலம் - தீர்த்தத்திற்கும் தலம்**

தீர்த்தங்கள் கோயில்களுக்கு இன்றியமையாதவை .கோயிலுக்கு வழிபட வருவோர் முதலில் தீர்த்த நீராடி சமய சின்னங்கள் அணிந்து தூய்மையுடன் செல்ல தீர்த்தங்கள் பயன் படுகின்றன. பொதுவாகத் தீர்த்தங்களை ஆறு, கடல், குளம், கிணறு என்ற நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவை கோயிலுக்கு உள்ளே, அல்லது வெளியேயோ, அல்லது இவ்விரண்டிடங்களிலுமேயோ இருக்கும். அவ்வகையில் ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயம் தன் வளாகத்திற்குள்ளேயே தீர்த்தக்கிணற்றை உடையதாய் அமையப் பெற்றுள்ளது. இக்கிணற்றில் எடுக்கப்படும் தீர்த்தமே அம்மனின் திருமேனி அபிஷேகத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. மேலும் அம்பாள் திருமேனியில் அபிஷேகம் செய்யப்பட்ட திருமஞ்சள் புனித நீரே இன்றும் இத்தலத்தில் அம்மைக்கண்டவர்களுக்கு மருந்தாக வழங்கப்பட்டு வருகிறது. இத்தலம் வைகை தீர்த்த தலமாகும். வைகாசி பெருந்திருவிழா காலங்களில் புண்ணிய நதியான வைகை ஆற்று மணலில் ஊற்று உருவாக்கி நீர் எடுத்து ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது. நேர்த்திக்கடனை நிறைவேற்றுபவர்கள் இப்புண்ணிய நதியில் நீராடிய பிறகே நான்கு ரதவீதி வலத்தினை ஆரம்பிப்பார்கள். திருவிழா காலங்களில் அனைத்து பெண்பக்தர்களும், சிறுவர் சிறுமிகளும் இம்முறையிலேயே ஆற்று நீரை குடத்தில் நிரப்பி அதில் சிறிதளவு வேப்பிலையும் மஞ்சளும் இட்டு ஆலயத்தின் வெளிப்புற பலிபீடத்தில் வீற்றிருக்கும் கருப்பசுவாமியின் மேல் தங்கள் கைகளால் அபிஷேகமாக ஊற்றி குளிர்விக்கின்றனர்.

சுயம்பை வணங்கி
சுயம்பாய் வளர்வோம்!

# ஸ்ரீஜெனகை மாரியம்மன் – பிரார்த்தனையும் சரணாகதியும்

**வழிபாடு - சொற்ப்பொருள் விளக்கம்**

வழிபாடு என்னும் சொல் ‘‘வழிபாடு என்னும் வேர்ச் சொல்லினின்று பிறந்தது ஆகும். வழிபாடு என்பதற்கு அருச்சித்தல், தூபங்கொடுத்தல் தீபம் காட்டுதல் என்று தொகை அகராதியும்’’ ‘‘வழியில் செல்லுகை, பின்பற்றுக, வணக்கம், பூசனை’’ ஆகிய பொருள்களை செந்தமிழ் அகராதியும் புலப்படுத்துகின்றன. ‘‘வழிபடல் சூழ்ந்த பின் அவருடைய நாட்டே’’ எனவரும் குறுந்தொகைப் பாட்டில் வழிபடல் என்பதற்குச் சொல்லுதல் எனப் பொருள் கொள்கிறார் டாக்டர் உ.வே.சாமிநாதய்யர். ‘‘திருக்கோவையார் மதிநுதலியை வழிபடுத்து’’ என்ற இடத்தில் பயணமாதல் எனப்பொருள் தருகின்றது.

‘‘வழிபடு தெய்வம்’’ ‘‘வழிபாடு கிழமை’’ என்னும் சொற்கள் தொல்காப்பியத்தில் பயின்று வந்துள்ளன. ‘‘வழிபடுவோரை வல்லறிதீயே’’ என்னும் புறநானூற்றுத் தொடரில், வழிபடுதல் என்பது வணங்குதலைக் குறிக்கின்றது. ‘‘கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள்’’ என்னும் சிலப்பதிகார தொடரில், வழிபாடு என்னும் சொல் வந்துள்ளது. ‘‘இருமொழியும் வழிப்படுத்தார்’’ எனக்காஞ்சி புராணத்தில் வருமிடத்தில் வழிப்படுத்தல் என்பதற்குச் சீர்திருத்தம் எனப் பொருள் கொள்ளுமாறு உள்ளது. ‘‘பூசனை என்ற பொருளை பிங்கல நிகண்டும்’’.

‘‘வணக்கம், கோட்பாடு’’ ஆகிய இரண்டு பொருட்களைத் தற்காலத் தமிழ்ச் சொல் அகராதியும் தருகின்றன. ‘‘வழிபாடு என்பது வழிபடுதல்’’ அதாவது நெறியை அடைதல் எனப் பொருள் படும். இறையருள் நெறியிற் கலந்து செல்ல முற்பட்டுக் குறைவிலா நிறைவாய்க் கோதிலா அமுதாயுள்ள இறைவியின் உயரிய பண்பு நலன்களை நாமும் படிப்படியே அடைவதற்காக, அம்பாள் அருளைத் துணையாகக் கொண்டு செய்யப்படும் முயற்சியே வழிபாடு எனலாம். வழிபாட்டால் நாம் அளவில்லாத நலன்களைப் பெற முடியும்.

**வழிபாட்டின் நோக்கம்**

நம் மனது ஒளியை விட வேகமானது. எண்ண ஓட்டத்திற்க்கேற்ப அலைந்து திரிந்து திரிவது. ஒன்றையே நினைந்து சில வினாடிகள் கூட ஒரே வழியில் நில்லாது. கட்டுக்கு அடங்காத இம்மனத்தை ஒருவழியில் அகப்படச் செய்துநிலை பெறச் செய்வதே வழிபாட்டின் நோக்கமாகும்.

மனிதனை விலங்கினின்றும், மக்களினின்றும் வேறுபடுத்துவது மனம் ஒன்றே. மனிதனைப் பண்பாட்டில் உயர்த்த, மனம் கட்டுக்கடங்கி ஒருவழிப்படுதல் அவசியம். ஒரு வழிப்பட்ட மனமே, வாழ்வின் எத்துறையிலும் வேண்டப்படுவது.

மனம் ஒரு வழி நில்லாதான் வாழ்க்கை, எதிலும் வெற்றி பெறாது. நெறியிலும் அது மிக மிக இன்றியமையாததாகும். ஒன்றுக்கும் உதவாத வாழ்க்கையாக முடியும். ஆதலின் வாழ்க்கை நெறியின் மனம் ஒரு வழிப்படுதல் மிகவும் வேண்டியதாகின்றது. அது போலவே, ஆன்ம மனத்தின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தி மனத்தின் வழியே தான் செல்லாது தன் வழியே மனம் செல்லச் செய்வதே மனிதன் பெறும் அகமுக வளர்ச்சி அதாவது ஆன்ம வளர்ச்சியாகும். இது படிப்படியாக வளர்ந்து இறைவியோடு ஒன்றாகச் செய்யும் வரையில் வளர்கின்றது.

மனத்தை ஒரு வழிப்படுத்த முயலும் எல்லாச் சமயத்தவரும் எல்லா நாட்டவரும் அவரவர் பண்பாட்டிற்கேற்ற ,மனத்திற்கேற்ற பற்றுக்கோடு ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும். மேற்குறித்த கருத்துக்களின் அடிப்படையில் சிந்திக்கும்போது ஸ்ரீஜெனகை மாரியம்மனைப் பற்றுக் கோடாகக் கொண்டு வழிபடுதல், மனத்தை ஒருநிலைப்படுத்தக் கையாளும் சிறந்த முறை எனக் கொள்ளலாம்.

**பிரார்த்தனை என்பது**

அம்பாளிடம் எதை வேண்டும் என்று கேட்கிறோமோ, அதனை நமக்குள்ளிருந்து வெளிக்கொணரும் சக்தி நம்முடைய பிரார்த்தனைக்கு இருக்கிறது. ஸ்ரீஜெனகை மாரி அருள் மழை பொழிவதற்குத் தயாராக இருக்கிறார். அருள்புரிவது அவரது தொழில், நாம் அவரிடம் விண்ணப்பம் செய்ய வேண்டும். பொறுமையாக் காத்திருக்க வேண்டும் எக்காரணத்தை முன்னிட்டும் பொறுமையை இழந்து விடக்கூடாது.

குளிர்காய வேண்டுமென்றால் நாம்தான் நெருப்பின் அருகில் செல்ல வேண்டும். அதுபோல ஸ்ரீஜெனகை மாரியின் அருள் வேண்டுமானால் நாம் தான் அவரிடம் சென்று கேட்க வேண்டும். சிலநேரங்களில் அறியாமையினால், தனக்கு வேண்டியதை அம்பாளிடம் கேட்காமலும் முறையிடாமலும் தனக்குத் தேவையானதை அவளே தருவார் என்று வெறுமனே இருந்துவிடுவதும் உண்டு, கேட்டால் குறைந்து போய்விட மாட்டோமல்லவா. மனமுருக பிரார்த்தனை செய்வதில் தவறேதும் இல்லை. உதாரணமாக ஒரு தாய்க்கு பெற்ற பிள்ளைகள் பல இருந்தாலும் அழுத பிள்ளையையே முதலில் தன் மடியில் தூக்கி வைத்து குழந்தையின் தேவையை அறிகிறாள். எனவே மனப்பூர்வமாக ஸ்ரீஜெனகை மாரியின் மேல் பூரண நம்பிக்கை கொண்டு அவரை பணிந்து வேண்டி பிரார்த்தனை செய்தால் விரைவில் பலன் கிடைக்கும். ஆத்மார்த்தமான பிரார்த்தனை செய்யச் செய்ய நம்முள் இருக்கும் பேராற்றலையும் நம் மனக்கோவிலினுள்ளே ஸ்ரீஜெனகைமாரி நிறைந்துள்ளதையும் நம்மால் உணரமுடியும்,

பக்தியை எப்போதும் விட்டுவிடக்கூடாது. நான் என் கடமையை சரியாகச் செய்கிறேன், முழுமையாக கிடைக்கும் என்ற நம்பிக்கை வேண்டும்.

உதாரணமாக தேர்வெழுத செல்லும் ஒரு மாணவர் முழு தேர்ச்சி பெற வேண்டுமானால் அவர்தான் நன்கு படித்திருக்க வேண்டும். இது மாணவரின் கடமையுமாகும். சரிவர படிக்காமல் அம்பாளை பிரார்த்தனை மட்டும் செய்துவிட்டு தேர்வெழுத சென்றால் நாம் எதிர்பார்த்த வெற்றி கிட்டாது. நமக்காக அம்பாள் தேர்வெழுத மாட்டாள். ஆனால் மாணவர் தேர்வு எழுதும் போது, கற்ற அனைத்தையும் நினைவில் நிற்கச்செய்யும் அருளை நிச்சயமாக பரிபூரணமாக அம்பாள் வழங்குவாள்.

அதே போல நாம் அவளிடம் கேட்கும் கோரிக்கைகள் அனைத்தும் அப்போதைய நம் சூழ்நிலைக்கு சரியானதா? தவறானதா? நியாயமானதா? நியாயமற்றதா? அப்போதைக்கு அவசியமா? அவசியமற்றதா? என்று ஆராயும் உரிமை ஸ்ரீஜெனகை

மாரியம்மனுக்கு உண்டு. நாம் ஒன்றினை அவளிடம் பிரார்த்தித்து கேட்கும் ஒன்றை அவள் வழங்கும் முன், அதனால் நமக்கு ஏற்படும் எதிர்கால விளைவுகளை தன் மனதில் கொண்டே முடிவெடுப்பாள். அதற்கு நம் மீது ஸ்ரீஜெனகை மாரி கொண்ட பரிவே காரணம். மிக முக்கியமாக, சில சமயங்களில் கடந்த காலத்தில் நாம் ஸ்ரீஜெனகைமாரியிடம் வேண்டிக் கொண்ட பிரார்த்தனைகள் நிறைவேறாமல் போனது குறித்து நாம் ஏமாற்றம் அடைந்திருக்கலாம். அதில் தவறேதும் இல்லை. அதே நேரத்தில் நாம் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை.

நாம் கேட்டது கிடைக்காமல் போனால், எல்லாம் நம் நன்மைக்கே என்று,அம்பாளின் மீது அளவற்ற நம்பிக்கையே ஏற்பட வேண்டும். ஸ்ரீஜெனகைமாரி நாம் கூறுவதை காதில் வாங்காமல் எந்நாளும் இருப்பதில்லை. பிரார்த்தனை என்பது அவரவர் மனநிலைக்கேற்ப தேவைக்கேற்ப அவரவர் செய்ய வேண்டிய ஒன்றாகும். பிரார்த்தனையில் பொய்மை கலந்துவிடக்கூடாது. அதில் முழு நம்பிக்கை இருக்க வேண்டும். எது எப்படியாயினும் ஆன்மிக வாழ்க்கையில் இருப்பவர்கள் சிறிது சிறிதாக முன்னேற்றம் அடைந்துவிடுவார்கள் என்பது இந்து தர்ம சாஸ்திரத்தின் கருத்தாகும். மக்களின் மனப்பக்குவத்திற்கேற்ப பிரார்த்தனைகளின் தரம் மாறுகின்றன. பணமும், புலனின்பங்களும், உறவுகளும் நிலைத்த நிம்மதியைத் தரப்போவதாக எண்ணி, பலர் அவற்றை வேண்டிப் பிரார்த்தனை செய்கிறார்கள். அவற்றால் நிம்மதி ஏற்படப்போவதில்லை என்று உணர்ந்த பிறகு, பிரார்த்தனையின் தரம் உயர்கிறது.

உள்ளம் பக்குவமடைந்த பிறகு அறிவுபூர்வமான பிரார்த்தனைகள் அனைத்தும் உணர்ச்சி பூர்வமான பிரார்த்தனைகளாக மாறுகின்றன. ஸ்ரீஜெனகை மாரியை நம் மனதில் குடியேற்றி உள்ளம் உருகி பிரார்த்தனை செய்தால், நம்முடைய மனதில் விருப்பு வெறுப்புகள் குறைந்து, மன மாசுக்கள் யாவும் நீங்கி உள்ளம் அமைதி பெறும் உள்ளத்தில் பணிவு ஏற்படும் அம்பாளின் மீது நம்பிக்கை ஓங்கும்.

பிரார்த்தனையினால், நம் மனதில் நல்லெண்ணங்கள் நாளுக்கு நாள் உறுதி பெறுகின்றன. உள்ளம் பக்குவம் பெறுகிறது. உள்ளத்தில் அருள்நாட்டம் மேலோங்குகிறது. மெய்யறிவைப் பெறுவதற்காக தகுதிகள் ஏற்படுகின்றன் ஸ்ரீஜெனகைமாரியே நம் வாழ்வு முழுமைக்கும் குருவாக மாறுகிறாள். குருவின் திருவடி நிழலில் மெய்ப்பொருள் தத்துவ நூல்களைக் கற்று மெய்யறிவைப் பெறும் வாய்ப்பு கிடைக்கிறது. மெய்யறிவைப் பெற்று அதில் நிலைத்திருப்பவர்கள் பேரானந்தமான பரம் பொருளாகவே தன்னை உணர்ந்து, பிரார்த்தனைகளைக் கடந்து செல்கிறார்கள்.

## பிரார்த்தனைக்கும் விதிகள்

இப்பிரபஞ்சத்தில் எல்லாவற்றிற்கும் விதிகள் உள்ளது. அந்த விதிகள் தான் அதன் இயக்கத்தை தீர்மானிக்கின்றன. அவ்வகையில் பிரார்த்தனையின் விதிகள் மூன்றாக பிரிக்கப்படுகிறது.

### முதல் விதி

ஸ்ரீஜெனகைமாரியிடம் நமது கோரிக்கைகளை ஒருமித்த மனநிலையுடன் தெளிவான பிரார்த்தனையை மேற்கொள்ள வேண்டும். பிரார்த்தனையில் மாற்றுக்கருத்து அல்லது பிறழ் மனநிலை இருக்கக்கூடாது.

### இரண்டாம் விதி

ஸ்ரீஜெனகைமாரியிடம் யாசகம் கேட்பதை போல கேட்க வேண்டியதில்லை. ஒரு மகன் / மகள் தன் தாயிடம் உரிமையோடு கேட்பதை போல கேட்டல் அவசியம்.

**மூன்றாம் விதி**

நியாயமான கோரிக்கைகளுக்கு மட்டுமே அம்பாளை அணுகுதல். அதாவது அம்பாளிடம் நமது கோரிக்கையை முன்வைத்து, எனது எண்ணங்கள் உயர்ந்தவையாகவும் சிறந்ததாகவும் இருக்குமாறு நீ தான் என்னை வழிநடத்தவேண்டும் என்றும் கோரிக்கை நிறைவேற விடாமுயற்சியுடன் நம்பிக்கையோடு உழைப்பேன் என்றும் உறுதியளிப்பதாக வேண்டிக்கொள்ளுதல் வேண்டும்.

ஸ்ரீஜெனகைமாரியின் மேல் பக்தி கொண்டு நாம் தொடர்ந்து பிரார்த்தனையில் ஈடுபடும்போது, இறைவியிடம் நெருக்கத்தை உணர முடியும். அப்படி உணர்ந்தால் அம்பாள் நம் அருகிலிருந்து நம்முடனேயே பயணிப்பதை நாம் உணரலாம்.

## ஸ்ரீஜெனகை மாரியம்மனிடம் சரணாகதியடைதல்

ஸ்ரீஜெனகை மாரியின் திருவடி ஒன்றே கதி என்று நினைத்து அவளது சரணங்களை மட்டுமே நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, அம்பாள் நிச்சயம் நற்கதியைத்தான் அருள்வாள் என்பதில் சந்தேகமே இல்லை. அப்பேர்ப்பட்ட அம்பிகையின் பொற்பாத கமலத்தை கெட்டியாகப் பற்றிக்கொள்ளவேண்டியது நம் கடமை பற்றாமல் போனால் அது நம்முடைய அறியாமை என்கிறது சரணாகதி தத்துவம். நம் முயற்சியால் எல்லாமும் முடியாது என்பதை உணர்ந்து, ஸ்ரீஜெனகைமாரியே கதி! எனது பாரத்தை அவள் மீது வைக்கிறேன், என கருதி நமது கர்மவினைகளை (பாவம் & புண்ணியம்) போக்கி அருள அவளின் பொற்பாதத்தில் பணிதலே சரணாகதியாகும். பக்தர்கள் ஸ்ரீஜெனகை மாரியை சரணடைந்தால் கஷ்டங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும். சரணடைதல் என்றால் என்னவென்பதை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். சரணடைதல் என்பது ஸ்ரீஜெனகையிடம் நம்மை முழுமையாக ஒப்படைத்து விடுவதேயாகும். நம்முடைய செயல்கள், முயற்சிகள் எல்லாம் நம்மைச் சார்ந்தவை என்றாலும், அவளின் துணையில்லாமல் எதிலும் முழுமையான வெற்றியினை நாம் பெற்றுவிட முடிவதில்லை என்ற எண்ணமும் நம்பிக்கையும் நம் மனதில் ஆழமாக வேரூன்ற வேண்டும்.

நம்மிடமுள்ள சக்தி, ஆற்றல் எல்லாம் அம்பிகை கொடுத்த கொடையாகும். நம்முடைய செயல்களில் நாம் ஈடுபடும்போது, அதனை அம்பாள் அவற்றை வெற்றிகரமாக நடத்தி வைப்பாள் என்ற நம்பிக்கையும் நமக்கு இருக்கவேண்டும். செயல்களை நாம் செய்தாலும் அதன் மூலம் கிடைக்கும் பலனை ஸ்ரீஜெனகைமாரியிடம் ஒப்படைத்துவிட வேண்டும். சரணாகதியின் முதல் படியே இதுதான். இங்கே ஒரு விஷயத்தை நாம் தெளிவுபடுத்திக் கொள்ளுவது அவசியம். பலனைத்தான் ஸ்ரீஜெனகைமாரியிடம் ஒப்படைக்க வேண்டுமே தவிர நம்முடைய செயல்களை ஸ்ரீஜெனகைமாரியிடம் ஒப்படைத்துவிடக்கூடாது. ஸ்ரீஜெனகைமாரி நம்மைச் இயக்கி செயலாற்றுபவளே தவிர, நமக்காக அவளே செயல்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியதியல்ல.

சரணாகதி என்பது அம்பிகையிடம் நம்மை முழுமையாக ஒப்படைத்துக் கொள்ளும் நிலை என்பது பரிபூரணமான தெய்வ நம்பிக்கையிலிருந்து விளைவதாகும். தெய்வத்தை முழுமையாக உணரும் நிலையும் இதுவேயாகும்.

அம்பிகையிடம் நம்முடைய சரணாகதி முழுமையடைந்து விட்டால், பக்தரின் மனக் கோயிலில் ஸ்ரீஜெனகைமாரி குடியேறிவிட்டாள் என்ற தெளிவு ஏற்பட்டுவிடும்.

இந்தத் தெளிவு கிடைத்துவிட்டால் நாம் செய்யும் காரியங்கள் அனைத்தையும் நம்பிக்கையுடன் செய்வோம். காரணம், அம்பிகை எப்பொழுதும் நம்முடன் இருக்கிறாள் என்னும் உணர்வில் நாம் இங்கே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள் இரண்டு உள்ளது.

**ஒன்று:** நாம் செய்யும் காரியங்களைச் சிரத்தையுடன் செய்ய வேண்டும்.

**இரண்டு:** ஸ்ரீஜெனகைமாரியின் பேரருள் நம்மிடம் நிறைந்திருக்கிறது எனும் நம்பிக்கையுடன் செயல்படவேண்டும். அவ்வாறு செயல்பட்டால் நம் முயற்சியின் பலனாகவும் அம்பாளின் அருட்கொடையாலும் முழுமையான பலன் தானாகவே கிடைக்கும்.

## ஸ்ரீஜெனகை மாரியிடம் பூரண சரணாகதியடைதல்

பூரண சரணாகதி என்றால் என்ன?

பூரண சரணாகதியடைய நாம் என்ன செய்ய வேண்டும்??

அது நமக்கு என்ன பலனைத் தரும்???

சரணாகதி என்பது, தாயே உன்னிடம் சரணடைந்துவிட்டேன் என்று சரண் புகுதலின் தத்துவமாக சொல்லப்படுகிறது!! இவ்வாறான சரண்புகுவதில் ‘‘அம்மா நான் உன்னிடம் சரணடைகிறேன்’’ என்று ஸ்ரீஜெனகைமாரியை வேறாகவும் நாம் வேறாகவும் கருதிக் கொள்வதோடு மட்டுமல்லாமல், அம்பிகையே உன் விருப்பத்தாலும் உன் அருளாலும் சரணடைகிறேன் என்று நினைப்பதால், சரணடைதல் என்பது தெய்வாதீனமாக நிகழும் செயல்போல ஆகிவிடுகிறது.

அதுவே பூரண சரணாகதியின் தத்துவப்படி பார்த்தோமானால், ‘‘நான்’’ வேறு ‘‘நீ’’ வேறு என்று பிரித்து நினைக்கக்கூட எதுவுமில்லை. எல்லாம் நீயாய் நிறைந்தாய், எல்லாமே உன்னால் தான் ஆனது. இப்பிறப்பில் நான் பெற்ற எல்லாமே உன்னுடையதுதான். நான் வாழும் வாழ்வே உன்னுடையதுதான். ‘‘நான்’’ என்றும், ‘‘என்னுடையது’’ என்றும், ‘‘எனக்கானது’’ என்றும், நினைத்துக்கொண்டு அறியாமையுடன் இருந்தேன். என்னையும் ஒருவன் போலவும், எனக்கென்று ஏதோ இருப்பதுபோலவும், எல்லாமே எனக்கு சொந்தம் போலவும், எல்லாமே எனது உடமைபோலவும், எண்ணி வாழ்ந்து கொண்டு இருந்த என்னை ஆட்கொண்டு நீயே அனைத்துமானாய். ஒப்பற்ற கருணைகடலாகிய உன்னை நான் உணர்ந்த பிறகு, ‘‘நான்’’, ‘‘எனது’’ என்று நினைக்ககூட ஏதுமில்லை என்ற மெய்யை நான் உணர்ந்ததோடு, உன்னுள் என்னை தொலைக்கிறேன் என்று பற்றற்று வாழ்வதே பூரண சரணாகதி!!

## பூரண சரணாகதியடைய நமக்கு வேண்டியவை

நம் வாழ்க்கையில் எது செய்தாலும், எது நடந்தாலும், எது நிகழ்ந்தாலும், எதை அனுபவித்தாலும், எதில் அனுபவபட்டாலும் அதில் நம் செயல் என்ற ஒன்று இருப்பதாக நமக்கு தோன்றினாலும், அதையும் மீறி நம்மைக் கொண்டும், மற்றவைகொண்டும் நமக்காகவே ஸ்ரீஜெனகைமாரி வடிவமைத்து நிகழ்த்துகிறாள் என்று உணர்ந்து, அந்த நிகழ்வு வழியே கிட்டும் பலன்களை நன்றியுணர்வோடு நமக்கு கொடுத்தவளுக்கே சமர்ப்பித்து நெகிழ்ந்து மகிழும் மனப்பக்குவம் ஏற்படுதலே பூர்ண சரணாகதியாகிறது.

இப்படி சமர்ப்பணம் நிகழ நிகழ, நிகழ்த்துபவள் அங்குமிங்குமெனாதபடி எல்லாவற்றிலும் புலப்படுவாள்!!

அப்படி புலப்படுவதும் அவள்தான் என்று நம்முள் இருந்து அறிவிப்பதும் ஸ்ரீஜெனகை மாரியே என்ற தெளிவும் நமக்குப் பிறக்கும்!! நம்மை நாம் என்று என்று நினைக்கக்கூட எதுவுமில்லை என்ற மெய் நமக்கு வெளிப்படும்.

சரணாகதியில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக பூரண சரணாகதி நோக்கிய பயணம் தொடங்க ஆரம்பிக்கும்!!

## அதனால் கிடைக்கும் பலன்

இவ்வாழ்வில் நம்முடையது எதுவும் அல்ல என்ற தெளிவு ஏற்படும்!! வருத்தமும், சந்தோஷமும், பொறுப்பும், அக்கறையும், மானம், ரோஷம், காப்பதும், வாழ்விப்பதும் என்று எல்லாம் ஸ்ரீஜெனகைமாரி முன்னின்று நடத்த, அதில் வெறும் கருவியாக மட்டுமே நாம் இருப்பதாகத் தோன்றும் தெளிந்த நீரோடை போன்ற முழுமையான மன நிறைவு கிட்டும்.

## சரண்டரும் சரணாகதியும்

காவலர் துப்பாக்கியை வைத்து எதிராளியை சுட முயற்சிக்கும்போது, எதிரே உள்ளவர்கள் இரு கைகளையும் உயர்த்தி ''சரண்டர்'' என்று ஆங்கிலத்தில் அவர் கூறுவர் ''நீங்கள் சொல்வதைச் செய்வோம்,'' என்று அடிபணிகின்றார். ஆனால் சரணாகதி அதுபோன்றது அல்ல. ஒருவர் மீது கொண்ட பயத்திலேனாலோ அல்லது பணம், பதவி, பாதுகாப்பு, உணவு போன்றவற்றை எதிர்பார்த்தோ ஒருவரிடம் தஞ்சமடைவதற்குப் பெயர் சரணாகதி அல்ல. தான் ஒன்றுமில்லாதவர் என்பதை அறிவதே சரணாகதி. மண்ணிலுள்ள புழுவைக் காட்டிலும் தன்னைத் தாழ்ந்தவராக எண்ணியும் ஸ்ரீஜெனகை மாரியை ஒப்பில்லா மிகப் பெரும் பரம்பொருளாக உணர்ந்தும், எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி அவளிடம் தஞ்சமடைவதே பூரண சரணாகதி.

## சரணாகதிக்கு இலக்கணமானவர்கள்

ராமருக்கு சரணாகத வத்ஸலன் என்றே ஒரு பெயர் உண்டு. ராமாயணத்தில் பால காண்டம் துவங்கி, யுத்த காண்டம் வரை இந்த பூரண சரணாகதி தத்துவத்தை மிக அழகாகப் பார்க்கலாம். பால காண்டத்தில் தேவர்கள் பகவான் ஸ்ரீமன் நாராயணிடம் பூரண சரணாகதி அடைகிறார்கள். அயோத்யா காண்டத்தில், பரதன் சரணாகதி மற்றும் குகனோடு சக்யம், ஆரண்ய காண்டத்தில், ரிஷிகள் ராமச்சந்திர மூர்த்தியிடம் பூரண சரணாகதி செய்கிறார்கள். கிஷ்கிந்தா காண்டத்தில், சுக்ரீவன் பூரண சரணாகதி. யுத்த காண்டத்தில், விபீஷணன் பூரண சரணாகதி செய்கிறார்.

## சரணாகதி அடைந்த பலி மஹாராஜர்

பகவானிடம் நாம் நம்மை முழுமையாக ஒப்படைக்க வேண்டும், அதாவது அவரிடம் நாம் முழுமையாக சரணடைய வேண்டும் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாக பலி மஹாராஜர் விளங்குகிறார். பிரஹலாதரின் பேரனான அவரிடம் வாமனரின் வடிவில் வந்த எம்பெருமான் மூன்றடி நிலத்தினை யாசகமாகக் கேட்டார். ''வந்திருப்பவர் விஷ்ணு, உனது எல்லா செல்வத்தையும் இவர் பறித்துக் கொள்வார். எந்த தானத்தையும்

கொடுக்காதே!'' என்று அசுரர்களின் குல குருவான சுக்ராசாரியர் பலி மஹாராஜரைத் தடுத்தார். ஆயினும், பகவானே தன்னிடம் வந்த பின்பு, தனக்கு வேறென்ன வேண்டும் என்று நினைத்த பலி மஹாராஜர், அசுர குருவின் அறிவுரையையும் மீறி, பகவானுக்கு மூன்றடி நிலம் வழங்கினார். பகவான் தனது முதல் இரண்டடியில் உலகம் முழுவதையும் அளந்த பின்னர், மூன்றாவது அடிக்கு இடத்தைக் கேட்டபோது, பலி மஹாராஜர் தன்னையே முழுமையாக அர்ப்பணித்தார். பூரண சரணாகதி அடைய விரும்புவோர் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டும்.

## நமது முயற்சியும் ஸ்ரீஜெனகைமாரியின் கருணையும்

ஸ்ரீஜெனகை மாரியை சரணடையும் தத்துவத்தில் ''நான் சரணடைந்து விட்டேன், இனிமேல் அவள் பார்த்துக் கொள்வாள்,'' என முயற்சி செய்யாமல் இருப்பது சரியா? அல்லது, ''எனது சொந்த முயற்சியினால் நானே அம்பிகையை பற்றிக் கொள்வேன்,'' என்று கர்வத்துடன் இருப்பது சரியா? எது சரி?.

உண்மை என்னவெனில், அம்பாள் பக்தியில் நாம் நமது விரும்பிய பலனை அடைய இரண்டும் அவசியம். நமது முயற்சியும் அவசியம், பராசக்தியின் கருணையும் அவசியம். அவளின் கருணை காரணமற்றது என்றபோதிலும், பொதுவாக அந்த கருணையைப் பெறுவதற்காக முயலும் பக்தனிடம் அவள் கருணை கொள்கிறாள். ''முயற்சி என்னுடையது'' ''முடிவு உன்னுடையது'' என்ற அதீத நம்பிக்கை ஜெனகைமாரியம்மனின் மீது நமக்கு ஏற்படவேண்டும். இதனை ஓர் உதாரணம் கொண்டு விளக்கலாம்.

பள்ளத்தில் விழுந்த நபரைக் காப்பாற்ற நினைத்து யாரேனும் ஒரு கயிற்றைக் கொடுத்தால், பள்ளத்தில் இருப்பவன் என்ன செய்ய வேண்டும்? மேலே இருப்பவர் பள்ளத்தில் இருப்பவனை இழுத்து வெளியே கொண்டு வருவதற்கு தயாராக இருந்தாலும், பள்ளத்தில் இருப்பவன் கயிறை இறுக்கமாகப் பற்றினால் மட்டுமே அவன் வெளியே வர முடியும். அதுபோல, ஸ்ரீஜெனகைமாரி தன் அளவற்ற கருணையை பரிவுடன் வழங்கினாலும், அந்த கருணையை பக்தர்கள் பணிவுடன் பற்றிக் கொள்ளுதல் அவசியமாகிறது.

## சரணடைந்த பக்தர்களுக்கு கட்டுப்படும் ஸ்ரீஜெனகைமாரியம்மன்

பக்தர்களின் முயற்சியும் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் கருணையும் இணைந்தால் மட்டுமே பக்தித் தொண்டில் வெற்றி ஏற்படுகிறது.

அம்பாளைக் கட்டுப்படுத்துவது இயலாத காரியம், ஆயினும் தூய பக்தர்களின் களங்கமற்ற பக்தியைக்கண்டு அம்பாள் கட்டுப்படுகிறாள். அதற்கு உதாரணமாக ஒரு புராண கால நிகழ்வினை உதாரணமாக கூறலாம். கிருஷ்ணரைக் கட்டிப் போட அன்னை யசோதை முயற்சி செய்தபோது, அவளால் அவரைக் கட்ட முடியவில்லை. அவரிடம் இருப்பதோ சிறு வயிறு, அவள் கொண்டு வந்ததோ மிக நீளமான கயிறு. ஆயினும் அங்கே இரண்டு அங்குல பற்றாக்குறை இருந்தது. வீட்டிலிருந்த கயிறுகள் அனைத்தையும் ஒவ்வொன்றாக கொண்டு வந்து, அவற்றை இணைத்து கட்டிய பின்னரும் இரண்டு அங்குல பற்றாக்குறை நீடித்தது. இதனை வேடிக்கை பார்த்த கோபியர்கள் யசோதையிடம் முயற்சியை விட்டுவிடும்படி கூறினர். யசோதையோ தீர்மானமாக இருந்தாள், அவளது களைப்பைப் பார்த்த பகவான் கட்டுப்பட இசைந்தார். இப்புராண நிகழ்வின் மூலமாக அம்பிகையின் பரிபூரண அருளைப் பெறுவதற்கு (1) நமது

விடாமுயற்சி, (2) ஸ்ரீஜெனகையின் கருணை என்ற இரண்டு விஷயங்கள் நமக்குத் தேவை என்பதனை நாம் உணரவேண்டும்.

இந்த இரண்டும் இருந்தால்தான் அம்பாள் மீது கொண்ட பக்தியில் வெற்றி கிட்டுவதோடு நம் மாசற்ற பக்திக்கு கட்டுப்பட்டு நம் வாழ்வில் நிகழும் எந்த ஒரு செயல்களுக்கும் ஸ்ரீஜெனகைமாரி பொறுப்பேற்று சிறப்புறச்செய்வாள் என்பது திண்ணம். அதுவரை நம்மால் முடிந்த முயற்சியை செய்து கொண்டு, அவளுடைய கடைக்கண் கருணைக்காக காத்திருக்க வேண்டும்.

**ஆன்மீக நிலையும் பிரார்த்தனையும்**

ஒருவரின் பிரார்த்தனையின் பலனளிக்கும் திறனை நிர்ணயிக்கும் முக்கிய அம்சமாக அவரின் ஆன்மீக நிலை விளங்குகிறது.

60% ஆன்மீக நிலைக்கு மேலே உள்ள ஸாதகர்களுக்கு பிரார்த்தனை தேவைப்படுவதில்லை. அவர்கள், ‘எல்லாம் ஸ்ரீஜெனகைமாரியின் விருப்பப்படி நடக்கிறது’ என்ற ஆன்மீக உணர்வுடன் செயல்படுகின்றனர். வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் அம்பாளின் பேரருளால் நடக்கிறது என்பதை அவர்கள் நேரிடையாக உணர்கின்றனர். அவர்களின் மனம் எப்பொழுதும் நன்றியுணர்வில் நிரம்பியுள்ளது. இந்நிலை அடைந்த பின் பிரார்த்தனை தேவைப்படுவதில்லை.

30% ஆன்மீக நிலைக்கு கீழே உள்ளவர் செய்யும் பிரார்த்தனையில், அம்பாளின் மேல் உள்ள நம்பிக்கையுணர்வு இன்னும் வளர்ந்துவரும் நிலையிலேயே இருப்பதால், அவர்களுக்கு மானசீக அளவிலேயே பயன் கிடைக்கிறது. அவர்களின் பிரார்த்தனை, தெய்வ தத்துவத்தை முழுமையாக உணராதிருப்பதற்கு அவர்களை சுற்றியுள்ள சூழ்நிலையே காரணமாக அமைகிறது.

எனவே இக்கலியுகத்தில் நாம் சந்திக்கும் அனைத்துவித சூழ்நிலைகளுக்கும் அம்பாளே பொறுப்பு என்றும், நம்மை நல்வழிப்படுத்த ஸ்ரீஜெனகை மாரியே நம் வாழ்வின் ஆதாரம் என்ற நம்பிக்கை நம்முடைய மனதில் ஆல் விழுது போல பரவி இருக்க வேண்டும். அப்படி முழு நம்பிக்கையுடன் இருந்தால் மட்டுமே ஸ்ரீஜெனகை மாரியின் மடியில் நாம் குழந்தையாக தவழமுடியும்.

சுயம்பை வணங்கி
சுயம்பாய் வளர்வோம்!

# வைகாசி பெருந்திருவிழாவும் வேண்டுதல்களும்

**நேர்த்திக்கடனும் பரிகாரமும்**

ஸ்ரீ ஜெனகை மாரியின் திருவடியில் நம் கோரிக்கையை வைத்து நிறைவேறிய பின், நம்முடைய நன்றிக்கடனாகவும் காணிக்கையாகவும் அம்பாளுக்கு திருப்பி செலுத்துவதாக நாம் மனதில் உறுதி கொள்வதே நேர்த்திக்கடன் எனப்படுகிறது.

இந்தக் கடனை சொல்லியபடி சரிவரச் செய்து முடிக்காவிட்டால் சோதனைகள், பாதிப்புகள் ஏற்படும் என்பது பெரும்பாலான பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது. அதே நேரத்தில் பக்தர்கள் நேர்ந்துகொண்ட நேர்த்திக்கடனை மறந்துவிட்ட சமயத்தில் அதற்க்குப் பிராயச்சித்தமாக புதிதாய் ஒன்றை நேர்ந்துகொள்வது பரிகாரம் என்று சொல்லப்படுகிறது.

பக்தர்கள் தங்களின் பல்வேறு வேண்டுதல்களை அன்னை ஸ்ரீஜெனகை மாரியம்மனின் பொற்பாத கமலத்தில் சமர்ப்பிக்கிறார்கள். அடியவர்களின் அளவு கடந்த தூய்மையான பக்தியை கண்டு மனமுவந்து அவர்களின் கோரிக்கைகளை சொல்லின் சுந்தரியாக நிறைவேற்றி மகிழ்கிறாள்.

யார் கடன் ஆனாலும் மாரி கடன் ஆகாது.

யார் கடன் நின்றாலும் மாரி கடன் நிற்காது.

யார் கடன் பட்டாலும் மாரி கடன் வைக்கக் கூடாது.

''ஏழைகடன் ஏழு வருடம்'' என்றும் ஒரு வழக்கு மொழியாக சொல்வதுண்டு. நிறைவேற்றுவதாக நேர்ந்து கொண்ட நேர்த்திக்கடன்களை எவ்வளவு ஒத்தி வைத்தாலும் ஏழு வருடங்களுக்குள் நிறைவேற்ற ஆரம்பிக்க வேண்டும் என்பது பக்தர்களால் மனதளவில் உணர்ந்து ஏற்ற ஒன்று தான்.

**நேர்த்திக்கடனுக்கான காரணங்கள்**

நேர்த்திக்கடன்களுக்கான காரணங்களுக்கு அளவே இல்லை என்பதே உண்மை. இருப்பினும் பெரும்பாலும் பக்தர்கள் ஸ்ரீஜெனகை மாரியின் பூரண பேரருளால் எந்தவொரு குறைவுமின்றி நிறைவோடு வாழும் பலரும், நல்வாழ்வளித்து வரும் அம்பாளுக்கு எந்த ஒரு கோரிக்கையுமின்றி தம் வாழ்நாள் முழுவதும் தன் பக்தியை வெளிப்படுத்தும் விதமாகவும் வருடம்தோறும் பால்குடம், அக்கினிச்சட்டி, பூக்குழி இதில் ஏதேனும் ஒன்றை நன்றிக்கடனாக செலுத்துபவர்கள் ஏராளம்.

குடும்பத்தில் உள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு தொடர்ந்து உடல் நலமின்றி இருத்தல். குழந்தை பாக்கியம் அருளவேண்டி, தொழில் வளர்ச்சி அடைய, திருமணம் கைகூட, ஏவல், சூன்யம் அகல, மேலும் அளவுக்கு மீறிய மனரீதியான, உடல் ரீதியான நோய்கள் மற்றும் கஷ்டங்களை சந்திக்கும் போது அன்னை ஜெனகை மாரியிடம் சரணடைந்து வேண்டிக் கொள்கிறார்கள் .

**வைகாசி பெருந்திருவிழாவில் நேர்த்திக்கடன்களை செலுத்தவிருக்கும் பக்தர்கள் வைகாசி முதல் தேதியில் இருந்து கடைபிடிக்கவேண்டிய கட்டுப்பாடுகள்:-**

- ❖ நேர்த்திக்கடன்களை செலுத்தவிருக்கும் பக்தர்கள் மது, அசைவம், தாம்பத்ய உறவு ஆகியவற்றை கண்டிப்பாக தவிர்த்தல் அவசியம்.
- ❖ அகத்தி கீரை போன்ற அவித்து உண்ணும் கீரை வகைகளை சமைக்கக்கூடாது. அதேபோல வீட்டில் பயிறு வகைகள் அவித்தல் கூடாது.
- ❖ காப்பு கட்டிய நபரின் வீட்டில் உள்ள எவரும் - குழந்தை பிறப்பு ,பெண் பருவமடைதல் போன்ற சுப தீட்டு வீடுகளுக்கு செல்வது கூடாது.
- ❖ அதே போல தவிர்க்கவே முடியாத ரத்த சம்பந்த தொடர்புடைய மற்றும் நெருங்கிய சம்பந்த உறவுகளில் மரணம் நேருதல் போன்ற அசுப தீட்டு வீடுகள் மற்றும் சுபதீட்டு வீடுகளில் கலந்துக்கொண்டே ஆகவேண்டும் என்ற நிலைமை இருந்தால் முறைப்படி கோவிலுக்கு சென்று அங்குள்ள அர்ச்சகர்களிடம் விபரம் தெரிவித்து மஞ்சள் காப்பினை ஒப்படைக்கவேண்டும்.
- ❖ அதே நேரத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு சென்று விட்டு வந்தவுடனே மீண்டும் காப்பு கட்டி நேர்த்திக்கடனை செலுத்துதல் கூடாது.
- ❖ மேலும் பிரார்த்தனை செய்துகொண்ட ஒரு நேர்த்திக்கடனுக்கு பதிலாக இன்னொரு நேர்த்திக்கடனை செலுத்தவும் கூடாது.

**அம்மனுக்கு காப்பு கட்டிய பின்பு பக்தர்கள் கடைப்பிடிக்கவேண்டிய கட்டுப்பாடுகள்**

- ❖ நேர்த்திக்கடனை சுபமாக நிறைவேற்றிவிட்டு மஞ்சள் காப்பினை திருக்கோவிலில் ஒப்படைக்கும் வரை, முடிந்த அளவு உணவை வாழை இலையில் உண்ணுவது சிறப்பு.
- ❖ தினந்தோறும் வாழை இலையில் சாப்பிடமுடியாவிட்டால் ஒரு புதிய தட்டினை வாங்கி அதில் சாப்பிடலாம். காப்பு கட்டியவர் வழக்கமாக தான் சாப்பிடும் தட்டில் உணவருந்துவதை தவிர்த்தல் நலம்.
- ❖ கூடுமானவரை காலில் காலணி அணிவதை தவிர்த்தல் நலம்.
- ❖ காப்பு கட்டிய பக்தர்கள் அழகு சாதனங்கள் மூலம் தங்களை அழகுபடுத்திக் கொள்வதில்லை. வாசனை திரவியங்கள் உபயோகப்படுத்தாமலிருப்பது நலம். ஜவ்வாது, மஞ்சள், குங்குமம் சந்தனம் இவைகளை உபயோகிக்கலாம்.
- ❖ காப்பு கட்டிய பக்தர்கள் விரத காலங்களில் மஞ்சளாடையையே அணிவர். மஞ்சள் ஆடை என்பது அம்பாளின் சீருடை என்பதை உணர்ந்து அணிபவர்கள் ஏராளம் பேர். ஒருவேளை மஞ்சள் ஆடை அணிந்து பணிக்கு செல்ல முடியாதவர்கள் பகட்டில்லாத சாதாரண உடைகளை அல்லது வேலை சம்பந்தப்பட்ட சீருடைகளை அணிந்துகொள்வதும் உண்டு.

**ஜெனகை மாரியம்மனுக்கு மூன்று வருட நேர்த்திக்கடன் வழக்க முறை**

ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் முறையானது, மற்ற சக்தி பீடங்களை போல அல்லாமல் சற்று மாறுபட்டு அமைந்து காணப்படும். பழங்காலமாகவே பக்தர்கள் ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்திவதில் ஒரு மரபை கடைபிடித்து வருகின்றனர். எந்த ஒரு நேர்த்திக்கடனாக இருந்தாலும் தொடர்ந்து மூன்று வருடம் செலுத்த வேண்டும் என்பதே.

**நேர்த்திக்கடன் தடங்கல்**

- ❖ பிரார்த்தனை செய்துகொண்டவர்கள் மூன்று வருட நேர்த்திக்கடனை செலுத்தும்போது நடுவில் சுப தீட்டு மற்றும் அசுப தீட்டில் கலந்து கொள்வதால் தடங்கல் ஏற்பட்டதாக ஆகிறது. முதல் வருடம் வேண்டுதலை நிறைவேற்றிவிட்டு இரண்டாம் வருடம் நிறைவேற்றமுடியாமல் தடங்கல் ஏற்பட்டால், இரண்டாம் வருடத்தை மீண்டும் முதல் வருடமாகவே கணக்கில் கொள்ளப்பட்டு நேர்த்திக்கடனை செலுத்தும் வழக்கம் இத்தலத்தில் பக்தர்களால் பின்பற்றப்படும் ஒன்றாகும்.

**தீட்டு என்பது...**

- ❖ சுப தீட்டு - குழந்தை பிறப்பு மற்றும் பெண் பருவமடைதல் போன்றவை.
- ❖ அசுப தீட்டு - ரத்த சம்பந்த தொடர்புடைய / நெருங்கிய உறவில் மரணம் சம்பவித்தல் போன்றவை.
- ❖ அதே போல இரண்டு வருடம் வேண்டுதலை நிறைவேற்றி மூன்றாவது வருடம் தடங்கல் ஏற்பட்டாலும், மூன்றாம் வருடத்தை மீண்டும் முதல் வருடமாகவே கணக்கில் கொள்ளப்பட்டு ஆரம்பிக்கிறனர்.
- ❖ மூன்று வருடமும் எந்தவித தடைகள் இல்லாமல் நேர்த்திக்கடனை பூரணமாக நிறைவேற்றுபவர்கள், ‘‘இந்த வருடத்தோடு மூன்றாவது வருடம் முடிகின்றது’’ என்று சொல்லாமல் ‘‘இது நிறைவருடம்’’ என்று சொல்லும் வழக்கமும் மக்களிடையே உள்ளது.

**அக்கினிச் சட்டிக்கு எண்ணெய் விடுதல்**

- ❖ அம்மனின் அருளோடு தமது கரங்களில் அக்கினிச்சட்டியை ஏந்தி வரும் பக்தர்களின் அக்கினிச்சட்டியில் எண்ணெய் விடுவதற்கு நிறைய விசேஷ காரணங்கள் உண்டு. குறிப்பிட்ட வேண்டுதல்களுக்கு மட்டும் தான் எண்ணெய் விட வேண்டும் என்ற கட்டுப்பாடு எதுவுமில்லை. அதன்படி உதாரணமாக பெரும்பாலானோர்...
- ❖ குழந்தை பேறு வேண்டுபவர்கள் குழந்தை வரம் அருள வேண்டி, ‘‘அக்கினிச்சட்டியில் உருவாகும் நெருப்பினை வளர்க்க நான் எண்ணெய் ஊற்றுகிறேன். என் வம்சத்தை வளர்க்க எனக்கொரு வாரிசு கொடு தாயே’’ என வேண்டி கொண்டு எண்ணெய் ஊற்றுவர்.
- ❖ திருமணத்தடை உள்ளவர்கள், துஷ்ட கிரக தோஷங்கள் மாறி நல்ல வாழ்க்கைத்துணை கிடைக்க வேண்டும் என்று ஸ்ரீஜெனகை மாரியின் பொற்பாதம் பணிந்து வேண்டி, அக்கினிச்சட்டி நெருப்பில் அனைத்து தோஷங்களும் எரிய வேண்டும் என்று வேண்டி அக்கினி சட்டிக்கு எண்ணெய் விடுவர்.
- ❖ வியாபாரிகள் கண்திருஷ்டி, தொழில் முடக்கம், தொழில் போட்டி இவையாவும், ஸ்ரீஜெனகைமாரியை நினைத்து பக்தர்கள் ஏந்திவரும் சட்டியில், தமது கஷ்டங்களை எண்ணெய் வடிவில் சமர்ப்பிப்பதாகவும் எண்ணெய் ஊற்றுவர்.

- அக்கினி சட்டிக்கு எண்ணெய் விடும்போது ஒற்றைப்படை எண்ணிக்கையில் 9,11,17,19,21,31,51 என ஒன்றை தேர்வு செய்து சுத்தமான நல்லெண்ணெய் விடுவது சிறந்தது.

## அக்கினி சட்டிக்கும் பூக்குழிக்கும் விறகு வாங்கி கொடுத்தல்:-

- பூக்குழிக்கு விறகு வாங்கி கொடுக்க அம்பாளின் அடியவர்கள் எண்ணினால் வைகாசி முதல் தேதியில் இருந்தே வீட்டில் சுத்தமாக இருந்து விறகு வழங்க வேண்டும். விறகுதானே கொடுக்கப்போகிறோம் இதற்கு நாம் ஏன் சுத்தத்தை கடைபிடிக்கவேண்டும் என்று அலட்சியமாக இருந்துவிடக்கூடாது. ஏன் என்றால் பூக்குழி என்பது மாரியம்மனே முன் நின்று நடத்தும் யாகத்திற்கு ஒப்பானதாகும். இத்தகைய ஒப்பற்ற வேள்விக்கு காய்ந்த வேம்பு மரங்கள் வாங்கி போடுவது பெரிய புண்ணிய செயலாகும். நாம் பக்தியுடன் சமர்ப்பிக்கும் விறகின் நெருப்புத்தனலில் அன்னை ஸ்ரீஜெனகை மாரி தன்பொற்பாதம் பதித்து இறங்கி வரப்போகிறாள் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.
- பூக்குழிக்கு நன்கு காய்ந்த வேப்ப மரத்து விறகுகளை வாங்கிப் கொடுப்பதால், நம் கஷ்டங்கள், முன்ஜென்மவினை, முன்னோர் சாபம், செய்வினை, ஏவல் கோளாறு போன்ற அத்தனையும் அக்கினிகுண்டத்தில் போட்டு எரித்து விடுவதோடு மட்டுமல்லாமல் அன்னை ஜெனகை மாரி தன் பொன்னடியை அக்கினியில் பதித்து பக்தர்களின் அனைத்து தீவினைகளையும் ஒன்றுமில்லாமல் செய்து நம்மை காக்கிறார்.
- வேப்ப மரத்து விறகை தவிர மற்ற மரத்தின் விறகுகளை வழங்குவதை கூடுமானவரை தவிர்ப்பது நல்லது. அதேபோல வேப்ப மரத்தின் குச்சி மற்றும் சல்லி விறகாய் இல்லாமல், பெரிய பெரிய சிராய் விறகாக மட்டுமே வழங்க வேண்டும். அம்மனுக்கு உகந்தது வேம்பு மட்டும்தான் .
- மரணமடைந்த அசுப வீட்டு நபராக இருந்தால் ஒருவருடம் நிறைவடையாமல் விறகு வாங்கி தருவதை தவிர்க்கவேண்டும்.
- குழந்தை பிறப்பு, பெண் பருவமடைந்த சடங்கு போன்ற சுப தீட்டு வீடாய் இருந்தால் அந்த நாளில் இருந்து 30 நாட்கள் கழிந்துவிட்டால் பூக்குழிக்கு விறகு வாங்கி தரலாம்.

## பூக்குழி வைபவம்

ஸ்ரீஜெனகை மாரியம்மனிடம் வேண்டிக்கொள்ளும் பல்வேறு பிரார்த்தனைகளில் பூக்குழி மிகவும் கடுமையான கட்டுப்பாடுகளை கடைபிடித்து நிறைவேற்ற வேண்டிய நேர்த்திக்கடனாகும். 90 வருடங்களுக்கு முன்பு ஜெனகை மாரியம்மன் கோவில் முன்பு பூக்குழி திடல் அமைத்து பக்தர்கள் இறங்கி உள்ளனர். அந்த காலத்தில் பூக்குழி இறங்கும் பக்தர்களின் எண்ணிக்கை பத்து பேருக்கு மிகாமல் தான் இருந்துள்ளது. அதன் பின், காலங்கள் செல்லச் செல்ல பக்தர்களின் எண்ணிக்கையும் அதிகமாகி கொண்டே சென்றதால் பூக்குழி திடல் சோழவந்தான் பேருந்து நிலையம் அருகே உள்ள மந்தைகளத்திற்கு மாற்றப்பட்டது.

**1961ல் ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயத்தின் முன்பாக பூக்குழி விழா நடைபெற்ற போது எடுத்த படம்**
**(பூக்குழி இறங்கி வருபவர் நிறுவை முத்தையா அவர்கள்)**

பூக்குழி தினத்தன்று மாலை நான்கு மணியளவில் ஆலயத்தில் இருந்து தன் கைகளில் மஞ்சள் துணியேந்தி அதில் மலராத மல்லிகை மொட்டுக்களை நிரப்பிக்கொண்டு தாய் ஸ்ரீஜெனகை மாரி தன் சகடைத்தேரில் அமர்ந்து முன்னே செல்ல பக்தர்கள் அவரை பக்தியோடு பின் தொடர்ந்து பூக்குழி நடைபெறும் இடத்தை அடைவர். அன்னை மஹா சக்தி ஸ்ரீஜெனகை மாரி, பூக்குழி திடலை மஞ்சள் துணியாகவும், திடலில் நிறைந்துள்ள அக்கினிக்கனலை மல்லிகை பூவாகவும், அக்கினிக் குண்டம் இறங்கி வரும் தன் அடியவர்களை பூப்போல ஏந்திக் கொள்ள தயாரான கோலத்தில் தன்

பொற்கரங்களில் மஞ்சள் துணியில் மல்லிகை மொட்டுக்கள் நிரப்பி, பூக்குழி இறங்கி வரும் தன் பிள்ளைகளை தாயுள்ளத்தோடு தன் மடியேந்தி காத்தருள அவர்களின் நேர் எதிரே அமர்ந்து அனைவரையும் ரட்சித்து அருள்வார் இப்பிரபஞ்சத்தின் ஜெகத்ரட்சகி ஸ்ரீஜெனகை மாரி.

பூக்குழியில் முதலில் பம்பை மேளம் வாசிப்பவர் இறங்கி செல்ல, பின் அம்பாளின் சக்தி கரகத்தை சுமந்துகொண்டு கோவிலின் பூசாரி பூக்குண்டம் இறங்க, சக்தி கரகத்தினை தொடர்ந்து நூற்றுக்கணக்கான பக்தர்கள் தொடங்கி இரவு ஏழு மணிவரை பூக்குழியில் இறங்கிக்கொண்டே இருப்பார்கள்.

## பூக்குழி திடலில்

தாயின் மடியில் தவழ வரும்
ஓடிவரும் மகள்

மல்லிகை போல் தன் மகளை
மென்மையாய் மடியேந்தி காக்க
தன் கையேந்தி காத்திருக்கும் தாய்

**ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயத்தின் அர்ச்சகர் அம்மன் கரகத்துடன் பூக்குழி இறங்கும் காட்சி**

## பூக்குழி நேர்த்திக்கடன் செலுத்தும் முறைகள்

- பூக்குழி இறங்கும் பக்தர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர்கள் கூடிய வரை மூன்றுமாத கொடி ஏறும் போதிருந்தே மிக கவனத்துடன் சுத்தமாகவும் பக்தியாகவும் இருந்து வருவது மிக அவசியம்.
- சூழ்நிலை காரணமாக அப்படி இருக்க முடியாத சூழ்நிலையில் இருப்பவர்கள் மிக குறைந்த பட்சமாக வைகாசி மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து கண்டிப்பான முறையில் மனதாலும் உடலாலும் சுத்தத்தை கடைபிடிக்க வேண்டும்.
- பூக்குழி இறங்கும் பக்தர்கள் காப்பு கட்டிய பின் மஞ்சளாடை அணிந்து தினமும் இரண்டு முறை குளித்து விட்டு கோவிலுக்கு செல்வது சிறந்தது.
- பூக்குழி இறங்க திடலுக்கு செல்லும் பக்தர்கள் சிலமணித்துளிகளுக்கு முன்பு தமது மடியில் 3 எலுமிச்சம் பழம் சொருகி வைத்துக் கொண்டு கையில் ஒரு எலுமிச்சம்பழம், அரளி இலை மற்றும் வேப்பிலை இவை இரண்டையும் கையில் வைத்துக் கொண்டு பூக்குழி இறங்குவர்.
- அரளி காளியின் அடையாளமாகவும், வேப்பிலை மாரியின் அடையாளமாகவும், இவ்விருவரின் துணையோடு பூக்குழியில் இறங்குவதாக பொருள்படும். பூக்குழி இறங்க செல்லும் பக்தர்கள் பாதுகாப்பு கருதி கண்டிப்பாக பருத்தி ஆடைகளை மட்டுமே அணிவது நல்லது.

## அங்க பிரதட்சணம் (உடல் வலம் வருதல்)

அங்கப்பிரதட்சணத்திற்கு தேவ வலிமையும், ஆன்ம சக்தியும் அதிகம் உள்ளது. காரணம் என்னவென்றால் ஆலயங்களிலும், கிரிவலப்பாதைகளிலும் எண்ணற்ற சித்தர்களும், மகரிஷிகளும் தூல, சூட்சும வடிவில் வலம் வந்து பூஜித்து கொண்டிருப்பதால் ஆலயப் பிரதட்சிண வளாகமே ஆன்ம பூமியாகப் பொலிகின்றது.

எனவே அங்கப் பிரதட்சிணத்தில அனைத்து அவயங்களும் பூமியிற் பதிந்து ஆங்கே வலம் வரும் சித்தர்களின், யோகியரின், மகரிஷிகளின் புனிதமான இடங்களில் ஒரு முறையேனும் அங்கப்பிரதட்சணம் செய்திடலால் எண்ணற்ற பல கர்ம வினைகளை எளிதில் மாய்த்திடலாம்.

உண்மையில் அங்கப் பிரதட்சிண வழிபாடு ஒரு விதத்தில் பூஜை முறையே! வேறு எந்த வித எண்ணங்களும் புகாது உடலின் அனைத்து நாளங்களிலும், நாடிகளும் கலியுகத்தில் ஒருமித்துச் செயல்படும் யோக, தியான வல்லமை கூடுவதாகின்றது. மேலும் கோயில் பிரகாரங்களில் கண்ணுக்குத் தெரியா வகையிலும், ஸ்தூல வடிவிலும் எப்போதும் வலம் வரும் உத்தமர்களின் திருவடி பூஜா சக்திகளும் இதன் மூலம் நமது உடலில் நிறைந்திடும். அங்கப் பிரதட்சணம் செய்வதால் குடும்பத்திற்கே பல தலைமுறைகளுக்கான அளவற்ற அருட்சக்தி பொழிந்திடும்.

- அங்கப்பிரதட்சணம் துவங்கும் முன் கோவில் கிணற்றில் குளித்துவிட்டு ஈர ஆடையுடன் சன்னதியின் முன் ஸ்ரீஜெனகைமாரியம்மனை வணங்கி கொடிமரத்திலிருந்து கோவிலை மூன்று முறை உருண்டு வந்து பின்பு நீரில் குளித்து பின்பு ஜெனகை மாரியை தரிசனம் செய்வதாகும்.
- அங்கபிரதட்சணம் செய்பவர்கள் வைகாசி முதலே உள்ளத்தூய்மையும் உடற்தூய்மையும் கடைபிடிப்பிடித்தல் அவசியம்.
- உடலால் அன்னையை வலம் வரும் சமயத்தில் கையில் வேப்பிலை வைத்துக்கொண்டு ஸ்ரீஜெனகை மாரியின் திருநாமத்தை கூறிக்கொண்டே வலம்

வருவர். உடல்வலம் முடிந்த பிறகு கோவிலின் தீர்த்தக்கிணற்றில் குளித்து மீண்டும் அம்பாளை வணங்கி பிரார்த்தனையை முழுமைபெற செய்யலாம்.

- கூடுமானவரை திருவிழா மற்றும் விசேஷ நாட்கள் போன்ற பக்தர்கள் கூட்ட நெரிசல் நேரங்களில் இப்பிரார்த்தனை நிறைவேற்றுவதை தவிர்த்துவிட்டு கூட்டம் இல்லாத நாட்களில் பிரார்த்தனையை நிறைவேற்றலாம்.
- ஆலய வளாகத்திற்குள் அம்பாளின் சன்னதியினை மூன்று முறை வலம் வருவது பெரும்பாலான பக்தர்களால் நிறைவேற்றப்படுகிறது. அதே போல வைகை ஆற்றில் நீராடிவிட்டு ஆற்றங்கரையில் இருந்தே அங்கப்பிரதட்சணத்தை துவங்கி ஒரே ஒருமுறை நான்கு ரதவீதிகளிலும் உருண்டு வந்து நேர்த்திக்கடனை நிறைவேற்றுபவர்களும் உண்டு. இங்கு நாம் உணர வேண்டியது யாதெனில் நான்கு ரதவீதிகளிலும் உடல்வலம் வருபவர்களுக்கு ஸ்ரீஜெனகை மாரியம்மன் தன்னுடைய பேரருளை எந்த அளவிற்கு அள்ளி வழங்கியிருந்தால், உயிர்காத்துக் கொடுத்திருந்திருந்தால் இத்தகைய கடினமான நேர்த்திக்கடனை அம்பாளுக்கு நிறைவேற்றுகிறார்கள் என்பதே.

## ஸ்ரீஜெனகை மாரியிடம் மடிப்பிச்சை கேட்டல்

- மடிப்பிச்சை என்பது ‘‘இரத்தலின்’’ உச்ச நிலை ஆகும். இது இறைவனிடமோ அல்லது இறைவன் பெயரால் மனிதரிடமோ மிகவும் இறைஞ்சிக் கேட்கப்படும் யாசகம் ஆகும். மடிப்பிச்சை கேட்டால் கண்டிப்பாக வழங்கப்படும் என்று நம்பப்படுகிறது. மடிப்பிச்சை காணிக்கை செலுத்தும் பிரார்த்தனை என்பது, குறிப்பிட்ட காரணங்களுக்காக மட்டும் நேர்ந்துக்கொள்ளும் நேர்த்திகடனில்லை. அவை பிரச்சினைகளின் தீவிரத்தன்மையை பொறுத்தது. இருப்பினும் பெரும்பாலான பக்தர்கள்...
- தாள முடியாத, மீள முடியாத பிரச்சினைகளை வாழ்வில் எதிர்கொள்ளும்போது அதிலிருந்து விடுவிக்க வேண்டியும், நோய் மற்றும் விபத்து பாதிப்பிலிருந்து உயிரை காத்தருள வேண்டியும், பலவருடமாக குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் தன் மடியில் குழந்தை தவழும் வரம் கொடு தாயே என வேண்டிக்கேட்டுக் கொண்டு குழந்தை பிறப்பிற்கு முன்போ அல்லது பின்போ தன் மடியில் (சேலையின் முந்தானை தலைப்பு) காணிக்கைப்பெற்று உண்டியலில் செலுத்துவதாக நேர்ந்துகொள்கிறார்கள்.
- இன்னும் சிலர் ஸ்ரீஜெனகை மாரிக்கு பலவருடங்களுக்கு முன் நேர்ந்து கொண்ட நேர்த்திக்கடனை மறந்துவிட்ட நிலையில் அதற்கு ஈடாக மடியேந்தி பக்தர்களிடம் காணிக்கை பெற்று உண்டியலில் செலுத்தி மறந்த பிரார்த்தனையை ஈடு செய்யலாம்.

## மடிப்பிச்சை நேர்த்திக்கடனை நிறைவேற்றும் முறை

- ❖ பிரார்த்தனையை நிறைவேற்ற மடியேந்தி பக்தர்களிடம் காணிக்கை கேட்கும் போது கையில் பெறாமல், பெண்களாக இருந்தால் சேலையின் முந்தானை தலைப்பிலும், ஆண்களாக இருந்தால் புதிய மஞ்சள் துண்டிலோ வேப்பிலை, விரலிமஞ்சள், எலுமிச்சம்பழம் இந்த மூன்று மங்கல பொருட்களை வைத்துக் கொண்டு பக்தர்களிடம் மடிக்காணிக்கை பெறுவர்.
- ❖ ஒரே இடத்தில் நின்று கொண்டோ அல்லது ஒவ்வொரு பக்தரையும் அணுகியோ பக்தர்களிடம் மடியேந்தி காணிக்கை கேட்கலாம். மடிக்காணிக்கை கேட்கும் போது கையில் மஞ்சள் காப்போ, மஞ்சள் ஆடையோ அணிய வேண்டியதில்லை. ஆடம்பரம், அழகு சாதன அலங்காரமின்றி நீங்கள் விரும்பிய மதிக்கத்தகுந்த ஆடைகளை உடுத்திக்கொள்ளலாம். யாசக கோலத்தில் வாங்க வேண்டியதில்லை.
- ❖ மடிக்காணிக்கை எடுப்பதாக நேர்ந்து கொண்டவர் யாரோ அவர்தான் மடியேந்தி காணிக்கை கேட்க வேண்டுமே தவிர அவருக்கு பதிலாக குடும்பத்தில் இருக்கும் வேறொருவர் காணிக்கை கேட்பதில்லை. அதே சமயத்தில் மடிக்காணிக்கை பெறுபவரோடு அவரது குடும்ப உறுப்பினர்கள் அவருடன் இருக்கலாம்.
- ❖ எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் மடியேந்தி பக்தர்களிடம் காணிக்கை கேட்கலாம். ஆனால் மிக குறைந்தபட்சமாக ஒரு 21 பேராவது மடியில் காணிக்கை செலுத்தியபிறகுதான் மடிக்காணிக்கையின் மூலம் கிடைத்த காணிக்கையை ஜெனகை மாரிக்கு செலுத்தவேண்டும்.
- ❖ குறிப்பாக நீண்ட நாள் திருமணம் ஆகாதவர்கள், திருமணம் கைகூடவேண்டி, மடிக்காணிக்கை பெறுபவராக இருந்தால் மடியேந்தி பெற்று அதில் பாதித்தொகையை திருக்கோவில் உண்டியலில் செலுத்திவிட்டு, மீதமுள்ள தொகையை இரண்டு பங்காக பிரித்து மஞ்சள் துணியில் கட்டி ஒரு பங்கை திருமணம் கூடி வந்த பின் திருமண செலவின்போது உபயோகப்படுத்துவர். மீதமுள்ள இன்னொரு பங்கு தொகையை திருமணம் நிறைவேறியபின் தனது வாழ்க்கை துணையோடு திருக்கோவிலுக்கு இருவரும் சேர்ந்து வந்து உண்டியலில் செலுத்துவர்.

## மண் உருவ பொம்மை காணிக்கை செலுத்துதல்

- ❖ உடலில் எந்த ஒரு அங்கம் (கால், கண், தலை, கை போன்றவை) நோயினாலும், விபத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், அம்பாளின் கருணை வேண்டி பாதிக்கப்பட்ட தன் உடலையும் உடல் பாகத்தையும் அம்பாளுக்கு அர்ப்பணிப்பதாக சரணடைந்து மண்ணாலான உருவ பொம்மை வடிவில் காணிக்கையாக செலுத்துவதாக கூறி வேண்டிக்கொள்ளும் வழக்கம் இத்தலத்தில் உள்ளது. மேலும் குழந்தை வரம் வேண்டியும், குழந்தை பாக்கியம் அடைந்ததற்கும், குழந்தைகளின் உடல் நலமடைய வேண்டி தவழும் ஆண்-பெண் குழந்தை மண் உருவ பொம்மைகள் வாங்கி அம்மனுக்கு செலுத்தப்படுகிறது. அதுமட்டுமின்றி வீட்டு வளர்ப்பு பிராணிகள் உடல்நலம் பெறவேண்டி கன்றுடன் கூடிய பசு, நாய் போன்றவையின் உருவ பொம்மையும் அம்பாளுக்கு காணிக்கையை செலுத்தப்படுகிறது.

- ஸ்ரீஜெனகை மாரியின் பெருங்கருணையினால் கோரிக்கை நிறைவேறுவதற்காகவோ அல்லது கோரிக்கை நிறைவேறிய பின்போ, மண் உருவ பொம்மையை கடைகளில் வாங்கி, கோவிலில் அதற்குரிய காணிக்கை ரசீது பெற்று அதற்கு மஞ்சள், குங்குமமும், மலரும் இட்டு அம்பாளை மும்முறை வலம் வந்து வணங்கிய பின் சன்னதியின் வெளிப்புற வளாகத்தில் வைத்துச்செல்வது வழக்கம்.

**பிடி காசு காணிக்கை உண்டியலில் செலுத்துதல்**

- இப்பிடிக்காணிக்கை நேர்த்திக்கடன் செலுத்துவதற்கான கீழ்கண்ட காரணங்கள் உதாரணங்கள் மட்டுமே. இவைதவிர மற்ற காரணங்களுக்காகவும் நேர்ந்து கொள்ளப்படுகிறது.
- ஸ்ரீஜெனகை மாரியம்மனிடம் வேண்டிக்கொண்ட பிரார்த்தனைகள் நிறைவேறியபின், பிரார்த்தனை செய்து கொண்டவரின் இரு கைகள் நிறைய காசுகளையோ, பணத்தாள்களையோ அள்ளி குறைந்த பட்சம் மூன்று முறை உண்டியலில் செலுத்துவதே பிடிக்காணிக்கை பிரார்த்தனையாகும். அம்பாளுக்கு காணிக்கை செலுத்தும் போது கணக்குப்பார்த்தல் கூடாது என்பதால் காணிக்கையிடுபவர்கள் பணத்தை கணக்குப்பார்த்து எண்ணிச் செலுத்துவதில்லை. பிரார்த்தனைகளில் சில உதாரணமாக...
- வேலை கிடைத்ததும் முதல் மாத வருமான தொகையில் பிடிக்காணிக்கை செலுத்துவதாகவும்
- விவசாயிகளுக்கு பயிர்விளைச்சல் நல்ல முறையில் கிடைத்தவுடன் செலுத்துவதாகவும்,
- படிக்கும் மாணவர்கள் தேர்வில் நல்லமதிப்பெண்கள் வாங்கி தேர்ச்சி அடைந்தவுடன் பிடி காணிக்கை செலுத்துவதாகவும்,
- உடல் நல குறைவால் பாதிக்கப்பட்ட பிறந்த குழந்தை முதல் பெரியவர்கள் வரை குணமானவுடன் பிடிக்காணிக்கை செலுத்துவதாகவும்,
- அம்பாளின் அருளாசியுடன் திருமணத்தடையை தகர்த்தெறிந்து திருமணம் நடந்த பின், திருக்கோவிலுக்கு வாழ்க்கைத்துணையுடன் வந்து பிடிக்காணிக்கை செலுத்துவதாகவும் வேண்டிக்கொள்ளும் பக்தர்கள் ஏராளம் ஏராளம்.

**பட்டு பரிவட்டம் காணிக்கை வழங்குதல்**

தானத்தில் தலை சிறந்த தானம் அன்னதானம். அதற்கடுத்தாற்போல் சிறப்புடன் விளங்குவது மானம் காக்கும் வஸ்திரதானம். இதற்கு ஒரு உதாரணமாக பண்டைய காலத்தில் நடந்த வரலாற்றுச் சம்பவத்தை நினைவு கூறலாம்.

ஒரு சமயம் துர்வாசமுனிவர் நதியில் நீராடிக் கொண்டிருந்த வேளையில் நதியின் வேகத்தில் அவர் அணிந்திருந்த ஆடையானது வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது. உடலில் வஸ்திரம் இல்லாத காரணத்தினால் துர்வாசமுனிவர் நீருக்குள்ளேயே நின்றார்.

மறுகரையில் நீராடிக்கொண்டிருந்த துரௌபதி இதை அறிந்து தமது ஆடையின் ஒரு பகுதியை கிழித்து நதியில் விட்டு முனிவரிடம் செல்லுமாறு ஆணையிட்டார். துரௌபதி விட்ட வஸ்திரத்தை அணிந்துகொண்டு துர்வாசர் கரை ஏறினார். கரை ஏறிய துர்வாசர் துரௌபதியை நோக்கி எமது மானம் காக்க தக்க சமயத்தில் வஸ்திரம் அளித்து உதவி

செய்தாய். ஆகவே உன் மானம் காக்க அது ஆயிரம் வஸ்திரங்களை மாறும் என்று வரமளித்தார்.

துரியோதனின் சபையில் துட்சாதனன் துயில் உரியும் போது துரௌபதியின் வஸ்திரம் முடிவே இல்லாது நீண்டு கொண்டே சென்று சபையோர் முன் திரௌபதியின் மானம் காத்தது. இந்நிகழ்விற்கு துர்வாசரின் வரமே காரணம் என வரலாறு தெரிவிக்கிறது.

வஸ்திர தானத்தை பொறுத்தவரை இல்லாதோருக்கும் இயலாதோருக்கும் கொடுப்பதே பெரும் நன்மையையும் மங்கலமும் நமக்கு கிடைக்கிறதென்றால், இத்தகைய ஒப்பற்ற பலனை தரவல்ல வஸ்திர வழங்கலை நம் ஜெகன் மாதா ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு காணிக்கையாக, நமது பிறந்தநாள், திருமண நாள், தனிப்பட்ட நேர்த்திகடன்களாக நாம் பணிந்து சமர்ப்பித்து மகிழ்வதன் மூலம் நமது முன்வினைகளை நீக்கி நம் குடும்பத்தின் நல் வாழ்வை காக்கும் பொறுப்பை ஸ்ரீஜெனகை மாரி ஏற்றுக்கொண்டு ஒப்பற்ற வாழ்வளிப்பார் என்பது திண்ணம்.

## தங்கம் மற்றும் வெள்ளி ஆபரண காணிக்கை வழங்குதல்

ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு பெரும்பாலான பக்தர்களால் தங்க வெள்ளி ஆபரண அணிகலன்களாக, பூஜைக்குரிய பொருட்களாகவும் விரும்பி வழங்கி வருகிறார்கள். இன்னும் பலரோ சிற்றாடை ரூபிணி ஸ்ரீஜெனகை மாரியை தன் வீட்டு குழந்தையென பாவித்து, அழகுபார்க்கும் மனதுடன் எவ்வித கோரிக்கையுமின்றி காணிக்கையாக செலுத்திய வண்ணம் இருக்கின்றனர்.

மேலும் திருமணமாகாத ஆண்கள் தன் கோரிக்கையை அம்பாளின் பொற்பாதத்தில் பணிந்து சமர்ப்பித்து, தேவியின் திருவருளால் திருமண கோரிக்கை நிறைவேறிய பின், புதிதாய் திருமாங்கல்யம் ஒன்றை வாங்கி தம்பதி சமேதராய் திருக்கோவிலுக்கு வந்து உண்டியலில் செலுத்தி நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதுண்டு. அதேபோல ஜாதகத்தில் மாங்கல்ய தோஷம் இருப்பதாக பக்தர்கள் நம்பிக்கை கொண்ட ஜோதிடம் மூலம் தெரிந்துகொண்டால் ஸ்ரீஜெனகை மாரியம்மனை மனதார வேண்டிக்கொண்டு திருமாங்கல்யத்தை உண்டியலில் செலுத்துகின்றனர். இதன் மூலம் தன் கணவரை பாதுகாத்துக்கொடுக்கும்படி அம்பாளிடம் ஒப்படைப்பதற்கு சமமானதாக கருதுகிறார்கள். தவிர அம்பாளின் கருணையால் குழந்தைவரம் பெற்றவர்கள் நன்றிக்கடனாக வெள்ளிக்கொலுசும் வெள்ளிஅரைஞாண் கயிறும் உண்டியலில் செலுத்துவதும் நடைபெற்று வருகிறது. தவிர பொன், வெள்ளியால் கண் மலர், திரி சூலம் போன்ற பற்பலவற்றையும் செலுத்தி பணிகின்றனர்

மேற்கூறிய "கோரிக்கை காரணங்கள்" உதாரணங்கள் மட்டுமே. இன்னும் எண்ணற்ற கோரிக்கைகளுக்காக மக்கள் காணிக்கை வழங்குவதை காணும் போது பலரது வீட்டிலும் ஸ்ரீஜெனகை மாரியே குழந்தையாய் பிறந்து அருள்கிறார் என்பதை உணரமுடிகிறது.

இவையெல்லாவற்றையும் தவிர அம்மனின் தினசரி அலங்கார உபயோகத்திற்கு ஆபரண அலங்காரம் செய்திட மிகுந்த அழகுடன் கூடிய தங்கமல்லாத கிரீடம், நெக்லஸ், ஆரம், ஒட்டியாணம், புல்லாக்கு ஆகியவையும் அம்மனுக்கு வாங்கி கொடுத்து அழகுபார்க்கும் பக்தர்களும் உள்ளனர்.

## ஸ்ரீஜெனகை மாரியிடம் குழந்தையை ஒப்படைத்து தத்துப்பெறுதல்

ஜாதகரீதியான கிரக தோஷங்களால் குழந்தைகளுக்கு ஏற்படும் உபாதைகளை அகற்றுவதற்குண்டான பரிகாரம் தான், ‘‘தத்துக் கொடுத்தல்’’ எனப்படுகிறது.

இந்த முறையில் குழந்தையை அம்பாளுக்கு தத்துக் கொடுத்து திரும்ப பெறுவதால் அக்குழந்தை ஸ்ரீஜெனகை மாரியின் பூரண அருளுக்கு பாத்திரமான குழந்தையாகி விடுகிறது. ஆக அம்பாளின் குழந்தையை அச்சுறுத்தும் அதிகாரம் எந்த கிரகங்களுக்கும் இல்லை. அன்னையின் பேரருளுக்கு முன்னால் அனைத்து கிரகங்களும் செயலற்றுப் போய்விடுகிறது. அக்குழந்தை பூரண ஆயுளோடு நற்திறனுடன் வளர்கிறது.

அங்ஙனம் தத்து கொடுக்க விரும்புபவர்கள், குழந்தையின் மாமன் உறவுமுறை தம்பதிகளுடன் குழந்தையின் பெற்றோர் இருவரும் இணைந்து சென்று முதலில் குழந்தையை கோவிலில் கிடத்தி அம்பாளை மனதார வேண்டிக்கொண்டு சிலநிமிடங்களுக்கு பிறகு குழந்தையை அம்மனிடமிருந்து பெற்றுக்கொண்டதற்கு ஈடாக பொருளோ, பணமோ உண்டியலில் காணிக்கையிட்டு அம்பாள் ஆசீர்வதித்த குழந்தையை பெற்றோர் இருவரும் ,குழந்தையின் மாமன் முறையில் உள்ளவரை, குழந்தையை தூக்கி தரச்சொல்லி பெற்றுக்கொள்வர். மாமன் முறையினர் இல்லாத சூழ்நிலையில் கோவிலின் அர்ச்சகர் மூலமாக குழந்தையை வாங்கி கொள்ளலாம்.

## குழந்தை வரம் வேண்டி தொட்டில் கட்டுதல்

- ஸ்ரீஜெனகை மாரியின் எல்லையில்லா கருணையினால் குழந்தைபாக்யம் பெற்று மகிழ்ந்தவர்களின் எண்ணிக்கையை எண்ணிலட இயலாது.
- புதிய திருமண தம்பதிகளும், நீண்ட நாட்களாக குழந்தைச் செல்வம் கிடைக்கப்பெறாதவர்களும், குழந்தை தொட்டில் கட்டிச்செல்லும் வழக்கம் இத்தலத்தில் உள்ளது.
- பெண்கள், தான் அணிந்துள்ள சேலையின் முந்தானை தலைப்பை தேவையான அளவிற்க்கு கிழித்து அதன் உள்ளே பிடிகொழுக்கட்டை அளவில் உள்ள ஒரு கல்லை வைத்து தொட்டில் கட்டியும் செல்கின்றனர். இந்த முறையில் நேர்த்திக்கடன் செய்வது மிக சிறப்பான ஒன்றாக மக்களால் சொல்லப்படுகிறது.
- இப்படி செய்ய முடியாத நிலை எனில் மஞ்சள் துணி ஒன்றை புதிதாய் வாங்கி அதில் ஒரு கல்லை குழந்தையாய் நினைத்து கோவிலில் பிள்ளை தொட்டில் கட்டுவர்.
- இவ்விரு முறைகளிலும் கோரிக்கை தொட்டிலை கட்ட முடியாத சூழ்நிலையில் இருக்கும் தம்பதிகள், கடைகளில் குழந்தை பொம்மையுடன் கூடிய மரத்தினால் / மண்ணால் ஆன தொட்டிலை வாங்கி அந்த தொட்டிலுக்கு சந்தனம் குங்கும திலகமிட்டு சன்னதியின் பின்புறம் கட்டி, தொட்டிலை தம்பதியர் இருவரும் சேர்ந்து மூன்று முறை ஆட்டி விட்டு வணங்கி செல்வர்.
- பின் குழந்தை பாக்கியம் கிட்டியபின் குழந்தையுடன் திருக்கோவிலுக்கு வந்து அம்பாளின் திருப்பெயரை குழந்தைக்கு சூட்டுதல் அல்லது குழந்தையின் பெயருடன் அம்பாளின் பெயரையும் இணைத்து வைத்தல், குழந்தைக்கு முடிகாணிக்கை செலுத்துதல், பட்டு வஸ்திரம் அளித்து சர்க்கரை பொங்கல் வைத்து அம்பாளை வழிபடுவது போன்ற வகையில் பக்தர்கள் தமது நன்றிக்கடனை நிறைவேற்றுவர். மேலும் அவரவர் மனவிருப்பத்திற்கு ஏற்றபடி பக்தர்கள் தங்களது மஹாசக்திக்கு நன்றியை தெரிவிப்பர்.

## உப்பு மிளகிடுதல்

இத்திருத்தலத்தில் ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு வருடம் முழுவதும் பக்தர்களால் உப்பு மிளகிடுதல் நடைபெற்று வருகிறது. எதிலிருந்து தோன்றியதோ அதிலேயே கரைவது என்பதை வலியுறுத்தும் தத்துவமே, இதற்கு அடிப்படை. நீரிலிருந்து தோன்றியது தான் உப்பு. சுவைக்காக சேர்த்தாலும் அளவு மிகையானாலும், குறைந்தாலும் ருசி கெடும் அது போல வாழ்க்கையும் முறையோடு வாழவேண்டும். தோன்றி இருந்து, மறையும் உப்பு போல நம் வாழ்வும், உடலும் தோன்றி வாழ்ந்து மறையும் நாடகம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்கிற தத்துவமேயாகும். அதேபோல....

- ❖ உப்பு கடல் நீரில் உருவாக்கப்படுபவை. மிளகு, மலை நிலங்களில் விளையக் கூடிய ஒரு மருத்துவ குணம் படைத்த பொருள். கடல் நீரை உப்பு வடிவிலும், மணம், காரத்தினை மிளகு வடிவிலும் அம்பாளுக்கு வழங்கி அவளுக்கே அமுதூட்டுவதற்கு சமமாக பாவித்து உப்பும் மிளகும் ஆலயத்தின் முன்புள்ள பலிபீடத்தில் கொட்டப்படுகிறது. மேலும் தமக்கு ஏற்படும் கஷ்டங்கள் அனைத்தும் உப்பைப் போல் கரைய வேண்டும் என வேண்டி மூன்று மாத கொடி கம்ப பலிபீடத்தில் உப்பு மிளகு கொட்டப்படுகிறது.
- ❖ உடலில் கட்டி, பரு மரு உள்ளவர்கள் உப்புடன் மிளகை கலந்து, திருக்கோவில் முன்புள்ள பலி பீடத்தில் கொட்டினால், உப்பு கரைவது போல் உதிர்ந்து விடும் என்பது மக்களின் பெரும் நம்பிக்கை. எனவே பரு, மரு கட்டி உள்ளவர்கள் உப்பு மிளகு வாங்கி போடுவதாக நேர்ந்து கொண்டு கொட்டப்படுகிறது.
- ❖ மன அழுத்தம், மனக்கவலை உள்ளவர்கள் உப்பு மிளகு வாங்கிப் போடுவதால் உப்பு கரைவது போல் மனக்கவலை, மன அழுத்தம் இவையாவும் கரைந்து விடும் என தீராத நம்பிக்கையும் மக்களிடையே உள்ளது.
- ❖ உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பது மக்களின் வழக்கு மொழியாகும். தாய் ஜெனகை மாரிக்கு பொங்கல், பூஜைகள், அபிஷேகங்கள் நாம் நிறைய செய்தாலும் ‘‘உப்பையும் உனக்காக படைக்கிறோம். உப்பிட்ட எங்களை நீ உன் உள்ளளவும் நினைத்து உன் மனதில் இடமளி தாயே’’ என வேண்டினால், உப்பிட்ட நம்மை தாய் ஜெனகை மாரி தன் உள்ளளவும் நினைத்து அருள்வார் என்ற அளவுகடந்த நம்பிக்கையிலும் உப்பு மிளகு பலி பீடத்தில் கொட்டப்படுகிறது.

## கரும்புள்ளி செம்புள்ளி வேடமணிதல்

- ❖ வைகாசி திருவிழாவின் பதினாறாம் நாள் திருவிழாவான திருத்தேரோட்ட நாளன்று, திருத்தேர் நான்கு ரத வீதிகளில் பவனி வருவதற்கு முன்பே அந்த ஆண்டு அம்மை பார்த்த / பார்க்காத சிறுவர் சிறுமிகள், தமது உடலில் வண்ண வண்ண நிறங்களால் வண்ண புள்ளிகளிட்டு, சிறியோரும் பெரியோரும் ரதவீதி சுற்றி வருவர்.
- ❖ கரும்புள்ளி செம்புள்ளி குத்தி ஊர் சுற்றி வருவதன் காரணம், தேரோட்டத்தின்போது ஜெனகை மாரியம்மன் தேரேறி வீதி வலம் வரும் சமயம் ஒவ்வொரு வீட்டையும் பார்த்துச் செல்வாள் என்பது மக்களின் நம்பிக்கை.
- ❖ அச்சமயம் தாயே உன் வீட்டு குழந்தைகள் மேல் நீ அம்மையாக வந்து சென்றதற்கு அடையாளமாக செம்புள்ளி கரும்புள்ளி வண்ணமிட்டு வீதியுலா

வந்து உன்னை வரவேற்றுவிட்டோம் என ஸ்ரீஜெனகை மாரியை பணிந்து தெரிவிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

- ❖ கரும்புள்ளி செம்புள்ளி குத்திய குழந்தைகள் அனைவரும் வீதியுலாவின்போது இடுப்பில் வேப்பிலை சொருகிக் கொண்டும், கையில் மஞ்சள் தடவிய தேங்காயுடன் வேப்பிலையையும் சேர்த்து வைத்துக்கொண்டு அன்னையின் திருப்பாடலொன்று பாடி வருவார்கள்.
- ❖ “ஆஹோ ஐயாகோ, மாரியாத்தா கும்பம், மாவிடிச்சா திம்போம், ஆத்தா ஆத்தா மாரியாத்தா ஆயிரம் மக்களை பெற்ற ஆத்தா என்னையும் சேர்த்து பாராத்தா” என்று பாடி வருவார்கள்.
- ❖ வீதிவலம் வந்து கையில் வேப்பிலைத் விடலைத் தேங்காய் கொண்டு சுற்றி வந்து மூன்று மாத கம்பத்தடியில் தேங்காயை உடைத்து விட்டு பின் அம்பாளை தரிசனம் செய்து கோவில் தீர்த்தக் கிணற்றில், ஆற்றில், வீட்டில் நீராடலாம்.
- ❖ கரும்புள்ளி செம்புள்ளி வண்ண வேடமிட பயன்படுத்தும் கரிக்கட்டை, நாமக்கட்டி அல்லது விபூதி, மஞ்சள், குங்குமம் இவை அனைத்தும் ஒவ்வொரு அம்மை வகையை குறிக்கும். எனவே செம்புள்ளி கரும்புள்ளி வடிவில் எல்லா வகை அம்மையாகவும் உன்னை நான் ஏற்றுக்கொண்டேன் அம்மா என்று நாம் தாய் ஜெனகை மாரியிடம் நாம் அன்புடன் தெரிவிப்பதாகும்.

## குழந்தை பேறு கிடைத்தமைக்கு கரும்புத் தொட்டில் காணிக்கை நேர்த்திக்கடனுக்கான காரணங்கள்

- ❖ நீண்ட நாள் குழந்தை இல்லாதவர்களும், பெண் குழந்தை பாக்கியம் மற்றும் ஆண் குழந்தை பாக்கியம் வேண்டும் என்று, என வேண்டிக்கொண்டு ஸ்ரீஜெனகை மாரியம்மனின் பேரருளால் குழந்தை பாக்யம் பெற்ற பின் நிறைவேற்றும் நேர்த்திகடனாகும்.

## பிரார்த்தனை நிறைவேற்றும் முறை

- ❖ குழந்தை பிறந்த ஒருவருடத்திற்கு பின் இனிப்பான குழந்தை வரம் கொடுத்த ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு குழந்தையின் மூன்று வயதிற்குள் இனிப்புள்ள கரும்பு கட்டு ஒன்றில் புதிய மஞ்சள் சேலையில் தொட்டில் கட்டி குழந்தையை அதில் படுக்கவைத்து நான்கு ரதவீதி சுற்றி வந்து கோவிலை வலம் வந்து நேர்த்திக்கடன் செலுத்துவர்.
- ❖ இரு நிற கரும்பில் எதுகிடைத்தாலும் கரும்பு தொட்டில் கட்டலாம். குழந்தையின் எடையை தாங்கும் அளவுக்கு கரும்பின் எண்ணிக்கை ஒற்றைப்படையிலும், முழுக்கரும்பாகவும் இருக்கவேண்டும்.
- ❖ தொட்டியில் படுக்க வைத்துள்ள குழந்தை அழும்பட்சத்தில் குழந்தையின் பெற்றோர் தொட்டிலுடன் குழந்தையை அரவணைத்து சுமந்து வரலாம்.
- ❖ நேர்த்திக்கடன் நேர்ந்த குழந்தையை தொட்டிலில் வைத்து தூக்க முடியாத அளவிற்கு வளர்ந்து விட்டிருந்தால், குழந்தையை கரும்பு தொட்டிலை தன் கைகளில் பிடிக்கச்செய்து நான்கு ரதவீதி சுற்றி நடந்தும் வரச்செய்யலாம்.
- ❖ ரதவீதி சுற்றிவந்தபின் கரும்பு கட்டை கோவிலில் வைத்துவிட்டு மஞ்சள் சேலையை எடுத்துக்கொள்ளலாம்.

### ஆயிரம் கண் பானை செலுத்துதல்

- ❖ அம்மை கண்டவர்கள் அம்மை இறங்கிய பின்பு, விரதம் இருந்து ஆயிரம் கண் பானையை காணிக்கையாக கோவிலில் செலுத்தும் நேர்த்திக்கடன் ஆகும்.
- ❖ ஒரு வகையில் ஸ்ரீஜெனகை மாரி அம்மனுக்கு ஒரே சமயத்தில் ஆயிரம் விளக்குகளை ஏற்றி வழிபடுவதற்கு சமமானதாக கருதப்படும் வழிபாடாகும். ஒரு சிலருக்கு உடம்பில் பிணிகள் வந்தாலும் ஆயிரம் கண் பானை எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தலாம். குடும்பத்தில் அதிகமாக திருஷ்டி இருந்து பல நஷ்டம் வந்தால் அதை போக்க அம்மனுக்கு ஆயிரம் கண் பானை சமர்ப்பிப்பார்கள்.
- ❖ பலதுளைகளிட்ட மூடியுடன் கூடிய மண் பானையில் சந்தனம் குங்குமம் திலகமிட்டு மலர்கொண்டு சுற்றி பானையின் உள்ளே அகல் விளக்கினை எறியச்செய்து, பின் நேர்த்துக்கொண்ட பக்தர் தம் தலையில் அல்லது கையில் சுமந்து கோவில் பிரகாரத்தை மூன்று முறை சுற்றி வலம் வந்து அம்பாளை வணங்கிச் செல்வர்.
- ❖ ஸ்ரீஜெனகை மாரி தன்னுடைய ஆயிரம் கண்ணில் அரைக்கண் கொண்டு நம்மை பார்த்தாலும் திருஷ்டிகள், தீவினைகள் ஓடிவிடும். எனவே ஆயிரம் பானை நேர்ந்து கொண்டு கோவிலில் செலுத்துவது மிக மிக சிறப்பு.

ஆயிரம் கண் மாரியம்மா!
உன் அரைக்கண்ணாலே பார்த்திடம்மா!

## மாவிளக்கு எடுத்தல்

### நேர்த்திக்கடனுக்கான காரணங்கள்

- ❖ ஸ்ரீஜெனகை மாரியின் சன்னிதியில் ஏற்றப்படும் பலவிதமான தீபங்களில் மாவிளக்கு தீபமும் ஒன்று. பன்னெடுங்காலமாக இதனை பிரார்த்தனையாகச் செய்வது வழக்கத்தில் இருக்கிறது. அம்மனுக்கு மாவிளக்கேற்றினால் அம்மன் மனம் குளிர்ந்து அருள்புரிவாள் என்பது ஐதீகம். அதுமட்டுமின்றி அரிசி மாவும், வெல்லமும், நெய்யும் கொண்டு அன்னைக்கு அமுதூட்டுவதற்குச் சமமானதாகும். இது பலகாலமாக முன்னோர்களால் செய்யப்படும் முக்கியமான வழிபாடு ஆகும்.

### பிரார்த்தனை நிறைவேற்றும் முறை

- ❖ நமது மனதையும் ஆன்மாவையும் ''தீபஜோதி'' என இந்து மதம் குறிப்பிடுகிறது. ஆதலால் நம் ஆன்மாவை ஸ்ரீஜெனகை மாரியம்மனின் பாதகமலத்தில் சமர்ப்பிப்பதாகவே மாவிளக்கு தீபஜோதியை நம் உடல் அங்கங்களில் வைத்து எடுத்து பின் அதனை கோவில் பிரகாரத்தில் வைத்துச் செல்கிறோம். அதன்படியே பச்சரிசி மாவையும், வெல்லச் சர்க்கரையும், ஏலக்காய் போன்ற வாசனைப் பொருட்களையும் ஒன்றாகச் சேர்த்து, அதில் நெய் விட்டு மாவாகப் பிசைந்து, அந்த மாவை வாழை இலையின் நடுவில் பரப்பி, அந்த மாவின்

நடுப்பகுதியில் குழிபோல் செய்து அதில் நெய் விட்டுத் திரி போட்டு தீபம் ஏற்றி தெய்வ சன்னிதியில் குடும்ப உறுப்பினர்களை ஒவ்வொருவராக படுக்கவைத்து வாழை இலையில் உள்ள மாவிளக்கு தீபத்தினை அவர்களின் தலையில் இருந்து பாதம் வரை வைத்து வணங்கி அதனை அம்பாளிடம் வைத்து செல்வர். இந்த முறையில் வழிபாடு செய்வதே மாவிளக்கு தீபமேற்றுதல் என்று கூறப்படுகிறது.

- ❖ இவ்வாறு மாவிளக்கு ஏற்றி பிரார்த்தனை செய்து கொள்வதால், நம்முடைய வாழ்வில் எந்தவொரு நற்காரியமும் தடங்கலின்றி நடக்க அன்னை ஸ்ரீஜெனகை மாரி அருள் புரிகிறார்.
- ❖ திருவிழாவில் அக்கினிச் சட்டி, பால்குடம் எடுப்பது என்று நேர்த்திக்கடன்கள் நிறைவேற்றியவர்கள் மறுபூஜையாக பொங்கல், மாவிளக்கு எடுப்பது வழக்கம்.
- ❖ அம்மை வந்து இறங்கிய பிறகும், சிலருக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்து குணமான பிறகும் ஸ்ரீஜெனகை மாரியை பணிந்து நன்றி தெரிவிக்கும் விதமாகவும் மாவிளக்கு பிரார்த்தனை செய்வோரை கணக்கிடவே முடியாது. அந்த அளவிற்கு லட்சோப லட்சம் பக்தர்களை ‘‘பெற்றவர்’’ நம் ஜெகன்மாதா ஸ்ரீஜெனகை மாரி.

## ஸ்ரீ ஜெனகை மாரியம்மனுக்கு துலாபாரத்தில் காணிக்கை செலுத்துதல்

துலா என்றால் தராசு எனப்படும். ஸ்ரீ ஜெனகை மாரியம்மனிடம் பக்தர்கள் மனமுருகி வேண்டி தமக்கு குழந்தை பாக்கியம் மற்றும் விரைவில் திருமணம் நடக்க வேண்டியும், உடல் நிலை சீரடையவும், துலாபாரம் செலுத்துவதாக வேண்டிக்கொள்ளும் பக்தர்கள், தங்களது பிரார்த்தனை நிறைவேறியதும் காணிக்கையாக தங்களது எடைக்கு எடை சர்க்கரை, வெல்லம், அச்சுவெல்லம், கற்கண்டு நெல், அரிசி, பருப்பு, தானியங்கள், பழங்கள், வாழைப்பழத்தார், நெய், நாணயங்கள், எண்ணெய் வகைகள், போன்றவற்றை துலாபாரபாரத்தில் காணிக்கையாக செலுத்துகிறார்கள். குழந்தை வரம் பெற்றவர்கள், அக்குழந்தையின் எடைக்கு சம அளவில் மேற்ச்சொன்ன பொருட்களில் ஏதேனும் ஒன்றை துலாபார காணிக்கையாக செலுத்துகின்றனர்.

பண்டைக்காலத்தில் மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் என்ற மன்னன் திருவரங்கத்தில் இருக்கும் அரங்கநாதனுக்கு கொடுத்த துலாபாரத்தினை பல்வேறு நூல்கள் உரைக்கின்றன. மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் பட்டத்துயானையின் மேல் அமர்ந்து அதற்கு நிகரான தங்கம், நவரத்தினங்கள் போன்ற பொக்கிஷங்களை கொடுத்ததாக வரலாறு உள்ளது. அவர் திருவரங்க ஆலயத்தின் நான்கு வீதிகளிலும் இருபத்து நான்கு துலாபுருச மண்டபங்கள் அமைத்து, அவற்றில் துலாபாரம் அமைத்து பொன்னையும், நவ மணிகளையும் கொடுத்துள்ளார். அத்துடன் பட்டத்து யானையை ஒரு படகில் ஏற்றி, தானும் போர்க்கோலம் பூண்டு அதில் ஏறி படகு எந்த அளவிற்கு நீரில் அமிழ்கிறதோ அந்த அளவிற்கு மற்றொரு படகில் தங்கம், நவரத்திரம், ஆபரணம் போன்ற பொற்குவியல்களை நிரப்பி சமமான அளவுடைய பொக்கிஷங்களை அரங்கனுக்கு கொடுத்துள்ளார். இந்த வரலாறு கல்வெட்டுப் பாடலொன்றில் பதிவாகியுள்ளது.

‘பாயல் கொள்ளும் பரமயோகத்து ஒரு பெருங்கடவுளும்
இனிதுறையும் இருபெருங் காவிரி இடை நிலத்திலங்கும்
திருவரங்கம் பெருஞ்செல்வம் சிறப்புப் பன்முறை அணி
துலாபாரமேறிப் பொன்மலையென்னப் பொலிந்து தோன்றவும்’
என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் துலாம் ராசியில் பிறந்தவர்கள் தாளாத துயரங்களில் தவிக்கும்போது, தன்னை மீட்டு தமது வாழ்வில் ஒளியேற்றுமாறு ஸ்ரீ ஜெனகை மாரியம்மனை வேண்டி பிரார்த்தித்துக் கொள்கின்றனர். அவரவர் பிரார்த்தனை நிறைவேறியதும் அப்பக்தரின் எடைக்கு ஈடாக துலாபாரத்தில் காணிக்கை செலுத்துகின்றனர்.

**காதணி விழா மற்றும் வளைகாப்பு விழா**

ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் ஆலயத்தில் பக்தர்களின் இல்ல விழாவான திருமண வைபவங்கள் எப்போதும் நடைபெறுவதில்லை. மாறாக புதிதாக துவங்கும் வாழ்க்கை எந்நாளும் நிறைவோடும் மங்களகரமாக இருந்திட வேண்டும் என்று திருமணமான தம்பதிகள் தங்களுக்கு திருமணம் முடிந்த அன்றைய தினமே தம்பதி சமேதராக உற்றார் உறவினர்களின் புடை சூழ அம்பாளின் பேரருளை பெற ஸ்ரீ ஜெனகை மாரியம்மனின் ஆலயம் வந்து பிரார்த்தித்துக்கொள்வது வழக்கமான ஒன்றாகும்.

**காதணி விழா**

வீரம் செறிந்த தமிழ்க்குடும்பத்தினர் தங்கள் குழந்தைகளை ‘இறைவனுக்கே’ இந்துமத மூலவர்களுக்கே காணிக்கையாக வளர்த்து, ஒற்றைப்பட எண்ணிக்கையுள்ள ஆண்டுக் கணக்கில் (1,3,5,7….) தெய்வத்தின் திருமுன்னர் கொண்டு சென்று முடியகற்றி (மொட்டையடித்து) நீராட்டி, எந்தவித உலக பந்தபாசச் சொந்த சொத்துமின்றி நிறைய மன நிலையில் நிறுத்தி, காது இரண்டும் குத்திப் பசிய குருதித்துளியைக் கருவறை முன் காணிக்கையாக்கி அருளுலகப் பட்டியலில் தங்களின் குழந்தையையும் இடம் பெறச்செய்வார்கள். இதுவே காதணி விழாவின் தத்துவமாகும். இவ்வாறான சிறப்புப்பெற்ற குழந்தைகளின் காதணி விழா வைபவத்தினை பக்தர்கள் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் ஆலயத்தில் வைத்து அம்மனின் நிறைவான அருளாசியோடு நடத்தும் நல் நிகழ்வுகளும் நடைபெற்று வருகிறது.

**வளைகாப்பு**

வளைகாப்பு என்பது பண்டைய தமிழர் காலத்தில் இருந்து கருவுற்ற தாய்மார்களுக்கு செய்துவரும் ஓர் சடங்கு ஆகும். இச்சடங்கினை சீமந்தம் என்றும் அழைக்கின்றர். முதல்முறையாகக் கருவுற்றவர்களுக்கு 5 ஆம் மாதம் 7ஆம் மாதம் 9 ஆம் மாதம் ஆகிய காலங்களில் ஏதாவது ஒன்றில் அவரவர் குடும்ப வழக்கப்படி செய்கிறார்கள்.

இப்பூமியில் புதிதாகப் பிறக்கப் போகும் குழந்தையை உற்றார், உறவினர்களோடு இணைந்து வரவேற்பதே “வளைகாப்பு” என்னும் அற்புத நிகழ்வாகும்.

இவ்வாறான பெரும் சிறப்புடைய சீமந்த விழாவை ஸ்ரீஜெனகை மாரியம்மனின் பெருங்கருணையினால் குழந்தை பேறினைப் பெற்றவர்கள் தமக்கு பிறக்கவிருக்கும் குழந்தை மிகுந்த ஞானத்தோடும் அழகுடனும் ஆற்றல் மிக்கவராக பிறந்திடவேண்டி ஸ்ரீஜெனகை மாரியம்மன் கோவிலிலேயே வைத்து சிறப்புடன் நடத்தி அம்மனின் பரிபூரண நல் ஆசியினை பெற்று குழந்தைப் பேறு அடைவதைக் காணமுடிகிறது.

**அன்னதான உபயம் செய்தல்**

பசியால் வாடும் பலருக்கும் உணவளிப்பவர்கள் அவர்களின் பசியை மட்டும் நீக்கவில்லை. அவர்களுக்கு உயிர் கொடுத்தவர் ஆகிறார். இதையே மணிமேகலை...

“ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உயிர்க் கொடை பூண்ட உரவோயாகிக்
கயக்கறு நல்லறங் கண்டனை” என்று கூறுகிறது.

- தானத்தில் சிறந்த தானமாக அன்னதானமே உயர்ந்தது என சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. நமது இல்லங்களில் சாப்பிட அழைத்தால் வர தயங்குபவர் கூட பலருண்டு. அதே நேரத்தில் ஆலயத்தில் நாம் அன்னதானம் செய்வதால் பாகுபாடின்றி அனைவரும் அம்பாளின் அடியார்களாக, நாம் வழங்கும் அன்னதானத்தை அம்மனின் பிரசாதமாக உண்டு மனம் நிறைந்து செல்வார்கள். இதனால் நம் முன்ஜென்ம வினைகளும் ஓடி மறைகிறது
- பிறந்தநாள் காணும் பக்தர்கள், தமது குழந்தையின் பிறந்த தினம், திருமண கோரிக்கை நிறைவேறியவர்கள், அம்பாளின் அருளால் குழந்தை பெற்றவர்கள், பெற்றோர்கள் மற்றும் முன்னோர்களின் நினைவு தினம், உடல்நிலை சரியில்லாமல் இருந்து குணம் பெற்றவர்கள், வருடம் ஒருமுறை தாம் விரும்பும் நாளன்று அன்னதானம் கொடுப்பவர்கள் என பல்வேறு காரணங்களுக்காக அன்னதானம் வழங்குவதால், தாய் ஸ்ரீஜெனகை மாரி நம் ஆயுள் முழுவதும் நம் பசிக்கு உணவளித்து மகிழ்ச்சி கொள்வார். அதுமட்டுமல்லாது அன்னதானம் உண்ட அனைவரும் வயிறும் மனமும் நிறைந்து திருத்தலத்தில் நம்மை வாழ்த்திச் செல்வதோடு, அம்மனின் பூரண நல்லாசிக்கும் பாத்திரமாகிறோம்.
- கோரிக்கை, நேர்த்திக்கடன் எதுவுமின்றியும் ஸ்ரீஜெனகைமாரியம்மன் ஆலய நிர்வாகம் மூலமாக அன்னதானம் கொடுக்கலாம். அன்னதானம் நடைபெறுவதற்கு சில வாரங்களுக்கு முன்கூட்டியே திருக்கோவில் அலுவலகத்தில் அன்னதானத்திற்க்கான பணத்தை கொடுத்து முன்பதிவு செய்துகொண்டால் நாம் விரும்பிய தேதியில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. ஸ்ரீஜெனகை மாரியம்மன் சன்னதியில் அன்னதான உபயம் கொடுப்பது மிக மிக புண்ணிய காரியம் ஆகும்.
- இத்திருக்கோயில் தினமும் மதியம் 12.00 மணிக்கு அன்னதானம் நடைபெறுகிறது. விரும்பியபோதெல்லாம் அன்னதானம் செய்ய விருப்பம் உள்ளவர்கள் ஆலய நிர்வாகத்தை தொடர்பு கொள்ளலாம். அதுமட்டுமின்றி ஆலய நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு தொகையினை நிரந்தர டெபாசிட்டாக வங்கியில் செலுத்தும் வசதியும் உள்ளது .அதன் மூலம் கிடைக்கும் வட்டித்தொகையை கொண்டு வருடம் ஒருநாள் நாம் விரும்பிய நாளை தேர்வுசெய்து அன்னதானம் வழங்கச் செய்யலாம்.

## அம்பாளின் அடியவர்களுக்கு பானகம்

"பானகம்" என்பதற்கு தேவபானம் என்று பெயர். பானகம்... வெல்லம், புளி, ஏலக்காய், சுக்கு, மிளகு சேர்த்துத் தயாரிக்கப்படும் ஒரு நீராகாரம். இதைப் பானகம், பானகரம், பானக்கரம் என்றும் சொல்வார்கள். ஒவ்வொரு ஆண்டும் வைகாசி பெருந்திருவிழாவின் போது அக்கினி சட்டி, பால்குடம் வேண்டுதல்களை நிறைவேற்றும் பொருட்டு ரதவீதி சுற்றி வரும் பக்தர்களுக்கு, இப்பானகத்தை அம்மனுக்கே வழங்குவதாய்க்கருதி ஆங்காங்கே மக்களால் பக்தர்களுக்கு அன்புடன் வருடந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.

அதே போல பூக்குழி பிரார்த்தனையை நிறைவேற்றி ஆலயம் திரும்பும் ஸ்ரீஜெனகைமாரியின் பக்தர்களுக்கு தேவபானகத்தை வழங்குவது வழக்கமாக உள்ளது.

ஆயுர்வேதத்தில், குளுக்கோஸுக்கு நிகரான பானமாக சொல்லப்படுவது "பானகம்"..!

குறிப்பாக, கோயில் விழாவில், காவடி எடுப்பது, உடல்வலம் வருவது, பூக்குழி இறங்குவது போன்ற கடுமையான நேர்த்திக்கடன் செலுத்துபவர்களுக்கு மட்டுமன்றி பாதயாத்திரை மேற்கொள்ளும் பக்தர்களுக்கும் இது அதிக தெம்பளிக்கும் தேவாமிர்தம் என்றால் கூட மிகையாகாது.

இனிப்பும், புளிப்பும் கலந்த இந்தப் பானகம், கடுமையான விரதம் மேற்கொள்ளும் பக்தர்களின் உடலின் மொத்தக் களைப்பையும் நீக்கி, அவர்களுக்குப் புதுத்தெம்பை ஏற்படுத்தி, அவர்களது பக்தி பரவசத்துக்குத் துணை புரியும். இப்புண்ணியச்செயலை நாம் மேற்கொள்வதால் நம் வாழ்வின் வறட்சி நீங்கி மலர்ச்சி ஏற்படுவதாக மக்களிடம் நம்பிக்கை நிறைந்துள்ளது.

ஸ்ரீஜெனகை மாரியம்மனின் பக்தர்களுக்கு பானகத்தை அருந்தக்கொடுப்பது பெரும் நற்செயலாகும்.

**சுயம்பை வணங்கி**
**சுயம்பாய் வளர்வோம்!**

# அம்மையின் விதங்களும் கடைபிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகளும்

அம்மையில் நிறைய வகைகள் உள்ளன. முதலில் நமக்கு ஏற்பட்டுள்ளது அம்மைதானா என்பதை அம்மையின் தன்மையை பற்றி நன்கு அறிந்த நபர்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அம்மையை வந்ததை அறிந்து கொள்ள முடியாமல் சரும நோய் என மருத்துவரை அணுகி, மருத்துவருடைய அனுபவத்தில் அம்மை என கண்டறிந்து சொன்ன சம்பவங்களும் நிகழ்ந்துள்ளது. அம்மையெனில் மருத்துவர் மருந்துகள் ஏதும் கொடுக்காமல், வீட்டுமுறை பக்குவத்தை சொல்லி அனுப்பி குணமடைந்த செய்திகளும் ஏராளம்.

**அம்மையின் வகைகள்**

சின்னம்மை, பெரியம்மை, விளையாட்டம்மை, தட்டம்மை, பாலம்மை, கொப்புளிப்பான், மணல்வாரி, புட்டாலம்மை, பொன்னுக்கு வீங்கி, தவளையம்மை, கல்லம்மை, மிளகம்மை, கடுகம்மை, பாசிப்பயரற்றம்மை, வெந்தயம்மை, கொள்ளம்மை, பனியேறி, ஒரு குரு அம்மை, பனைமுகரி, ஒரு கருப்புக் குரு அம்மை, கரும்பனசை, பயறி, இராமக்கம், விச்சிலுப்பை அல்லது விச்சிலிர்ப்பான் சிச்சிலுப்பான் சிச்சிலிர்ப்பான், நீர்க்கொள்வான், உமியம்மை.

பெரும்பாலும் அம்மை வருவதற்கு மூன்று, நான்கு நாட்கள் முன்பே காய்ச்சல், ஜலதோஷம், இருமல், உடல்வலி, தலைவலி, கண் எரிச்சல் போன்றவை இருக்கும். பின் தோலில் எரிச்சலும், அரிப்பும் ஏற்படும். பிறகு முகம், கழுத்து, முதுகு, மார்பு என்று உடல் முழுவதும், கொப்புளங்கள் ஏற்படுகிது.

**அம்மையின் போது தவிர்க்க வேண்டிய உணவுகள்**

உடலுக்கு உஷ்ணத்தை தரும் உணவுகள், அதிக காரம், புளிப்பு நிறைந்த உணவுகள், மாம்பழம், அன்னாசி போன்ற பழங்கள், கத்தரிக்காய், சேனைக்கிழங்கு மற்றும் கருணைக்கிழங்கு வகைகளை சாப்பிட கூடாது. எண்ணெய் பொருட்கள் சேர்க்கக்கூடாது. ஏனென்றால் எண்ணெய், காரம் உணவில் சேர்த்தால் அம்மை கண்டவர்களுக்கு உடலில் எரிச்சலுடன் கூடிய அரிப்பு ஏற்படும்.

**அம்மையின் போது உண்ண வேண்டிய உணவுகள்**

அம்மை நோயின்போது, நீர்ச்சத்து நிறைந்த காய்களாகிய சௌசௌ, வெள்ளரிக்காய் போன்றவற்றை உட்கொள்ளலாம். நீர்ச்சத்துள்ள உணவுகள் மற்றும் பழங்கள் மோர், இளநீர், வாழைப்பழம், கோடை காலங்களில் கிடைக்கக் கூடிய நுங்கு மற்றும் தர்பூசணி, மாதுளை போன்றவை எடுத்து கொள்ளலாம். மேலும் மூன்று

வேளைக்கும் உணவாக கஞ்சி, கூழ், இட்லி, பால் சாதம், மோர் சாதம் அதிகம் காரம் இல்லாமல் பாசிப்பருப்பு சாம்பார் சாதம் போன்றவற்றை உணவாக கொடுத்தால் அம்மையின் தாக்கம் படிப்படியாக குறையும்.

**அம்மை என்று உறுதியாகிவிட்டால் கடைபிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகள்**

- ❖ அம்மை உள்ளவீடு என்று வெளி நபர்கள் உணருவதற்கு அடையாளமாக வேப்ப இலையை ஒரு கொத்து வீட்டின் முன் சொருகி வைக்கவேண்டும்.
- ❖ அம்மை இருக்கும்போது அந்நியர்கள் யாரும் நம் வீட்டிற்குள் நுழைந்திட அனுமதிக்கக்கூடாது.
- ❖ வீட்டில் பயிறு வகைகள் அவிக்க கூடாது.
- ❖ எந்தக் கீரையாக இருந்தாலும் சமைக்கக்கூடாது.
- ❖ காலணிகளை வீட்டில் முன் போடக்கூடாது.
- ❖ தானமாக பணமோ பொருளோ யாருக்கும் தரக்கூடாது.
- ❖ வீட்டில் அம்மை கண்டவர் இருக்கும் போது குடும்ப உறுப்பினர்கள் கூடுமானவரை தங்களை அழகு சாதனம் மூலம் தன்னை அலங்காரப்படுத்திக் கொள்ளக்கூடாது.
- ❖ அம்மை கண்டவர்கள் இருக்கும் போது வீட்டில் உள்ள மற்றவர்கள் வாசனை திரவியம் உபயோகிக்கக்கூடாது.
- ❖ அம்மை கண்டவர்கள் காட்டன் உடைகளையே உடுத்தவேண்டும்.
- ❖ வீட்டில் உள்ளவருக்கு அம்மை போட்டிருக்கும் சமயத்தில், எவ்வளவு முக்கியமானவராக இருந்தாலும், ரத்த சொந்தமாகவே இருந்தாலும் இறப்பு நிகழ்ந்த வீடு, கருமகிரியை வீடு போன்ற அசுப தீட்டு வீடுகளுக்கு செல்வது கூடாது.
- ❖ குழந்தை பிறப்பு பெண் வயது மூப்படைதல் போன்ற சுப தீட்டு வீடுகளுக்கு செல்ல கூடாது.
- ❖ அம்மை நம் வீட்டில் இருக்கும் போது மது, அசைவம், தாம்பத்ய உறவு ஆகியவற்றை கண்டிப்பாக தவிர்க்கவேண்டும்.
- ❖ மேலும் அம்மை உடையவர்களை உறவினர்களோ, பக்கத்து வீட்டில் உள்ளவர்களோ நேரில் வந்து பார்த்து நலம் விசாரிக்கக் கூடாது.
- ❖ அம்மை இறங்குவதற்கு முன் ஸ்ரீஜெனகை மாரியம்மன் கோவில் உட்பட எந்த கோவிலிலும் தேங்காய் பழம் உடைத்து வணங்கக்கூடாது.

**அம்மைக்கண்டவர்களுக்கு தீர்த்தம் வாங்கி கொடுத்தல்**

- ❖ அருள்மிகு ஸ்ரீஜெனகை மாரியம்மனின் திருமேனிக்கு அபிஷேகம் செய்யப்பட்ட வேப்பிலை கலந்த மஞ்சள் நீரே அம்மை கண்டவர்களுக்கு அருமருந்தாக வழங்கப்படுகிறது.
- ❖ அம்மை நோய் கண்டவர்களின் வீட்டில் உள்ளவர்கள் குளித்து விட்டு கோவிலுக்கு சென்று, வீட்டிலிருந்து கொண்டு சென்ற சிறு பாத்திரத்தில் தீர்த்தம் வாங்கி அதை அம்மை நோய் கண்டவர்களுக்கு ஒவ்வொரு நாள் காலை மற்றும் மாலை என இருவேளை குடிப்பதற்கு தர வேண்டும். மூன்று நாளைக்கு

ஒருமுறை கோவிலில் தீர்த்தத்தை பெற்றுச் சென்று அம்மைக் கண்டவருக்கு கொடுக்க வேண்டும்.

- ❖ தீர்த்தத்தை அம்மை கண்டவரின் உடலில் கண்டிப்பாக தெளிக்கக் கூடாது.
- ❖ இது தவிர விவசாயிகளின் வீட்டில் வளர்க்கும் ஆடு, மாடு போன்ற வாயில்லா பிராணிகளுக்கும் சிலசமயம் வாயில் அம்மை வருவதை காணமுடிகிறது. அச்சமயம் மருத்துவ சிகிச்சை மட்டுமின்றி கோவிலில் தீர்த்தம் வாங்கி அந்த பிராணிகள் அருந்தும் நீர் மற்றும் உணவில் கலந்து கொடுத்து அம்மை பரிபூரணமாக இறங்கிய நிகழ்வும் நடந்துள்ளது.
- ❖ அம்மைக்கு மக்கள்,மத பேதமின்றி அம்பாளின் மேல் நம்பிக்கை கொண்டு தீர்த்தம் வாங்கி செல்வதை காண முடிகிறது.

## அம்மை வந்தவர்களுக்கு தண்ணீர் ஊற்ற வேண்டிய தருணம்

- ❖ சிலருக்கு காய்ச்சலுடன் கூடிய அம்மை வருகிறது. அம்மை என்று நாம் தெரிந்து கொண்டால் காய்ச்சல் நின்றுவிடும் அதிசயமும் நிகழ்கிறது.
- ❖ தரையில் காட்டன் துணியை மட்டுமே விரித்து படுத்துக் கொள்ள வேண்டும். காட்டன் விரிப்பைச் சுற்றிலும், தலைமாட்டிலும் வேப்பிலையை வைத்துக் கொள்ள வேண்டும்
- ❖ அம்மை கண்ட நாளை நாம் குறித்துக்கொண்டு அன்றிலிருந்து 5 நாள், 7 நாள், 9 நாள், 11 நாள் என ஒற்றைப் படை வரிசையில் அம்மை ஏற்பட்டவர்களுக்கு முழுமையாக அம்மை இறங்கிய பிறகு தலைக்கு தண்ணீர் விடலாம்.
- ❖ அம்மை ஏற்பட்டவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை அன்று தலைக்கு தண்ணீர் ஊற்றக்கூடாது.
- ❖ மேலே சொன்ன நாள் கணக்குகளில் அம்மையால் உடலில் புண் ஏற்பட்டு இருந்தால் தலைக்கு தண்ணீர் ஊற்றக்கூடாது. புண் ஆறாமல் இருந்தால் நாள் கணக்கு பார்க்க வேண்டிய அவசியமில்லை. புண் முழுவதும் ஆறின பிறகு மட்டுமே தலைக்கு தண்ணீர் ஊற்ற வேண்டும்.

## அம்மை வந்தவர்களுக்கு தலைக்கு தண்ணீர் ஊற்றும் முறை

- ❖ புண் மறைந்து முழுவதுமாக அம்மை இறங்கிய பின் தலைக்கு தண்ணீர் ஊற்றுவதற்கு வீட்டு வாசலில் பலகை வைத்து, நிறை பானை அல்லது குடத்து நீரில் வேப்பிலை, மஞ்சள் தூள் போட்டு வெயில் படுமாறு குறைந்த பட்சம் 2 மணிநேரம் வைக்க வேண்டும். வெயில் வராத வீடாக இருந்தால் நிறை பானை நீரை பூஜை அறை பகுதியில் வைக்கலாம்.
- ❖ பிறகு மதிய வேளை இறங்கு பொழுதில் 1 மணிமுதல் 3 மணிக்குள் தலைக்கு தண்ணீர் ஊற்ற வேண்டும். குழந்தைகளாக இருந்தால் வெதுவெதுப்பான நீரை உபயோகிக்கலாம்.
- ❖ அம்மை கண்டவர்களின் தலைக்கு மேலே சொன்ன நேரத்தில் தொடர்ந்து மூன்று நாட்கள் தண்ணீர் ஊற்ற வேண்டும். மூன்று நாள் தண்ணீர் ஊற்றும் போது சோப்பு சீயக்காய், ஷாம்பூ உபயோகிக்க கூடாது. வெறும் மஞ்சள் வேப்பிலை கலந்த தண்ணீரை மட்டுமே ஊற்றவேண்டும்.

- வேப்பிலை, மஞ்சள் பொடி, சிறிதளவு பருத்தி விதை இவை மூன்றையும் சேர்த்து அரைத்து உச்சந்தலையில் ஐந்து நிமிடம் வைத்து, பின்பு மீதி இருக்கும் வேப்பிலை மஞ்சளை உடலில் தேய்த்து தண்ணீர் ஊற்ற வேண்டும்
- பருத்தி விதை சேர்த்தால் மறுபடி அம்மை வராது என்பது ஐதீகம். பருத்தி விதை கிடைக்காதவர்கள் வேப்பிலை மஞ்சள் மட்டும் அரைத்து உபயோகிக்கலாம்.
- அம்மைக்கண்டவருக்கு மூன்று நாட்கள் தொடர்ந்து தலைக்கு தண்ணீர் ஊற்றியபிறகு ஒவ்வொரு தினத்திலும் பானகம், பழச்சாறு, மோர் என ஒவ்வொன்றாக கொடுக்க வேண்டியது அவசியம்.

**அம்மை முழுவதுமாக இறங்கிய பின் செய்ய வேண்டியவை**

- அம்மை ஏற்பட்டவர்களுக்கு தலைக்கு தண்ணீர் ஊற்றும் முன் முதலில் அவர் படுத்திருந்த விரிப்பு மற்றும் வீடு முழுவதும் அலசி சுத்தம் செய்ய வேண்டும்.
- தலைக்கு தண்ணீர் ஊற்றியதில் இருந்து ஒரு வாரம் காரம் இல்லாமல் உணவு கொடுக்கவேண்டும். பழச்சாறு, காய்கறி சூப் கொடுக்கலாம்.
- ஒருவார காலத்திற்கு பிறகு அம்மை கண்ட நபரை கோவிலுக்கு அழைத்து சென்று அர்ச்சனை, அபிஷேகம், மாவிளக்கு எடுத்து அம்பாளுக்கு நன்றி தெரிவிப்பது வழக்கமாகும்.

**முத்துச் சொரிதல் நேர்த்திக்கடனை நிறைவேற்றும் முறை**

- உடலில் எந்த வகை அம்மை போட்டிருந்தாலும், அம்மை இறங்கியபின் நம் உடம்பில் வந்த அம்மையை மறுபடி முத்து வடிவில் ஜெனகை மாரிக்கு சமர்ப்பிப்பதாக ஐதீகம்.
- அதன் அடிப்படையில் முத்து சொரிதல் நேர்த்திகடன் செலுத்த கோவிலுக்கு செல்லும் முன் வேப்ப விதை, ஆமணக்கு விதை, புளிய விதை ஆகிய விதைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது மூன்றயும் கலந்தோ வாங்கி கோவிலுக்கு கொண்டு சென்று, இரு கைகளால் அள்ளி அம்மை போட்டவர்கள் தலையில் இருந்து பாதம் வரை மூன்று முறை போட வேண்டும்.
- இம்முறையில் தான் ஜெனகை மாரி போட்ட அம்மையை முத்து வடிவில் திருப்பி அவரிடமே ஒப்படைப்பதாக கருதப்படுகிறது.
- பெரும்பாலும் ஒரு சிலருக்கு அடிக்கடி அம்மை ஏற்படுவதும் உண்டு. முத்து சொரிதல் செய்வதால் அவர்கள் தொடர் அம்மை ஏற்படுவதிலிருந்து மீளலாம்.

சுயம்பை வணங்கி
சுயம்பாய் வளர்வோம்!

# ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலய வழிபாடும் கடைபிடிக்க வேண்டிய சாஸ்திர விதிகளும்

வழிபாட்டு முறைகளில், ஆலயத்தில் நாம் செய்ய வேண்டியவற்றை கடைப்பிடித்தால் தானே பலன் கிடைக்கும். கோயிலுக்குள் என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது என்பதை நாம் அறிந்து உணரவேண்டியது அவசியம்.

‘‘நாம் சந்தோஷம் நிறைந்த அமைதியான வாழ்வைப் பெறுவதற்காக, தினந்தோறும் ஆலயத்திற்கு வந்து மாரியம்மனின் தரிசனம் பெறுகிறோம். நம்மில் பலர் அம்பிகையின் அருளை பெறும் ஆர்வத்தில், தம்மையும் அறியாமல் ஆலயத்தில் கடைபிடிக்கவேண்டிய சாஸ்திர விதிகளை மீறிவிடுகிறோம். ஸ்ரீஜெனகை மாரி எங்கும் நீக்கமற நிறைந்து இருக்கிறார். எனவே ஆலயத்தின் சாஸ்திர விதிகளை நாம் பின்பற்றி அம்பாளை பணிந்து வழிபட வேண்டியது அவசியம்.

**கோயிலுக்குச் செல்லும் பொழுது...**

1. பிறப்பு, இறப்பு, தீட்டுக்களுடன் கோயிலுக்குள் செல்லக் கூடாது.
2. வெறும் கையுடன் கோயிலுக்குச் செல்லல் கூடாது. குறைந்த பட்சம் பூக்களையாவது கொண்டு செல்ல வேண்டும்.
3. குளிக்காமல் கோயிலுக்குள் செல்லக் கூடாது.
4. ஆலயத்திற்குள் சோம்பல் முறித்தல், தலை சிக்கெடுத்தல், தலைமுடியை விரிந்த கோலத்தில் போட்டுக் கொண்டு செல்லுதல் நிச்சயம் கூடாது.
5. திருக்கோவில் முன்பாக சென்றதும், கோபுரத்தின் அருகே நின்று, ஆண்கள் அனைவரும் இரண்டு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி வணங்க வேண்டும்.
6. பெண்கள் தங்கள் இரண்டு கைகளையும் தன் முகத்திற்கு வைத்து வணங்குவது போதுமானது
7. கைலி, தலையில் தொப்பி, தலைப்பாகை (முண்டாசு) அணிந்து கொண்டு செல்லக்கூடாது.
8. ஒழுங்கற்ற ஆடைகள், நீர்வடியும் ஈர துணி, ஓராடை மற்றும் அரைகுறை ஆடைகளுடன் கோயிலுக்குள் செல்லக்கூடாது.

**கோயிலுக்குள் இருக்கும்பொழுது...**

1. விநாயகரை இரு கைகளால், தலையில் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போட்டு வணங்கி வழிபட வேண்டும்.தீபம் ஏற்றி வழிபடுவது சிறப்பு.
2. நமது வேண்டுதல்களை நினைத்து, 48 நாட்கள் (ஒரு மண்டலம்) தொடர்ந்து விளக்கேற்றி வழிபாடு செய்தால், நினைத்தது நிறைவேறும்.

3. ஸ்ரீஜெனகை மாரியம்மனிடம் தன்னையே முழுமையாக அர்ப்பணிக்கும் வண்ணம், ஆண்கள் தரையில் விழுந்து வணங்க வேண்டும்.
4. பெண்கள் அனைவரும், பஞ்சாங்க நமஸ்காரம் முறையில், தலை மற்றும் இரண்டு முழங்கால்களையும் தரையில் படும்படியாக இறைவனை வணங்கி வழிபட வேண்டும்.
5. கோயிலின் உள்ளே உள்ள மற்ற சன்னதிகளை காட்டிலும், கொடி மரத்தின் அருகில் மட்டுமே விழுந்து கும்பிட வேண்டும்.
6. விக்கிரகங்களைத் தொட்டு வணங்கக் கூடாது.
7. சன்னதியின் முன்போ, மற்ற நபர்களிடமோ கைகளைத் தட்டிக் வணங்கக் கூடாது.
8. நந்தியின் காதில் எந்த ரகசியமும் சொல்ல வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. மீறி செய்யும்போது நம் எச்சில் நந்தியின் திருமேனியில் பட்டுவிட்டால் பாவமே சேரும்.
9. பிரகாரம் வலம் வரும் பொழுது வேகமாக நடக்கக் கூடாது.
10. பலிபீடம்,நந்தி, கோபுரம் நிழலை மிதிக்கக் கூடாது.
11. கோயிலில் விபூதியோ குங்குமமோ கொடுத்தால், அவற்றை வலது கையால் மட்டுமே வாங்க வேண்டும்.
12. நடந்துகொண்டே நெற்றியில் விபூதி இடக்கூடாது. மீதமுள்ள விபூதி குங்கும பிரசாதத்தை கண்ட இடங்களில் கொட்டிவிட்டு செல்வது ,அம்பாள் கொடுத்த வரத்தை கோவிலிலேயே விட்டுச்செல்வதற்கு சமமாகும்
13. கோயிலுக்குள் உயர்ந்த ஆசனத்தில் அமரக் கூடாது.
14. நம்முடைய பேச்சுக்களோ செயல்களோ அடுத்தவர்களுடைய வழிபாட்டையோ, தியானத்தையோ கெடுப்பதாக அமைந்துவிடக் கூடாது.
15. கோயில் உள்ளே உரக்கப் பேசுதல் கூடாது. வீண் வார்த்தைகளும், தகாத சொற்களும் பேசுதல் கூடாது.
16. தாம்பூலம் தரித்தல் (வெற்றிலை பாக்கு) கூடாது.
17. மூலவரை புகைப்படம் எடுப்பது சாஸ்திரத்திற்கு புறம்பான குற்றச் செயலாகும்.
18. கோயில் உள்ளே செல்போன் பேசுதல் கட்டாயம் கூடாது. தொலைபேசியின் ஒலியை நிறுத்தி வைப்பது அனைவருக்கும் நல்லது.

**தரிசனத்திற்கு முன்னும்... பின்னும்...**

1. கோவிலை வேகமாக வலம் வருதல் கூடாது.
2. தோளில் துண்டுடன் தரிசனம் செய்யக் கூடாது.
3. தரிசனம் செய்த பின், பின்னால் சிறிது தூரம் நடந்து, அதன் பின்னரே ஆலயத்தை விட்டு வெளியேற வேண்டும்.
4. கோவிலுக்குள் உறங்கக் கூடாது.
5. கோவிலில் இருந்து வீட்டிற்குக் கிளம்புவதற்கு முன்பாக, கோயிலில் ஏதாவது ஒரு இடத்தில் சிறிது நேரம் அமர்ந்து கோரிக்கைகளை அம்பாளிடம் மனமுருக தெரிவித்து செல்வது சிறப்பு.
6. பக்தரானவர் எவ்வளவு பெரிய பொறுப்பு / பதவியில் இருந்தாலும் கோவிலுக்குள் நுழைந்து விட்டால் எளிமையையே கடைபிடிக்க வேண்டும். ஆயிரம் கண்ணுடையாள் சன்னிதியில் பக்தர் தனது அதிகாரத்தை காண்பிக்க எத்தனிக்கக்கூடாது.

**கோயிலுக்கு வெளியே...**

1. கோயிலில் நுழையும் போதும், திரும்பி வரும் போதும் கோபுர தரிசனம் அவசியம்.
2. கோயிலுக்குள் நுழைந்தது முதல் வெளியே வரும் வரை நிதானமாக அவசரம் இன்றி, மாரியம்மனை நமக்குள் உணர்ந்து மந்திரம் கூறி வழிபடுவது சிறப்பு.
3. கோயிலுக்குச் சென்று வந்தபின் வீட்டில் உடனடியாகக் கால்களைக் கழுவக் கூடாது. சிறிது நேரம் அமர்ந்த பிறகுதான் கழுவ வேண்டும்
4. ஸ்தல விருட்சங்களை சேதப்படுத்துவது கூடாது. இரவில் வழிபடக் கூடாது.

"கோயில்களில் விதிகளை மதிப்போம்"
"இறையருளைப் பெற்று இன்புறுவோம்"

# ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்குரிய அபிஷேகங்களும் உன்னதப் பலன்களும்

ஸ்ரீ ஜெனகை மாரியம்மனுக்கு நாம் அபிஷேகங்கள் செய்வதன் மூலம் எல்லா செல்வங்களும் பெற்று வளமான வாழ்வு வாழலாம். வழிபாட்டின் முதல் உபசாரமாக அபிஷேகம் செய்யப்படுகிறது. விசேஷ நாட்களில் அம்பாளுக்கு செய்யப்படும் அபிஷேகங்களில் நாம் பங்கேற்பதனாலோ அல்லது பார்ப்பதனாலோ நாம் நம் வாழ்வில் மிகச் சிறப்பான பலனைப் பெறலாம்.

1. மஞ்சள் பொடி - அரசாங்க அனுகூலம்.
2. மாப்பொடி - கடன் நீங்கும்.
3. நெல்லிப் பொடி - பிணிகள் அகலும்.
4. திருமஞ்சனத் திரவியம் - பிணிகள் அண்டாது.
5. பழபஞ்சாமிர்தம் - ஆன்மிகத்தில் உயர்நிலை.
6. பசும்பால் அபிஷேகம் - சகல சௌபாக்கியங்களும் ஐஸ்வரியங்களும் கிடைக்கும். (பாக்கெட் பால் அல்ல)
7. பஞ்சகவ்யம் - ஆன்மசுத்தி, சகல பாவங்களும் நீங்கும்.
8. இள வெந்நீர் - முக்திப்பேறு வாய்க்கும்.
9. தேன் - தேக நலன், குரல் வளம் ஸித்திக்கும்.
10. பன்னீர் - உடலும் உள்ளமும் குளிரும் மகிழ்ச்சியான வாழ்வைப் பெறலாம்.
11. விபூதி - சகல ஐஸ்வர்யங்களும் கிடைக்கும்.
12. சந்தனம் - ஆளுமைப் பதவிகள் வாய்க்கும்.
13. ஜவ்வாது - பெரும் புகழ் உண்டாகும்.
14. புனுகு - தேக ஆரோக்கியம் கிட்டும்.
15. பச்சைக் கற்பூரம் - ஆரோக்கியமும் புகழும் உண்டாகும்.
16. குங்குமப்பூ - ஆரோக்கியம் மேம்படும், தேக பலம் கூடும், செயல்களில் காரியத்தடைகள் நீங்கி வெற்றி கிடைக்கும்.
17. தயிர் - நல்லறிவும் பேரழகும் வாய்ந்த குழந்தைகள் கிட்டும்.
18. சங்காபிஷேகம் - சகல விஷயங்களிலும் நன்மை உண்டாகும்.
19. சுத்தமான நல்லெண்ணெய் அபிஷேகம் - எமபயம் விலகும்.

## ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு பழச்சாற்றினால் அபிஷேகம்

1. திராட்சை சாறினால் அபிஷேகம் செய்தால் எடுத்த காரியம் வெற்றி தரும்.
2. கர்ஜூரம் (பேரிச்சம்பழம்) சாறினால் அபிஷேகம் செய்தால் ஸத்ருக்கள் இல்லாமல் போவார்கள்.

3. நாவல்பழ சாறினால் அபிஷேகம் செய்தால் வைராக்கியம் கூடும். மனோபலம் அதிகரிக்கும்.
4. மாம்பழ சாறினால் அபிஷேகம் செய்தால் தீராத வியாதிகள் தீரும்.
5. மஞ்சள் நீரினால் அபிஷேகம் செய்தால் மங்கல காரியங்கள் தடையின்றி நிகழும்.
6. இளநீரினால் அபிஷேகம் செய்தால் சகல ஸம்பத்துகளும் கிடைக்கும்.
7. மாதுளம் பழச்சாறு - பகைமை அகலும்
8. எலுமிச்சைச் சாறு - யம பயம் நீங்கும் ஆயுள் பலம் கூடும்.
9. நாரத்தை (பழம்) சாறு - மந்திர ஸித்தி கைகூடும்.
10. கொழுச்சிப் பழச்சாறு - சோகங்கள் விலகும் வீட்டில் சர்வமங்கலங்களும் உண்டாகும்.
11. கரும்பு சாறினால் அபிஷேகம் செய்தால் ஆரோக்கியம் மேம்படும்.தனம் விருத்தி யாகும்.
12. மிருதுவான சர்க்கரையினால் அபிஷேகம் செய்தால் துக்கம் விலகும். சந்தோஷம் பிறக்கும்.

## ஸ்ரீஜெனகைமாரியம்மனுக்கு தேவகனி மாலை

இறையருள் நிறைந்த எலுமிச்சை கனிக்கு தேவகனி, ஜீவகனி, வெற்றிக்கனி என்று பல பெயர்கள் உண்டு. முற்க் காலத்தில் அரசர்கள் எதிரி நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும் முன்பாக காவல் தெய்வம், எல்லைத் தெய்வம் சம்கார தெய்வங்களுக்கு எலுமிச்சை மாலை அணிவித்து, அந்த தெய்வங்கள் முன்பாக நின்று உறுதி மொழி எடுத்துக் கொண்டு அதன்பிறகு தங்களது படைகளை வழி நடத்திச் செல்வார்கள். போரில் வாகை சூடி திரும்பி வந்த பின்பு மீண்டும் எலுமிச்சை மாலை சூடி வழிபாடு செய்யும் வழக்கம் இருந்தது.

இன்றைக்கும் ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு பில்லி, சூனியம், எதிரிகள் தொல்லை, மாந்திரீகம் இவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எலுமிச்சம் பழங்களை மாலையாகத் தொடுத்து வணங்கி வழிபடுவதைக் காணலாம்.

ஆடி மாதம் முழுவதும் ஞாயிறு, செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் அமாவாசை, பௌர்ணமி நாட்களிலும் ஸ்ரீஜெனகை மாரியம்மனை வழிபடுவது சாலச்சிறந்தது. இவ்வாறு செய்வதால் மனதில் நினைத்த வேண்டுதல் உடனடியாக நிறைவேறும். நீண்ட நாள் தடைபட்ட செயல்கள் கனிமாலை சாத்தி வழிபாடு செய்தால் கைகூடும் என்பது நம்பிக்கை.

இந்த எலுமிச்சை மாலையை தயாரிக்கும் போது ஒரே அளவுள்ள மஞ்சள் நிறமுள்ள பழங்களை மாலையாக கோர்ப்பது நல்லது. பழங்களின் எண்ணிக்கை 108, 54, 45, 18 என்ற எண்ணிக்கையில் இருக்க வேண்டும். எலுமிச்சை காயாக இருக்கக்கூடாது. தனது பக்தர்கள், ஸ்ரீஜெனகை மாரியம்மனுக்கு எலுமிச்சை கனியையும், சிறிதளவு மல்லிகைப் பூக்களையும் தொடர்ந்து ஒன்பதுவார வெள்ளிக்கிழமைகளில் அம்மனுக்கு அர்ப்பணித்து பரிபூரண அருள் பெற்றவர்கள் ஏராளம் பேர்.

## ஸ்ரீஜெனகை மாரி நிகழ்த்தும் அற்புதம்

- தலத்தில் ஆண்டுதோறும் வைகாசி திருவிழாவின் போது நடைபெறும் அக்கினி சட்டி மற்றும் பால் குட தினத்தன்று, நான்கு ரத வீதிகளிலும் அக்கினி சட்டி பால்குடத்தை சுமந்துவரும் பக்தர்களை வெயில் வாட்டியதில்லை. அதற்கு மாறாகஅக்கினியை ஏந்திவரும் தன் பக்தர்களின் பாதமும் மேனியும் வெப்பத்தால் சிரமப்படுவதை தவிர்க்க, மாரியே மேகமாய் மாறி மண் மணம் கமழும் மழை மேக அமைப்புடன் அன்றைய நாள் முழுவதும் காணப்படுவது அன்னையின் ஆயிரம் அருட் செயல்களில் ஒன்று. அதேபோல புரட்டாசி மாத நவராத்திரி விழாவின் பத்தாம் நாள் விஜயதசமி அன்று ஸ்ரீஜெனகை மாரியம்மன் அம்பு விடும் நிகழ்ச்சி வைகை ஆற்றில் நடைபெறும். அச்சமயம் மழைத் தூறல் பொழிவது அம்பாளின் அருட்செயல்களுக்கு மற்றுமொரு சான்றாகும்.
- ஸ்ரீஜெனகை மாரியம்மன் பக்தர்களை எப்போதுமே கொடிய வியாதியிலிருந்து காப்பாற்றி அருள்பாலிக்கும் தன்மை கொண்டவர். குறிப்பாக ஸ்ரீஜெனகை மாரியம்மனை பல பக்தர்கள் தங்கள் கண் நோய் குணமாகிட எண்ணி வழிபாடு செய்து அம்பாளின் பெருங்கருணையால் குணமாகிய அதிசய சம்பவங்கள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## அம்பாள் எதிர்கொண்ட அக்னிபரீட்சை

ஸ்ரீஜெனகை மாரியம்மன் ஆலயத்தில் 1989 ம் வருடம் நடைபெற்ற வைகாசியில் திருவிழா சமயத்தில் அக்கினி சட்டி மற்றும் பால்குட விழாவின் போது பக்தர் ஒருவர் ஏந்திவந்த அக்கினி சட்டியின் நெருப்பானது திருவிழா தோரணமாக கட்டப்பட்டு காய்ந்து விட்டிருந்த வாழைமரத்து சருகில் பட்டு நெருப்பு பரவி விழாவிற்க்காக கோவிலுக்கு வெளியே போடப்பட்டிருந்த அலங்கார கூரை பந்தல் முழுவதும் எரிந்தது. அக்கினிச்சுடரையே தன் சிரசின் அணிகலனாக கொண்ட ஜெகன்மாதா, தன் பக்தர்கள் அனைவரையும் எவ்வித உயிர் சேதமுமின்றி அக்கினியிலிருந்து காத்து அருளினார்.

**சுயம்பை வணங்கி**
**சுயம்பாய் வளர்வோம்!**

# ஸ்ரீஜெனகை மாரியின் குழந்தைகளுக்கு ஏற்ற திருப்பெயர்கள்

இந்துக்களை பொருத்தவரையில் பெயர் சூட்டுதல் என்பது முக்கியமான ஒரு நிகழ்வாகும். இந்த சடங்கினை ‘‘நாமகரணம்’’ என்ற வடமொழி வழக்கிலும் அழைக்கின்றனர். குழந்தையின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு நாம் தேர்வு செய்யும் பெயர் பெரும் பங்கு வகிக்கிறது என்பதே உண்மை. குழந்தைக்கு பெரும்பாலும் கீழ்கண்டவாறு பெயர் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

1. குழந்தையின் ராசி, நட்சத்திரம் பிறந்த நேரம் என்பவற்றை அடிப்படையாக் கொண்டு குழந்தைக்கு உரிய பெயர் தீர்மானிக்கப்படுகிறது. இந்துக்கள் இவற்றினை கருத்தில் கொண்டே குழந்தைக்கு பெயர் சூட்டுகின்றனர்.
2. இன்னும் சிலர் தங்கள் குழந்தைகளில் ஆண் குழந்தையாக இருந்தால் தங்கள் தந்தை பெயர், பெண் குழந்தையாக இருந்தால் தங்கள் தாயின் பெயர் போன்று தங்கள் மூதாதையினரின் பெயரை வைக்கின்ற வழக்கத்தைக் கடைப்பிடிக்கின்றனர்.
3. இந்து சமயத்திலுள்ள பலரும் நவநாகரீகமான முறையில் ஒரு பெயரை அழைப்பதற்க்காகவும், தங்களின் இஷ்ட, குல தெய்வத்தை நினைவூட்டும் விதமாக மற்றொரு பெயரையும் தேர்வு செய்து இரண்டு பெயராக சூட்டுகின்றனர். இப்படி சூட்டும்போது அழைப்பில் இல்லாத தெய்வத்தின் பெயரானது அக்குழந்தையின் மங்கல நிகழ்வுகளின் போது அழைப்பிதழ்களில் மட்டுமே காணமுடிகிறது.
4. தற்போதுள்ள காலமாற்ற சூழலில் பலரும் தங்கள் குழந்தைகளுக்கு நாகரீகமாகப் பெயர் வைக்க வேண்டும் என்கிற எண்ணம் மேலோங்கியிருப்பதோடு தங்களின் மனதில் நிறைந்த தெய்வத்தின் பெயரையும் சேர்த்து ஒரே பெயராக அழைக்கவேண்டும் என்ற விருப்பம் உள்ளதை காணமுடிகிறது.

அதன் அடிப்படையில் ஸ்ரீஜெனகை மாரியம்மனின் அருளால் குழந்தைப்பேறு அடைந்தவர்கள் ஸ்ரீஜெனகைமாரியை தமது குலதெய்வமாக கொண்டவர்கள், இஷ்ட தெய்வமாக ஏற்றவர்கள் தங்களது குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஸ்ரீஜெனகை மாரியின் பெயர் சூட்டி மகிழ்வதற்கு ஏற்றவாறு அம்பாளின் திருநாமத்துடன் இணைந்த சில பெயர்கள் ஆண் மற்றும் பெண் குழந்தைகளுக்கென வழங்கப்பட்டுள்ளது.

**ஆண் குழந்தைகளுக்கான பெயர்கள்**

1. ஜெனகசேனாதிபதி
2. ஜெனகஅபிமன்யு
3. ஜெனகஅச்சுதன்
4. ஜெனகைஅருளன்
5. ஜெனகார்ஜுன்
6. ஜெனகபாலன்
7. ஜெனகபாலகன்
8. ஜெனகபாரதி
9. ஜெனகபாஸ்கரன்
10. ஜெனகபாஸ்கர்
11. ஜெனகபைரவா
12. ஜெனகசந்திரன்
13. ஜெனகசெழியன்
14. ஜெனகசெல்வன்
15. ஜெனகசேரன்
16. ஜெனகசோழன்
17. ஜெனகபாண்டியன்
18. ஜெனகதயாநிதி
19. ஜெனககணேஷ்
20. ஜெனகன்
21. ஜெனநாதன்
22. ஜெனா
23. ஜெனகலிங்கம்
24. ஜெனகலோகன்

25. ஜெனகலக்ஷ்மன்
26. ஜெனகமாறன்
27. ஜெனகமேனன்
28. ஜெனகமஹாதேவ்
29. ஜெனகமகாதேவன்
30. ஜெனகமலரவன்
31. ஜெனகமனோகர்
32. ஜெனகமனோகரன்
33. ஜெனகமதிவாணன்
34. ஜெனகமதுசூதனன்
35. ஜெனகமாயவன்
36. ஜெனகமயிலன்
37. ஜெனகவேல்
38. ஜெனகமயூரன்
39. ஜெனகமெய்யன்
40. ஜெனகமிகுணன்
41. ஜெனகமிதுனன்
42. ஜெனகமிதுபாலன்
43. ஜெனகமுரளி
44. ஜெனகமூர்த்தி
45. ஜெனகமுருகன்
46. ஜெனகநகுலன்
47. ஜெனகநரேன்
48. ஜெனகநவநீதன்
49. ஜெனகநிதர்ஷன்
50. ஜெனகநிதி
51. ஜெனகநிவேதன்
52. ஜெனகநிவேதிகன்
53. ஜெனகபரணி
54. ஜெனகபார்த்திபன்
55. ஜெனகப்பிரபு
56. ஜெனகப்ரகாஷ்
57. ஜெனகப்ரகலாதன்
58. ஜெனகப்ரதீபன்
59. ஜெனகப்ரியங்கன்
60. ஜெனகப்ரணவன்
61. ஜெனகப்ரஸன்னா
62. ஜெனகப்ருத்வி
63. ஜெனகராஜ்
64. ஜெனகராஜன்
65. ஜெனகராஜேஷ்
66. ஜெனகராஜ்குமார்
67. ஜெனகராமன்
68. ஜெனகரமணன்
69. ஜெனகராம்
70. ஜெனகரங்கன்
71. ஜெனகரத்னவேல்
72. ஜெனகருத்ரன்
73. ஜெனகசாரங்கன்
74. ஜெனகசம்யுக்தன்
75. ஜெனகசங்கீதன்
76. ஜெனகசஞ்சீவன்
77. ஜெனகசஞ்சீவி
78. ஜெனகசங்கிலி
79. ஜெனகசத்ருகன்
80. ஜெனகசீலன்
81. ஜெனகசேந்தன்
82. ஜெனகசெந்தில்
83. ஜெனகசெந்தூரன்
84. ஜெனகசேயோன்
85. ஜெனகசிவா
86. ஜெனகசிவப்ரியன்
87. ஜெனகசிவரூபன்
88. ஜெனகசிவசுந்தர்
89. ஜெனகசூரன்
90. ஜெனகசூர்யா
91. ஜெனகஸ்ரீ
92. ஜெனகசுபன்
93. ஜெனகசுபராஜ்
94. ஜெனகசுப்ரமணியம்
95. ஜெனகவித்தகன்
96. ஜெனகசுடர்மணி
97. ஜெனக சுகந்தன்
98. ஜெனகசுந்தரபாண்டியன்
99. ஜெனகசுரேந்திரன்
100. ஜெனகசுயந்தன்
101. ஜெனகதாரகன்
102. ஜெனகதனுஷ்
103. ஜெனகதார்மீகன்
104. ஜெனகதர்மேந்திரன்
105. ஜெனகதயாளன்
106. ஜெனகதீபன்
107. ஜெனகதயாபரன்
108. ஜெனகதேவா
109. ஜெனகதிலகன்
110. ஜெனகதிலீபன்
111. ஜெனகதினேஷ்
112. ஜெனகதிருனீபன்
113. ஜெனகதிவ்யன்
114. ஜெனகஉற்சவன்
115. ஜெனகவாகீசன்
116. ஜெனகவாமனன்
117. ஜெனகவேங்கை
118. ஜெனகவேணு
119. ஜெனகவளவன்
120. ஜெனகவரதன்
121. ஜெனகவர்மன்
122. ஜெனகவாசவன்
123. ஜெனகவேந்தன்
124. ஜெனகவிஜயன்
125. ஜெனகவிக்னேஷ்
126. ஜெனகவிமலன்
127. ஜெனகவிநோத்
128. ஜெனகவிநோதன்
129. ஜெனகயோகேஷ்
130. ஜெனகவிவேகன்
131. ஜெனகயாழேந்தி
132. ஜெனகயாதவன்
133. ஜெனகசுதர்சன்
134. ஜெனகயோகநாதன்
135. ஜெனகயோகி
136. ஜெனகசிதம்பரம்
137. ஜெனகசித்தன்
138. ஜெனகசித்தார்த்
139. ஜெனகசிற்பி
140. ஜெனகபேரரசு
141. ஜெனகசிற்றரசு
142. ஜெனகசிலம்பு
143. ஜெனகசிலம்பரசன்
144. ஜெனகசிவதனுசு
145. ஜெனகசிவநெறி
146. ஜெனகசிவநேயன்
147. ஜெனகசிவனடியன்
148. ஜெனகசிவநேசன்
149. ஜெனகசிவன்
150. ஜெனகசிவம்
151. ஜெனகசிவாஜி
152. ஜெனகசிவா
153. ஜெனகவளவன்
154. ஜெனகவம்சி
155. ஜெனகவர்மன்
156. ஜெனகவழுதி
157. ஜெனகவடிவேல்
158. ஜெனகவர்ஷன்
159. ஜெனகவர்ஷித்
160. ஜெனகவருணன்
161. ஜெனகவசியன்
162. ஜெனகவசந்தன்
163. ஜெனகவசந்த்
164. ஜெனகவரதராஜ்
165. ஜெனகவல்லவன்
166. ஜெனகவிஷ்ணு
167. ஜெனகவிஷ்வா
168. ஜெனகவிஷ்வநாத்

169. ஜெனகவிஜய்
170. ஜெனகவிஷ்வேஷ்
171. ஜெனகவிசாகன்
172. ஜெனகவிஷ்வந்த்
173. ஜெனகவிழியன்
174. ஜெனகவிதார்த்த்
175. ஜெனகவிஜேந்திரன்
176. ஜெனகவிக்ராந்த்
177. ஜெனகவிமலேஷ்
178. ஜெனகவினோத்ராஜ்
179. ஜெனகவிக்ரமசேனா
180. ஜெனகவிஸ்வேஸ்வரன்
181. ஜெனகவிஷ்ணுதரன்
182. ஜெனகவிக்னேஷ்வரன்
183. ஜெனகவேலரசு
184. ஜெனகவேதாந்த்
185. ஜெனகவேலவன்
186. ஜெனகவேல்ராஜ்
187. ஜெனகவேதேஷ்
188. ஜெனகவேதாசலம்
189. ஜெனககாளிமுத்து
190. ஜெனககுரு
191. ஜெனககுலகீர்த்தி
192. ஜெனககுலபதி
193. ஜெனகசுகன்
194. ஜெனகசுகந்தன்
195. ஜெனகசுபன்
196. ஜெனகசுபாஷ்
197. ஜெனகசுதேவ்
198. ஜெனகஷேசாத்ரி
199. ஜெனகசேது
200. ஜெனகசேஷன்
201. ஜெனகசேயோன்
202. ஜெனகசேரமான்
203. ஜெனகசேரவேந்தன்
204. ஜெனகதுருவன்
205. ஜெனகதுரை
206. ஜெனகதுர்கேஷ்
207. ஜெனகஸ்ரீதர்
208. ஜெனகஸ்ரீநிவாஸ்
209. ஜெனகஸ்ரீப்ரசாத்
210. ஜெனகஸ்ரீராம்
211. ஜெனகஸ்ரீதரன்
212. ஜெனகஸ்ரீஹரன்
213. ஜெனகதேவரிஷி
214. ஜெனகதேவேந்த்ரன்
215. ஜெனகதேவராஜ்
216. ஜெனகஜீவன்
217. ஜெனகபாரி
218. ஜெனகபாவலன்
219. ஜெனகநாகார்ஜுன்
220. ஜெனகநிகிலன்
221. ஜெனகநிதிலன்
222. ஜெனகநிரஞ்சன்
223. ஜெனகநிலவன்
224. ஜெனகபூபதி
225. ஜெனகபூஷன்
226. ஜெனகநந்தன்
227. ஜெனகநவநிதி
228. ஜெனகநவிலன்
229. ஜெனகபாலாஜி
230. ஜெனகப்ரகதீஷ்
231. ஜெனகப்ரகதீஸ்வரன்
232. ஜெனகமணியன்
233. ஜெனகமணி
234. ஜெனகமதிநந்தன்
235. ஜெனகமஹேந்திரன்
236. ஜெனகமயூரன்
237. ஜெனகமருது
238. ஜெனகமிதுன்
239. ஜெனகரகுபதி
240. ஜெனகராகேஷ்
241. ஜெனகரக்சன்
242. ஜெனகரஞ்சிவ்
243. ஜெனகரத்தீஷ்
244. ஜெனகரித்தீஷ்
245. ஜெனகரஞ்சன்
246. ஜெனகராணா
247. ஜெனகரிஷி
248. ஜெனகரிஷிகேஷ்
249. ஜெனகரிஷ்வான்
250. ஜெனகரிஷிவந்தன்
251. ஜெனகரூபன்
252. ஜெனகபவித்ரன்
253. ஜெனகப்ரஜின்
254. ஜெனகப்ரகதீப்
255. ஜெனகபூஷிதன்
256. ஜெனகபூஷிகன்
257. ஜெனகபௌசிக்
258. ஜெனகபௌநிஷ்
259. ஜெனகபிரதீஷ்
260. ஜெனகப்ரணவ்
261. ஜெனகரத்னா
262. ஜெனகரமணா
263. ஜெனகமுகுந்த்
264. ஜெனகமுகிலன்
265. ஜெனகமேனகன்
266. ஜெனகமூஷிகன்
267. ஜெனகமைத்ரேயன்
268. ஜெனகநம்பி
269. ஜெனகநந்திதன்
270. ஜெனகநாவலன்
271. ஜெனகநிவின்
272. ஜெனகநிர்மல்
273. ஜெனகநிஷாந்த்
274. ஜெனகநிதுன்
275. ஜெனகநித்ரன்
276. ஜெனகநேத்ரன்
277. ஜெனகபவன்
278. ஜெனகமகிஷ்
279. ஜெனகமகிழன்
280. ஜெனகமஹிஷன்
281. ஜெனகமாதவ்
282. ஜெனகமாதவன்
283. ஜெனகமாதேஷ்
284. ஜெனகமித்ரன்
285. ஜெனகமிதுன்
286. ஜெனகமிதிலன்
287. ஜெனகசாய்
288. ஜெனகசாய்ராம்
289. ஜெனக சாய்கணேஷ்
290. ஜெனகசிவராஜ்
291. ஜெனகசுதன்
292. ஜெனகசூர்யா
293. ஜெனகசர்வேஷ்
294. ஜெனகவசீகரன்
295. ஜெனகவசுந்தர்
296. ஜெனகவாசு
297. ஜெனகவிமல்
298. ஜெனகயுவராஜ்
299. ஜெனகசுமன்
300. ஜெனகஷிவேஷ்
301. ஜெனகஷ்ரவன்
302. ஜெனகஷ்யாம்
303. ஜெனகஸ்ரீஜித்
304. ஜெனகஸ்ரீமன்
305. ஜெனகஸ்ரீவத்சன்
306. ஜெனகசத்யன்
307. ஜெனகசத்யேந்திரா
308. ஜெனகசந்தோஷ்
309. ஜெனகசபரிஷ்
310. ஜெனகசயந்தன்
311. ஜெனகராகவன்
312. ஜெனகராஜா

313. ஜெனகரமேஷ்
314. ஜெனகராகவ்
315. ஜெனகராஜகுரு
316. ஜெனகராஜதுரை
317. ஜெனகராஜீவ்
318. ஜெனகராமசாமி
319. ஜெனகசிரஞ்சீவி
320. ஜெனகவருனேஷ்
321. ஜெனகவருண்
322. ஜெனகவசந்தன்
323. ஜெனகசாத்விக்
324. ஜெனகரித்விக்
325. ஜெனகதருண்
326. ஜெனகவாசன்
327. ஜெனகப்ரணவ்
328. ஜெனகசாய்சரண்
329. ஜெனகஅதிரூபன்
330. ஜெனகவேதாந்த்
331. ஜெனகபசுபதி
332. ஜெனகபரமன்
333. ஜெனகபரிதி
334. ஜெனகபவித்ரன்
335. ஜெனகபுதியவன்
336. ஜெனகபுனிதன்
337. ஜெனகபூபாலன்
338. ஜெனகபூரணன்
339. ஜெனகமணிமாறன்
340. ஜெனகமதிமாறன்
341. ஜெனகமதுரன்
342. ஜெனகமாமணி
343. ஜெனகமுரளி
344. ஜெனகமூர்த்தி
345. ஜெனகயுவன்
346. ஜெனகபத்ரி
347. ஜெனகபரசு
348. ஜெனகபரசுராம்
349. ஜெனகபார்கவன்
350. ஜெனகபாலா
351. ஜெனகபாலு
352. ஜெனகப்ரித்வி
353. ஜெனகப்ரியன்
354. ஜெனகதுரைசிங்கம்
355. ஜெனகஆதி
356. ஜெனகஆகாஷ்
357. ஜெனகஅகில்யன்
358. ஜெனகமுனீஷ்
359. ஜெனகரகுலன்
360. ஜெனகஸ்வர்ணன்
361. ஜெனகவிதுன்
362. ஜெனகதர்ஷன்
363. ஜெனகஅபிலேஷ்
364. ஜெனகஆதித்யா
365. ஜெனகஅபிநவ்
366. ஜெனகதக்ஷன்
367. ஜெனகலக்ஷ்மன்
368. ஜெனகநேசன்
369. ஜெனகமிதின்
370. ஜெனகமுகின்
371. ஜெனகநவீனன்
372. ஜெனகப்ரவீனன்
373. ஜெனகப்புனிதன்
374. ஜெனகதனயன்
375. ஜெனகசுதீக்ஷன்
376. ஜெனகமிதிலேஷ்
377. ஜெனகப்ரதீவ்
378. ஜெனகப்ரியந்தன்
379. ஜெனகசிவன்யன்
380. ஜெனகவஜ்ரன்
381. ஜெனகவேதா
382. ஜெனகவிதுரன்
383. ஜெனகவிதுஷணன்
384. ஜெனகவிவேகன்
385. ஜெனகதீரன்
386. ஜெனகதர்மேஷ்
387. ஜெனகலயன்
388. ஜெனகலோகன்
389. ஜெனகலோகேஷ்
390. ஜெனகசித்ரூபன்
391. ஜெனகமஹேந்திரன்
392. ஜெனகமணிவர்மன்
393. ஜெனகமனோ
394. ஜெனகமனோஜ்
395. ஜெனகமருதன்
396. ஜெனகமதன்
397. ஜெனகநந்தா
398. ஜெனகநந்தன்
399. ஜெனகநவநீதன்
400. ஜெனகநவதீபன்
401. ஜெனகமனோன்மணி
402. ஜெனகநித்யன்
403. ஜெனகபதுமன்
404. ஜெனகபரசுகன்
405. ஜெனகபரந்தாமன்
406. ஜெனகராஜ்கிரண்
407. ஜெனகசாந்தன்
408. ஜெனகசிபி
409. ஜெனகசிம்மன்
410. ஜெனகஉமைபாலன்
411. ஜெனகஅபிலன்
412. ஜெனகதீஷிதன்
413. ஜெனகசபாபதி
414. ஜெனகநிவாஸ்
415. ஜெனகநிவாசன்
416. ஜெனகஆதவன்
417. ஜெனகஅபினவ்
418. ஜெனகஆதர்ஷ்
419. ஜெனகசாணக்யா
420. ஜெனகசைதன்யா
421. ஜெனகசெம்மொழி
422. ஜெனகதர்மா
423. ஜெனகமாணிக்கம்
424. ஜெனகமுனி
425. ஜெனகஓவியன்
426. ஜெனகதண்டபாணி
427. ஜெனகதயானந்
428. ஜெனகதயாபதி
429. ஜெனகவித்யாபதி
430. ஜெனகஈஸ்வர்
431. ஜெனகஇளமாறன்
432. ஜெனகஇமயவன்
433. ஜெனகலிங்கன்
434. ஜெனகலக்ஷன்
435. ஜெனகநிமலன்
436. ஜெனகநீதி
437. ஜெனகபொன்ராஜ்
438. ஜெனகபொன்வேல்
439. ஜெனகபரமேஷ்
440. ஜெனகபாவலன்
441. ஜெனகபொழியன்
442. ஜெனகபொன்முடி
443. ஜெனகரத்னம்
444. ஜெனகவிஷ்வா
445. ஜெனகதயா

## பெண் குழந்தைகளுக்கான பெயர்கள்

1. ஜெனகதனுசியா
2. ஜெனகபாலிகா
3. ஜெனகபரமிதா
4. ஜெனகபாவனா
5. ஜெனகபாவன்யா
6. ஜெனகதக்ஷினி
7. ஜெனகஷிவன்யா
8. ஜெனகவேதஸ்ரீ
9. ஜெனகலக்சனா
10. ஜெனகலக்ஷிதா
11. ஜெனகலக்ஷ்மீகா
12. ஜெனகநிலா
13. ஜெனகமணி
14. ஜெனகமதி
15. ஜெனகமுத்து
16. ஜெனகமலர்
17. ஜெனகையரசி
18. ஜெனகநாச்சி
19. ஜெனகவாணி
20. ஜெனகசெல்வி
21. ஜெனகை உடையாள்
22. ஜெனகைமுதல்வி
23. ஜெனகஷாலினி
24. ஜெனகதமிழினி
25. ஜெனகபுகழ்மதி
26. ஜெனகபுதுமலர்
27. ஜெனகபூங்குழலி
28. ஜெனகபேரரசி
29. ஜெனகபெருந்தேவி
30. ஜெனகபூவிழி
31. ஜெனகபெரியநாச்சி
32. ஜெனகபெரியநாயகி
33. ஜெனகதயா
34. ஜெனகவாணிஸ்ரீ
35. ஜெனகவைஷாலி
36. ஜெனகவர்ஷிணி
37. ஜெனகமயில்
38. ஜெனகமணிச்சுடர்
39. ஜெனகமல்லிகா
40. ஜெனகமுத்துச்செல்வி
41. ஜெனகமுத்துக்குமரி
42. ஜெனகஅதிதி
43. ஜெனகபூர்வஜா
44. ஜெனகபிரணா
45. ஜெனகயோஹிதா
46. ஜெனகஸன்யுக்தா
47. ஜெனகசுபாஷினி
48. ஜெனகசுசிதா
49. ஜெனகசுபாஷிதா
50. ஜெனகசுபிக்ஷா
51. ஜெனகசுதேஷ்னா
52. ஜெனகபானுஸ்ரீ
53. ஜெனகபாக்யா
54. ஜெனகபவிதா
55. ஜெனகபவ்யா
56. ஜெனகதேவ ஸ்ரீ
57. ஜெனகயாழிசை
58. ஜெனகவேலரசி
59. ஜெனகவேல்செல்வி
60. ஜெனகவேல்மங்கை
61. ஜெனகவேல்விழி
62. ஜெனகைஅமுது
63. ஜெனகைஅருள்
64. ஜெனகையருள் தேவி
65. ஜெனகபாண்டிமாதேவி
66. ஜெனகசந்தனா
67. ஜெனகசௌடாம்பிகா
68. ஜெனகதர்ஷினி
69. ஜெனகதேவஸ்மித்ரா
70. ஜெனகதேவஸ்மிதா
71. ஜெனகதேவிகா
72. ஜெனகதேவி
73. ஜெனகதீபா
74. ஜெனகதாரணி
75. ஜெனகதீபிகா
76. ஜெனகதேவகன்யா
77. ஜெனகதுர்கா
78. ஜெனகப்ரியா
79. ஜெனன்யா
80. ஜெனகமதுனிஷா
81. ஜெனகமதுமிதா
82. ஜெனகமாளவிகா
83. ஜெனககமலினி
84. ஜெனகரஞ்சனா
85. ஜெனகயஷ்வினி
86. ஜெனகயோஸ்னிதா
87. ஜெனகமாதரசி
88. ஜெனகதேவசேனா
89. ஜெனகதாரா
90. ஜெனகபிரணவிகா
91. ஜெனகதனிஷ்கா
92. ஜெனகநட்சத்திரா
93. ஜெனகசிருஷ்டி
94. ஜெனகஜீவிகா
95. ஜெனகஜீவிதா
96. ஜெனகரிஷ்மிதா
97. ஜெனகதிருமணி
98. ஜெனகதிருவிழி
99. ஜெனகதிரிஷ்யா
100. ஜெனகதிரிவேணி
101. ஜெனகமந்த்ரா
102. ஜெனகமித்ரா
103. ஜெனகமஞ்சரி
104. ஜெனகமஞ்சுளா
105. ஜெனகதேவகி
106. ஜெனகமனோஹரி
107. ஜெனகமீனா
108. ஜெனகமானஷா
109. ஜெனகமீனாள்
110. ஜெனகமீரா
111. ஜெனகமேக்னா
112. ஜெனகமான்யா
113. ஜெனகமாயா
114. ஜெனகமேகலா
115. ஜெனகமயூரி
116. ஜெனகநீதி
117. ஜெனகநேத்ரா
118. ஜெனகபரமேஸ்வரி
119. ஜெனகபைரவி
120. ஜெனகபர்வினி
121. ஜெனகப்ரபா
122. ஜெனகப்ரதீபா
123. ஜெனகபூர்ணா
124. ஜெனகப்ரார்த்தனா
125. ஜெனகபூர்ணிமா
126. ஜெனகப்ரணவி
127. ஜெனகப்ரணிதா
128. ஜெனகப்ரசாந்தி
129. ஜெனகப்ரவீனா
130. ஜெனகப்ரீத்தி
131. ஜெனகசாஹிமா
132. ஜெனகஷன்விதா

133. ஜெனகசுகந்தி
134. ஜெனகதாமிரா
135. ஜெனகதாக்ஷ்யா
136. ஜெனகதாமினி
137. ஜெனகதீக்க்ஷா
138. ஜெனகதீக்க்ஷிதா
139. ஜெனகதீப்தி
140. ஜெனகதீஷிதா
141. ஜெனககனிகா
142. ஜெனககாரிகா
143. ஜெனககல்பிதா
144. ஜெனககமலி
145. ஜெனககனிஷ்கா
146. ஜெனககிருபாஷினி
147. ஜெனககிருபாளினி
148. ஜெனககாமினி
149. ஜெனககாதம்பரி
150. ஜெனககாருண்யா
151. ஜெனகபவித்ரா
152. ஜெனகபந்தனா
153. ஜெனகபவதாரிணி
154. ஜெனகபவ்யஸ்ரீ
155. ஜெனகபோஜனா
156. ஜெனகபுத்திதா
157. ஜெனகசாரணி
158. ஜெனகசாயா
159. ஜெனகதாட்சாயணி
160. ஜெனகதனா
161. ஜெனகதன்ஷிகா
162. ஜெனகதேவதர்ஷினி
163. ஜெனகதுவாரகி
164. ஜெனகதேவஸ்ரீ
165. ஜெனகதுர்கேஸ்வரி
166. ஜெனகலயா
167. ஜெனகமாலினி
168. ஜெனகமானஸா
169. ஜெனகமான்சி
170. ஜெனகமகாதேவி
171. ஜெனகமமதி
172. ஜெனகமாரீஸ்வரி
173. ஜெனகசித்தாரா
174. ஜெனகஷிவாணி
175. ஜெனகதீபாலி
176. ஜெனகஜேஷ்தா
177. ஜெனககல்கி
178. ஜெனகசூடாமலர்
179. ஜெனகசூளாமணி
180. ஜெனகவருணா
181. ஜெனகதிருமாலினி
182. ஜெனகதிருவந்தினி
183. ஜெனகதீக்சிதா
184. ஜெனகதர்சனா
185. ஜெனகதபஸ்வி
186. ஜெனகதீட்சணா
187. ஜெனகதீட்சண்யா
188. ஜெனகதன்வஸ்ரீ
189. ஜெனகதேஷினி
190. ஜெனகலக்ஷ்மி
191. ஜெனகரஞ்சனி
192. ஜெனகராணி
193. ஜெனகராஜஸ்ரீ
194. ஜெனகரமா
195. ஜெனகரம்யா
196. ஜெனகராஜேஸ்வரி
197. ஜெனகரதி
198. ஜெனகராதிகா
199. ஜெனகருக்மணி
200. ஜெனகரூபிகா
201. ஜெனகரூபிணி
202. ஜெனகசங்கரி
203. ஜெனனிஸ்ரீ
204. ஜெனனிஸ்ரீவித்யா
205. ஜெனகஸ்ரீநிதி
206. ஜெனகஸ்ரீனிகா
207. ஜெனகஸ்ரீஷா
208. ஜெனகஸ்ருதி
209. ஜெனகசுப்ரியா
210. ஜெனகசுபா
211. ஜெனகஸ்வஸ்திகா
212. ஜெனகஸ்வேதா
213. ஜெனகவசுமதி
214. ஜெனகவம்சிகா
215. ஜெனகஷரணி
216. ஜெனகஷன்மதி
217. ஜெனகதன்யஸ்ரீ
218. ஜெனகபவதா
219. ஜெனகபாக்யஸ்ரீ
220. ஜெனகதாருஸ்ரீ
221. ஜெனகதாரணா
222. ஜெனகதயாளினி
223. ஜெனகை இனியாள்
224. ஜெனககன்னிகா
225. ஜெனகமகிழினி
226. ஜெனகநிகழினி
227. ஜெனகஅருள்
228. ஜெனகஅருள் தேவி
229. ஜெனகசௌக்யா
230. ஜெனகசௌபாக்கியா
231. ஜெனகவேதா
232. ஜெனகவத்சலா
233. ஜெனகவசுதாரிணி
234. ஜெனகவேதாஸ்ரீ
235. ஜெனகவேதிகா
236. ஜெனகவேதவல்லி
237. ஜெனகவீணா
238. ஜெனகவாணிஸ்ரீ
239. ஜெனகவனிதா
240. ஜெனகவர்ணிகா
241. ஜெனகவர்ஷனா
242. ஜெனகயாமினி
243. ஜெனகதாரிகா
244. ஜெனகவிலாஷினி
245. ஜெனகவர்ஷினி
246. ஜெனகமுத்துநாயகி
247. ஜெனகமுத்துமலர்
248. ஜெனகமுத்துமங்கை
249. ஜெனகமாணிக்கம்
250. ஜெனகமாரிச்செல்வி
251. ஜெனகவளர்மதி
252. ஜெனகமுத்துநாச்சி
253. ஜெனகமுத்துப்பேச்சி
254. ஜெனகமானஸ்வி
255. ஜெனகமானஸ்வினி
256. ஜெனகப்புனிதா
257. ஜெனகநந்திகா
258. ஜெனகமாதங்கி
259. ஜெனகநமஸ்வி
260. ஜெனகசௌபர்ணிகா
261. ஜெனகசௌம்யா
262. ஜெனகசக்தி
263. ஜெனகசத்யவாணி
264. ஜெனகசரயூ
265. ஜெனகசம்ஸ்ருதி
266. ஜெனகப்ரியாஷினி
267. ஜெனகவதனா

268. ஜெனகவதனி
269. ஜெனகவத்ஸலா
270. ஜெனகவள்ளி
271. ஜெனக மகிழ்வதனி
272. ஜெனகபார்வதி
273. ஜெனகவனதுர்கா
274. ஜெனகமணிக்கதிர்
275. ஜெனகமணிக்கொடி
276. ஜெனகமணிமகள்
277. ஜெனகமணிமலர்
278. ஜெனகமணிமாலா
279. ஜெனகமங்களா
280. ஜெனகமணிமுகில்
281. ஜெனகமணிமொழி
282. ஜெனகமணியம்மை
283. ஜெனகமணியரசி
284. ஜெனகமணியெழில்
285. ஜெனகமணியொளி
286. ஜெனகமதிக்கொடி
287. ஜெனகமதியன்பு
288. ஜெனகமதிமொழி
289. ஜெனகமதியழகி
290. ஜெனகமதியரசி
291. ஜெனகமதியொளி
292. ஜெனகமதிவதனா
293. ஜெனகமனோண்மனி
294. ஜெனகமனோரஞ்சிதம்
295. ஜெனகமயிலினி
296. ஜெனகமதிவதனி
297. ஜெனகசூடாமணி
298. ஜெனகஷிவானி
299. ஜெனகதன்யா
300. ஜெனகபார்கவி
301. ஜெனகநந்திதா
302. ஜெனகவிமலா
303. ஜெனகவீரலஷ்மி
304. ஜெனகமாதேவி
305. ஜெனகசுரபி
306. ஜெனகசுடர்
307. ஜெனகசுவாதி
308. ஜெனகதாமரை
309. ஜெனகநவமிகா
310. ஜெனகபுகழினி
311. ஜெனகசீர்மதி
312. ஜெனகசுடர்மணி
313. ஜெனகதிகழ்மிளிர்
314. ஜெனகசுடர்மதி
315. ஜெனகசெம்மலர்
316. ஜெனகசுடர்விழி
317. ஜெனகதமிழ்நிலா
318. ஜெனகதமிழரசி
319. ஜெனகதிகழினி
320. ஜெனகதுளசி
321. ஜெனகதிருநிலா
322. ஜெனகதிருமலர்
323. ஜெனக பொழிலினி
324. ஜெனகமகிழ்
325. ஜெனகபொன்மலர்
326. ஜெனகபொன்னிலா
327. ஜெனகமகிழரசி
328. ஜெனகபுதியா
329. ஜெனகபனிமலர்
330. ஜெனகபிறைமதி
331. ஜெனகவெண்மதி
332. ஜெனகமலர்மதி
333. ஜெனகமதி
334. ஜெனகமதிநிலா
335. ஜெனகமிருதுளா
336. ஜெனகமீன்விழியாள்
337. ஜெனகமின்மணி
338. ஜெனகமின்முகில்
339. ஜெனகமுகிலா
340. ஜெனகமுகிலினி
341. ஜெனகமென்மதி
342. ஜெனகமென்மலர்
343. ஜெனகயாழ்நிலா
344. ஜெனகவிண்மதி
345. ஜெனகவிண்ணரசி
346. ஜெனகவான்மதி
347. ஜெனகவானரசி
348. ஜெனகவான்முகில்
349. ஜெனகதாட்சாயிணி
350. ஜெனகசித்ரா
351. ஜெனகஇசைநிலா
352. ஜெனகஇசை
353. ஜெனகஜானவி
354. ஜெனககாம்னா
355. ஜெனகமான்விழி
356. ஜெனகமாமணி
357. ஜெனகமாமதி
358. ஜெனகமாலதி
359. ஜெனகமாலா
360. ஜெனகவேணி
361. ஜெனகவேதவல்லி
362. ஜெனகபவானி
363. ஜெனகமிதுலா
364. ஜெனகஸ்ரீலேகா
365. ஜெனகஸ்ரீவல்லி
366. ஜெனகஸ்ரீவித்யா
367. ஜெனகமீனு
368. ஜெனகமீனாட்சி
369. ஜெனகசகஸ்ரா
370. ஜெனகசங்கரி
371. ஜெனகசத்யா
372. ஜெனகஸ்வர்ணா
373. ஜெனகநிபுணமதி
374. ஜெனகநிரஞ்சனா
375. ஜெனகநிறைமதி
376. ஜெனகநிலமகள்
377. ஜெனகயாழினி
378. ஜெனகயாழரசி
379. ஜெனகநீலவேணி
380. ஜெனகநீலவாணி
381. ஜெனகமஹாலக்ஷ்மி
382. ஜெனகபூஜிதா
383. ஜெனகபிரகதி
384. ஜெனகபிரகதீஷ்வரி
385. ஜெனகபிரணவி
386. ஜெனகபிரபா
387. ஜெனகபிரமிளா
388. ஜெனகபிரஷ்ணவி
389. ஜெனகப்ரசாந்தினி
390. ஜெனகப்ரீத்தா
391. ஜெனகபிரேமா
392. ஜெனகபிருந்தா
393. ஜெனகஷந்தோஷி
394. ஜெனகபூபாலினி
395. ஜெனகசுதா
396. ஜெனகசுந்தரி
397. ஜெனகசுபத்ரா
398. ஜெனகசுபாசினி
399. ஜெனகசுபாங்கி
400. ஜெனகசுமதி
401. ஜெனகசுமித்ரை
402. ஜெனகசுஹாசினி

403. ஜெனகதேவிஸ்ரீ
404. ஜெனக சைதன்யா
405. ஜெனகராஜேஷ்வரி
406. ஜெனகராஜி
407. ஜெனகராஜலட்சுமி
408. ஜெனகராஜகுமாரி
409. ஜெனகரமணி
410. ஜெனகரூபா
411. ஜெனகரூபாவதி
412. ஜெனகரேணுமதி
413. ஜெனகரேணுகா
414. ஜெனகதாருணி
415. ஜெனகசாருலதா
416. ஜெனகசாருலேகா
417. ஜெனகசாலிமா
418. ஜெனகசாலிஹா
419. ஜெனகநந்தினி
420. ஜெனகநறுமலர்
421. ஜெனகநளாயினி
422. ஜெனகநாச்சியார்
423. ஜெனகநாதவேணி
424. ஜெனகநாமகள்
425. ஜெனகநாயகி
426. ஜெனகநாவரசி
427. ஜெனகஷ்ரிஷ்டி
428. ஜெனகஷ்ருதி
429. ஜெனகஷ்ருத்திகா
430. ஜெனகஷ்ரெயா
431. ஜெனகயக்ஷிணி
432. ஜெனகயக்ஷிதா
433. ஜெனகயாமிகா
434. ஜெனகநிவிஷா
435. ஜெனகநிவிதா
436. ஜெனகயாஷிகா
437. ஜெனகபாக்ஷினி
438. ஜெனகதாரிகா
439. ஜெனகதர்ஷனா
440. ஜெனகயஸ்திகா
441. ஜெனகவிஷ்ணுப்பிரியா
442. ஜெனகதுவாரஹா
443. ஜெனகதுர்காதேவி
444. ஜெனகதுர்காலட்சுமி
445. ஜெனகசாம்பவி
446. ஜெனகசாமுண்டி
447. ஜெனகசாய்வர்ஷா
448. ஜெனகசாருநேத்ரா
449. ஜெனகசாருமதி
450. ஜெனகதேவந்தி
451. ஜெனகதயாணி
452. ஜெனகதயாபரி
453. ஜெனகலோகினி
454. ஜெனககர்ணிகா
455. ஜெனகமாசிலா
456. ஜெனகமாதங்கினி
457. ஜெனகமதுஷா
458. ஜெனகமாலிகா
459. ஜெனகமனிஷா
460. ஜெனகமதுரா
461. ஜெனகமுடியரசி
462. ஜெனகமுகிலரசி
463. ஜெனகபத்மாஷினி
464. ஜெனகபூரணா
465. ஜெனகபூரணி
466. ஜெனகப்ரதி
467. ஜெனகசிவன்யா
468. ஜெனகசோபிகா
469. ஜெனகஜோதி
470. ஜெனகஸ்வாதி
471. ஜெனகவானதி
472. ஜெனகவாகினி
473. ஜெனகவாணி
474. ஜெனகவர்ஷா
475. ஜெனகவர்ணி
476. ஜெனகவாசுகி
477. ஜெனகசத்யா
478. ஜெனகசந்தியா
479. ஜெனகசபர்னா
480. ஜெனகசமுத்ரா
481. ஜெனகசரிதா
482. ஜெனகசவிதா
483. ஜெனகசன்மதி
484. ஜெனகசிவானி
485. ஜெனகசின்மயி
486. ஜெனகசுசித்ரா
487. ஜெனகஸ்ரீ
488. ஜெனகருத்ரா
489. ஜெனகநிஷாந்தினி
490. ஜெனகநுண்மதி
491. ஜெனகநித்திலா
492. ஜெனகதமிழ்விழி
493. ஜெனகஅமிழ்தினி
494. ஜெனகநிலாமதி
495. ஜெனகஅமுதா
496. ஜெனகஅமுதினி
497. ஜெனகஅருள்மணி
498. ஜெனகஅருள்மதி
499. ஜெனகஅருண்மதி
500. ஜெனகஅருண்மொழி
501. ஜெனகஇயலினி
502. ஜெனகஎழிலினி
503. ஜெனகசீர்குழலி
504. ஜெனகசமர்மதி
505. ஜெனகசிந்தனா
506. ஜெனகசாதனா
507. ஜெனகவெண்பா
508. ஜெனகவெற்றிச்செல்வி
509. ஜெனகவிண்ணகி
510. ஜெனகபுகழியா
511. ஜெனகவெண்ணிலா
512. ஜெனகயாழ்தேவி
513. ஜெனகமலரொளி
514. ஜெனகயாழ்வேணி
515. ஜெனகபூம்பாவை
516. ஜெனககண்மணி
517. ஜெனகஇளவரசி
518. ஜெனகஇளமதி
519. ஜெனககாளிகா
520. ஜெனகரஞ்ஜனி
521. ஜெனகஉத்சவி
522. ஜெனகராகினி
523. ஜெனகயோகினி
524. ஜெனகஅகல்யா
525. ஜெனகலோகினி
526. ஜெனகமஞ்சு
527. ஜெனகநந்து
528. ஜெனகபொன்மொழி
529. ஜெனக ரத்னம்
530. ஜெனகமதுவந்தி

ஸ்ரீஜெனகைமாரியம்மனின் பெயர் தாங்கிய குழந்தைகள் தனது வாழ்நாளில் பிணியின்றி நீண்ட ஆயுளுடன், புத்திக்கூர்மையுடன் சிறந்து விளங்க அம்பாளின் திருநாமத்தை குழந்தைகளுக்கு சூட்டி அதன் ஆயுள்முழுவதும் பராசக்தியின் பரிபூரண அருளுக்கு பாத்திரமாகும்படிச் செய்யலாம்.

**தலத்தை சுற்றியுள்ள திருத்தலங்கள்**

தலத்தின் மிக அருகில் ஜெனகையின் தமையனான ஸ்ரீஜெனகை நாராயணப்பெருமாள் சன்னதி அமைந்துள்ளது. மேலும்..

1. பழமை வாய்ந்த பிரளய நாதர் சிவன் கோவில் -சோழவந்தான்
1. தென்கரை மூலநாதசுவாமி சிவன் கோவில் -சோழவந்தான்
2. சனீஸ்வர பகவான் கோவில் -சோழவந்தான்
3. ஏடகநாதர் கோவில் - திருவேடகம் (திருஞான சம்பந்தரால் தேவாரம் பாடப்பெற்ற பாண்டிநாட்டின் நான்காவது தலமாகும்)
4. சித்திர ரத வல்லப பெருமாள் கோவில் -குருபகவான் - குருவித்துறை.
5. மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் - மன்னாடிமங்கலம் ஆகிய கோயில்கள் மிகவும் பழமை வாய்ந்த பிரபலமான கோயில்கள் ஆகும்.

**ஆலயத்தின் தற்போதைய கட்டணசீட்டு விபரங்கள்**

| | |
|---|---|
| சந்தனக்காப்பு | 500.00 |
| சிறப்பு தரிசனம் | 10.00 |
| அர்ச்சனை | 5.00 |
| மாவிளக்கு | 5.00 |
| சிலைக்காணிக்கை | 5.00 |
| ஆயிரம்கண் பானை செலுத்துதல் | 5.00 |
| தீர்த்தம் வாங்குதல் | 2.00 |
| மாலை சாத்துதல் | 2.00 |
| பொங்கல் | 5.00 |
| பட்டு பரிவட்டம் | 5.00 |
| வெள்ளிக்கவசம் சாத்துவதற்கு | 100.00 |
| முத்துச் சொரிதல் | 5.00 |
| முடிக்காணிக்கை | கட்டணமில்லை |
| பால்குடம் | 20.00 |
| அக்கினிச்சட்டி | கட்டணமில்லை |
| பூக்குழி | 50.00 |

ஒருவேளை அன்னதானம் வழங்க 2000.00 (50 நபர்களுக்கு மதிய வேளை)

மேற்கண்ட கட்டணங்கள் கால மாறுதலுக்கு உட்பட்டவை.

**அன்னதான திட்ட நன்கொடை வேண்டுகோள்**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சீரிய திட்டங்கள் பலவற்றுள் சிறந்து விளங்கும் அன்னதானத் திட்டம், ஸ்ரீஜெனகை மாரியம்மன் திருக்கோயிலில் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்திற்கு பணமாகவோ, பொருளாகவோ நன்கொடை செலுத்த விரும்பும் அன்பர்கள் திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

**நன்கொடை விபரம்**

நாள் ஒன்றுக்கு 50 நபர்களுக்கு மதியம் ஒருவேளை உணவு வழங்க ரூ 2000/- நிரந்தர வைப்புத் திட்டம் ரூ.25,000/- (கட்டணங்கள் கால மாறுதலுக்கு உட்பட்டவை)

(வருடத்தில் ஒரு நாள் உபயதாரர் விரும்பும் நாளில் உணவு வழங்க) மொத்த வைப்பு நிதி ஏற்படுத்த நன்கொடைகள் வரவேற்கப்படுகிறது. இதற்கு வருமான வரி சட்டம் 80G ன்படி வரிவிலக்கு உண்டு.

தினசரி அன்னதானத்திற்கு அரிசி, காய்கறி மற்றும் இதர பொருள்கள் வழங்கலாம்.

பிறந்த நாள், திருமண நாள், பதவி ஏற்ற நாள், தொழில் வியாபாரம் துவக்க நாள், புதுக்கணக்கு துவக்க நாள் ஆகிய நல்ல தருணங்களில் அன்னதானம் செய்வது நல்லது.

அன்னதான நன்கொடைகளை பணமாகவோ, வங்கி வரை வோலையாகவோ அனுப்ப விரும்பினால் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

நிர்வாக அதிகாரி,
அன்னதானத் திட்டம்
ஸ்ரீஜெனகை மாரியம்மன் கோவில்
சோழவந்தான்
வாடிப்பட்டி தாலுகா
மதுரை மாவட்டம்.

**சுயம்பை வணங்கி**
**சுயம்பாய் வளர்வோம்!**

# ஸ்ரீஜெனகைமாரியம்மனின் 108 போற்றி அகவல்

1. ஓம் ஜெனகை மாரி தாயே போற்றி
2. ஓம் சந்தன மாரி தாயே போற்றி
3. ஓம் தானே தோன்றிய தாயே போற்றி
4. ஓம் சர்ப்பம் அணிந்த தாயே போற்றி
5. ஓம் சொல்லில் நிறைந்த பொருளே போற்றி
6. ஓம் நாற்கரம் கொண்ட நாயகியே போற்றி
7. ஓம் கலியுக கண்கண்ட தெய்வமே போற்றி
8. ஓம் என் கடன் தீர்த்தருள் அம்மே போற்றி
9. ஓம் அஞ்சொல் மொழியாய் அம்மே போற்றி
10. ஓம் அணுவே அணுவின் செரிவே போற்றி
11. ஓம் தீராத வல்வினை தீர்த்தருள் போற்றி
12. ஓம் ஆதிமுதல்வியே அம்மா போற்றி
13. ஓம் ஆதியின் பாதியே அம்மா போற்றி
14. ஓம் எண்திசை யோகியே தாயே போற்றி
15. ஓம் கதிதரும் தருவே தாயே போற்றி
16. ஓம் கல்லார்க்கும் எளியே உமையே போற்றி
17. ஓம் காரண காரணி தாயே போற்றி
18. ஓம் காலத்தை வென்ற கற்பகமே போற்றி
19. ஓம் செம்பவளத் திருமாமணியே போற்றி
20. ஓம் செல்வத்தின் திருமகளே போற்றி
21. ஓம் தத்துவ நாயகி தாயே போற்றி
22. ஓம் திரிபுர சுந்தரி உமையே போற்றி
23. ஓம் திருவருள் திருவே போற்றி
24. ஓம் தெவிட்டாத தேனே தேவியே போற்றி
25. ஓம் நான்மறை சக்தியே போற்றி
26. ஓம் நாவுக்கு நாயகியே போற்றி
27. ஓம் பார்தாங்கும் வயிற்றோய் போற்றி
28. ஓம் பேரின்பச்செறிவே முத்தே போற்றி
29. ஓம் முத்தொழிலுக்கும் வித்தே போற்றி
30. ஓம் மும்முதற்கும் முதல்வியே முத்தே போற்றி
31. ஓம் யாவர்க்கும் தாயே அம்மே போற்றி
32. ஓம் வேத முதல்வியே வேம்பே போற்றி
33. ஓம் தீராத வல்வினை தீர்த்தருள் தாயே போற்றி
34. ஓம் அகந்தை அழித்து அருள்பவளே போற்றி

35. ஓம் அச்சம் தவிர்த்து அருள்வாய் போற்றி
36. ஓம் அடைக்கலம் அருளி காப்பாய் போற்றி
37. ஓம் அறியாமை அகற்றி அருள்வாய் போற்றி
38. ஓம் அன்புக்கு அடிமையே அம்மா போற்றி
39. ஓம் ஆயிரம் கண்ணுடைய அம்மா போற்றி
40. ஓம் உயர்நெறி தந்தருள் தாயே போற்றி
41. ஓம் உயர்வளிக்க வல்ல உருவே போற்றி
42. ஓம் எக்கணமும் எம்மை ஆள்பவளே போற்றி
43. ஓம் எங்கும் நிறைந்த தாயே போற்றி
44. ஓம் என்னுள்ளம் குடி கொண்ட தாயே போற்றி
45. ஓம் எல்லாம் அறிந்த உமையே போற்றி
46. ஓம் எவ்வுயிரின் இயக்கமும் நீயே போற்றி
47. ஓம் சத்தியம் காத்தருள் தாயே போற்றி
48. ஓம் சிந்தையில் நின்ற சிவமே போற்றி
49. ஓம் சிம்ம வாஹினியே போற்றி
50. ஓம் ரிஷப வாஹினியே போற்றி
51. ஓம் யாளி வாஹினியே போற்றி
52. ஓம் அன்ன வாஹினியே போற்றி
53. ஓம் குதிரை வாஹினியே போற்றி
54. ஓம் காமதேனு வாஹினியே போற்றி
55. ஓம் கமலாச வாஹினியே போற்றி
56. ஓம் தேரேறி வருபவளே போற்றி
57. ஓம் பொன்னூஞ்சல் அமர்ந்தவளே போற்றி
58. ஓம் செய்வினை அழிப்பவளே போற்றி
59. ஓம் என் வாழ்வின் வழித்துணையே போற்றி
60. ஓம் தளரா மனம் தருபவளே போற்றி
61. ஓம் தனமும் கல்வியும் தருபவளே போற்றி
62. ஓம் தாழ்வு வராது காப்பவளே போற்றி
63. ஓம் தென்பாண்டி நாட்டாளே போற்றி
64. ஓம் தொலையாச் செல்வம் தருபவளே போற்றி
65. ஓம் ஊர் எல்லை காக்கும் உயர்வே போற்றி
66. ஓம் பத்ரகாளியே பரையே போற்றி
67. ஓம் விதியினை மாற்றும் வித்தகி போற்றி
68. ஓம் மூலமந்திர முதல்வியே போற்றி
69. ஓம் அடியவர் மனத்தினை ஆள்வாய் போற்றி
70. ஓம் பொங்கிடும் வளம் தரும் பூரணி போற்றி
71. ஓம் திருவே கலையே திசையே போற்றி
72. ஓம் தருமம் வளர்க்கும் தாயே போற்றி
73. ஓம் கர்ம வினைகளைக் களைவாய் போற்றி
74. ஓம் எலுமிச்சை பிரியாளே போற்றி
75. ஓம் எட்டுத்திக்கும் வென்றவளே போற்றி

76. ஓம் சேனைத் தலைவியே போற்றி
77. ஓம் நாகக்குடையை கொண்டாய் போற்றி
78. ஓம் பூக்குழி ஏற்பவளே போற்றி
79. ஓம் மழலை அருளி மகிழ்வாய் போற்றி
80. ஓம் முக்காலம் உணர்ந்த முதல்வி போற்றி
81. ஓம் சடைமுடிசூலினி தாயே போற்றி
82. ஓம் பூவும் பொட்டும் காப்பாய் போற்றி
83. ஓம் என் தேவை அனைத்தும் அறிவாய் போற்றி
84. ஓம் வரம் தர விரைந்தே வருவாய் போற்றி
85. ஓம் அம்மா தாயே அபயம் போற்றி
86. ஓம் செம்மாதுளம்பூ நிறத்தாய் போற்றி
87. ஓம் ஆய கலைதரும் அம்மா போற்றி
88. ஓம் யோகம் வளர்க்கும் உமையவள் போற்றி
89. ஓம் கண்ணே கண்ணின் மணியே போற்றி
90. ஓம் ஊழ்வினை நீக்கி அருள்வாய் போற்றி
91. ஓம் குற்றம் பொறுக்கும் குணமே போற்றி
92. ஓம் சிவசக்தி ரூப மங்களா போற்றி
93. ஓம் தீந்தமிழ்ச்சுவையே தேவியே போற்றி
94. ஓம் தேனே தெவிட்டாத தெள்ளமுதே போற்றி
95. ஓம் நாரணன் தங்கையே தாயே போற்றி
96. ஓம் கண்ணொளி காத்து அருள்வாய் போற்றி
97. ஓம் மக்களை காத்து அருள்வாய் போற்றி
98. ஓம் மனநோய் அகற்றி அருள்வாய் போற்றி
99. ஓம் என் இதயத்தின் நாதமே போற்றி
100. ஓம் மனங்கனிந்து அருள்வாய் போற்றி
101. ஓம் சத்தியப்பொருளே போற்றி
102. ஓம் சங்கடம் தவிர்த்து அருள்வாய் போற்றி
103. ஓம் சிற்றாடை அணிந்த பாலகி போற்றி
104. ஓம் பாலகி ரூபிணி பராசக்தி போற்றி
105. ஓம் பாரெங்கும் பேர்கொண்டவளே போற்றி
106. ஓம் என் ஆதியும் நீயே போற்றி
107. ஓம் என் அந்தமும் நீயே போற்றி
108. ஓம் என் வம்சத்தை காப்பாய் போற்றி

**சுயம்பை வணங்கி**
**சுயம்பாய் வளர்வோம்!**

# ஸ்ரீஜெனகை மாரியம்மன் அருட் கவசம்

ஜெனகை மாரி என் ஜென்மத்தை காக்க
சந்தன மாரி என் சந்ததி காக்க
சிவனார் மனைவி என் சிரசினைக் காக்க
நாரணன் தங்கை என் நெற்றியைக் காக்க
கன்னிதுர்க்கை என் கண்களைக் காக்க
கண்மூன்றுடையாள் என் கன்னங்கள் காக்க
மூகாம்பிகையாள் என் மூக்கினைக் காக்க
கூஷ்மாண்டினியாள் கூந்தலைக் காக்க
இமயத்தரசி என் இருசெவி காக்க
வாணித்தாயார் என் வாயினைக் காக்க
இலட்சுமித் தாயார் உடல் இலட்சணம் காக்க
முகமதன் அழகை முக்கண்ணி காக்க
பகவதி தேவி பற்களைக் காக்க
உமையாம்பிகையாள் என் உதடுகள் காக்க
நான்முகன் மனைவி என் நாவினிலிருக்க
நவதுர்க்கை தேவியர் நல்லோசை தருக
கருமாரி தேவி என் கழுத்தினைக் காக்க
கொற்றவை என்தன் குரல்வளை காக்க
சரஸ்வதி என்தன் சப்தத்தைக் காக்க
புவனேஸ்வரியாள் என் புஜங்களைக் காக்க
முன்கை முழங்கை முண்டினி காக்க
சிவ சிவதுர்க்கை என் சிந்தனை காக்க

விஷ்ணு துர்க்கை என் விரல்களைக் காக்க
மஞ்சள் மாதா என் மார்பினைக் காத்து
பிள்ளைக்கு ஊட்டிட பால்வள மருள்க
மக்களைக் காத்திட மாதா வருக
காஞ்சி காமாட்சி என் கைகால் காக்க
வனதுர்க்கை தாயே என் வயிற்றினைக் காக்க
முக்கோணத்தி என் முதுகினைக் காக்க
துயர் தீர்க்கும் தாயே என் தொடைகளைக் காக்க
கோட்டைமாரி இருபாற் குறிகளைக் காக்க

முழங்கால் கணைக்கால் முத்துமாரி காக்க
இருடிகேசி என் இடுப்பினைக் காக்க
பிரம்மராம்பிகை என் பிட்டங்கள் காக்க
பார்வதிதேவி என் பாதங்கள் காக்க
விந்தியவாசினி என் விதியை வெல்க
காசி விசாலாட்சி காலமெல்லாம் காக்க
ஜகம் புகழ் வாழ்வை ஜெனகமாரி தருக
ஜ்வாலதுர்க்கை என் ஜாகையைக் காக்க
சாந்தி துர்க்கை சாந்தம் காக்க
அங்காளீஸ்வரி என் அங்கங்கள் காக்க
உடலின் அசைவுகள் உமையவள் காக்க
ஓட்டமும் வழிநடை ஓங்காரி காக்க
வாகன விபத்தின்றி வாராகி காக்க
மூச்சுக்குழலை மூகாம்பிகை காக்க
ஜாமத்தில் பயமின்றி ஜகன்மாதா காக்க

நாடியின் துடிப்பை நான்முகி காக்க
சங்கடம் அனைத்தையும் சமயபுரத்தாள் காக்க
சந்தோஷிமாதா சந்தோஷம் தருக
ரேகைகள் அமைப்பை ரேணுகை காக்க
அன்னத்தின் நாயகி அன்னபூரணி
உன்மனமே உவந்து உணவென்றும் தருக
சபரீ துர்க்கை நல்யாத்திரை அருள்க
லவண துர்க்கை லட்சங்கள் தருக
தீயில் ஆபத்தை தீப துர்க்கை தடுக்க
நீரில் ஆபத்தை நீலாம்பிகை நீக்க
காற்றில் ஆபத்தை காயத்ரி காக்க
நவகிரகங்களுமே நல்லன செய்திட
நஞ்சுண்டன் மனைவி நல் ஆணை இடுக
திருஷ்டி துர்க்கா கண்திருஷ்டி நீக்க
வினவிடும் வரங்களை வனதுர்க்கை தருக

வடிவுடை நாயகி வடிவழகு காக்க
ஞானாம்பிகையாள் ஞானப்பால் அருள்க
அஷ்டலட்சுமி அங்கலட்சணங்கள் காக்க
கௌரி கௌமாரி கவுரவம் காக்க
கருவில் உயிரை கருமாரி காக்க

கன்யாகுமரி கண்ணொளி காக்க
கன்னி பெண்டிர் கடிமனம் நிறைவுற
கங்காதேவி தீர்த்தம் அருள்க
ஜாதகக் குறையை ஜெகன்மாதா களைக
தெசையை புத்தியை திரிபுரை காக்க
ஆதிபராசக்தி அனுதினம் காக்க

கற்கும் வேதங்கள் காயத்ரி காக்க
ஐயப்பன் மாதா ஐஸ்வர்யம் அருள்க

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் குறளைப் பேய்களும்
கோட்டை மாரியைக் கருத்தில் கொண்டிட
ஓடி மறைந்திட கடைக்கண் பார்க்கும் வரமே அருள்க

வாதம் பித்தம் வாந்தி பேதியும்
சீதம் வயிற்று நோய்களும்
தேகத்தை மெலிவிக்கும் தொற்று நோய்களும்
புற்றும் குட்டமும் புத்திக் குழப்பமும்
விஷத்தால் ஜுரமும் உடல்வலி நோய்களும்
தொண்டைப் புண்ணும் தோல்வகை நோய்களும்
எவ்வித நோயும் என்னைச் சேராமல்
என் முன் நின்று காப்பாய் நீலி சூலியே

நல்லோர் உறவை நாளும் அருள்வாய்
காமம் குரோதம் லோப மோஹமும்
மத மாச்சர்யமெனும் ஐம்பெரும் பூதங்கள்
என்னுள் வராமல் காத்தருள் தாயே
ஜெகத்தினை காக்கும் ஜெனகை மாரியே

சூது பொறாமை சோம்பலை அகற்றி
சோரம் லோபம் துன்மார்க்க மொழித்து
வேத நெறிகளில் வழி பிசகாமல்
கிரகங்கள் ஒன்பதின் உறுதுணை நட்புடன்
பரமனின் பத்தினி வரமெனக் கருள்வாய்

மூப்பின் நோயும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதை செய்யாமல்
சந்தன மாரி சடுதியில் காக்க

கொண்ட நோய்களைக் கொன்று குவித்திட
கோட்டை மாரியின் குங்குமக் கவசம்
இருவினை களைந்தே எமைக் கரையேற்ற
இமயத்தரசி இன்றே வருக

கன்னி துர்க்கையே உனையெண்ணி துதிக்கையில்
பண்ணிய பாபங்கள் பறந்து ஓட
அன்னை துர்க்கையே அபயம் என்றிட
ஐம்பூதங்களும் அடிப்பணிந்தேத்தும்
வனத்தின் துர்க்கையே வணங்கிப் பணிவேன்
நினைக்கின்ற நொடியில் நிச்சயம் வருக

ஆல்போல் தழைத்து அருகுவேரோடி
மூங்கிலை போல சுற்றிலும் பெருக
நின் திருக்கூட்டம் நித்தமும் உயர்க
நின் வழிபாடு வளர்ந்தெங்கும் ஓங்க
லோகம் யாவும் மோகம் கொண்டிட
ஜெனகை மாரியின் வழியினைக் காட்டி
வழிபடும் வம்சத்தின் வளர்ச்சியைக் காக்க

கனி விளக்கொளியும் இனிதே பெருகி
துர்க்கையின் வழிபாடு துளிர்விட்டுத் தழைக்கும்
சர்வ ஜனங்களை என்வச மாக்கும்
சர்வேஸ்வரியாளின் வசிய மந்திரத்தை
சந்தோஷி மாதா வந்தோதியுரைக்க
உள்ளன்புடனே உன் திருநாமம்
ஓதியுரைத்தால் ஓம் என்றொலிக்கும்
நித்தமும் நான்சொல்லும் சிவசக்தி நாமம்
சித்தத்தில் சேர்த்திடும் சித்திகள் கவசம் -அதை
சத்தமாய்ச் சொல்ல சதாசிவம் சேரும்.

பிறை சூடிய பித்தன் தேவியே நமோ நமஹ
மருவூர் வாழும் மங்கலமே நமோ நமஹ

பாகனூர் கூற்றத்தின் பராசக்தியே நமோ நமஹ
வேள்விக்குடியின் வேதநாயகியே நமோ நமஹ
சதுர்மறைக்காட்டின் சத்திய ரூபிணியே நமோ நமஹ
பராக்கிரம பாண்டியபுர பைரவியே நமோ நமஹ
ஜனகாபுரியின் ஜெகதாம்பிகையே நமோ நமஹ
சோழாந்தக சதுர்வேதிமங்கலமே நமோ நமஹ
ஜனநாத சதுர்வேதிமங்கலமே நமோ நமஹ

ஓம் சக்தி வாழ்க! ஓங்காரப் பொருள் வாழ்க!
ஆம் சக்தி இவளென்றே அனைவருமே தொழ வாழ்க!
அண்டங்கள் ஈன்றவளே! அகிலாண்ட நாயகியே வாழ்க!!
விண்டுரைக்க ஏலாத விரிசடையோன் துணையவளே வாழ்க!!
எண்ணுக்கும் எழுத்துக்கும் எட்டாமல் இயல்பவளே வாழ்க!!
கண்ணுக்கும் கருத்துக்கும் காணாமல் நிற்பவளே வாழ்க!!
அன்புருகி நெஞ்சுருகி அழுதே பணிவார்க்குக்
கல்மனமும் கரைந்துருகக் காட்சிதரும் காரிகையே வாழ்க!!
பிறைசூடும் பெம்மானும் பாற்கடலைக் கொண்டானும்
நறை மிக்க தாமரையை நல்லிடமாய்க் கொண்டானும்
விண்ணவரும் மண்ணவரும் மற்றுமுள்ள உயிர்க்குலமும்
எண்ணற்ற நான்மறையும் ஏத்துகின்ற மூத்தவளே நின்புகழ் வாழ்க !
ஒப்பில்லா மாமணியே சரணம் சரணம்
சக்தியின் சூலமே சரணம் சரணம்
வித்தகனின் தாயே தாயே சரணம் சரணம்
வேலவனின் தாயே சரணம் சரணம்
அகிலாண்ட ஈஸ்வரியே சரணம் சரணம்
சர்வேஸ்வரியே சரணம் சரணம்
சாமுண்டீஸ்வரியே சரணம் சரணம்
தாட்சாயணியே சரணம் சரணம்
திரிபுர சுந்தரியே சரணம் சரணம்
ஈடில்லா சக்தியே சரணம் சரணம்
பொற்பாத கமலமே சரணம் சரணம்
எனைஆளும் நாயகியே சரணம் சரணம்
என் உயிரில் நிறைந்தவளே சரணம் சரணம்
மூத்தாளே சந்தன மாரியே சரணம் சரணம்
என் ஆத்தாளே ஜெனகை மாரியே சரணம் சரணம்

*ஸ்ரீஜெனகை மாரியம்மனின் அருட்கவசங்கள் முற்றிற்று.*

# ஸ்ரீஜெனகை மாரியம்மன் பாமாலை

யாதுமாகி நின்றாய் ஜெனகைமாரி!
எங்கும் நீக்கமற நிறைந்தாய் ஜெனகைமாரி!
ஆதி சக்தி தாயே ஜெனகைமாரி!
அருள் புரிந்து காப்பாய் ஜெனகைமாரி !

சீர்மிகு பாண்டிநாட்டில் சிறப்புறு மதுரை மாநகரில் வைகை நதியோரம் சோழவந்தானிலே, யாருனை நினைந்திடிலும் அவருக்கெல்லாமே நீயாகி பேரும் புகழும் கொண்டாய் ஸ்ரீஜெனகைமாரியே!

1. சகாப்தம் ஐநூறுக்கு முன்னரே இத்தலமதிலே வீற்றிருந்தாய் ஜெனகைமாரி!
சந்தடி இன்றி மருத நில சதுர்மறைக்காட்டிலே மறைந்திருந்தாய் ஜெனகைமாரி!
வேம்பும் வாழையும் கரும்பும் புடைசூழ சர்ப்பமாய் வளைந்தும் சோதியாக
ஒளிர்ந்தும் மங்கையாக உருவெடுத்தும் பேதையே காட்சி அளித்திட்டாய் ஜெனகைமாரி!

சங்கீதத்தை உன்சலங்கை ஒலியிலே இசைத்தறிவித்தாய் அன்று!
பொங்கலும் பூசையும் வைத்தே வழிப்போக்கர் பங்கமில்லாது
உன்னைப் புனிதமாய்ப் பேணிக்காத்தனரே அன்று!

நின் மகிமை அறிந்து ஓடி வந்து
செடிலை காவல் காத்தான் திருமலை நாயக்கன் அன்று!
நின் வைகாசி செடிலை நிறுத்தவந்த
ஆங்கிலேயக் காவலனை அரண்டோடச் செய்தாயே அன்று!

நின் பொன்னடி மகிமை உணர்ந்த அடியவர்கள் உன் பொன்னடிக்கென
குடிசையில் உன்னுருவை மண்ணுருவாய் அமைத்தனரே அன்று!
உன்னுருவை கொண்டாடி அழைத்தனரே சந்தனமாரியென அன்று!

பின்னாளில் வந்தாயே பூமியிலொரு பொக்கிஷமாய்!
கொண்டாயே ஜெனகைமாரி என்றொரு திருநாமத்தை!

யாரும் அறியா சிறுமியாய் விளையாடி மகிழ்ந்தாய் மாரியே!
நம்பினோர்க் கனவிலே சென்று வாய் மொழிந்தாய் மாரியே!
எம்குல அரசியே! குழந்தை ரூபிணியே ஜெனகைமாரியே!

களவோடும் கபடத்தோடும் நடமாடித் திரிந்தோர்க்கே கண்டிப்பாய்த்
தண்டனையும் அளித்திட்டாய் ஜெனகைமாரியே!

ஆராதித்து உன் அருளை வேண்டியே அணங்கு தன் பாவம் போக்கவே
கற்பூரம் எரித்த பேழையுள் உன் கோலம் சோதியாய் காட்டியே
மறைந்திட்டாய் ஜெனகைமாரியே!

குடிலாய்க் கொட்டிலாய் இருந்த உன்மனை கோபுரமாய் எழுந்து
நிற்கும் விந்தையைப் பாரீரோ உன் பெருமை உன் மகிமை உலகிற்கே அன்றோ!

என்பாவில் இச்சங்கதி உரைத்திட்டேன் தாயே ஜெனகைமாரி!

முத்தான உன்முறுவல் மூத்தாளே பகவதியே!

சத்தாகி சதமாகி என்னுள்ளே பாயுதம்மா ஜெனகைமாரி உன் நாமம்!

எத்தனை பிறவி எடுத்தாலும் அத்தனையிலும் உன் நாமம் பித்தாகிப்
பிதற்ற வரமெனக்கு தருவாயே ஜெனகைமாரி!

2. விழா எடுத்தோம் உனக்கே உன் கருணையினால்
வெற்றி காண்போம் எங்கள் வாழ்வு கடைத்தேறவே!
ஏற்றும் கொடியிலே ஏறிநின்றாயே சிம்ம வாஹினியே ஜெனகைமாரியே!

எம் குலம் தழைத்திடவே கம்பீரமாய் திருமஞ்சத்தில் ஆடிவந்தாயே
நடன சிகாமணியே சோழவந்தான் ஜெனகைமாரியே!

தேவாரப் பண்ணுக்கே செவிசாய்த்தாய் தேவகியே ஜெனகைமாரியே!
முத்துச்சப்பரத்தில் அழகொளிர வந்தவளே அம்பிகையே ஈஸ்வரியே!
உன் புகழ்பாடும் அடியவர்தம் குறை அகற்றிடுவாய் ஜெனகைமாரியே !

முத்துப்பல்லக்கில் அலங்காரமாய் வந்தவளே ஆயிரம் கண் மாரியளே!
தூய உன் மந்திரப் புன்னகையில் மக்களை மயக்கிட்டாய் மகமாயி மாரியம்மா!

திருத்தேரிலே பாரம்பரியப் பறை ஒலிக்க ஆரோகணித்தாய்
தெவிட்டாத உன்னருளைப் பருகச் செய்தாய் என் ஒப்பில்லா மாமணியே!

தீர்த்தமாடி வந்தே உன் திருமேனி குளிர்ந்திட்டாய்!
தீர்த்திடுவாய் அம்மா உன் அடியவர் தம் துயரங்களை!

வேதங்கள் முழங்கிட நாதங்கள் விளையாடிட,
எந்திருமுறைகள் ஓதிட, பஜனைகள் பாடிட, சந்தங்கள் ஒலித்திட,
சங்கீதம் இசைத்திட, பூமாலை சொரிந்திட, தீபங்கள் ஒளிர்ந்திட,
உன்னடிமைகள் உன் திருமேனி சுமந்திட, அங்கம் உருண்டிட
அரிவையர் அடி அடித்து, வந்தாயே தேவி மஹோற்சவ காலத்தில்
தந்தாயே தரிசனமும் தயவும் உன் பொன்னடி பணிந்தோர்க்கு!

எண்ணரும் கற்பனைகள் எத்தனையோ என்மனதில் வழிந்தோட
உன்நினைவில் என் இதயம் துடிக்குதம்மா அத்தனையும் எப்படி நான்
வடித்திடுவேன் பொன்னெழுத்துக் கவிதையிலே!

என் நெஞ்சம் நெகிழ்ந்துருகி சிந்தையில் உனைச்சுமந்து
கொஞ்சம் சொன்னேன் பிழைபொறுத்து ஏற்றுக்கொள்
என் தாயே ஜெனகைமாரி!

3. பட்டுப் பீதாம்பரம் சரசரக்க, பார்கவியே கனிவும்
கருணையும் தருவாய் சிகையினிலே சிங்காரமணி மகுடம் தாங்க,
சிந்தூர நெற்றியில் நுதற் சுற்றி ஆட
செந்தூரப் பொட்டும் திருநீறும் மிளிர
வைர மூக்குத்தியோடு செவித்தோடும் ஒளிர
பக்கத்துக் குண்டலங்கள் ஆர்ப்பரிக்க,
சங்குக் கழுத்தினிலே எண்ணற்ற இணையணிகள் அணிவகுக்க,

நின் மின்னலிடையிலே ஒய்யார ஒட்டியாணம்
மேகலையும் சங்கிலியும் குலுங்கக் குலுங்க மெய்யிலே
நவரத்தினங்கள் ஜொலிக்க ஜொலிக்க பவளவாய் தன்னில்
முத்துப்பல்லாட கொவ்வை இதழிலே தேன் சிந்தும் புன்னகையும்

மையூட்டிய கண்ணின் கருணைப் பார்வையும் பொய்யான
உலகிற்கே மெய்யை உணர்த்திட பின்னற் சடையிலே பொன்னாகம்
அசைந்தாடப் பிடரியிலே கொண்டைப்பூ பளபளக்க
கிண்கிணி கிணுகிணுக்க சலங்கைகள் கலகலக்க
கையிலே வளையல் மங்கள நாணும் ஒளிர்ந்திட
மணிக்கச்சையிலே உன் அழகு பிம்பமாய் விளங்கிட,
கண்ணுறு அழகெல்லாம் காட்சியில் தெளித்தே எண்ணுவார்க்கின்பம்
தரத் தரிசனம் தந்திடுவாய் ஜெனகைமாரியே!

உன்னழகைக் காணக் கண் கோடி வேண்டுமே அம்மா!
நின்திருக்கோலம் காணாத கண்ணும் கண்ணல்லவே!

4. பாலிலே குளித்திடுவாய், பன்னீரில் நனைந்திடுவாய்,
பூவிலே மணத்திடுவாய், தேனிலே இனித்திடுவாய்,
கனியிலே சுவைத்திடுவாய், பசு நெய்யிலே உருகிடுவாய்,
பக்தர்கள் நெகிழ்ந்துன்னைப் பரவித் துதித்திடுவார்.
கற்பூரம் ஏற்றிடுவார், கண்ணீரால் கழுவிடுவார்,
நற் பூமாலை சூட்டிடுவார். பாமாலை பாடிடுவார்
இரவு பகல் பாராமல் உனக்கே உழைத்திடுவார்
இங்கிதமாய்த் தொண்டு பல பிறர் அறியாமலே செய்திடுவார்
அம்பிகையே உன் கடைக்கண்ணின் கனிவும் கருணையும்
உனைநாடியோர் பக்கம் திருப்பிடுவாய் பரிவுடனே அம்மா!

5. நாதஸ்வர ஓசையிலே நடனமாடும் தேவியே,
நாதப்பரப்பிரம்மத்தின் தாயான நாயகியே
வேதமெய்ப் பொருளை உணர்த்தும் வித்தியாவதியே,
உன் பாதம் பணிந்தேன் பரமேஸ்வரியே ஜெனகை மாரியே!
அகிலத்தை ஆளும் அகிலாண்டேஸ்வரியே மாரி!
அண்டமெலாம் காக்கும் ஆதிபராசக்தியே மாரி!
தொல்லைகள் தீர்த்து துன்பங்கள் நீக்கிடும் தொலையாத
நிதியமே கனக துர்க்கையே ஜெனகை மாரியே!
பாம்பாகி வந்தே பல வினைகள் போக்கிடுவாய் மாரியே!
வேம்பாகி நின்றே வெவ்வினைகள் அகற்றிடுவாய் மாரியே!
நல்லதோர் நிலை காண நாடிவரும் அன்பர்க்கே நவக்கிரக
நாயகியாய் நன்மைகள் செய்திடுவாய் ஜெனகை மாரியே!
கொத்துக் கொத்தாய் வேப்பிலைகள் கூத்தாட கொஞ்சு
மஞ்சளும் குங்குமமும் சந்தனமும் நிறைக்க நாடி வரும்

அடியவர் கூட்டம் நலமடைய கோடி நன்மை
காட்டிடுவாய் ஜெனகை மாரி! அபிராமிப்பட்டருக்கு
நிலவைக்காட்டிய அபிராமியே நின் திருவடி சரணம்!
அசடனுக்கும் கவிகொடுத்துக் காளிதாசனாக்கிய
கலைவாணியேநின் திருவடி சரணம்!
ஆலகாலம் உண்டஹரனை வீழாமல் காத்திட்ட
உமையம்மையே நின் திருவடி சரணம்!
பாலனுக்குப் பாலூட்டி பாடகனாய் ஆக்கிட்ட மகாதேவியே
நின் திருவடி சரணம்!

பேசாத பேதைக்கும் பேசுந்திறன் கொடுத்திடும்
பரம்பொருளே நின் திருவடி சரணம்!

கூசாமல் மதுரையெரித்துக் கற்பு நெறியை விளக்கிட்ட
சர்வேஸ்வரியே நின் திருவடி சரணம்!
சங்கடங்கள் தீர்த்திடுவாய் சாம்பவியே! நற் பொங்கரி
மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட்ட
சங்கரியே நின் திருவடி சரணம்!

6. கண்கள் உனைக் காண வேண்டும்.
கால்கள் உன் திருவடியை நாட வேண்டும்
பண்ணமைத்து நாஉனைப்பாட வேண்டும்
பாரெங்கும் உன் புகழைக் கேட்க வேண்டும்
நெஞ்சார உனைத் துதிக்க வேண்டும்
நினைவே நீயாக ஆக வேண்டும்! ஊரெல்லாம்
அடியவர் கூட்டம் பெருக வேண்டும்!
ஒற்றுமையாய் அமைதியாய் யாரும் வாழ வேண்டும்!
உன்பணியில் அடியார்கள் இணைய வேண்டும்!

ஓதும் உன் திருநாமம் ஓங்க வேண்டும் உலகமெலாம்
நோயற்ற வாழ்வும் நொடியாத வளமும் நீடித்த ஆயுளும்
நிறைவாகத் தருவாய் தாயே ஜெனகை மாரி!

7. தொட்டது துலங்கச் செய்வாய் லோகநாயகியே ஜெனகை மாரி !
தூயவளே துணை நிற்பாய் அருட்ஜோதியே ஜெனகை மாரி!
கேட்டவரம் தந்திடுவாய் மகமாயி மாரியம்மா!
கேள்விகளைப் போக்கிடுவாய் மங்களாயியே!

வேதனைகள் தீர்த்திடுவாய் வேதவல்லி மாரியம்மா!
வெல்ல வரும் வினை நீக்கிடுவாய் தேவி முத்து மாரியம்மா!
மங்கலங்கள் தந்திடுவாய் மகாலட்சுமி ரூபிணியே!
மங்கள ரூபினி மகேஸ்வரி தாயே!
அசுரரை வதம் செய்த அங்காளியே!
அன்புடைப் பார்வதியே, பரமேஸ்வரியே, ஜெகதீஸ்வரியே!
வளமுடை வாகீஸ்வரியே, யோகேஸ்வரியே, புவனேஸ்வரியே,
விசாலாட்சியே, மீனாட்சியே, காமாட்சியே , ஒய்யாரியே,
கம்பீரியே, கற்பகவல்லியே!
ஓதுவார் தமை உய்விக்கும் நீலாம்பரியே!
கோதாவரியே, திரிசூலி திரிபுர சுந்தரியே!
காமேஸ்வரியே, காத்யாயனியே, இராஜராஜேஸ்வரியே
சிவசக்தியே, மூகாம்பிகையே, ஜெய தேவியே!
சிவகாமியே, சிங்காரியே பூரணியே சிம்மவாஹினியே!
என்றெல்லாம் அடியவர்தாம் அரற்றிப் புலம்பி
ஆலாய்ப்பறக்கின்றார் - அவர் கண்ணீரைத் துடைத்திடம்மா!
உன் கயல் விழி, அருள் முகம் கருணையே காட்டிக்
கவலைகள் போக்கிடம்மா கஷ்டங்கள் தீர்த்திடம்மா!

8. மங்கலங்கள் தந்திடுவாய் மனோன்மணியே போற்றி
மாநிலத்தார் உய்ந்திடவே மனமிரங்குவாய் போற்றி!
வேண்டுவார்க்கு வேண்டும் வரமீயும் ஈஸ்வரியே போற்றி
வெற்றிக்கு நாயகியே வெக்காளி அம்மையே போற்றி
பால் நினைந்தூட்டும் தாயின் பரிவுடைபைரவியே போற்றி
பக்தர்களைக் காத்திடும் பைங்கிளியே கௌரீஸ்வரி போற்றி
கூக்குரல்கள் கேட்டுச் சீக்கிரமாய் வந்தே பேரருளை
அள்ளித்தரும் அபிராமியே போற்றி !

தாயே உன் சன்னதிக்கு எனை அழைத்த அலைமகளும் நீயே!
தரணியில் அவதரித்து வாழ அருளிய மலைமகளும் நீயே!
கண்டேனே உன் திருவருட் கோலங்களெல்லாம்...
இனியும் காண்பேனே நின் திரு அற்புதங்களெல்லாம்...

சத்தியும் நீயே !சித்தியும் நீயே!
புத்தியும் நீயே! முத்தியும் நீயே!
அறிவும் நீயே! அசைவும் நீயே!
நிலையும் நீயே! நிறைவும் நீயே!
உடலும் நீயே! உயிரும் நீயே!
இடையும் நீயே! விடையும் நீயே!
என்றும் நீயே! எங்கும் நீயே!
எல்லாம் நீயே! எதிலும் நீயே!
சோழவந்தான் ஜெனகைமாரித்தாயே!
உன் திருவடி சரணம்! உன் திருவடி சரணம்! உன் திருவடி சரணம்!

பராசக்தி திருவடியே துணை!

# துணைபுரிந்த சான்றுகள்


1. வேதாசலம்.வெ, சந்திரமூர்த்தி.மா - பராக்கிரம பாண்டியபுரம், தமிழ்நாடு அரசு தொல்லியல் ஆய்வாளர்கள் (ஓய்வு).
2. திரு. ஸ்ரீதர், சிறப்பு ஆணையர், வெ.வேதாசலம், சொ.சாந்தலிங்கம் மதுரை மாவட்ட தொல்லியல் கையேடு - இந்திய ஆட்சிப்பணி மற்றும் தொல்லியல் ஆய்வாளர்கள்-2005
3. முனைவர் ஞானசம்பந்தன்.கு - ஜெனகை மாரியம்மன் கோவில் வழிபாடும் திருவிழாக்களும் - ஆய்வுக்குறிப்பேடு 1982
4. வேதாசலம்.வெ, காப்பாட்சியர் - திருமலை நாயக்கர் செப்பேடுகள் -வெளியீடு தமிழ்நாடு அரசு தொல்லியல் ஆய்வுத்துறை-1995.
5. பு.அறிவுடைநம்பி - சோழவந்தான் அரசஞ்சண்முகனார் குறிப்புகள் - சாகித்திய அகாதெமி -2014
6. சேதுப்பிள்ளை.ரா.பி - தமிழகம் ஊரும் பேரும் - ஏஷியன் பதிப்பகம் -2005
7. கவிக்குஞ்சர பாக்ஷியம் - ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் செடிற் சந்த ஒயிற்கும்மி - சி.ம்.வி. பிரஸ் மதுரை. 1918.
8. சு.லக்குமண பெருமாள் - அருள்மிகு மூலநாத ஸ்வாமி தல புராணம் - சொர்ணா அச்சகம் பேட்டை சோழவந்தான் - 1980
9. மு.கோவிந்தசாமி அய்யர் - திருமலை நாயக்கர் சரித்திரம் - 1920- தி எக்சல்சியர் பிரஸ், மதுரை.
10. Lynn Foulston எனும் இங்கிலாந்து மாணவியின் ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் ஆலயம் பற்றிய ஆய்வுக்குறிப்பு - University of Wales College -March 1999, Newport.
11. R.பஞ்சநாதம்பிள்ளை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் தல வரலாறு - திருக்கோயில் வெளியீடு, வருடம் 1959,
12. டாக்டர். ராசமாணிக்கனார்.மா - பல்லவர் வரலாறு- 1944- அப்பர் அச்சகம், சென்னை.
13. டாக்டர். ராசமாணிக்கனார்.மா- சோழர் வரலாறு – 2005 பூரம் பதிப்பகம், சென்னை.
14. சதாசிவப் பண்டாரத்தார்.தி.வை - பாண்டியர் வரலாறு - 2008 -அமிழ்தம் பதிப்பகம், சென்னை.
15. P.முத்துத்தேவர் - மூவேந்தர் குல தேவர் சமூக வரலாறு ஆராய்ச்சி நூல் - 1976 ஏப்ரல் - காக்க வீரன் வெளியீட்டகம்.




சோழவந்தானின் மையப்பகுதியில் ஆலயத்தின் அமைப்பு

## நூல் காணிக்கை

பசுவின் பால்முழுதும் கன்றுகில்லை!
நறும்பூவின் மணம் முழுதும் சோலைக்கில்லை!
நெல்லாகும் கதிர்முழுதும் நிலத்துக்கில்லை!
நிறைகின்ற நீர்முழுதும் குளத்துக்கில்லை!
பல்லாரும் கனிமுழுதும் மரத்துக்கில்லை!
பண்ணரம்பின் இசைமுழுதும் யாழுக்கில்லை!
எல்லாமே பிறர்க்குழைக்கவே காணுகின்றேன் !
என் வாழ்வு முழுமைக்கும் உனக்குழைத்து மகிழவேண்டும்!!

**எனை ஆள்பவளே! என் வாழ்வின் ஆதாரமே!!**

நூல்வடிவாக்கிய இவ்வரலாற்று நூலினை உனது பொன்னடியே கதியென தஞ்சமடைந்துவிட்ட என்னை ஈன்ற தெய்வ திருமதி சீதாலட்சுமி அவர்களின் சார்பில் எனை ஆளும் உன் பொற்பாத கமலத்தில் காணிக்கையாக்கி பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

**ஆயிரம் கரங்கள் நீட்டி அணைக்கின்ற தாயே போற்றி!**
**அருள்பொங்கும் முகத்தைக்காட்டி இருள் நீக்கம் தந்தாய் போற்றி!!**

Shanlax, Madurai. 7200303383